உதயன்

www.onlineuthayan.com

64: பக்கங்கள் சுடர் 27 கதிர் 246 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (29/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 50.00




### தமிழர்களின் இருப்பை இல்லாது ஒழிக்கும்

# அரசின் திட்டத்தைச் சர்வதேசத்துக்கு உணர்த்த கிழக்கு தேர்தலை கூட்டமைப்பு பயன்படுத்தட்டும்

## வடக்கு – கிழக்கில் இருந்து குரல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதனை சர்வதேசத்துக்கு உணர்த்தும் வகையில், கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமது தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் சர்வதேசத்தை ஏமாற்றும், நேரத்தை வாங்கும் முயற்சியே. தமிழர்களின் இருப்பை இல்லாது ஒழிக்கும் அரசின் திட்டத்தை சர்வதேசத்துக்கு உணர்த்த கிழக்குத் தேர்தலை கூட்டமைப்பு பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு வடக்கு – கிழக்கைச் சேர்ந்த மருத்துவர்கள் – 21, பேராசிரியர்கள் – 6, விரிவுரையாளர்கள் – 10, பொது அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் – 23, கல்வித்துறை சார்ந்தோர் – 2, கிறிஸ்தவ மதகுருக்கள் – 9, சட்டத்தரணிகள் – 10, வங்கியாளர் – 1, ஓய்வுநிலை அரச ஊழியர் – 7, பல்கலைக்கழக மாணவர்கள் – 8 மற்றும் ஆயர் ஒருவர் அடங்கிய 98 பேரைக் கொண்ட சிவில் சமூகம் விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் 15 பேர் கிழக்கைச் சேர்ந்தவர்கள்.

அறிக்கையின் விவரம் வருமாறு:

தமிழர்கள், ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் அதன் கீழான மாகாண சபை முறைமையையும் தமது அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தன்மையற்றது என தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். எமது தாயகத்தில் கடந்த காலத்தில் இரண்டு முறை [1989, 2008] நடந்த மாகாண சபைத் தேர்தல்களை தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் புறக்கணித்திருந்தன. அரச சார்புத் தமிழ்க் கட்சியொன்றினால் சுயாதீனமாக நடத்த முடியாத மாகாண சபையை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சியொன்று சுயாதீனமாக நடத்த முடியாது

பார்க்க பக்கம் 4

**2** கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வு வரும்வரை பணிப்புறக்கணிப்பைக் கைவிடுவதில்லை என்கின்றனர் பல்கலை. விரிவுரையாளர்கள்.

**5** வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியில் 34 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

**23** 30 ஆவது ஒலிம்பிக் போட்டி லண்டனில் நேற்று அதிகாலை வெகு கோலாகலமாக ஆரம்பமானது.

## மன்னார் நீதிபதி வீடு மீது வெள்ளி இரவு தாக்குதல்

மன்னார், ஜூலை 29

மன்னார் நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சனின் வீடு மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்கள் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கற்களை வீசிவிட்டு யன்னல் கண்ணாடிகளையும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றின் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கிவிட்டுத் தாக்குதலாளிகள் தப்பிச் சென்றுவிட்டனர் என மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி மன்னார் மாவட்ட செயலகத்தை அண்மித்துள்ள தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியிருக்

பார்க்க பக்கம் 4

## வேட்பாளர் கைது ஒரு பழிவாங்கல் – சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 29

மனிதக் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட திருமலை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் முன்னைய நாடாளுமன்றத் தேர்தல்களில் அரசுக்கு ஆதரவு அளித்தவர். அவர், அரசுக்கான ஆத

பார்க்க பக்கம் 4

## இந்திய ஊடகங்கள் கூறுவது முழுப் பொய்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

திருகோணமலை சம்பூரில் அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்குப் பாகிஸ்தானின் உதவியை இலங்கை பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடுவதாக மின்சக்தி வலுசக்தி

பார்க்க பக்கம் 4

## 20 புலிகளுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஜூலை 29

போர் குற்றங்களைப் புரிந்தனர் எனக் கூறப்படும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 20 பேருக்கு எதிராக 6 மாதங்களுக்குள் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் வழக்குத் தொடுக்கப்படும் எனவும் இதன்மூலம் கைதிகளின் நிச்சயமில்லாத் தன்மைக்கு முடிவு வரும் எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் தெரிவித்துள்ளார்.

கைதிகள் விவகாரத்தை

பார்க்க பக்கம் 4

## ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் மஹிந்த பங்கேற்கவில்லை

கொழும்பு, ஜூலை 29

லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பமான ஒலிம்பிக் ஆரம்ப வைபவத்தில் பல வெளிநாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட போதும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதில் கலந்து கொள்ளவில்லை.

ஒலிம்பிக் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் செல்வார் என செய்திகள் வெளியாகியிருந்தன. ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகரவும் இதனை உறுதிப்படுத்தியிருந்தார். ஜனாதிபதியின் லண்டன் வரு

பார்க்க பக்கம் 4

## மன்னாரில் ஹக்கீம்

மன்னார், ஜூலை 29

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மன்னார் உப்புக்குளம் பகுதிக்கு நேற்றுச் சென்று உப்புக்குளம் ஜூம்மா பள்ளி வாசலில் உப்புக்குளம் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதுதவிர முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பாரூக்

பார்க்க பக்கம் 4

## ஒலிம்பிக்கில் இலங்கை குறித்து அடக்கி வாசிப்பு

லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பமான ஒலிம்பிக் போட்டி ஆரம்ப விழாவில் நாடுகளின் அறிமுகமும், அணிவகுப்பும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனை பி.பி.சி. நேரடியாகத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பிக்

பார்க்க பக்கம் 4







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதகமான தீர்வு வரும்வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

## பல்கலை. விரிவுரையாளர்கள்

கொழும்பு, ஜூலை 29

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான தீர்வு கிடைக்கும் வரை கடமைக்குச் சமுகமளிக்கப்போவதில்லை என பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு அரசு இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் குறிப்பிட்டார்.

நாளை கடமைக்குத்திரும்புமாறு உயர்கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதாக அவர் கூறினார்.

தங்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வொன்றை வழங்குவதற்காக அதுகுறித்து பேச்சு நடத்துவதற்கு அரச தரப்பிலிருந்து எவரும் முன்வரவில்லை என்றும் விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இத்தகைய நிலையில் தமது உறுப்பினர்கள் மீளக் கடமைக்குத் திரும்புவதற்கு விரும்பவில்லை என்பதுடன் குறைந்தபட்சம் தமது கோரிக்கைகள் குறித்து பேச்சு நடத்துவதற்கு அரசு தரப்பிலிருந்து முன்வர வேண்டும் என்றும் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் குறிப்பிட்டார்.

இதேவேளை அனைத்து பல்கலைக்கழக மாணவர்களினதும் எதிர்காலம் குறித்துச் சிந்தித்து பல்கலைக் கழகக் கல்வி நடவடிக்கைகளை வழமைபோன்று முன்னெடுப்பதற்கு நாளை கடமைகளுக்குத் திரும்புமாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க அறிக்கையொன்றின் மூலம் அனைத்துப் பேராசிரியர்கள், கலாநிதிகள் மற்றும் விரிவுரையாளர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் பணிப்புறக்கணிப்பு காரணமாகப் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## ஆஸி. செல்ல முயன்ற 47 பேர் நேற்றுக் கைது

கொழும்பு,ஜூலை 29

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 47 பேரை நீர்கொழும்பில் கைது செய்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 28 பேர் கடற்கரையிலிருந்து 10 கடல் மைல் தொலைவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 19 பேர் மற்றொரு படகை எதிர்பார்த்த வண்ணம் இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாமெனக் கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.(த)

## முன்னேஸ்வரம் வேள்விக்கு எதிரான மனு மீதான வாதம் ஒகஸ்ட் 28 இல்

கொழும்பு,ஜூலை 29

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் மிருக வேள்வியைத் தடுக்கக்கோரும் ஆணைகோர் மனு மீதான வாதப்பிரதிவாதங்களை ஒகஸ்ட் 28 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்த மனு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவர் டபிள்யூ. எல்.ஆர். ரஞ்சித் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபின் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஸ்ரீபோதிராஜ மன்றம், ஜாதிக சங்கச் சம்மேளனம், தர்மவிஜய மன்றத் தலைவர் ஒல்கொட் குணசேகர, வண. பண்டிரிப்புவே வினீதா தேரோ, மிருக நலன்புரி நம்பிக்கை நிறுவனத் தலைவி இராங்கனி டீ சில்வா, அதன் தர்மகர்த்தா விசாக திலகரத்ன, இலங்கை மிருக பாதுகாப்புச் சங்க உதவித் தலைவர் லொறைன் மார்க்ரைட் பார்தோலொமஸ், அதன் செயலாளர் ஷர்மினி தெசிறீ ரட்நாயக்க மற்றும் ஆறு பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸ் மாஅதிபர், புத்தளம் பிரதிப் பொலிஸ் மாஅதிபர், சிலாபம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிலாபம் நகரசபை, அதன் தலைவர், ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் தர்மகர்த்தாக்களான எம். கனகரத்தினம், காளிமுத்து சிவபாக்கியசுந்தரம் மற்றும் மஹேந்திரசாமி ஆகியோருடன் அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த)

## பிரபாகரனுடனான போரை விட ஆபத்தான தருணம் இப்போது

### அரசை எச்சரிக்கிறார் குணதாச அமரசேகர

கொழும்பு,ஜூலை 29

வல்லரசாக மாறவுள்ள சீனாவின் நிலையை அறிந்து அமெரிக்கா இலங்கையில் முகாம் அமைக்க முயற்சிக்கிறது.

பிரபாகரனுடன் போர் நடத்தியதை விடவும் ஆபத்தான தருணம் இப்போது உதயமாகியுள்ளது எனத் தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனத் துரோக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாடும் இனமும் அழிவுப்பாதையில் செல்வதனை தடுக்க முடியாது. இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை பிளவடைவதனையே விரும்புகின்றன.

பிரபாகரன் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து, 13ஆம் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்காகவே நாம் ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரங்களை வழங்கினோம். 2018ஆம் ஆண்டில் சீனா உலக வல்லரசாக மாற்றமடைந்துவிடும். இதனால் பீதியடைந்துள்ள அமெரிக்கா இலங்கையில் முகாம் ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றது.

இதன் காரணமாகவே அமெரிக்கா இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றது-என்றார். (த)

## வாகன விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு,ஜூலை 29

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 10.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

காலியிலிருந்து கொட்டாவ நோக்கி பயணித்த கப் வாகனம் தடம் புரண்டதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

கப் வாகனத்தின் சாரதி அதே வாகனத்தின் கீழ் சிக்கி உயிரிழந்துள்ளார். விபத்து இடம்பெற்ற வேளையில் வாகனச் சாரதி வாகனத்திலுள்ள பாதுகாப்புப் பட்டியை அணிந்திருக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## ஒரே கட்சி ஆதரவாளர்கள் இரத்தினபுரியில் மோதல்

கொழும்பு,ஜூலை 29

இரத்தினபுரி பிரதேசத்தில் ஒரே கட்சி ஆதரவாளர்களைச் சேர்ந்த இரு குழுக்களுக்கிடையில் மோதல் மூண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பில் ஒரே கட்சிக்கிடையில் எழுந்த பிரச்சினையைத் தொடர்ந்து மோதல் மூண்டுள்ளது.

இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் 22 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.(த)

## டெசோவில் பங்கேற்குமாறு மனோ கணேசனுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 29

தி.மு.கவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் கலந்துகொள்ளும்படி ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஒகஸ்ட் மாதம் நடைபெற உள்ள இந்த மாநாட்டின் அதிகார பூர்வ அழைப்பாளர் ராதா கிருஷ்ணன் தி.மு.க தலைமையின் சார்பாக இந்த அழைப்பை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் நல்லையா குமர குருபரன் தெரிவிக்கையில்,

''டெசோ மாநாட்டில் கலந்துகொள்ள தி.மு.கவின் அழைப்பு எமக்கு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாடு தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் இலங்கையிலும், தமிழகத்திலும் எழுந்துள்ளன.

இலங்கை பிரச்சினை தொடர்பாக தமிழக அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள், தமது சொந்த அரசியல் நோக்கங்களுக்காக நடத்தப்படுகின்றனவா, இல்லையா என நாம் தேடிப் பார்ப்பது இல்லை. அது தமிழக அரசியல் கட்சிகளின் வேலை. எம்மைப் பொறுத்தவரையில், தமிழக அரசியல் கட்சிகளின் எல்லாவித நடவடிக்கைகளும் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. எனவே இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசியல் கட்சிகளின் எந்த ஒரு நடவடிக்கையையும் விமர்சிப்பதில்லை என்பது நமது கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

எனினும், இம்மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் நாம் இதுவரையில் எந்த வித .முடிவையும் எடுக்கவில்லை. எமது கட்சியின் தலைமைக்குழு இது சம்பந்தமான முடிவை எதிர் வரும் தினங்களில் எடுக்கும்-என்றார். (த)

## இலங்கை ஊழியர்களைச் சேர்க்க 9 ஓமான் நிறுவனங்களுக்குத் தடை

மஸ்கற், ஜூலை 29

ஓமானிலுள்ள 9 நிறுவனங்கள் இலங்கையர்களை ஊழியர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் தடைவிதித்துள்ளது.

இலங்கை ஊழியர்களை ஏமாற்றிய குற்றச்சாட்டின் காரணமாக இந்த நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 14 நிறுவனங்களுடனான செயற்பாடுகளை இலங்கைத் தூதரகம் நிறுத்திக் கொண்டுள்ளது.

கறுப்புப் பட்டியலில் உள்ளக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் 7 ஆடைத்தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களும் அடங்கும். அத்துடன் 3 ஆடைத்தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள், 4 ஆள்சேர்ப்பு நிறுவனங்கள், 3 சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் மேலும் 4 நிறுவனங்களுடனான தனது செயற்பாடுகளை, ஓமான் தொழிலாளர் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் காரண ம ாக இலங்கைத் தூதரகம் நிறுத்தியுள்ளது.

ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்காமை, ஊழியர்களை ஒழுங்கீனமாக நடத்துதல், சம்பளம் குறைக்கப்பட்டமை போன்ற பல முறைப்பாடுகள் இந்த நிறுவனங்களுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தூதுவர் அசோக கிரிஹகம கூறினார்.

இந்த நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இருக்கும் காலத்தில் இலங்கை ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் செய்ய விஸா வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.(த)

## நவம்பர் முதல் பால்மா குறித்து கடுமையான சட்டம்

கொழும்பு, ஜூலை 29

நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கோதுமை மா மற்றும் உணவுக்காகப் பயன்படுத்தும் மா வகைகளினை பங்கிடுதல், விற்பனைக்குக் காட்சிப்படுத்தல், பொதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் [illegible] கடைப்பிடிக்கவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் நலனுக்கு ஒவ்வாத வகையில் கோதுமை மாவினை கையாள்வதாக நாடுமுழுவதிலும் இருந்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அதி[illegible] விஷமான உணவை உள்கொண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலைத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலை தொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, உணவுப் பாதுகாப்புச் செயற்குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் இந்த பாரி[illegible]



சீலனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புக் கடனுக்கு மேலும் ரூ.40 மில்லியன்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களின் கடன் தொகைக்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்துக் கென விசேடமாக மேலும் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனக் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயால் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

மாவட்ட முகாமையாளர்களுக்கான இரண்டாவது காலாண்டு முன்னேற்ற மீளாய்வு கூட்டம் கொழும்பு மாவட்ட கட்டட பயிற்சி மையத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில், கலந்து கொண்ட மாவட்ட முகாமையாளர் றோயல் ஜெயச்சந்திரன் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்திலே அதிகளவான நிரந்தர வருமானம் பெறுபவர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பிப்பதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கடனாளிகள் அதிகமாக தெரிவு செய்யப்படுவதால் கடன் தொகை போதாமை உள்ளது.

நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களின் கடன் தொகை 60 மில்லியனாக இருந்தது. இந்த நிலையில் இந்த நிதியில் போதாமை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து முகாமையாளரின் வேண்டு கோளுக்கு இணங்க மேலும் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தேசிய சேமிப்பு வங்கி மூலம் 20 மில்லியனும், இலங்கை வங்கி மூலம் 20 மில்லியனும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த ஆண்டு நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களில் 161 பேருக்கு 67.8 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுக் கடனுக்காக புது வீடு கட்ட முன்னுரிமை வழங்கப்படும். தற்போது கடன் பெறும் ஊழியர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இறுதியில் வீட்டு வேலை பூர்த்தி செய்ய வேண்டும்.

நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களில் புது வீட்டு கடனுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்ந்து விண்ணப்பிக்க முடியும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## சுனாமி நினைவாலயத்துக்கு காணி பெறத் தீர்மானம்

வடமராட்சி,ஜூலை 29

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை சுனாமி நிலையத்தைப் பேணிப் பாதுகாக்க, இந்த நினைவாலயம் அமைந்துள்ள இடம் உள்ளிட்ட 6 பரப்புக் காணியை அரசிடமிருந்து சுனாமி நினைவாலயத்துக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும் என பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் பருத்தித்துறைப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற சுனாமிப் பேரலையால் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் ஆயிரத்துக்கு அதிகமானோர் காவு கொள்ளப்பட்டிருந்தனர். அவர்களின் பூதவுடல்கள் உடுத்துறையில் அரச காணியில் அடக்கம் செய்யப்பட்டன. சில உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமி நடைபெற்ற தினத்தில் காவுகொள்ளப்பட் டோரை நினைவுகூரும் நினைவு தினங்கள் ஆண்டு தோறும் இந்த நினைவாலயத்தில் நடைபெற்றுவருகின்றன. இயற்கையின் நியதியால் காவு கொள்ளப்பட்டோரை ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து, அந்த நினைவாலயத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அது அமைந்துள்ள காணியை- அதற்கென 6 பரப்புப் காணியை மருதங்கேணி உதவி அரச அதிபரிடமிருந்து சபை பெற்றுக் கொள்ளவேண்டும். என காணி கோரலுக்கான தீர்மானத்தைச் சமர்ப்பித்து எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் உரையாற்றி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்தத் தீர்மானத்தை சபையின் தலைவர் பூ.சஞ்சீவன் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ம-8)

## தீவகத்தில் விவசாயத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

தீவுப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை விஸ் தரிக்க நடவடிக்கை எடுக் கப்படும். பதினைந்தாயிரம் ஏக்கர் நிலம் இதற்குப் பயன்படுத்தப்படும் என்று வேலணைப் பிரதேச செய லகத்தில் தீவுப் பகுதி விவசாய அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற கூட்டத் தில் தெரிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச செய லர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் இலங்கை கல்வி அதிகாரிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீவகத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கக்கூடியதாக நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படும்.

கைவிடப்பட்ட விவசாய நிலங்களில் மீண்டும் விவ சாய நடவடிக்கைகளை முன் னெடுக்கவும் ஏற்றவகை யில் திட்டங்கள் முன்னெ டுக்கப்படும்- என்று இந்தக் கூட்டத்தில் மேலும் தெரி விக்கப்பட்டது. (ம-7)

## வேலணை பிரதேச கழிவுகளை அழிக்க அராலி கடற்கரையில் இடம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் குப்பை கூழங்களையும் கழிவுப் பொருள்களையும் எரிப்பதற்கு வேலணை அராலி கடற்கரைப் பகுதி ஏதுவாக இருக்கும் என்ப தால் அங்கு அவற்றை அழித்தொழிக்கக் கூடியதாக இடம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கென மாகாண சபை குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வேலணை பிரதேசசபை உறுப்பினர் க.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார். (ம-7)



மீள்குடியமர்வு நடைபெற்ற நாகர்கோயில் உபதபால் நிலையத்தை பருத்தித்துறை தபால் நிலைய பிரதம தபாலதிபர் திருமதி யோகராணி வல்லிபுரநாதன் திறந்து வைக்கிறார். பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன், உப தபாலதிபர் செல்வி எஸ்.சிவஞானசுந்தரம் ஆகியோர் அருகில் உள்ளனர். (ம-8)

### விஷ ஐந்து தீண்டியது என்பது தெரியாததால்

## வரணிப் பெண் அநியாயச் சாவு அசண்டையீனத்தால் துயர நிகழ்வு

கொடிகாமப் பகுதியில் தென்னந் தோட்டம் ஒன்றில் புல்லுக்குள்ளிருந்த பாம்பினால் கடியுண்ட குடும்பப் பெண் அநியாயமாக உயிரிழந்த சம்பவம் பிரதேச மக்களை வேதனைக்குள்ளாக்கி உள்ளது. வரணி, நாவற்காட்டைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண்ணான விக்கினேஸ்வரி கனகநாயகி (வயது 44) என்பவர் உயிரிழந்திருந்தார் என்பது தெரிந்ததே.

பாம்பினால் கடியுண்டதை அறியாத போதிலும் அதன் தாக்கங்களைக் கூட அசண்டை செய்ததாலேயே மரணம் சம்பவித்துள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2மணிக்கும் மாலை 4மணிக்கும் இடையில் தோட்டத்தில் பாம்பு கடித்திருந்த போதிலும் அதன் பின்னர் வீட்டுக்கு வந்து குளித்து விட்டு உணவருந்தியுள்ளார். இரவு 9 மணிக்கு வாந்தி ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து இரவு 11 மணியளவில் நாரி உளைவு ஏற்பட்டுள்ளது. என்ற போதிலும் வைத்திய சாலைக்குச் செல்லாமல் கை வைத்தியம் செய்துள்ளார்.

அதிகாலை 2 மணிக்குப் பின்னர் கதைக்க முடியாமலும் எச்சிலைக் கூட விழுங்க முடியாமலும் நெஞ்சு வலி ஏற்பட்ட பின்னரே வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளித்த போது உயிர் பிரிந்துள்ளது.

காலில் ஒரு கீறல் காயம் காணப்பட்ட போதிலும் அதனை ஒருவரும் கவனத்தில் கொள்ளாததும் அறியாததும் இறப்புக்கு காரணமாகி விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நெஞ்சு வலி மற்றும் பேச முடியாத நிலை என்று கூறப்பட்டதால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, அதற்குரிய சிகிச்சையே அளிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின .

உடல் கூற்றுப் பரிசோதனையின் போது உடலில் நஞ்சு பரவியிருப்பது அவதானிக்கப்பட்டதையடுத்து உடலை சோதனையிட்டபோது காலில் கீறல்க் காயம் இருந்தது கண்டறியப்பட்டது.

இந்தப் பெண்ணின் பாம்பு கடித்த கால் ஏற்கனவே சிறிது காலமாக உணர்ச்சியில்லாத நிலை இருந்ததாக உறவினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இறந்த பெண்ணுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நீரிழிவு நோய் ஏற்பட்ட பின்னர் பல்வேறு வருத்தங்கள் ஏற்பட்டதால் பாம்பு கடித்த அன்று ஏற்பட்ட உபாதைகள் குறித்தும் அலட்சியம் காட்டியதால் அநியாயமாக உயிரிழப்பு ஏற்பட ஏதுவாகியுள்ளதாக நம்பப்படுகிறது.

பாம்பு கடித்து 12 மணி நேரத்தின் பின்னரே சிகிச்சை பெறுவதற்கு வைத்திய சாலைக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தோட்டத்தில் பறிக்கப்பட்ட தேங்காய்களை எடுத்து வர வேலையாள்களுடன் சென்ற போதிலும் தோட்டத்தில் வீழ்ந்து காணப்பட்ட தென்னம் பாளைகளை எடுக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருந்தாகவும் தென்னம் பாளைகளை எடுத்து வரும் போது அதனுள்ளிருந்த பாம்பு கடித்திருக்கலாமெனவும் அல்லது தோட்டத்தினுள் காணப்பட்ட சிறு செடிகளுக்குள் மறைந்திருந்த பாம்பு கடித்திருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

பாம்பு கடித்த விஷம் உடலில் பரவும் போது வாந்தி மற்றும் நாரி உளைவு ஏற்பட்ட வேளையில் வைத்திய சாலைக்கு வந்திருந்தால் இவற்றின் அறிகுறியைக் கருத்தில்கொண்டு விஷம் தீண்டியிருக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் ஊகித்து அதற்குரிய சிகிச்சையை வழங்கி உயிரினைக் காப்பாற்ற முயற்சித்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

இனியும் இவ்வாறான உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு, மேற்கண்ட அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்திய சாலையை நாடவேண்டும் என்றும்- இந்தப் பெண்ணின் அநியாயச் சாவு உதாரணமாக இருக்கவேண்டும் என்பதிலும் பொதுமக்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

## நிகழ்வுகள் இன்று

**பதவி ஏற்பு**

வடமராட்சி லயன்ஸ்கழக 18ஆவது பதவி ஏற்பு வைபவம் மாலை 5 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை சபா மண்டபத்தில் லயன் எம்.பரமானந்தம் தலைமையில் நடைபெற உள்ளது. (ம-253)

**மருத்துவ முகாம்**

கைதடி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மருத் துவ முகாம் காலை 9 மணிக்கு யாழ்.கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு அப்பலோ மருத்துவக்குழு, சிறுபிள்ளைகள் வைத்தியம் யாழ். போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர்கள் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர். (ம-14)

**கலந்துரையாடல்**

இலங்கை சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அடையாளப் பணிப்புறக்கணிப்புத் தொடர்பாக அவர்களால் விடுக்கப்பட்ட அவசர அழைப்புக்கு வட மாகாணத்தில் உள்ள அரச சேவையிலுள்ள பட்ட தாரிகள் சார்பாக தீர்மான மொன்றை மேற்கொள்ளுவது தொடர்பாக பிற்பகல் 2 மணிக்கு கொக்குவிலில் உள்ள வட மாகாண அரச சேவைப் பட்டதாரி அலுவலர்கள் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம)

**பொதுக்கூட்டம்**

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் முற்பகல் 10 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-78)

**மலர் வெளியீடு**

கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவும் கோப்பாய் இணையத்தள அறிமுக நிகழ்வும் முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் தலைமை தாங்கவுள்ளார். மலரின் வெளியீட்டுரையை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் நிகழ்த்தவுள்ளார். இணையத்தை கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிமுகம் செய்து வைப்பார். (ம-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தேர்தலில் இனவாதம் நாட்டுக்கு மீண்டும் பேராபத்து

## எச்சரிக்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண

**கொள்கைகளை மக்களுக்கு விளக்குவதற்காகவே இடதுசாரிக் கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் பிரவேசித்துள்ளன.**

கொழும்பு, ஜூலை 29

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசியலுக்குப் பதிலாக இனவாதத்தை முன்னிலைப் படுத்தியே கிழக்கு மாகா ணத் தேர்தலில் செயற்பட்டு வருவதால் நாடு மீண்டும் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்து ஏற் பட்டுள்ளதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிங்களவரா? தமிழரா? முஸ்லிமா? என்ற அடித்தளத்தில் இருந்தே தற்போது கிழக்குத் தேர்தல் களம் கொண்டு செல்லப்படுவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதம் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக நடந்துள்ள அழிவுகள் குறித்து எமக்கு நிறையவே பட்டறிவுப் பாடங்கள் உள்ளன. இனவாதத்துடன் சார்ந்து நிற்பதைத் தவிர்ப்பதற்கு - இனவாதமற்ற அடையாளப்படுத்தல்ஒன்றைப் பேணி இலங்கையர் என்ற பொது நலன் பற்றிச் சிந்திப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டிய தருணம் இது. இவ்வாறு தூரநோக்கற்று குறுகிய இலாபநோக்கங்களுக்காகச் செயற்பட்டு கிழக்கில் ஒரு ஜனநாயக ஆட்சி மலர்வதற்கு முட்டுக் கட்டை போடக்கூடாது என்பதே எனது எதிர்பார்ப்பு.

எமது கொள்கைகளை மக்களுக்கு விளக்குவதற்காகவே இடதுசாரிக் கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் பிரவேசித்துள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் நாம் இரு ஆசனங்கள் கோரியபோதும் அவர்கள் அதுபற்றிக் கரிசனை காட்டாதமையால் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு தனித்துத் தேர்தலில் இறங்கியது - என்றார். (த)

## மட்டக்களப்பில் ரணில்

மட்டக்களப்பு, ஜூலை 29

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க நேற்று மாலை மட்டக்களப்புக்குப் பயணம் செய்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான அரசரட்ணம் சசிதரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளவுள்ள பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, கொழும்பு மாநகர சபை மேயர் எ.ஜே.எம். முஸம்மில் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.(த)

## ஒலிம்பிக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தது. கூடுதலாக அனைத்து நாடுகளைப் பற்றியும் கணிசமான குறிப்புக்களைக் கூறிக்கொண்டிருந்தனர் பி.பி.சி. வர்ணனையாளர்கள்.

குறிப்பாகச் சேர்பியா, ருவாண்டா, லிபியா, ஈரான், போன்ற நாடுகள் போரினால் பாதிக்கப்பட் டது பற்றியும், ருவாண்டா, சேர்பியா நாடுகளில் இனப் படுகொலை நடந்தது பற்றியும் அவர்கள் கூறி னர்.

ஆனால் இலங்கை வரும்போது எதுவும் கூறாது இது ஒரு அழகான தீவு என மட்டும் கூறிவிட்டு அடுத்த நாட்டைப் பற்றிக் கூறினார்கள் வர்ணனையாளர்கள். (த)

## வேட்பாளர் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவை விலக்கிக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவதாலேயே அவர் கைது செய்யப்பட்டதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும், இளைஞர்கள் சிலர் நாட்டைவிட்டு தப்பிச் செல்வதற்கு மேற்படி வேட்பாளர் உதவியிருக்கலாம் எனவும் அதை மனிதக் கடத்தல் எனத் தான் வர்ணிக்க விரும்பவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

தம்மை கொடுங்கோலாட்சிக்குள்ளாக்கும் ஒரு நாட்டிலிருந்து மக்கள் தப்பிச் செல்கின்றனர். இந்த நபர் அரசியல் ரீதியாக எம்மை ஆதரிக்கும் ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். ஆனால் இவர் கடந்த தேர்தலில் பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேவை ஆதரித்தவர். கைது செய்யப்பட்டிருந்த சுமார் 30 இளைஞர்களைப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டதன் மூலம் விடுவிக்க இவரால் முடிந்தது எனவும் சம்பந்தன் கூறினார்.(த)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலும் ஹக்கீம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார். எனினும் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற முஸ்லிம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் இரண்டு இடங்களில் இருந்தும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். ஜும்மா பள்ளிவாசலில் நேற்று மதியம் 12.45 மணியளவில் உப்புக்குளம் மக்களுடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

மன்னார் கோந்தைப்பிட்டிக் கடலில் மீன்பிடிப்பது தொடர்பில் ஜோசப்வாஸ் மீனவர்களுக்குத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பான தீர்ப்பை அடுத்து உப்புக்குளத்தில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-12)

## ஒலிம்பிக் ஆரம்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை எதிர்த்து அங்கு பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த புலம்பெயர் தமிழர் அமைப்புகள் திட்டமிட்டிருந்தன. இதனையடுத்து ஜனாதிபதிக்கு லண்டனில் விசேட பாதுகாப்பு வழங்குமாறு பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் ஊடாகக் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும் லண்டன்வரும் ஏனைய அரச தலைவர்களுக்கு வழங்கும் பாதுகாப்பை மட்டுமே ஜனாதிபதி மஹிந்தவுக்கும் வழங்க முடியும் எனவும் மேலதிக பாதுகாப்பு எதனையும் வழங்க முடியாது எனவும் ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார் கைவிரித்துவிட்டனர்.

இந்தநிலையில் லண்டன் ஒலிம்பிக் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொள்ளும் திட்டத்தை கைவிட்டார் ஜனாதிபதி மஹிந்த.(த)

## 20 புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்காக சுஹத கம்லத் தலைமையில் நால்வர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

மேற்படி கைதிகளில் 20 பேர் பொதுமக்கள் மற்றும் பொருளாதார இலக்குகள் மீது பாரிய குண்டுத்தாக்குதல்களை நடத்தியமை, அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்தமை, தற்கொலைக் குண்டுதாரிகளுக்கு பயிற்சியளித்தமை மற்றும் தாக்குதல்களில் ஈடுபடுத்தியமை உட்பட போர் குற்றங்களைப் புரிந்ததை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளதாகவும் சுஹத கம்லத் தெரிவித்தார்.

இந்தக் கைதிகளை நாம் மூன்று வகையாகப் பிரித்துள்ளோம். கடும்போக்கு புலி உறுப்பினர்களைத் தவிர, சிறு குற்றங்களை புரிந்த 150 பேர் அடுத்த வாரம் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவர் என அவர் மேலும் கூறினார்.

ஏனையோர் புலிகளின் அச்சுறுத்தல்கள் காரணமாக வேறு வழியில்லாததால் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். தாம் போராளிகளாகச் சேர்க்கப்படுவதற்குச் சம்மதித்திருக்காவிட்டால் தமது குடும்பத்தினர் அனைவரும் புலிகளால் கொல்லப்பட்டிருப்பர் என விசாரணை அதிகாரிகளிடம் இவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அவர்களைத் தயவுடன் நடத்த நாம் தீர்மானித்துள்ளோம் எனவும் கம்லத் தெரிவித்தார்.

புலி உறுப்பினர்கள் சிலர் புலிகளின் சர்வதேச வலையமைப்புடன் தொடர்புகொண்டிருப்பதாலும் அரசு அளித்த புனர்வாழ்வுக்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள மறுத்ததாலும் விசாரணைகள் இலகுவாக இருக்கவில்லை எனவும் சுஹத கம்லத் கூறினார். (த)

## அரசின் திட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதில் சந்தேகமிருக்க முடியாது. ஆளுநரதும் மத்திய அரசினதும் பிடியில் உள்ள மாகாண சபை முறைமையைக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதை 1989 மற்றும் 2008 இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தம்வசம் வைத்திருந்த அப்போதைய முதலமைச்சர்கள் தெளிவாக அவ்வப்போது சொல்லியுள்ளனர்.

தேர்தல்களில் பங்குபற்றுவது என்பது ஓர் அரசியல் இலக்கை எய்துவதற்கான கருவியாக இருக்குமிடத்து அவற்றில் பங்கு பற்றுவது சரியாக இருக்கும். மாறாக அவ்வாறாகப் பங்கெடுப்பதானது எடுத்துக் கொண்ட அரசியல் இலக்குகளுக்கு பாதகமாக இருக்குமிடத்து மாற்றுபாயங்களைப் பற்றிச் சிந்திப்பதும் எம்மீது திணிக்கப்படும் ஓர் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் முன்யோசனையுடனும் தூர நோக்குடனும் செயற்படுவதும் இற்றைக் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் முன்னகர்வுக்கு அத்தியாவசியமானது.

தமக்கெதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களுக்கெதிராகத் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு மக்கள் தேர்தல்களைப் பயன்படுத்த வேண்டும் என்று அங்கலாய்க்கின்றமை இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

இந்த அடிப்படையில் சில முன்மொழிவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்வைக்கிறோம்.

*தற்போதைய ஒற்றையாட்சி அரசமைப்பும் அதன் கீழான மாகாண சபை முறைமையும் நிராகரிக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தமானது அரசியல் தீர்வுக் கான ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்கப்பட முடியாதது.

*வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகமாகும். எந்தவொரு அரசி யல் தீர்வும் இணைந்த வடக்கு கிழக்கை ஓர் அலகாக அங்கீகரிப்பதாக அமைய வேண்டும். இந்த விடயம் தொடர்பில் குறிப்பாக முஸ்லிம் மக்களது நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது முக்கியமான தாகும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து வேலை செய்தல். இவ்விரு சமூகத்தினதும் இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

*நீடித்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வொன்று தமிழர்களது தேசம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிப்பதனூடாகவே வரும். இவற்றை அங்கீகரிக்காத எந்தவொரு அரசியல் செயன்முறையும் பிரயோசனமற்றது.

*ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் தமிழருக்கெதிரான அநியாயங்களும் அடக்கு முறைகளும் பெருகியுள்ளனவே அன்றி குறையவில்லை. தமிழரது நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுதல், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ச்சியாகத் தடுப்பில் வைக்கப்பட்டிருத்தல், காணாமற்போனோர் தொடர்பில் தொடர்ச்சியாக எந்தவித முன்னேற்றமும் இல்லாதிருத்தல், தமிழ்த் தேசியத்தின் பொருளாதார, கலாசார அடிப்படைகள் சீரழிக்கப்படுதல், அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்தல், கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய அனைத்துத் துறைகளினது தனித்துவங்களை சீரழிக்கும் வகையில் அரசியல்வாதிகளின் தலையீடு அதிகரித்தல், உயர் பாதுகாப்பு வலயங்கள் நிரந்தரமாக்கப்படல் (சம்பூர் உயர் பாதுகாப்புவலயம் உட்பட), இடம்பெயர்ந்த மக்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் தொடர்ச்சியாக முகாம் வாழ்வில் இன்றும் அல்லற்படல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் புறக்கணிக்கப்படல் போன்றன தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவிக்கும் இன்னல்களுக்கு உதாரணங்கள்.

மேலும் தமிழருக்கெதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளிலும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் தமிழரது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதைச் சர்வதேச சமூகம் உணர வேண்டும். அந்த அறிக்கையும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமும் சர்வதேசத்தை ஏமாற்றும், நேரத்தை வாங்கும் முயற்சியே. மேலும் அவ்வாறாகக் கிடைக்கும் நேர இடைவெளிக்குள் தமிழர்களது இருப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசு திட்டமிடுகின்றது என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்படி விடயங்களை வலியுறுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தக் தேர்தல்களில் பங்குபற்றுவதனூடாகத் தமிழர்கள் பிரிந்த வடக்குக் கிழக்கை அங்கீகரித்துவிட்டனர், மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்ற வாதத்தின் செறிவை ஓரளவேனும் குறைக்கலாம் என எண்ணுகின்றோம். மாகாண சபை முறைமையையும் பிரிந்த [illegible] ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துதல் இன்றியமையாததாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய ஊடகங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

சீனாவின் செல்வாக்குக்குள் இலங்கையை வைத்திருப்பதற்காக இந்தத் திட்டத்தைப் பாகிஸ்தான் வடிவமைத்துள்ளதாக "இந்தியா ருடே" இணையத்தளத்தில் ஜூலை 24 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகையில், "இந்தத் தீவில் எங்குமே அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்கு நாம் தீர்மானிக்கவில்லை. அவ்வாறான திட்டத்துக்காக எந்த வெளிநாட்டுடனும் நாம் கலந்துரையாடவில்லை. "இந்தியா ருடே" யில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது" என்றார்.

ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடக் கூடாது. குறிப்பாகப் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ள நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

"கொழும்பு, கற்பிட்டி, திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் மின்விநியோக அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்கள் உள்ளன. இதற்கு நாம் எவரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.(த)

## மன்னார் நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் நிலையிலேயே மன்னார் பொது வைத்தியாசாலை வீதியில் உள்ள அவரது வீட்டின் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மன்னார் கோந்தைப்பிட்டிக் கடலில் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பாக மன்னார் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து மன்னர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதோடு நீதிபதியும் அமைச்சர் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவங்களைக் கண்டித்து நீதித்துறையினர் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில் வெள்ளி இரவு 10 மணியளவில் இனந்தெரியாதவர்களால் நீதிபதியின் வீடு மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு நேற்றுப் பகல் சென்ற பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (த-4-12)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உள்ளார்ந்த விருப்பம் இல்லாமையின் வெளிப்பாடு இது

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை உள்ளடக்கி ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா சமர்ப்பித்த தீர்மானம் நிறைவேறி நான்கு மாதங்கள் கடந்த நிலையில் -

ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவதில் இலங்கை அக்கறையற்றிருக்கிறது; இன்னும் பரிசீலனை எல்லைக் குள்ளே தான் இருக்கிறது என்று வெளிநாடுகளில் இருந்து விமர்சனங்கள் எழுந்த நிலையில் -

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவது தொடர்பான நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், தீர்மானத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் இலங்கை அரசு எடுத்துள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்து அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் செயற்பாடுகளை அவதானிக்க ஐ.நா. குழு ஒன்றை அனுப்ப மனித உரிமைகள் ஆணையாளர் விரும்பியபோதும் இலங்கை அரசு அதனை ஏற்கவில்லை. அந்தச் சூழ்நிலையிலேயே தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கென கடந்த மே மாதம் ஜனாதிபதி விசேட செயலணி ஒன்றை நியமித்திருந்தார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தேசிய வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என்றும், ஒக்ரோபர் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் இது சமர்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை செயற்படுத்த மூன்று வருடங்கள் தேவை என்று இலங்கை அவகாசம் கோரி இருப்பது தீர்வுக்கான காலம் அதிகரிக்கவே வழிவகுக்கும். மொத்தத்தில் இது ஓர் இழுத்தடிப்பு நடவடிக்கையே.

2002ஆம் ஆண்டு, நோர்வேயின் அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்ட இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் முறிவடைந்ததற்கான சூழ்நிலைகள், 2009 இறுதிப் போரின்போது இடம்பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆகியவை குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி நியமித்திருந்தார். நல்லிணக்க ஆணைக்குழு கடந்த செப்ரெம்பர் மாதம் தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. ஜனாதிபதி நவம்பர் மாதம் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ - மூன் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்ய மூவரடங்கிய நிபுணர் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுத்தபோது அதனை நிராகரித்த பின்புலத்திலேயே இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் பரிந்துரைகளைப் புறந்தள்ளும் உள்நோக்கத்துடனேயே அது தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. எனினும் ஆணைக் குழு உறுப்பினர்கள் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களில் போதுமான பரிச்சயம் அற்றவர்கள் என்று அப்பொழுது விமர்சிக்கப்பட்டது. போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான சர்வதேச விசாரணையைத் தவிர்ப்பதற்கான இலங்கை அரசின் தந்திரம் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் குற்றஞ்சாட்டின, கண்டித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் சில முன்னேற்றகரமான விடயங்கள் இருப்பதை ஒப்புக் கொண்ட போதிலும், இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பு கூறும் விடயத்தில் ஆணைக்குழு முறையாகச் செயற்படத் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டின. ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து அரசுக்குள்ளும் கருத்து முரண்பாடு உண்டு.

ஜெனிவா தீர்மானம் எந்த ஒரு நாட்டையும் கட்டுப்படுத்த மாட்டாது. ஆனால் தீர்மானம் நிறைவேறப் பங்களித்த நாடுகள் இலங்கை மீது தடைகளை அறிவிக்கும் வாய்ப்பு உண்டு.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி கடந்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. ஒன்றரை வருடங்கள் கழிந்தும் எதுவித முன்னேற்றமும் இல்லை. முட்டுக்கட்டை நிலைமையே முழு அளவில் காணப்படுகிறது. அதே கோலத்தில் ஆணைக்குழுவின் ஏனைய பரிந்துரைகளையும் அரசு கையாளுமானால் பல வருடங்கள் கடந்தாலும் கூட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற முடியாது என்பது வெளிச்சமானது. இலங்கைப் பிரச்சினை ஒரு வகையில், ஓரளவில் அனைத்துலகின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையிலும்கூட இலங்கை துரிதமாகச் செயற்பட்டு, சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்குக் கால் வைப்பதற்கான சமிக்ஞையைக் காணோம்.

இது தொடர்பில் தனக்கு இதயசுத்தியான உள்ளார்ந்த விருப்பம் இல்லை என்பதனையே அரசு வெளிப்படுத்தி உள்ளது; அவ்வளவே.

# யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு 215 மாணவர்கள் இம்முறை நியமனம்

## கிழக்கிலிருந்தே அதிகம் பேர் வருகை

யாழ்ப்பாணம் ஜூலை 29

யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கென மாணவ தாதியர் 215 பேர் இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறிக்குத் தகுதியுடைய சுமார் 300 பேர் வரை வடக்கில் நியமனத்தை எதிர்பார்த்திருந்தும் கடந்த முறை போன்றே கிழக்கிலிருந்து இம்முறையும் அதிகமானோருக்கு யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் உள்ள தாதிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிலுநராக இம்முறை 331 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் 215 பேரும், வவுனியாவிலுள்ள தாதிய பயிற்சிக் கல்லூரியில் 66 பேரும், மட்டக்களப்பிலுள்ள தாதிய பயிற்சிக் கல்லூரியில் 50 பேருக்கும் பயில்வதற்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது .

தாதியர் பயிற்சி நெறிக்கு கடந்த முறை யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சுமார் 400 பேர் இப்பயிற்சி நெறியைப் பயில்வதற்கு தகுதியுடையவர்கள் என்பது உறுதிசெய்யப்பட்டது. அதில் கடந்த முறை அணியில் 49 பேருக்கு இந்தப் பயிற்சியைப் பயில்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஏனைய நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்

இந்த முறை 56 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதனால் சுமார் 295 பேர் இப்பயிற்சி நெறியை எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்த முறை யாழ். தாதிய கல்லூரிக்கு அம்பாறையிலிருந்து 101 பேரும், மட்டக்களப்பில் இருந்து 58 பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து 56 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பிலுள்ள கல்லூரிக்கு அதே இடத்தைச் சேர்ந்த 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள தாதிய கல்லூரிக்கு வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 66 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொதுவாக கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அதே மாகாணத்தில் உள்ள தாதியபயிற்சிக் கல்லூரிக்கு நியமனம் செய்யப்படுவர். தவறின் வவுனியாவிலுள்ள தாதிய கல்லூரியில் நியமனம் செய்யப்படுவர்.ஆனால் இம்முறை இதனைத் தவிர்த்து அதிகமானவர்கள் கிழக்கில் இருந்து யாழ். தாதியகல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தெரிவு எண்ணிக்கை தொடர்பாக யாழ். தாதிய கல்லூரி அதிபர் செல்வி ஆர்.வல்லிபுரநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது ;

யாழ். தாதிய கல்லூரியில் பயில நியமனக் கடிதங்கள் கிடைத்தவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ். தாதிய கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் நெருக்கடிகளைக் குறைப்பதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ தாதியரை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அனைவருக்குமான பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளன என்றும் கூறினார். (ம-4)

## வவுனியாவில் 6 மாதங்களில் 34 சிறுவர் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான 6 மாத காலத்தில் 34 சிறார்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என முறையிடப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தில் இருப்பவர்களும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெரும்பாலான சிறார்கள், அவர்களது இரத்த உறவினர்களாலேயே துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

13 சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். 12 சிறார்கள் உடலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். உளரீதியான துஷ்பிரயோகங்களால் 8 சிறார்கள் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளனர். சிறார் ஒருவர் பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டுள்ளார் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். இதில் அரச உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உளநல சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறான துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அரச உத்தியோகத்தர்கள் நீதிமன்றங்களால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் நிர்வாக ரீதியிலான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோர் கவனிப்பு இல்லாத சிறார்களே புறக்கணிப்புக்கு உள்ளாகின்றனர். பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் துஷ்பிரயோக சம்பவங்களை முறைப்பாடு செய்யும் வீதம் அதிகரித்துள்ளது என்று மேலும் கூறப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 1929 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறையிடலாம் என்றும் கூறப்பட்டது. (ம-4)

## தென்மராட்சியில் வரட்சியால் வற்றின குளங்கள்

தென்மராட்சி,ஜூலை 29

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் கடும் வரட்சியினால் குளங்கள் வற்றி நீரின்றிக் காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகள் அந்தப் பகுதிக் குடியிருப்புக்களுக்குள் வருகின்றன என்று அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிகளில் நெல் வயல்கள் காணப்படும் இடங்களில் உள்ள 30 இற்கு மேற்பட்ட வயல்கள் நீரின்றி காய்ந்து போய் விட்டன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை தீவுப் பகுதியிலும் கடும் வரட்சி காணப்படும் நிலையில் மக்கள் குடிதண்ணீருக்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கால்நடையாகவும், வாகனங்கள் மூலமும் நீண்ட தூரத்துக்குச் சென்று குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

இந்தத் தொடர் வரட்சியால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வரட்சி நோய்களுக்கும் ஆளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பனை உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த புத்தளத்தில் நிலையம்

யாழ்ப்பாணம் , ஜூலை 29

பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் பனை சார்ந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தும் 'கற்பகச் சோலை' எனும் நிலையம் கடந்த திங்கட்கிழமை புத்தளத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கற்பகச்சோலை ஆனது பனை அபிவிருத்தி சபையின் சந்தைப்படுத்தல் பிரிவாகும். தற்போது இந் நிலையம் புத்தளம் - கற்பிட்டி ஆனைவாசல் வீதியில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த 4 வருடங்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆயினும் தற்போது தான் இதைத் திறப்பதற்கான நேரம் கூடியுள்ளது. பனை அபிவிருத்தி சபையின் சந்தைப்படுத்தல் பிரிவினால் சேகரிக்கப்பட்ட 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலே இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதேசத்தில் பனந்தோப்பு ஒன்றை வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் குத்தகையில் எடுத்துள்ளோம் .

அவற்றில் கிடைக்கும் பயன்கள் அனைத்தும் கற்பகம் நிலையத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பனை நாற்றுக்களை இட்டு விற்பனை செய்யவும் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (ம-3-13)

## கடற் பாம்பினால் கடியுண்ட தொழிலாளி

தென்மராட்சி,ஜூலை 29

கரைவலை இழுக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளி கடற் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இடம்பெற்றது.

வலை இழுத்துக் கொண்டிருந்த வேளையிலேயே குறித்த நபர் கடியுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வத்திராயன் வடக்கைச் சேர்ந்த மகாலிங்கம் சௌந்தரராஜா (வயது 44) என்பவரே கடற்பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிகளைப் பொறுப்பேற்காத தொழில்நுட்ப பாட ஆசிரியர்கள்

## துணுக்காய் கல்வி வலயத்தில் அவலநிலை

துணுக்காய்,ஜூலை 29

துணுக்காய் கல்வி வலயத்தில் தொழில் நுட்பப் பாடத்திற்கென நியமிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஐந்து ஆசிரியர்கள் இதுவரை தமது பணிகளைப் பொறுப்பேற்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஆறு பாடசாலைகள் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முத்து ஐயன் கட்டு வலது கரை அ.த.க.பாடசாலை, மாங்குளம் ம.வி, ஒட்டுசுட்டான் ம.வி., பாண்டியன்குளம் ம.வி., யோகபுரம் ம.வி, மல்லாவி மத்திய கல்லூரி ஆகியனவே 1000 பாடசாலைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப்பாடசாலைகளில்தொழில் நுட்பப் பாடங்களை போதிப்பதற்குரிய ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

**தற்போது ஓர் ஆசிரியர் மட்டுமே பணியில் உள்ளார். இந்த நிலையில் ஐந்து தொழில்நுட்ப ஆசிரியர்கள் மட்டக்களப்பில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் தமது பணிகளைப் பொறுப் பேற்கவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.**

இங்கு தற்போது ஓர் ஆசிரியர் மட்டுமே பணியில் உள்ளார். இந்த நிலையில் ஐந்து தொழில்நுட்ப ஆசிரியர்கள் மட்டக்களப்பில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் தமது பணிகளைப் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய கல்வி வலயங்களுக்கு தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் துணுக்காய் கல்வி வலயத்துக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வருகை தராததையிட்டு முல்லைத்தீவு அரச அதிபர், துணுக்காய்ப் பிரதேச செயலர், மத்திய கல்வி அமைச்சர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் உயர்தர வகுப்பில் விஞ்ஞான வகுப்புகளைத் கொண்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி என்பனவற்றில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பொலிஸாரால் கிழித்தெறியப்பட்டன நிமலரூபனின் அஞ்சலி சுவரொட்டிகள்

தமிழ் அரசியல் கைதி நிமலரூபனை நினைவு கூர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒட்டப்பட்ட நினைவஞ்சலி சுவரொட்டிகள் பொலிஸாரால் கிழித்தெறியப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி மாலை வவுனியா நெளுக்குளப் பகுதியிலும் அதனை அண்மித்த இடங்களிலும் நூற்றுக்கணக்கான நிமலரூபனின் நினைவஞ்சலிச் சுவரொட்டிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலும் அந்தப் பகுதி இளைஞர்களாலும் ஒட்டப்பட்டன. ஆனால் இவை யாவும் மறுகணமே அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரால் கிழித்தெறியப்பட்டன. இது ஓர் அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறல் செயலென அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் தெரிவித்தனர்.

மேலும் நிமலரூபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்ற சுதந்திரமான சூழல் அங்கிருக்கவில்லை. பெருமளவு படையினரும் பொலிஸாரும் வீதிகள் இருமருங்கிலும் நிமலரூபனின் வீட்டிலும் பாதுகாப்பு என்ற போர்வையில் குவிக்கப்பட்டிருந்தனர். ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டால் தமக்கு ஆபத்து நேரிடும் என்ற அச்ச நிலை காரணமாக பொதுமக்கள் பலர் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளவில்லை.

இதுதொடர்பாகப் படையினரும் பொலிஸாரும் தெரிவிக்கையில்; சிறைச்சாலையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் போன்று நெளுக்குளத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டனர்.

மேலும் என்றுமில்லாதவாறு நெளுக்குளம் மயானம் துப்புரவு செய்யப்பட்டுச் சந்தேகத்திற்கு இடமாக ஏதாவது பொருள்கள் இருக்கின்றனவா எனப் பரிசோதனைகள் செய்யப்பட்டுக்கழிவு பொருள்களும் அகற்றப்பட்டிருந்தன. (க-402)

## கிளிநொச்சி ம.வியில் மாணவர் தலைவர் தினம்

கிளிநொச்சி ஜூலை 29

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மாணவர் தலைவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

நாளைய தினம் காலை 9 மணி முதல் அடுத்தநாள் மதியம் வரை வதிவிடப் பயிற்சிப் பட்டறையுடன் கூடியதாக இந்த மாணவர் தினம் கொண்டாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர் தலைவர்களுடன் அயல் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் தலைவர்களும் கலந்து கொள்வர். சுமார் 100 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பயிற்சிகளை வழங்கும் வளவாளர்களாக ஓய்வு பெற்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி சாந்தன், வவுனியா பொதுமருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

முதல் நாள் நிகழ்வுகள் காலை 9 மணி தொடக்கம் இரவு 10.30 மணிவரையும், காலைமுதல் முற்பகல் 11 மணிவரையும் இடம்பெறவிருக்கின்றன.

இதில் கலந்து கொள்ளும் மாணவர் தலைவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

(க-405)



நேற்றுமுன்தினம் வவுனியாவில் அமைச்சர் ரிஷாத்துக்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது.

## குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு போதிய வசதிகள் இல்லை

### கைவிரிக்கிறார் துணுக்காய் பிரதேச சபைத் தலைவர்

முல்லைத்தீவு ஜூலை 29

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் இதனைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய வசதிகள் இல்லையெனவும் துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்விளான், ஐயன்கன்குளம் மேட்டுக்காணி, பழைய முறிகண்டி, கோட்டைகட்டியகுளம், உயிலங்குளத்தின் மாதிரிக் கிராமம் ஆகியவற்றில் தற்போது பெரியளவில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இங்குள்ள மக்கள் தமக்குரிய குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது நிலவி வருகின்ற கடும் வரட்சி காரணமாகக் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது. இதனால் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாகத் துணுக்காய்ப் பிரதேச சபையின் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; மேற்படி பிரதேசங்களில் தற்போது குடிதண்ணீர் அதிகமாக உள்ளது. ஆனால் அதனை விநியோகம் மேற்கொள்ளக் கூடிய வசதிகள் தான் இல்லையெனத் தெரிவித்தார். (சு-6)

## கற்சிலைமடு அ.த.கவில் புதிய கட்டட வேலைகள்

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டட வேலைகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 64 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் கட்டடங்களில் இருமாடிக் கட்டடமொன்றும் வேறு கட்டடங்களும் அடங்குகின்றன.

ஆசிரியர் விடுதி, அதிபர் விடுதி, கற்றலுக்கான கட்டடங்கள், நவீன வசதிகொண்ட மலசலகூடங்கள், சபா மண்டபம் ஆகியனவே ஏனைய கட்டடங்களாகும்.

வளர்ந்து வருகின்ற இந்தப்பாடசாலையின் கல்வி, விளையாட்டு ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றமை கற்சிலைமடு கிராம மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (க-500)

## தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் கலை நிகழ்வுகள்

### தொடரும் என்கிறார் சிவகுமாரன்

வவுனியா, ஜூலை- 29

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இருவாரங்களுக்கு ஒரு தடவை கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தமிழருவி சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் உரை ஓவியம், கவிதைக் களங்கள் ஆகிய நிகழ்வுகள் வவுனியாவில் இடம்பெற்றன. இவை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன ஆறுதலை வழங்கவும், நவீன தொழில்நுட்ப சாதனங்களால் திசை திருப்பப்படும் இளைஞர்களை நல்வழிப்படுத்திக் கலையின் பக்கம் மனதைத் திசை திருப்பிக் கல்வியில் கவனம் செலுத்துவதற்கு வழிகோலும் வகையிலும் இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளதாகப் பலரும்தெரிவித்ததையடுத்து எமது கலைச் சேவையை விரிவுபடுத்தியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இளம் கலைஞர்கள் பலர் வவுனியா மண்ணில் உருவாக வேண்டும். மூத்த கலைஞர்கள் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நாம் ஒருபோதும் கலைச் சேவையில் சோடை போகக் கூடாது. பாடசாலை மாணவர்களுக்கென கலை நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளோம். சிறந்த சொற்பொழிவுகளை இறுவட்டு வடிவில் அமைத்து வெளியிட்டு அவற்றை மாணவர்களுக்கு வழங்கவும், கவிதை, நாடகம், குறும்படம், இசை வேள்விகளை நடத்தவும் சிறந்த தொரு களத்தை வவுனியா தமிழ்ச்சங்கம் அமைத்து வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## இரு குழுக்களுக்கிடையே விநாயகபுரத்தில் மோதல்

வவுனியா, ஜூலை 29

வவுனியா விநாயகபுரம் பகுதியில் இரு இனங்களைச் சேர்ந்தவர்கள் அடிதடியில் ஈடுபட்டதாகத் தெரிய வருகின்றது. இந்தச் சம்பவம் கடந்த 25 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் தொழில் ரீதியில் பெரும்பான்மை இன இளைஞன் ஒருவனுக்கும் மற்றொரு இளைஞனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அந்தப்பிரச்சினை அரசியல் ரீதியான வாய்த்தர்க்கமாக முற்றியது. இதனை அடுத்து பெரும்பான்மை இன இளைஞன் மற்றைய இளைஞனைத் தாக்கினார். பின்னர் இந்த இருவரையும் சேர்ந்தவர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

மேலும் சிலர் முஸ்லிம்களுக்கும் சிங்களவருக்கும் மோதல் வெடித்துள்ளதாக, வதந்திப் பரப்பியதையடுத்து அந்தப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அதனை அறிந்த பொலிஸார் அங்கு வருகை தந்தனர். மோதலில் தொடர்புடைய இருதரப்புக்களையும் விசாரணை செய்தனர். மோதலில் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மோதலில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கினர். தொடர்ந்தும் அப்பகுதியில் மோதல் இடம்பெறாதிருப்பதற்காகப் பொலிஸார் அந்தப் பகுதிக்குள் நுழைந்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். யாராவது கூட்டமாக நின்றால் உடனடியாகத் தமக்குத் தெரியப்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
நா.கமலநாதனின்
அன்புப் பேர்த்தியார்
(அப்பம்மா)
திருமதி மாணிக்கம்
பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பூங்கனிச் சோலை
நண்பர்கள்

(சி/1786) (3.14)

## கண்ணீர் அஞ்சலி



E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம்,
வட மாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.

(21128)15-14)

## மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் சோமசுந்தரம்



மடத்தடி, கந்தரோடையினை பிறப்பிடமாகவும் தம்மளை, சங்குவேலி மற்றும் மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தை வசிப் பிடமாகவும் கொண்ட பாக்கியம் சோமசுந்தரம் அவர்கள் 28.07.2012 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-முத்துப்பிள் ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சுப்பையா சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், தர்மலிங்கம், காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து, தங்கம்மா, பருவதம், கந்த சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகசக்தி அம்மா (சத்தியா)வின் அன்புத்தாயாரும், பாலசிங்கத்தின் பாசமிகு மாமியாரும், கமலதாசன், சுவர்ணதாசன், கவிதா, மீரா, பிர சன்னா, பிரதீகா, மகிஜா ஆகியோரின் பேர்த்தியும், ஜினோ ஷன், லோகிஷா, ஜெஷ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் மருதனார்மட இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.
(21116) (3.6.14)

தகவல்-
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



பிரபல வர்த்தகரும், சைவசமய
அபிமானியுமான
E.S.P நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தானம்
கொக்குவில்

(சி/1781)15-14)

## நல்லூர்த் திருவிழாவுக்கு மேலும் 150 பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். நல்லூர் முருகனின் உற்சவகாலப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்து திருவிழாக் கால காவல் கடமைகளுக்காக காவற்றுறையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 600 காவற்றுறையினர் பாதுகாப்புப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த எண்ணிக்கையிலிருந்து மேலும் 150 பேர் இணைக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோயிலில் தற்போது அதிகரித்துள்ள கொள்ளைச் சம்பவங்களை அடுத்தே அந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார். (10)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி மாணிக்கம் பேரம்பலம்
பிரபல வர்த்தகரும்
கொடைவள்ளலுமான E.S.P
நாகரத்தினம் அவர்களது தாயார்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களது பிரிவுத்துயர் அறிந்து
நாமும் கவலை அடைந்தோம்.
அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்
ஜெகா மோட்டர்ஸ், நெல்லியாடி
கரவெட்டி

(சி/1792) (3.14)

## தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கு, தோப்பைச் சேர்ந்த பத்மரூபன் சஜிதாவாகிய எனது தேசிய அடையாள அட்டை (886303009V ) திருநெல்வேலி சந்திக்கும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

சி/1791)(15-14) தொடர்பு:- 0776621652

## வாடகைக்குத் தேவை

யாழ்நகரினை அண்டிய பகுதியில் பிரதான வீதிகளில் பொருள்களை காட்சிப்படுத்தக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 0771807672

(சி/1788)(15-14)

## பயிற்சி வகுப்பு

வூல் நூல் பயிற்சி வகுப்பு நாள் கட்டணமாக நடைபெறுகின்றது.

திருநெல்வேலி TP: 0775670639

(சி/1790) (15-14)

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

கோயில் வீதி யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய
வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு- 0775566389
0773296407
0771000625

(சி/1787) (15-14)

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் பணிபுரிவதற்குவேலையாள்தேவை. கிழமை நாள்களில்நேரில் தொடர்பு கொள்ளவும்

இல.351 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(21139) (15-14)

## காணி விற்பனைக்கு

மீசாலை புத்தூர் சந்தி APC க்கு அருகில் 1¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779518746, 0779068295

(21130, 15,14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச (J/127) கிராம
உத்தியோகத்தர்
த. ரட்ணேஸ்வரன்
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து கொள்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்
கொக்குவில் தென்மேற்கு.

(சி/1789) (3.14)

திருமணம் முடித்து நிரந்தர விசாவில் London செல்பவர்களுக்கு பிரித்தானிய தூதரகத்தினால் கோரப்படும் A-1 exam தற்பொழுது எமது கல்வி நிறுவனத்திலேயே நடத்தப்படவிருக்கின்றது.

City and Guilds இனால் வழங்கப்படும் A-1 பரீட்சைக்கான புதிய வகுப்புகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. தூதரகப் பரீட்சைகளுக்கான German (டொச்) Netherland (டச்), பிரஞ்சு, இத்தாலியன் வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

**Vivekananda Academy**
221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
**Tel- 0212220393, 0213216928, 0774842464**

குறிப்பு -
எமது நிறுவனம் அரச அங்கீகாரம் பெற்று பதியப்பட்ட ஒரு கல்வி நிறுவனமாகும்.
Gov.Reg.No.W/A 76795

(சி/1785) (3.14)

## வேலை வாய்ப்பு

1. காசாளர்
2. ஆங்கில மருந்து அனுபவம் உள்ளவர்கள்
3. உதவித் தாதியர் பயிற்சி பெற்றவர்கள்
4. உதவித் தாதிப் பயிற்சி பெறவிரும்புபவர்கள்

உடன் தொடர்பு கொள்ளவும். தூர இடத்தில் இருப்போர்க்கு தங்கிநிற்க இடம், உணவு வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்படும். பயிற்சியின் பின் திறமையாளருக்கு நிரந்தர வேலை கொடுக்கப்படும்.

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
08, இராமையாச் செட்டியார் வீதி, (செல்லா தியேட்டர் வீதி)
யாழ்ப்பாணம்.021 222 7259

(21120) (3.14)

## மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் ஆறுமுகம்



(இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகர் இராசாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பொன்னாவளை, களபூமி காரைநகரை வசிப்பிடமாகவும் 53/13 ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமான சுப்பிரமணியம் ஆறுமுகம் நேற்று (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கட்டையர்)- சிதம்பரம் தம்பதியரின் அன்புப் புதல்வ ரும், காலஞ்சென்றவர்களான தம்பையா (இளைப்பாறிய ஆசிரியர்)- சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/13 ஆடியபாதம் வீதி,
(மருத்துவபீடம் அருகாமை),
திருநெல்வேலி.
(21119)(3.14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## Advanced Microsoft Excel

அலுவலகங்களில் Microsoft Excel பாவிக்கும் பாவனையாளர்கள் உங்கள் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ள Excel இல் உள்ள சில இலகுவான முறைகளைத் தெரிந்து கொண்டால் (Pivot table, VBA, What if analysis, Finance & Statistic Functions etc) உங்கள் நேரத்தைச் சேமித்துக் கொள்ள முடியும்.

உயர்தரப் படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பாக அமையும். உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

கோ.ஜனகன், தொ.பே.077 6169470

(21118) (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IMMEDIATE VACANCIES

**Sadaharitha Plantation Ltd** is a member of Sadaharitha Group, engaged in establishing, managing & marketing sustainable commercial forestry plantations and are recognized with quality standard, unmatched expertise and proforsanalium.

**Customer Relation Officer – Jaffna Premier Center**

Ideal Candidates should have,

* Good pass in AL, Computer literate in MS Office, e-mail, Internet,
* Fluent both Tamil, English with excellent communication, PR skills,
* Minimum 2 years experience in similar position
* Male/Female aged between 22 – 30

**Investment Advisor**

* Dynamic individuals who are result oriented, self motivated
* Experience in financial, insurance, wealth management or similar with existing client portfolio
* Sound educational background
* Male/Female aged 25 years above.

Please post or e-mail your detailed CV including two non related referees within 7days to,

**The Manager,**
**Jaffna Premier Center,**

Sadaharitha PLANTATIONS LTD

**No; 320, Main Street, Jaffna.**
**Tel: 0215 673 673**
E-mail:- ram@sadaharitha.com
web:-www.sadaharitha.com


## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை தங்கம்மா



இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை தங்கம்மா நேற்று (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், கனகரத்தினம், காலஞ் சென்ற கமலநாதன் மற்றும் லோகநாதன் (கனடா), அசோகநாதன்(லண்டன்), உலகநாதன்(லண்டன்), உலகநாயகி (சுவிஸ்), யோகராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் பிரேமலதா, ராஜேஸ்வரி(கனடா), வசந்தகுமாரி (லண்டன்), சாந்தி (லண்டன்),சறோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

(20176)(5-6-7)


## Sakthi Home Science Academy யின்



மகளிருக்கான குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 05.08.2012 அன்று ஆரம்பமாகவுள்ளன.

கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள், Fondant ஐசிங், Glass Painting, Crystal Work, Knitting, Varieties of Cake (கேக் வகைகள்) ஆகிய பயிற்சிகளைப் பயில விரும்பும் மாணவிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இடம்: அச்சுவேலி.

தொடர்புகளுக்கு:
021 3003487


## இசற் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட வவுனியா மாணவர்களும் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிதாக வெளியிடப்பட்ட இசற் புள்ளிகளால் பாதிக்கப்பட்டுள்ள வவுனியா மாவட்ட மீள் பரீட்சார்த்தி மாணவர்கள் தமக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்று கோரி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டத் தலைமை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அடுத்த பரீட்சைக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் பரீட்சைக்கான எதுவித ஆயத்தங்களும் இன்றி உயர் கல்வியைத் தொடர்வதற்கு வெட்டுப்புள்ளிக்காக காத்திருந்த வேளை புதிய இசற் புள்ளி மூலம் தாம் பின்தள்ளப்பட்டுள்ளதால் மிகவும் மனவுளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் தமக்குரிய தீர்வை பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் வழங்க வேண்டும் என்று கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாட்டை கடந்த வியாழக்கிழமை மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பித்த பாதிக்கப்பட்ட மாணவர்கள் அதில் பிரதி வாதிகளாக பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரை குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் முதலாம் திகதி காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்த உற்சவம் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

* * *

அச்சுவேலி, உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் 31ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா முதலாம் திகதியும் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

* * *

ஆவரங்கால் மணற்பகுதியில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் 31ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 1ஆம் திகதியும் நடைபெறும்.

(16-78)


## டிஜிற்றல் பிறின்ரிங் முகவர் தேவை

முதற்தர பிளெக்ஸ் பிரிண்ட்

விலை ஒரு சதுர அடி ரூபா 34/= மட்டுமே

ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை ஆங்கிலத்தில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

digiprint.dasuni@gmail.com / digiprint.crandi@gmail.com

(21060) (6.7.10)

## Study Abroad
வெளிநாட்டில் உயர்கல்வி

**UK (London)**
அடிப்படைத் தகமை A/L or O/L
3 1/2 வருட வீசா
20 மணித்தியால பகுதி நேர வேலைவாய்ப்பு
IELTS அவசியம் இல்லை.

நிராகரிக்கப்பட்ட விசா மேன்முறையீடு, மீள் விண்ணப்பித்தல் சேவைகளும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் செய்து தரப்படும்.

**Canada - Student Visa + Work Permit**
கனடிய கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும்
September மாதத்திற்கான பாடநெறிகள் ஆரம்பம்
அடிப்படைத் தகமை O/L மட்டுமே

**Singapore / Malaysia**
Hotel முகாமைத்துவத் துறையில்.
9 மாதங்கள் சிங்கப்பூரில் கற்கைநெறி
பின்னர் - 6 மாதங்கள்
சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

ஐரோப்பிய நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் கல்வி சுற்றுலாக்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன

**New Zealand / USA / Poland / Cyprus / Bulgeria**
September மாதத்திற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

**Care Giver to Canada**
முதியோர் பாராமரிப்பாளர்கள் கனடா நாட்டிற்கு அதிகளவில் தேவைப்படுகின்றனர்.

கல்லூரிக் கட்டணம் Visa விற்கு பின்னரே செலுத்தல் வேண்டும்.

**SCHOLARSHIPS**
சிறந்த தகைமை உள்ளவர்களுக்கு புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.

வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

**GREENWICH COLLEGE**
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

Branch:
GREENWICH COLLEGE
01, 2nd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna. 0777 630708

(சி/1816) (6.7.8)

மேலதி விபரங்களுக்கு Mob: 0755 091 091 / 0777 751 382

## ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

சுடர் ஒளி வாரவெளியீடு




வாசகர்களே இவ்வாரம்.....

★ கிழக்கில் ஜிகாத் அமைப்பு இயங்குகிறது

★ செப்டம்பருக்குள் தம்புள்ளை பள்ளிவாசல் அகற்றப்படும்
- தம்புள்ளை ரஜமஹா விகாரதிபதி பரபரப்புப் பேட்டி

★ இந்தியத் தலையிடிக்கு சீனத் தைலம் பாவிக்கும் இலங்கை
- விசேட அரசியல் கட்டுரை

★ அரசின் இறுதிக்காலமே இது
- ரில்வின் சில்வா அதிரடிப் பேட்டி

★ மற்றும் பல சுவாரஷ்யமான, சூடான தகவல்களுடன் ஞாயிறு வார வெளியீடு.....

பிரதிக்கு முந்துங்கள்

(சி/1819) (2,6,7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு,வளவு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், சிரணி அம்மன் கோயில் எதிரில் 29.02 பேர்ச்சஸ் காணி 4 அறைகளைக் கொண்ட முற்றாக முடிக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்குண்டு.

(சி/1824)(5-6-7) தொடர்பு: 077 646 3843

## வாடகை

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் 11 அடி நீளம் 40அடி அகலம் கொண்ட கடை முழு பாதுகாப்புடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: 077 711 0281, 077 803 3575

(சி/1823)(5-6-7)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, திக்கம் -10 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 016 8331 (சி/1822)(5-6-7)

## வாடகைக்கு/ விற்பனைக்கு

யாழ் . K.K.S.வீதியில், கொக்குவில் சம்பியன் லேன் எதிரில் சகல வசதிகளும் கொண்ட பெரிய மேல்மாடி வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/1821)(6-7-8) தொடர்பு : 077 9798181

## விற்பனைக்கு

Electrical Equipment 8 Box Framee fridge,Carem Gumma 200E, 6 Litres Capacity Ice-Cream Manufaction Italiyan Machine Glass Height -114" Length-133", Pizza Oven for Sale

011-2506609 (C/1825)(5-6-7)

## பெண் பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்துக்குப் பொதி செய்யும் பகுதியில் வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

* நேரில் வரும் போது கிராம சேவகரின் சிபாரிசுக் கடிதமும், சுயவிவரக்கோவையும் கொண்டு வரவும்.
* யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், திருமணமாகாதவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு : முன்பு சுப்பர் மார்க்கெட்டில் பொதி செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 2567

(சி/1761)(6-7-8)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படு கின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: [illegible]

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(நக்பா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம். (21040)(45-6-7)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Mazda 323, 1999Model full option, DVD/TV, Reverse Camera,Reverse Sensor, 60,000km,14km/L, Engineer 2ஆவது கார் ஆக உபயோகிக்கப்பட்டது.

0785029616, யாழ்ப்பாணம்.

(சி/1826)(5-6-7)

## காணி விற்பனை

இணுவில் தெற்கில் பரராஜசேகர பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779485860

(21049)(5-6-7)

## தேவை காஞ்சிர வித்து

காஞ்சிர வித்து (எட்டிக்கொட்டை) காய்ந்து மண்ணில் வீழ்ந்து வீணாகும் காஞ்சிர வித்துக்களை சேகரித்து பயனும், பணமும் பெறலாம்.

மேலும் விவரத்துக்கு:
E.K & Co ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை,
கொழும்பு-09, Tel: 011-2677077

(சி/1818) (6,7,10)

## வீடு விற்பனைக்கு

கந்தர்மடம், பலாலி வீதியில் 1 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு: 077 408 3958

(21043)(5-6-7)

## ENGLISH, சிங்களம்

ஓய்வு பெற்ற ஒருவரினால் உங்கள் இடங் களுக்கு வந்து தனியாகவோ அல்லது குழுக்களாகவோ வெளிநாடு செல்பவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இலக்கணத்துடன் ஆங்கிலமும் உத்தியோகத்தர் களுக்கு எழுத, வாசிக்க, பேச சிங்களமும் எளிமையான முறையில் கற்றுக் கொடுக் கப்படும்.

மாணிப்பாயை அண்டிய பகுதிகள் விரும்பப்படுகிறது.

தொடர்பு : 077 4041904

(21050)(6-7-8)

## ஒவ் செற் விற்பனைக்கு

A3 டேவிசன் (700) பாவனையில் நல்ல நிலையிலுள்ள ஒவ்செற் மெசின் அவசரமாக விற்பனைக்கு உண்டு


விலை : 175000 மட்டும்

தொடர்பு-0775576011

(21059) (6,7,10)

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.



5K, 2 K Diesel Generator




**Green House Trading Company,**

No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
Tel/Fax: 021 2226459, 071 4843432, 071 6805668.
(உடையாளர் பிரதேச காரியாலயத்துக்கு அருகில்)

(C/1763)(6-7-8)


## கண்ணீர்க் காணிக்கை



நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் தலைவரும்,
யாழகம் விளையாட்டு பொருள்கள் விற்பனை
நிறுவனத்தின் உரிமையாளரும்,
சிறந்த சமூக, சமய சேவையாளருமான

உயர்திரு நா.சோமசுந்தரம்

அவர்களின் அன்பு மாமியாரும்
பிரபல வர்த்தக பிரமுகரும்,
கொடைவள்ளலுமான

உயர்திரு E.S.P. நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயாருமான

அமரர்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததனையிட்டு அவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

* நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர்
* நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினர்
* நல்லூர் தெற்கு மூத்த பிரஜைகள் சங்கத்தினர்
* நல்லூர் தெற்கு மாதர் அபிவிருத்தி சங்கத்தினர்
* நல்லூர் முருகன் சிறுவர் கழகத்தினர்.

75/2, செட்டித் தெரு,
நல்லூர்.

(21036) (6,7,10)

# கண்ணீர் அஞ்சலி



பிரபல வர்த்தகர்
(E.S.P) **இ.ச.பே. நாகரத்தினம்** அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி
## பேரம்பலம் மாணிக்கம்

அவர்கள் கடந்த (25.07.2012) அன்று மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உரிமையாளர்களும், பணியாளர்களும்

| | | |
|---|---|---|
| நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம், நல்லூர். | சிறிநந்தியா டிஜிற்றல் கலர்லாப் வீடியோ அன் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். | சிறிநந்தியா நகை மாளிகை யாழ்ப்பாணம். |

(சி/1771) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லூரானின் 4 ஆம் நாள் வீதி உலாக் காட்சி

Aru Printers
ஆரு பிறிண்டேர்ஸ்
T.P.: 0772727227
453. Aadiyapatham Road, Kalviyankadu, Jaffna.

## நல்லூரான் விழாக்காண



கோபுரங்கள் எழுந்து நிற்கும்
கோலமயில் ஆடிவரும்
ஆயிரமாய் நெடியமரம்
அசைந்தே குடைபிடிக்கும்
தேவரும் கூடிவிட்டார்
மாபெரும் விழாக்காண
நாற்றிசையும் கூடுங்களேன்
நல்லூரான் விழாக்காண...

திருமதி ஜெ. கந்தவேள், கொக்குவில்.

## கொடியவை களைய ஓடிவா முருகா





கலியுக வரதனே கந்தப் பெருமானே
கார்த்திகை மைந்தனே கடம்பனே
காத்தருள்வீர் தமிழர் கலாசாரத்தை
கீழ்த்தரமான பாவச் செயல்களை
குன்றத்தில் குழி
தோண்டிப் புதைத்திடுவீர்
கூவும் சேவற் கொடியோனே;
கெடுதிகள் தலைதூக்கும் எம்மண்ணை
கேளிக்கை பார்க்கும் நிலைகண்டு
கையினில் வேல் ஏந்தியே
கொடியவை களைய வந்திடுவீர்.

க.தர்ஷ்சினி, சுண்டுக்குளி

ஆறாம் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
கஜன் குறூப்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

## தெய்வீக இசையரங்கில்...

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஆறாம் நாள் நிகழ்வு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் எஸ்.சிவஞானராசா, திருமதி. வனஜா ஈஸ்வரசர்மா, பிரம்மஸ்ரீ எஸ்.வரதராஜசர்மா, ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் இணைந்து நடத்தும் திருமுறைக் கச்சேரி இடம்பெறும்.

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் 2012



ஏழாம் திருவிழா
வேட்டைத்திருவிழா
ஏழ் கடலும் அகட்டுள்ள அடக்கும் அகத்தியன் கரக மண்டலத்து
எழுந்திரை காவேரியை கட்டவிழ்த்த கணபதி கருணை
எழும் சுரம் ஏழால் இனிதே ஏத்தி இசைக்க நாற் ஏழில்
எழுந்தான் வினை வேட்டையாடவே வேணவாவொடு
ஆக்கம்: சங்கை – சிவம்
சிறப்புற வாழ்த்துவோர் :
செம்பொற்சோதி குடும்பத்தினர்.
வல்லை வீதி, சங்கானை
(சி/1282/12-8-7)


# வேடிக்கை பார்க்க நேரம் இதுவல்ல

**பல்கலைக்கழக ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பான யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை**

அனைவருக்கும் கிடைக்கக் கூடியதும் தரமானதாயுமுள்ள அரச இலவசக் கல்விமுறை எல்லோரும் பெருமைப் படக் கூடிய சாதனை மாத்திரமன்றி எம்மால் போற்றிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றுமாகும். இன்று உயர் பதவிகளில் இருக்கும் பலரும் அப்பதவிகளுக்கு வருவதற்கு அரச இலவசக் கல்வி துணை புரிந்துள்ளது. கற்பதற்கான அவர்களது உரிமை அன்று பாதுகாக்கப்பட்டு இருந்ததால்தான் அதன் பயனை இன்று அவர்கள் அனுபவிக்கின்றனர்.

எனவே வருங்கால சந்ததிக்காக அரச இலவசக் கல்வி முறையைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. இலவசக் கல்வியானது தரமானதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அது தனது அர்த்தத்தை இழந்துவிடும். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் இரு பிரதான கோரிக்கைகளை முன்வைத்துத் தொடர்ச்சியான முழுஅளவிலான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

இலவசக் கல்வி முறை பாதுகாக்கப்படுவதோடு தரமுயர்த்தப்பட வேண்டும் என்பது முதலாவது கோரிக்கை. உலகளாவிய ரீதியில் சில நாடுகளது தனிநபர் வருமானத்துக்கும் கல்வித் துறைக்கான அந்த நாடுகளின் நிதி ஒதுக்கீட்டுக்கும் இடையே உள்ள தொடர்பைக் கீழ்வரும் வரைபு 1 காட்டுகின்றது.




மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2010, கல்விப் புள்ளி விவரங்கள் மற்றும் உலக அபிவிருத்திச் சுட்டிகள் (உலக வங்கி).


இந்த வரைபில் கிடையச்சு தனிநபர் வருமான அளவையும் நிலைக்குத்து அச்சு கல்விக்கான அரச ஒதுக்கீட்டையும் (மொத்த தேசிய உற்பத்தியிலான வீதமாக) காட்டுகின்றன. கிடையச்சு வழியே நோக்கும் போது இலங்கையின் உலகளாவிய ரீதியில் சில நாடுகளது தனிநபர் வருமானத்துக்கு ஏனைய தெற்காசிய நாடுகளைக் காட்டிலும் அதிகமாய் உள்ளதை அவதானிக்க முடியும். ஆனாலும் நிலைக்குத்து அச்சுவழி நோக்கும் போது கல்விக்கான அரச ஒதுக்கீட்டில் நாம் மிகவும் பின்தங்கி நிற்பதைக் காண முடியும். இந்த வரைபானது கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் உலகளாவிய நடைமுறையில் இருந்து இலங்கை விலகி மிகவும் பின் தங்கியுள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் உயர்கல்வியில் தனியாரின் முதலீடு இல்லை. இலங்கையில் உயர்கல்வி சம்பந்தமான பிரதான முதலீட்டாளர் அரசு எனும் போது எமது நாட்டில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு மற்றையவற்றை விட அதிகமாயிருத்தல் அவசியம். இலங்கையில் க.பொ.த. (உ/த) பரீட்சையின் அதிசிறந்த 20 வீதமான மாணவர்களே அரச பல்கலைக் கழகங்களினுள் உள்வாங்கப்படுகின்றார்கள். அந்தச் சிறந்த மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க வேண்டாமா?

யுனெஸ்கோவினது முன் மொழிவுக்கு அமைவாக மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதத்தைக் கல்வித் துறைக்கு ஒதுக்குமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கோருகின்றது. இலங்கையை தெற்காசியாவின் ஒரு அறிவியல் மையமாக மாற்றவுள்ளதாக அரசு கூறுகின்றது. அவ்வாறாயின் ஏற்கனவே இங்கு அறிவியல் மையங்களாகவுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வித் துறைக்கான அரசநிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடும்படியாக குறைவடைந்து செல்வதை கீழே தரப்பட்ட வரைபுகள் (வரைபு2, வரைபு3) சுட்டிக் காட்டுகின்றன (மாணவர் உள்வாங்கல் 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்ட போதிலும்).

கல்வித் துறைக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் எமது அரசு அளிக்கும் முக்கியத்துவத்தை இந்த வரைபுகள் பறைசாற்றி நிற்கின்றன. இலங்கையின் கல்வி வீழ்ச்சிக்கு அரசின் பாராமுகமன்றி நிதிப்பற்றாக்குறை காரணமல்ல. கல்விக்கான நிதி ஒதுக்கீடு நாட்டின் வளர்ச்சிக்கான அத்திபாரம்.

எமது அரசு நாட்டின் அபிவிருத்திக்கு கல்விமான்கள் அவசியமில்லை எனக் கருதுகின்றது போலும். இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை எதிர் காலத்தில் தொழில் சார் உத்தியோகங்களுக்கான மனித வளத்துக்கு இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டி வரலாம். அது மட்டுமன்றி காலப் போக்கில் இலங்கை இன்னுமொரு பப்புவா நியுகினி தீவுகளாகினாலும் ஆச்சரியப்பட முடியாது. கல்வி என்பது விற்பனைக்குரிய தொரு பண்டமல்ல என நாம் கருதுகின்றோம். அரச இலவசக் கல்வியின் சமாதியின் மேல் தனியார் கல்வித் துறை [illegible] தனியார் பல்கலைக் கழகங்கள் பட்டங்களை விற்கும் ஸ்தாபனங்களாகவன்றி தகுதியிருந்தும் உயர்கல்வி வாய்ப்பை இழந்து நிற்கும் மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பை வழங்கும் கல்விக் கூடங்களாக அமைய வேண்டும். எனவே அமையவிருக்கும் தனியார் பல்கலைக்கழகங்கள் அமெரிக்காவிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் போன்று இலாப நோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்களாக அமைவது அவசியம்.




இந்த நாட்டின் கல்வித்துறைக்கான நீண்ட கால தெளிவான கொள்கையை அரசு கொண்டிருப்பதோடு அதனை மக்களுக்கும் தெளிவுபடுத்தல் வேண்டும். காலத்துக்குக் காலம் எவ்விதமான கலந்தாலோசனைகளும் இன்றி மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் மாணவர்களைப் பாதிப்பனவாக அமைகின்றன. அண்மைய 'இசற்' புள்ளி தொடர்பான அரசின் தெளிவற்ற போக்கால் உயர்தர மாணவர்கள் விரக்தியடைந்துள்ளனர். பல மாணவர்களது கனவுகள் கலைக்கப்பட்டுள்ளன.

இன்று பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் அரசியல் தலைபீடுகளின் பலிக்கடாக்களாக மாறியுள்ளதை அனைவரும் அறிவர். இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தமது சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் அரசியல்வாதிகளிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டன. இந்த நிலை தொடர்ந்தால், பல்கலைக்கழகங்கள் கோமாளிகளின் கூடாரங்களாகிவிடும். அதன் தொடர்ச்சியாக அவை தமது நம்பகத் தன்மையை இழந்து விடுவதுடன், அவற்றால் வழங்கப்படும் பட்டங்கள் தமது அங்கீகாரத்தையும் இழந்துவிடும்.

2008 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டபடி தகுதிவாய்ந்த கல்வியியலாளர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல் என்பவைக்கேற்றவாறு தமது சம்பளம் மீள்நிர்ணயம் செய்யப்படும் என எண்ணி 2011 ஆம் ஆண்டுவரை காத்திருந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் 2011 ஆம் ஆண்டு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஆனாலும் பின்னர் அரசு அளித்த உறுதிமொழிக்கு இணங்க பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் மேற்படி தொழிற்சங்க நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் கோரிக்கைகளை இரு கட்டங்களாக அமுல்படுத்துவதற்கு அரசு இணங்கியது. முதலாம் கட்டம் உடனடியாக அமுல்படுத்துவதாகவும் ஏனைய கட்டங்களைப் பின்னர் தொடர்ச்சியாக அமுல்படுத்துவதாகவும் இணங்கப்பட்டது.

ஆனாலும் இரண்டாம் கட்ட உடன்படிக்கை அமுல்படுத்தப்படவில்லை. அமுல்படுத்தப்படாத உடன்படிக்கையின் ஏனைய கட்டங்களை அமுல்படுத்துமாறு கோருவதே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தற்போதைய இரண்டாவது கோரிக்கையாகும். பல்கலைக்கழகங்களின் தரம் அந்தப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் தரத்தில் தங்கியுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் பலதுறைகளுக்கு பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரிகள் இல்லாமல் காலம் காலமாக வெற்றிடமாகவே உள்ளன. எமது நாட்டில் ஒரு பேராசிரியரைக் கூடக் கொண்டிராத சில பல்கலைக்கழகங்களும் உள்ளன என்பது வேதனையானதொரு உண்மை.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விஞ்ஞானத்துறை சார்ந்த பீடங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் மேலைத்தேய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தமது கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்களாயுள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் வேதனம் போதாது எனக்கருதின் இவர்களால் இலகுவாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் வேலைவாய்ப்பைப் பெறமுடியும். எமது நாட்டில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த நிலையிலும் கற்றோரின் வெளியேற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்த 550 க்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் அண்மைக் காலத்தில் நாடு திரும்ப மறுத்துவிட்டனர் என்கிறார் உயர் கல்வி அமைச்சச் செயலர். இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் போதிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்களே இல்லாமல் போகலாம்.

எமது பெரிய சாதனைகளில் ஒன்றாகிய, அனைவருக்கும் கிடைக்கக்கூடியதும் தரமானதுமான அரச இலவசக் கல்வி அழிக்கப்படுவதைக் கைகட்டி வேடிக்கை பார்த்த சந்ததியினர் நாமென, எம்மை எதிர்கால சந்ததி குறிப்பிட அனுமதித்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலிங்கோ ஆயுள் பகுதி நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான மடத்தடி அல்வாயைச் சேர்ந்த சி.விபுலானந்த அடிகளின் விபத்து மரணத்தையடுத்து அவரின் மனைவியாகிய திருமதி வி.தேவகிக்கு கிளையின் முகாமையாளர் பி.நிரோஜன் 10 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை கையளிக்கிறார். அருகில் சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி ரி.இராஜகோபால் விற்பனை நிறைவேற்று அதிகாரி பி.சுபாஜினி விற்பனை ஆலோசகர் கே.ஜெயராணி ஆகியோர் உள்ளனர். (த)

# இலங்கை வங்கிக் கிளைகள் மாலை 6 மணி வரை திறக்கும்

தென்மராட்சி, ஜூலை 29

இலங்கை வங்கிக் கிளைகள் முதன்முறையாக வங்கி வரலாற்றில் பிற்பகல் 6.00 மணி வரை வங்கிச் செயற்பாடுகளுக்காக திறக்கப்படவுள்ளன.

இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டில் நாட்டில் உள்ள 73 கிளைகள் பி.ப 6.00 மணி வரை திறந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகணத்தில் ஐந்து கிளைகள் இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றில் சாவகச்சேரிக் கிளையும் அடங்குமென கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளும் தமது வங்கிச் செயற்பாட்டுக்காக இது வரை பி.ப 3.00 மணி வரை திறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (த-5)



இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் விரிவாக்க அலுவலகமொன்று அண்மையில் புன்னாலைக் கட்டுவனில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க, நாடாவை வெட்டித் திறந்து வைக்கிறார். அருகில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி சுமணசிறி உட்பட உயரதிகாரிகள் உள்ளனர்.

# தேசிய சேமிப்பு வங்கியின் 'ஸ்மைல்' சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டம்



தேசிய சேமிப்பு வங்கி தலைமையகத்தின் ஏற்பாட்டிலும் வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் அவர்களின் மேற்பார்வையிலும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரின் வழிகாட்டலிலும் மேற்கொள்ளப்பட்ட 'ஸ்மைல்' சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சேமிப்பு நடவடிக்கை மூலம் யாழ்.மாவட்டத்தில் அஞ்சல் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள் மூலம் 15,000 ரூபா புதிய வைப்புக்கள்மூலம்வைப்புத் தொகையாக 38 மில்லியன் ரூபா கடந்த ஒரு மாதத்தில் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதில் ஈடுபட்ட அஞ்சல் அல்லது உப அஞ்சல் அதிபர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட அத்தியட்சகர் திரு.சூ.ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் யாழ். அஞ்சல் வளாக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ்வைவபத்திற்கு பிரதம அதிதியாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் ந.ரட்ணசிங்கம் கலந்து சிறப்பித்தார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கியின் வட வலய முகாமையாளர் வி.அருளானந்தமும், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.அஞ்சல் வங்கிப் பிரிவு முகாமையாளர் திருமதி. அ.துஷ்யந்தியும், மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஐ.சின்னப்புவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்த முதல் மூன்று அஞ்சல் உப அஞ்சலதிபர்களான சிவன் கோவிலடி உப அஞ்சலதிபர், புங்குடுதீவு அஞ்சலதிபர்வட்டுக்கோட்டை அஞ்சலதிபர் ஆகியோருக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் முறையே வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர்அவர்களும், தேசிய சேமிப்பு வங்கி வட வலய முகாமையாளர் அவர்களும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அவர்களும் வழங்கிக் கௌரவித்தனர். ஏனைய 65 வெற்றியாளர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (த-17)

# இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு விழா

தென்மராட்சி, ஜூலை 29

இலங்கை வங்கியின் 73 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நாட்டில் உள்ள அனைத்து இலங்கை வங்கிக் கிளைகளிலும் ஓகஸ்ட் இரண்டாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

வங்கியின் 73 ஆவது பிறந்த தினத்தையொட்டி வங்கியில் நிலையான வைப்பில் பணம் வைத்துள்ளவர்களுக்கு வைப்புத் தொகைக்கேற்ப பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அன்றைய தினம் வங்கித் தலைமையகத்தில் இடம் பெறும் மெகாவாசி பரிசூதியச் சீட்டிழுப்பில் வெற்றி பெறுவோரின் விவரங்கள் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# டிரைடென்ட் கோர்ப்பரேஷன் புதிய கிளை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்



1999 ஆம் ஆண்டு கூட்டுருவாக்கப்பட்ட டிரைடென்ட் கோர்ப்பரேஷன் (பிரைவேற்) லிமிடெட், சிங்கப்புரைத் தளமாகக் கொண்ட தக்ரால் குழுமத்தின் சிறப்பு நிலைக் கம்பனியாகும். தக்ரால் குழுமம் - ஆசியா, கிழக்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள் உட்பட 35 க்கு மேலான நாடுகளில் 12,000 ற்கும் மேற்பட்ட பணியாளர்களின் வலுவுடன் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ள ஒரு கூட்டிணை நிறுவனமாகும்.

டிரைடென்ட் கோர்ப்பரேஷன் ஆனது பரந்த புவிசார் இருப்பினைக் கொண்டிருத்தல், முன்னணி தீர்வு வழங்குனர்களுடன் கொண்டுள்ளதான வினைத்திறன்மிகு பங்காளித்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறைச் சேவைகளை சர்வதேச ரீதியில் விநியோகிப்பதில் கொண்டுள்ள பரந்த அனுபவம் ஆகியன குழுமத்தின் மைய வலுவில் செல்வாக்கு செலுத்துகின்றது. இந்நிறுவனமானது இலங்கையில் 12 வருடங்களுக்கும் மேலாக காலூன்றியுள்ளதுடன், இலத்திரனியல் பாதுகாப்பு, தகவல் தொழிநுட்ப வன்பொருள் விநியோகம் போன்ற பல்வேறு களங்களில், HP (இமேஜிங் அன்ட் பிரின்டிங் புரொடக்ஸ்) IBM மைக்கிரோசொப்ட் (கோல்ட் பார்ட்னர்) சிஸ்கோ, ஒரேக்கிள், லெனோவோ போன்ற மதிப்புமிக்க தகவல் தொழிநுட்ப வர்த்தகர்களுடன் பங்காளித்துவத்தினை ஸ்தாபிப்பதன் மூலம் தமது வர்த்தக விழுமியங்களை வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளது.

தக்ரால் வன் (பிரைவேற்) லிமிடெட் மற்றும் ஃபியுச்சர்வேர்ள்ட் லங்கா (பிரைவேற்) லிமிடட் ஆகியன இலங்கையில் தக்ரால் குழுமத்தின் துணை நிறுவனங்களாக செயற்படுகின்றன. தொழிற்துறை நிபுணத்துவமிக்க பணியாளர்கள், சர்வதேச ரீதியான பங்காளித்துவ வலையமைப்பு ஆகிவற்றைக் கொண்டுள்ள தக்ரால் வன் குழுமமானது, தமது வாடிக்கையாளர்கள் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் (ICT) கட்டமைப்பினை செயற்திறனுடக் உபயோகிப்பதற்கு வழிகோலுவதற்கான குறிக்கோளுடன் ஸ்தாபிக்கப்பட்டது. குறித்த ஒரு நிறுவனத்தின் பிரத்தியேகத் தேவையினைத் தனிப்படக் கவனம் செலுத்தி, அதற்கமைவான நவீன தொழிநுட்பங்களை உள்ளடக்கிய தகவல் தொழினுட்பத் தீர்வுகளை வழங்குகின்றது. ERP, CRM, BL தொடர்ச்சியான வணிக நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்புச் சேவைகள், மிடில்வெயார், வேர்ச்சுவலைசேஷன், சில்லறை வர்த்தகம், உற்பத்தி, சுகாதாரம், பொதுத்துறை உட்பட்ட துறைகளுக்கான தொழில் நிபுணத்துவ சேவைகள் போன்ற பல்வேறு சேவைகளை தக்ரால் வன் வழங்குகின்றது. அத்துடன் வங்கித் தீர்வுகள், நிபுணத்துவ ஆலோசனைகள், செயற்படுத்தல், பணக் கொடுக்கல் வாங்கல் மோசடிகளுக்கெதிரான நடவடிக்கைகள் (AML), BL போன்ற வங்கித்துறை நோக்கிய முக்கிய இலக்கினை நிறுவனம் கொண்டுள்ளது.

ஃபியுச்சர் வேர்ள்ட் லங்கா (பிரைவேற்) லிமிடெட் 2009 ம் ஆண்டு கூட்டுருவாக்கப்பட்ட தக்ரால் வன் குழுமத்திற்குச் சொந்தமான வர்த்தக நாமமாகும். சில்லறை வர்த்தக விற்பனை செய்யப்படும் இது இலங்கையில் Apple பொருள்களுக்கான அங்கீகாரம் பெற்ற மீள்விற்பனையாளராகவும், சேவை வழங்குனராகவும் தொழிற்படுகின்றது. இலங்கையில் Apple க்கான மீள்விற்பனைப் பங்காளராக விளங்கும் முதன்மை மற்றும் முன்னணி நிறுவனமான பியுச்சர் வேர்ள்ட் விசாலமான Apple சேவைப்பொருள்கள், துணைக் கருவிகள், பயிற்சிகள் மற்றும் சேவைவழங்குதல் போன்றவற்றை கொழும்பு 05, கொழும்பு 07 மற்றும் கண்டியிலுள்ள அதிநவீன காட்சியறைகள் ஊடாக வழங்குகின்றது.

புத்தமைவுத் தீர்வுகள் மற்றும் அதிமேன்மையான பொருள்கள் சேவைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கப்பட்ட வன்பொருள், மென்பொருள் மற்றும் வர்த்தக பயன்பாட்டு நிரலிகள் ஆகியவற்றினை கொள்வனவாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்குவதனை தமது குறிக்கோளாகக் கொண்டுள்ள குழுமமானது, 2011 ஆம் ஆண்டில் கண்டிக்கு தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்தது. கண்டியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் செயற்திறனை சந்தித்த நிறுவனமானது யாழ்ப்பாணத்தில் தமது நடவடிக்கைளை விஸ்தரிப்பதான தைரியம் மிகுந்த நடவடிக்கையினை மேற்கொள்வதென கடந்த ஏப்ரல் மாதம் தீர்மானித்தது.

2012 ஜூலை மாதம் 5ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட டிரைடென்ட் கோர்ப்பரேஷனின் யாழ்ப்பாணக் கிளையானது இலங்கை முழுவதும் பரந்த புவிசார் இருப்பினைக் கொண்டு, தகவல் தொழிநுட்ப ஆதரவு மற்றும் விநியோகச் சேவைகளில் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்துவதான நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கான குறிப்பிடத்தக்க படிக்கல்லாக அமைந்துள்ளது. புதிய கிளையின் பிரம்மாண்டமான அங்குரார்ப்பண நிகழ்வு ஜூலை 5 ஆம் திகதி 70-72, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தக்ரால் குழுமத்தின் தேச முகாமையாளர் திரு. மணீஷ் ஃபிற்கரிவாலா மற்றும் அவரது விற்பனைக் குழுவினரின் பிரசன்னத்துடன் இடம்பெற்றது.

இப்புதிய கிளையானது HP, மைக்கிரோசொப்ட், லெனோவோ, பெல்கின் பொருள்கள் மற்றும் துணைக்கருவிகளுக்கான அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களாகச் செயற்படுவதுடன் தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்புத் தீர்வுகள் மற்றும் சேவைகளை கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வணிக பயன்பாட்டு நிரலிகள் ஊடாக யாழ்ப்பாண வர்த்தக சமூகத்திற்கு வழங்கவுள்ளதுடன்; புதிய அலுவலகத்திலுள்ள சேவை நிலையத்தினூடாக தமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான நீண்ட கால சேவை ஆதரவினையும் வழங்கும். ஃபியுச்சா வேர்ள்ட் மூன்றாம் காலாண்டின் இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் புதிய Apple காட்சியறையை ஆரம்பிக்கவுள்ளதுடன், ஆரம்பகட்டப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. 90/=

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.

(20982)(6-7-8)

## விநியோகஸ்தர்கள் தேவை

பிரபல உணவு உற்பத்தி நிறுவன MA'S Tropical Food Processing (Pvt) LTD தனது புதிய தடத்தினை கிளிநொச்சியில் பதிக்கின்றது. SLS மற்றும் ISO சான்றிதழை பெற்ற நிறுவனம் தனது புதிய நிறுவனத்துக்கு விநியோகஸ்தர்களை உள்வாங்குகின்றது.

சுவையூட்டப்பட்ட பால், யோகட், தயிர் மற்றும் பழச்சாறு (Fruit Juice) போன்ற புதிய உற்பத்தி பொருள்களை கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களுக்கு விநியோகிக்க விநியோகஸ்தர்கள் தேவை.

விசேடமாக உங்களுக்கான வாகன லீசிங் வசதிகளும் செய்து தரப்படும். மற்ற நிபந்தனைகள் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

**New beginning processing centre**
**MA'S Tropical Food Processing (Pvt) LTD**
Kanakapuram Village, Kilinochchi.
T.P: 0779491015
Website : www.masfoods.lk

(21010) (6,7,10)

## உழுந்து விற்பனைக்கு

முழு உழுந்து மொத்தமாக விற்பனைக் குண்டு. ரூபா 140/= 4000 Kgs
தொடர்பு: 077 5151761

(13698) (2-6-7)

## வாடகைக்கு

மானிப்பாயில் நிறுவனங்கள் பயன்படுத்தக் கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.

(21032)(5-6-7) தொடர்பு: 0776790726, 0772845489

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி road இல் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(21052)(5-6-7) தொடர்பு: 077480 8515

## காணி விற்பனைக்கு உண்டு

பிரம்படி லேன், கொக்குவிலில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. (தரகர்கள் தேவையில்லை)

தொடர்பு:
(21004)(5-6-7) 075 556 2919, 077 419 7737

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு மருத்துவ பீடம், திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் கருவப்புலம் வீதியில் (கோணாவளைலேனில்) 1¼ பரப்புக் காணி நான்கு பக்க சுற்று மதிலுடனும் நன்னீர்க் கிணற்றுடனும் நல்ல சூழலில் சகல ஆவணங்களுடனும் உடன் விற்பனைக் குண்டு.

(21053)(5-6-7) தொடர்பு: 075 554 6000

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை காமாட்சி



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, கோப்பாயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை காமாட்சி நேற்று (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - விசாலாட்சி தம்பதியரின் மகளும் கனகசபை (ஆயுள்வேத வைத்தியர், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், பிரதேச சபை, நீர்வேலி) பாசமிகு மனைவியும், அம்பிகைதேவி (பிரதேச சபை, நீர்வேலி), தயாநிதி (ஆசிரியர், கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை), பார்த்தீபன் (ஜே.பி கமநலசேவைகள் நிலையம்-புத்தூர்), பிரபாகரன் (ஆசிரிய, ஆலோசகர்-தீவகக்கல்வி வலயம்) ஆகியோரின் ஆருயிர் தாயும், பிரேமகுமார் (வர்த்தகர்), தமிழ்ச்செல்வன் (குகன் மியூசிக் சென்ரர் - இணுவில்), குகாமினி (கைதடி), கஜலட்சுமி (ஆசிரியர் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜிலக்ஷன், கஜப்பிரியன், கஜலக்ஷன், கோபீசன், மதீசன், பிரபாஷ், தீபிகா, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரியும், நடேசன் (வர்த்தகர்-கல்வியங்காடு), புஸ்பராணி (கல்வியங்காடு), காலஞ்சென்றவர்களான சோமசேகரம், தியாகராசா, தாமோதரம்பிள்ளை, மயில்வாகனம், சாமியாபிள்ளை, கணபதிப்பிள்ளை, தர்மலிங்கம் மற்றும் கோபால் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், பிரதீபா (கனடா), சிவதீபா (லண்டன்), ஸ்ரீயோகன் (லண்டன்), ஸ்ரீகீதன் (ஸ்ரீராம் பல்பொருள் நிலையம், கல்வியங்காடு), தர்சிகா, சுயந்தனா, ஸ்ரீஅபிசன், கோபிதர்சன் ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சரவணபவானந்த வித்தியாசாலை வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(21038) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.



## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன்

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்,

- 11 kgஇற்கு மேற்பட்ட 1 kg பொதிகளுக்கும் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| UK | 1 kg - 625/= | Germany | 1 kg - 725/= |
| France | 1 kg - 750/= | Netherland | 1 kg - 775/= |

- மேலும் மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் புடவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம் பொதிகளை அனுப்பிட முடியும். இவ் வசதிகளை கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய எமது கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். கடல் உணவு, மருந்துப்பொருள்கள் என்பன அனுப்பப்படும் வெளிநாடுகளில் மேலதிக கட்டனம் அறவிடப்படமாட்டாது.

குறிப்பு: எமது நிலையம் தொடர்ந்தும் 259 கே.கே. எஸ் வீதியில் இயங்கிங்கொண்டிருக்கிறது.

TCN Express

## திருமுருகன் கொம் நெற்

இல. 210, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 2 B, ஹெல்ஸ் பிளேஸ், கொழும்பு- 2
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

## நியூசிலாந்து குடும்ப விசா மிகவும் இலகுவான நிபந்தனைகளுடன்

சர்வதேச விசா ஆலோசனை வலையமைப்பில் நாம் பிரவேசித்தமையால் இது சாத்தியமாகின்றது.

- பட்டதாரிகள் அல்லது டிப்ளோமாதாரிகள்
- ஆங்கில மொழிமூலம் உள்ளூரில் தங்கள் பட்டப் படிப்பை தொடர்ந்திருந்தால் IELTS அவசியமில்லை
- அன்றேல் IELTS 6 புள்ளிகள் அவசியம்
- வங்கி அனுசரணை 1 மில்லியன் (10 லட்சம்) போதுமானது
- தாம் கல்வி கற்றதுறையில் 3 வருட தனியார்துறை தொழில் அனுபவம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:-
0212219016

குறிப்பு: யாழ்ப்பாணத்திலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றம் சமூகநோக்கில் பாதகமானதென்பதால் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே மேற்படி விசா செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

(20819) (45.6.22)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கும் சுன்னாகம் பொது நூலகத்திற்கும் இடையில் இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கும் உகந்தது.

தொடர்பு: 077 283 0703 (20962)(5-6-7)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

60நாள் வயதுடைய Pavd, DHL தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட German shepherd, Doberman நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 670 1503 (18701)(5-6-7)

## வீடு விற்பனக்கு

மீசாலை, அல்லாரை வீதி J/318 கிராமசேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779711972

(சி/1739)(5-6-7)

## உங்களுக்கு என்ன தொழில் இல்லையா? வாருங்கள் எங்களுடன் உங்கள் திறமைக்கேற்ப சம்பளம்

எங்கள் பிரதான கைத்தொழில்சாலைகளின் கிளைகளுக்கு ஜேம், பிஸ்கட், சொக்லேட், கேக், க்ளவுஸ் தேயிலை ,பால்மா, டயர், சுவீட்ஸ், சிமெந்து ஆகிய உற்பத்திப் பிரிவிற்கு, லேபல் பிரிவிற்கு (தரம் -6 முதல் A/L வரை) 17 வயது முதல் 55 வயது வரையான தொழிலாளர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். பயிற்சியுடன் 20,000/= முதல் 40,000/= வரை சம்பளம், நண்பர்கள் குழுவும் சேர்த்துக்கொள்ளப்படும். கணவன் மனைவி இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்யும் வாய்ப்பும் உண்டு.

கிளை: 071 346 0295

துறைமுகம் (தனியார்) பிரிவிற்கு மேசன்,வெல்டர் சாதாரண சேவையாளர்கள். விமானத்தளம் (தனியார்) பிரிவிற்கு கேட்டின், கிளினிங், பாதுகாப்பு உத்தியோகத்தர்,6wheel, 10wheel டிப்பர், புசிவர், பார ஊர்திகள் ரைவர் தேவை.

JCB ஒப்பரேட்டர், வில்லேடர் ரோலர் ஒப்பரேட்டர், மேசன், சட்டரிங், பெயின்டர். எங்கள் இலங்கை முழுவதும் உள்ள கட்டட நிர்மாண வேலைவாய்ப்புகளும் உண்டு. சாப்பாடு, தங்குமிடம் இலவசம், சம்பளம் 50,000/= முதல் நண்பர்கள் குழுவும் சேர்த்துக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 071 346 0295 (16926)(5-6-7)

## ANDRA வின் ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ் · குடா நாட்டில் முதன் முறையாக

உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த

விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி

**அல்கா அஜித்துடன்**

மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
மண்டப வாயிலிலும்

Aircom E Travels & Tours
இல.06, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி அருகில் யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2219113
WESTERN UNION | Money Master

**இன்று மாலை 4.00 மணிக்கு**
**யாழ்·வீரசிங்கம் மண்டபத்தில்**

திருமண அழைப்பிதழ்கள்




ANDRA WEDDING CARDS
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP (சி/1720)(6-7-8)

Event Manegement : CEYLON ART CREATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவுகளின் சங்கமம்

மலர்வு
08.12.1933

உதிர்வு
27.06.2012



## கந்தசாமி சிவபாக்கியம்

வாழ்க்கையெனும் கடலில்
குடும்பமெனும் படகில் எமையேற்றி
பொங்கியெழுந்த புயலிலும்
பாச மெனும் துடுப்பு வலித்து
பக்குவமாய் கரைசேர்த்த அன்னையே!
இந்நாளில் இதய மலர் தூவி
உன் பாதங்களை பணிகின்றோம்

48,புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

குடும்ப உறவுகள்.

(2039)(2-6-7)

சமய சந்நிதிகளில்

வடமராட்சிஜஜிஜீ புலோலி, சாரையடி அன்னை வேளாங்கண்ணி மாதா கோயில் வருடாந்தத் திருவிழா, கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெறும் திருப்பலியுடன் திருச்சொரூப சுற்றுப்பவனி நடைபெறும். தொடர்ந்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எமில் போல் அடிகள் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (3-8)

### 2,000 முருங்கைகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு மூன்றாம் கட்டமாக இரண்டாயிரம் முருங்கைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இம் முருங்கைக் மரக் கன்றுகள் 28 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

(3-100)


## கோழிக்குஞ்சு விநியோகம்

நல்லின சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
* றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே. 0776090926

## Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18300 |
| Colombo-Tiruchirapally-Colombo | 19200 |
| Colombo-Doha | 24000 |
| Colombo-London | 51000 |
| Colombo-Toronto | 84500 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur -Colombo | 34500 |
| Colombo-Frankfurt | 62500 |
| Colombo-Milan | 60000 |
| Colombo-Rome | 60000 |
| Colombo-Paris | 62500 |
| Colombo-Zurich | 60000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு

(Branch office) No-272/1, Stanley Road, Jaffna.
Tel:-021 222 4647,021 222 9424
Week days 8.30 am to 5.00 pm
Saturday 9.00 am to 1.30 pm
**New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.** Tel:024 222 6800 / 024 222 6801. (C\1760) (2,6,7)


## கண்ணீர் அஞ்சலி



எமது வாழ்வகத்தின் நலன் விரும்பி
பேரம்பலம் நாகரத்தினம் (E.S.P)
அவர்களின் தாய்

திருமதி
### பேரம்பலம் மாணிக்கம்


அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

(F/1762) (45.6.7)

வாழ்வக சமூகம்

# இரண்டாம் வருட நினைவஞ்சலி



மண்ணில்
15 - 12 - 1952

விண்ணில்
21 - 07 - 2010

திதி: 29.07.2012

அப்பா என்றழைத்த எம் தெய்வமே
ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று இரண்டு ஆண்டு ஆனதப்பா - நாங்கள்
கைகூப்பி நின்றவனும் எம்மை
கைவிட்டு விட்டானப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
ஊர் போற்ற வளர்த்தீர்கள் அப்பா எம்மை
ஓம் என்ற சொல்லுக்கு மறுவார்த்தை இல்லையென
ஓங்கி ஒலித்திட எம்மை வளர்த்தீர்கள் அப்பா
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம் அப்பா
காணுகின்றோம் கண்ணாடிக்குள் நிழற்படமாய் அப்பா
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம் அப்பா.

## வல்லிபுரம் கணேசலிங்கம்

(உரிமையாளர்-எரிக் கணேஸ்
பல் மூக்குக் கண்ணாடியகம்)

வண்-வடமேற்கு,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

மனைவி,
பிள்ளைகள்

[சி/1764] [6.7.10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GlaxoSmithKline



**சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலி கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.**

இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது




GREY

பற்களில் எனாமல் அரிக்கப்பட்டு பற்களின் நரம்பைச் சூழ நடுவிலுள்ள மென்மையான பகுதி வெளிப்படுவதால் கூர்உணர்ச்சி ஏற்படுகின்றது. சென்சொடைன் பற்களின் அடிப் பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இரு தடவைகள் பல்துலக்குவதால் கூர்உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

50 கிராம் - ரூபா 220 100 கிராம் - ரூபா 420

தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இரு தடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 13 . 09 . 1952



இறப்பு 29 . 06 . 2012

## அமரர் கந்தசாமி சிவராசா
(இன்பம் கிறீம் ஹவுஸ்)

கடந்த (29.06.2012) அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கந்தசாமி சிவராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடைபெறும் அதனைத் தொடர்ந்து நண்பகல் சபிண்டீகரண நிகழ்வும் மதியபோசன நிகழ்வும் அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் எனும்
வள்ளுவப் பெருமானின் பொய்யா மொழிக்கு
உயிர்கொடுத்து வேவில் பதியானின்
காலத்தால் அழியாத வேவிலானின் இன்ப இசை எனும்
காவியத்தை இசைத்தட்டாக வெளியிட்டு
பெருமை படைத்த இன்பமெனும் அருள் வள்ளலே
தங்கள் திருமுகத்தை வேவில் பதியானின்
பாதாரவிந்தங்களில் நாம் என்றென்றும் காண்போம்

வித்தனை, வல்வெட்டி. குடும்பத்தினர்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(கி/1718) (45.6.7)


**24 Months**

certified software engineer

# BACHELOR`S DEGREE in

**INFORMATION TECHNOLOGY | SOFTWARE ENGINEERING**

சர்வதேச அங்கீகாரம் கொண்ட Oracle, MicroSoft மற்றும் Zend ஆகிய இக் கற்கை நெறியானது செய்முறை மற்றும் எழுத்து தேர்வு ஆகிய இரண்டு முறைகளை உள்ளடக்கியது. இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டப்பட்டு 3 ஆம் வருட முடிவில் JAVA, PHP மற்றும் இணையம் தொடர்பான தொழில்தகைமை சான்றிதழையும் வழங்குகின்றது. அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் வெளிவாரி தகவல் தொழிநுட்ப பட்டதாரி ஆவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது. மேலும் ஒரு வருட தொழில் அனுபவத்துடன் போட்டிகள் நிறைந்த உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைக்குள் பிரவேசிக்க முடியும்.

On the Job training programme
Full time / Part time

மாதாந்த கட்டணம்
Rs. 6950/=

OCBT
OCBT CAMPUS

203A, High Level Road, Kirulapone,
Colombo 6,
Tel: 0112 815 007/8,
HOT LINE: 07 22 22 33 22
www.ocbt.lk | E-mail: info@ocbt.lk



**WORLD'S NO 1 BRANDS UNDER ONE ROOF**

LG SANYO Haier Whirlpool MITSUBISHI ELECTRIC TOSHIBA Leading Innovation JVC Electrolux

TIEDAO SICHER GERMANY SHIMGE



Authorized Dealer for

# MALABAR
AUTHORIZED DEALER FOR Abans

# 81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

#81, Stanley Road,
Jaffna.

Tel : 021 222 2043
021 4923609

(சி/1759) (6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 1978, அனுசம், கிரகபாவம் 19, 2ல் சூரியன், செவ்வாய், வர்த்தக(கடை) தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(21037)(5-6-7) தொடர்பு: 077 191 2564

**காணிவிற்பனைக்கு**

இல. 12, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் காணியுடன் கூடிய வீடு 2½ பரப்பில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 968 4168, 004 747371392 (21047) (45.6.7)

**மணமக்கள் தேவை**

UK PR 1979 சுவாதி, UK Citizan, 1985 அத்தம், 1987 கேட்டை மணமகளும், 1979 மகம், 1989 திருவோணம் (உள்ளூர்) மணமகனும் தேவை.

தொடர்பு: www.keethannet.com

யாழ் - 0771307185,

வவுனியா - 0778501013 (18703) (6.7.10)



**கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும்**



அனைத்து வகையான மடிக்கணினிகள் (Toshiba, Hp, Compaq, Acer, Sony, Lenovo) மற்றும்

கணினிகள் (CPU, Monitor, UPS) திருத்திக்கொடுக்கப்படும்.

அனைத்து கணினிகளுக்குமான உதிரிப்பாகங்கள் (Hard Disk, DVD ROM, Monitor, Processor, Batteries, Screen, RAM, Mother board, etc) எம்மிடம் உண்டு.

நாட வேண்டிய இடம்: **i Buy Computers**

**75/10, Front Lane, Palay Road, Thirunelvely, Jaffna.**

**T.P.:077 707 2092** (21064)(5-6-7)

**மணமகள் தேவை**

UKCitizan

இந்து கௌரவ குடும்பம் மணமகனுக்கு மணமகள் தேவை.

Yr 28 கார்த்திகை

Yr 30 சுவாதி

Yr 33 திருவோணம்

Yr 42 பூரம்

Yr 35 பரணி (Cana citi)

Yr 33 பூசம் (Swiss citi)

Yr 30 (Aust citi)

ஆகியோர் மணமகளை எதிர்பார்க்கிறார்கள்.

T.P: 00447831040046

(21036)(5-6-7)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை சிவபூரணம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், மந்திரியார் வளவு, மட்டுவில், வடக்கைப் புகுந்த இடமாக கொண்ட செல்லத்துரை சிவபூரணம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (27.07.2012) இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவியும், கிரியாதேவியின் தாயும், சிறிஸ்கந்தராசாவின் (சிறி) மாமியும், கோகுலன், பிரதாபன், சிறிதனுயனின் பேர்த்தி யும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், சிவஞானம் (சிறாப்பர்) ஆகியோரின் சகோ தரியும், காலஞ்சென்றவர்களான காசியர், பூமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ் சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி, ஜீவதாசன் ஆகியோரின் சிறியதாயும், சிவயோகப்பிரியா, சிவரஞ்சினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (27.07.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சேர்லேன், உடுவில். (21062(6-7-45) **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பிரமணியம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மூத்த விநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம்



நேற்று (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி விஸ்வலிங்கம் தம்பதியரின் பெறாமகனும், திரு.திருமதி இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சுதேஸ், காலஞ்சென்ற சதீஸ், சுகி, சுதாஸ், சுஜீத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியந்தி, புவிதாஸ், எப்சிபா, பகீரதன் ஆகியோரின் மாமனும், பர்வித், பூர்விகா, ஆகாஷ், சுமேஷ், சந்தோஷ், றக்சனா, கிஷாலன், கபீஷ், சேரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காகப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மூத்த விநாயகர் வீதி, நல்லூர். (21045) (2-6-7) **சுதேஸ், சுதாஸ்.**



# மரண அறிவித்தல்

## திருமதி சிவலோகநாதன் தனலட்சுமி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலோகநாதன் தனலட்சுமி கடந்த (20.07.2012) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலோகநாதனின் பாசமிகு மனைவியும் வெண்ணிலா, பார்த்தீபன், பிரதீபன், தாரகை ஆகியோரின் அன்புத் தாயும், சிவசங்கர், மாலிகா, ஜெயந்தன், கல்பனா ஆகியோரின் அருமை மாமியும், ஆதவன், அபிநயா, மதுநயா, காவியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மகேஸ்வரி, பராசக்தி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சிவலோகநாயகி, பேரானந்தநாயகி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பிள்ளையார் லேன்,
திருநெல்வேலி. (9/1767) (2-6-7) T.P.00442082486882

**பரமலிங்கம்**
**(மைத்துனர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிரபல வர்த்தகர் E.S.P. நாகரத்தினத்தின்
பாசமிகு தாய்

# திருமதி பேரம்பலம் மாணிக்கம்

அம்மா நீங்கள் மாந்தருள் "மாணிக்கம்"
சும்மா பெயரிடவில்லை மாணிக்கம் என
இம் மா நிலத்தில் உங்கள் சேவையில்
நம்மவர் உயர்ந்தனர் நாடு போற்றவே

மங்கையரில் மாணிக்கமாய் மிளிர்ந்தீர்கள்
சங்கையாய் வாழ்ந்தீர்கள் மாமனிதர் நாகரத்தினத்துடன்
பங்குதாரரும் பாங்காய் இன்று கண்ணீர் மல்கிட
எங்கும் இன்று சோகமயம் நீங்கள் இல்லையே என

வந்தாரை வரவேற்க இன்னமுதே தாயே
நொந்தாரையும் கை தூக்கிய மாணிக்கமே
எஞ்ஞான்றும் நல்லூரான் கழலடியில் வீற்றிருந்தே
அஞ்ஞானம் அகன்றிட ஆசீர்வதிப்பீர்கள் எங்களையே

கடந்த 25.07.2012 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர், ஊழியர்கள்.**
**தேனு களஞ்சியம்,**
**இல.29, நவீனசந்தை, திருநெல்வேலி.**

(21041) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகக் கற்களால் சிக்கலா...?

உடலின் இரத்த அழுத்தத்தை பராமரித்தல், இரத்தத்தை சுத்திகரித்தல், உடலில் உள்ள கழிவுகளை வெளியகற்றுதல், உடலுக்குள் நச்சுப்பொருள் நுழையும் நிலையில் எச்சரிக்கை மணி எழுப்பி அதை வெளியேற்றுதல் என ஆயுள் முழுவதும் செவ்வனே வேலை செய்பவை சிறுநீரகங்கள் தான். மனித உடலில் உற்பத்தியாகும் குருதியில் 25 வீதம் சிறுநீரகத்துக்கு தேவைப்படுகின்றது. மனிதர்களுக்கு இதயம், மூளை , கண் போன்று சிறுநீரகமும் மிகவும் முக்கியமானது. இதயத்தோடு சிறுநீரகத்திற்கு நெருங்கிய தொடர்பு உண்டென்பது புதிய விடயமல்ல. ஆனால் இதயத்தில் பாதிப்புள்ளவர்கள் சிறுநீரகங்கள் குறித்தும் கவலைப்பட ஆரம்பிக்க வேண்டும் என்பது தான் அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகளின் செய்தியாகும் சீறுநீரகங்கள் பாதிக்கப்படுவதற்கு சிறுநீரகக் கற்களும் ஒரு முக்கிய காரணமாகும்.

மனித உடலில் சிறுநீரகக் கற்கள் தோன்றியது இன்று நேற்றல்ல உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே சிறுநீரகக் கற்களும் தோன்றியிருக்கின்றன. இதற்கான சரித்திர ஆதாரங்கள் நிறைய உண்டு. எகிப்து நாட்டில் புராதன காலத்தில் புதைக்கப்பட்ட ''மம்மி''களின் உடலில் சிறுநீரகக் கற்கள் இருந்திருக்கின்றன. உலகப் புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் மருத்துவத்தின் தந்தையான ''ஹிப்போகிரேடிஸ்'' சிறுநீரகங்கள் பற்றியும் அவற்றின் விளைவுகளைப் பற்றியும் பல ஆண்டுகளுக்கு முன்பே விளக்கமளித்துள்ளார். இன்றும் சிறுநீரகக் கற்களால் துன்பப்படும் மக்கள் உலகில் பல நாடுகளிலும் இருக்கிறார்கள்.

சிறுநீரகக் கற்கள் சிறுவர் முதல் முதியோர் வரை எல்லா வயதினருக்கும் ஏற்படுகிறது. ஆண் பெண் இருபாலாரும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் எனினும் ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களுக்கு இந்தத் தொந்தரவு குறைவாகத்தான் இருக்கிறது.

**பெண்களுக்கு குறைவாயிருப்பதற்கான காரணங்கள்**

பெண்களில் சுரக்கும் ''ஈஸ்ட்ரோஜன்'' எனும் ஓமோன் சிறுநீரில் ''சிட்ரிக் '' அமிலத்தின் அடர்த்தியை அதிகரிக்கிறது . இந்த அடர்த்தி நிறைந்த ''சிட்ரிக்''அமிலம் பெண்களுக்கு சிறுநீரில் கல் உண்டாவதை தடுக்கிறது. பெண்களுக்கு சிறுநீர் புறவழிப் பாதையின் நீளம் குறைவாக இருப்பதால் சிறுநீர் தடங்கலின்றி வெளியேறிவிடுகிறது. இதனாலும் அவர்களுக்கு சிறுநீரகக் கல் தோன்றும் வாய்ப்பு குறைகிறது.

**சிறுநீரகக் கற்கள் தோன்றும் விதம்**

நாம் குடிக்கும் தண்ணீரில் கல்சியம், மக்னீசியம், பொஸ்பேற், ஒக்சலேற் , யூரியா என்று பலவகை உப்புக்கள் உள்ளன. சாப்பிடும் உணவுகளிலும் இவை அதிகமாக உள்ளன. சாதாரணமாக இந்த உப்புக்கள் சிறுநீரில் வெளியேறிவிடும். சில சமயங்களில் இந்த உப்புக்களின் அளவு இரத்தத்தில் எல்லையைத் தாண்டும் போது இவை சிறுநீரில் வெளியேறுவதற்கு தடை ஏற்படும்.

அந்தச் சந்தர்பங்களில் சிறுநீர்ப்பாதையின் சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுநீர்க்குழாய்கள் ஆகியவற்றில் உப்புக்கள் படிகம் போல் படிந்து சிறுகச் சிறுகச் சேர்ந்து கல் போல் திரளும் சிறு கடுகு அளவில் ஆரம்பித்து பெரிய நெல்லிக்காய் அளவுக்கு வளர்ந்து விடும். இதைத் தான் சிறுநீரகக்கற்கள் என்கிறார்கள்.

**சிறுநீரகக் கற்கள் தோன்றக் காரணங்கள்**

பல காரணங்களால் சீறுநீரகக்கற்கள் தோன்றுகின்றன. கல்சியம், மக்னீசியம், ஒக்சலேற் உப்புக்கள் அதிகம் உள்ள உணவுகள் அதிகம் சேர்ப்பதால் தோன்றலாம் ஆண்களில் சிறுநீர்ப்பைக்கு அருகில் இருக்கும் ''புரஸ்ரேஸ்'' சுரப்பி வயதான காலத்தில் வீங்கிக் கொள்ளும். சிறுநீர்ப்பை இணைப்புக்குழாய்களில் சுருக்கம் ஏற்படும். இவற்றால் சிறுநீர் வெளியேறுவதில் தடை உண்டாகும். சிறுநீரகத்திலும், சிறுநீர்ப்பையிலும் சிறுநீர்த்தேக்கம் உண்டாகுவதால் அவர்களுக்கு சிறுநீரகக்கல் தோன்றும். சிலருக்கு ''பராதைரொயிட்''ஓமோன் மிகையாகச் சுரப்பதால் இரத்தத்தில் கல்சியத்தின் அளவை அதிகரிக்கும். அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சிறுநீரகக்கல் உண்டாகலாம்.

**சிறுநீரகக் கற்கள் என்ன செய்யும்?**

உருவாகும் சிறுநீரகக் கற்கள் சும்மா இருப்பதில்லை சிறுநீரகத்தையே பாதிக்கத் தொடங்கிவிடும். அது எவ்வாறெனில் சிறுநீரகக்கல் சிறுநீர்ப்பாதையில் எந்த இடத்தில் தோன்றினாலும் முதலில் அது சிறுநீர் ஓட்டத்தை தடை செய்யும்.

இதன் விளைவாக சிறுநீரகத்திலோ, சிறு நீர்ப்பையிலோ சிறுநீர் தேவையின்றி தேங்கி நிற்கும். இது சிறுநீரகத்துக்கு பின்னழுத்தத்தை கொடுக்கும் இதனால் சிறுநீரகம் வீங்கும்.

வீங்கிய சிறுநீரகத்தில் நோய்க்கிருமிகள் எளிதாகத் தொற்றிக் கொள்ளும் விரைவிலேயே சிறுநீரகம் பழுதடையும் சில ஆண்டுகளில் சிறுநீரகம் செயலிழந்து சிறுநீர் செல்வதில் சிக்கல் உண்டாகும். இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

**சிறுநீரகக் கற்கள் இருப்பதை அறிவது எப்படி?**

சிறுநீரகத்தில் கற்கள் இருப்பதால் பக்க முதுகின் விலா எலும்புகளுக்குக் கீழ் திடீரெனக் கடுமையான வலி உண்டாகி முன் வயிற்றுக்குப் பரவும் . கற்கள் சிறுநீர் இணைப்புக் குழாய்களில் இருப்பதால் அடிவயிற்றில் வலி தோன்றி பிறப்புறுப்புக்கும் பரவும்.

சிறுநீர்ப்பையில் கல் இருந்தால் தொப்புழுக்குக் கீழே வலி ஆரம்பமாகி சிறுநீர் புறவழியின் நுனிவரை பரவும் அதனுடன் சிறுநீர் கழிப்பதில் சிரமம், வலி, எரிச்சல், அடிக்கடி சிறுநீர் வருவது போன்ற உணர்வு, சிறுநீரில் இரத்தம் வருதல், சிறுநீர்க்கடுப்பு போன்றவற்றோடு வேறு சில சமயங்களில் கற்களோடு நோய்த் தொற்றும் சேர்ந்து கொள்வதால் குளிர்காய்ச்சல் வரக்கூடும்.

இன்னும் சிலருக்குச் சிறுநீர் சிறிதும் வெளியேறாமல் சிறுநீர்ப்பை வீங்கிக் கொள்வதால் உப்பிப்பெருக்கும் அடி வயிற்று வலியும் கடுமையாகும்.

**பரிசோதனைகள்**

மேற்கூறிய அறிகுறிகளைக் கொண்டு ஒருவருக்குக் கல் எந்த இடத்தில் இருக்கிறதென்பதை ஓரளவிற்கு மருத்துவர்கள் அறிவிப்பார்கள்.என்றாலும் கல்லின் அளவு மற்றும் அது ஏற்படுத்தியிருக்கும் வேறு சிக்கல்களைத் தெரிந்து கொள்வதற்கு வயிற்றை எக்ரே எடுத்துப் பார்ப்பார்கள் இதைத் தவிர ultra sound,C.T.Scanner கருவிகளின் மூலம் நுண்ணொலி முறையில் மிக விரைவிலும் மிகத் துல்லியமாகவும் சிறுநீர்ப்பாதையில் கற்கள் இருக்கும் இடம், அளவு, அவை ஏற்படுத்தியுள்ள பாதிப்பு போன்ற விவரங்களை உடனுக்குடன் மருத்துவர்கள் தெரிந்து அவற்றின் அடிப்படையில் சிகிச்சை முறைகள் வழங்கப்படுகின்றன.

**சிகிச்சை முறைகள்**

இன்றைய நிலையில் சிறுநீரகக் கற்களை வெளியகற்றுவதற்கு நவீன சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ''பிளஸ் திறப்பி'' (Flush Therapy), '' சிஸ்ரஸ்கோப்பி'' (Cystoscopy), நுண்துளை அறுவை சிகிச்சை(Pin hole surgery) மற்றும் அதிர்வு அலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் (Extra corpored shock ware Lithotripsy) சிகிச்சை முறைகள் முக்கியமானவையாகும்.

**சிறுநீர்க் கற்களைத் தவிர்ப்பது எப்படி?**

ஒரு முறை சிறுநீர்க்கற்கள் வந்தவர்களுக்கு மறுபடியும் கற்கள் உருவாகாமல் இருக்கவும் இதுவரை சிறுநீரகக் கற்கள் வராதவர்களுக்கு எப்போதுமே இந்தத் தொந்தரவு வராமல் இருக்கவும் கீழ்க்காணும் தவிர்ப்பு முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு நிறைய நீர் குடியுங்கள். தினமும் 3 லீற்றர்களுக்கு குறையாமல் திரவ ஆகாரங்களைச் சாப்பிடுங்கள். இளநீர், பால், மோர் போன்றவை இதற்கு உதவும்.

நெய், வெண்ணெய், அல்வா போன்ற கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. நார்ச்சத்து மிகுந்த தானிய உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஐஸ்கிறீம், சொக்லெட் மற்றும் இறைச்சி வகைகளையும் குறைத்துக் கொள்வது நல்லது.

எனவே சிறுநீரகக் கற்களை சிறிய விடயமாகக் கருதாமல் மேற்சொன்ன தற்காப்பு நடவடிக்கைகள் மூலம் வரு முன் காத்துக்கொள்ளுங்கள் வளமான வாழ்வை வாழுங்கள் .

**ஆர்.சயந்தன்**
*தாதியக் கல்லூரி ,யாழ்ப்பாணம்.*

---

**எனக்கு வயது 34. எனது இரண்டு குதிக் கால்களிலும் ஏற்பட்டுள்ள பித்தவெடிப்பால் ஏற்படும் வலியினால் எனது அன்றாட வேலைகளைச் செய்யமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறேன். எனது பித்த வெடிப்பு குறைவதற்கு ஏதாவது நிவாரணம் உள்ளதா?**

*எ.ராணி, மட்டுவில்*

முதலில் பித்தவெடிப்பு என்றால் என்ன? பித்தவெடிப்பு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பித்தவெடிப்பானது பெரும்பாலும் கால்களில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்றாகும். பித்தவெடிப்புகள் கால்களின் அழகைக் குறைப்பது மட்டுமல்ல, மிகுந்த வலியையும் ஏற்படுத்துகின்றன. எமது உடலில் நிறை எமது கால்களாலேயே தாங்கப்படுகிறது. தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிற்றல், நடத்தல் போன்றவற்றினால், பாதங்களின் சருமம் கடினமாகவும், தடிப்புத் தன்மையாகவும் மாறுகின்றது. உடலின் நிறையினால் மேலிருந்து கீழாக அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்படும்போது கால்களில் காணப்படும் தோலின் கொழுப்புப்படை விரிவடைகின்றது. இவ்வாறு விரிவடையும் தன்மை குறைவடையும்போது , பாதங்களில் பித்தவெடிப்பு ஏற்படுகின்றது.

**பித்தவெடிப்பு ஏற்படக் காரணங்களாவன:**


கால்களின் சருமத்தின் உலர்ந்த தன்மை (xerosis) குதிக்கால் தோல் தடித்து கடினமாக காணப்படுதல் (callus) , உடல் நிறைச் சுட்டி அதிகரித்தல் (BMI), நீண்டநேரம் நிற்றல், நடத்தல், தோலின் வளையும் தன்மை குறைவாக இருத்தல், குதிக்கால் மூடப்படாத செருப்பு வகைகளைஅணிதல், அருந்தும் நீரின் அளவு குறைதல், குளிரான காலநிலை, உங்கள் வீட்டினுள்வளியின் ஈரப்பதன் குறைவாக இருத்தல், முதிர்ச்சியடைதல், தைரொயிட் சுரப்பி நோய்கள் (Hypothyroidism) நீரிழிவுநோய், (Diabetia Autno neuropathy) , தோல் வியாதிகளான Psoriasis, Eczema போன்றவை உங்கள் கால்களில் பித்தவெடிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகும்.

**பித்தவெடிப்பு ஏற்படும்போது கால்களின் சருமத்தில் காணப்படும் அறிகுறிகளாவன:**

தோல் சிவந்து நிறம் மாறுதல், வலி ஏற்படுதல், தோல் தடித்து கரடுமுரடாகுதல், தோல் உரிதல், அரித்தல், இரத்தக் கசிவு ஏற்படுதல்.

பித்தவெடிப்பானது ஏற்படும் வகைகளைக்கொண்டு அவற்றை சிறியளவான, தற்காலிகமான, பெரிய பித்தவெடிப்புகள் என வகைப்படுத்தலாம்.

சிறியளவான, தற்காலிகமான பித்தவெடிப்புகள் காலநிலை மாற்றங்களினாலும், உடலின் நீர்த்தன்மை பற்றாக்குறையினாலும் ஏற்படுகின்றது. இவ்விரு வகை[illegible] தானாகவே மறைந்துவிடும் தன்மையுள்ளவை. வலியோ, இரத்தக் [illegible]



இவ்வகையான பித்தவெடிப்புகள் வேறுஎந்த பெரிய விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் பெரிய பித்தவெடிப்புகள், நீண்ட நாள்களாக வலியையும், வேதனையையும் கொடுக்கும். அத்துடன் ஆழமான பித்த வெடிப்புகள் இரத்தக் கசிவை ஏற்படுத்துவதோடு, கிருமித் தொற்றுதலுக்கும் உள்ளாகின்றன. (Fungal infection) பித்தவெடிப்பைக் கட்டுப்படுத்து வதற்கு அல்லது முற்றாக குணமாக்குவதற்கு, நீங்கள் பாதணிகள் உங்கள் கால்களுக்கு மென்மைத் தன்மையைக் கொடுக்கக்கூடியதாகவும், கால்களை மூடக்கூடிய விதத்திலும் சரியாக அணிதல் வேண்டும். நாளாந்தம் அதிகளவு நீர் அருந்துதல் வேண்டும்.

உங்கள் கால்களை பற்தூரிகை கொண்டு சவர்க்கார நீரினால் கழுவி நன்றாகத் துடைத்து படுக்கைக்குப் போகுமுன் சிறிதளவு எண்ணெய் அல்லது ஈரப்பதன் தரக்கூடிய கிறீம் வகைகளைப் பூசி, படுக்கைக்குச் செல்லவும். இவ்வாறு நாளாந்தம் செய்துவர பித்தவெடிப்புக்கள் குறையவாய்ப்புண்டு.

அதைத்தவிர நீங்கள் உங்கள் உடல் நிறைச் சுட்டியைவிட, கூடுதலான உடல் நிறை உள்ளவர் எனின் உடல் நிறையைக் குறைக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்ளவும்.

நீங்கள் தைரொயிட் சுரப்பி நோய் (Hypothyroidism) நீரிழிவு, தோல் சம்பந்தமான வியாதிகள் உள்ளவராயின் தோல் சிகிச்சை நிபுணரின் ஆலோசனைகளை நாடுங்கள்.

**மருத்துவர்: ரி.சி.கனிமொழி**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்தியசுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விலை உயர்ந்தபொருள்கள் வாங்குவீர்கள். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். நாள்.

**இடபம்:** குடும்பத்தாரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மிதுனம்:** எதிர்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத்தொடங்குவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும்.

**கடகம்:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கன்னி:** பிற்போட்ட விடயங்கள் உடனே நிறைவேறும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் திடீர் லாபம் ஏற்படும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

ஆடி 15 திங்கட்கிழமை 30.07.2012
திதி: துவாதசி பி.ப 02.47 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.01.11 வரை சித்தம்
சுபநேரம்: 12.03 - 01.33 வரை
ராகு காலம்: .07.33- 09.03 வரை

**துலாம்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சித்துப் பேச வேண்டாம். சகிப்புத் தன்மை தேவை.

**விருச்சிகம்:** நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தி பேசுவார்கள். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**தனுசு:** சவாலான விடயங்களைச் சாமர்த்தியமாகப் பேசி முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழைப் பொழிவார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**மகரம்:** சந்தோஷமான சந்திப்புகளால் மன நிறைவு கொள்ளும் நாள். உறவினர்கள் உங்கள் மீது கொண்டிருந்த அவநம்பிக்கைகள் மாறி நம்பிக்கை கொள்வர். பணிகளில் உயர்வு காண தகுதியை உயர்த்திக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**மீனம்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. உங்கள் வாயைக் சிலர் கிளறி வேடிக்கைப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. போராட்டமான நாள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | | 9 | | | 3 | 6 | 1 |
| 6 | 2 | | | 4 | 1 | | | 5 |
| | | 1 | | 5 | | 4 | | |
| | 6 | | | | | 2 | | |
| 2 | | | | 9 | | | | 6 |
| | | 4 | | | | | 7 | |
| | | 9 | | 6 | | 8 | | |
| 8 | | | 7 | 1 | | | 5 | 4 |
| 7 | 5 | 6 | | | 8 | | 1 | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 1 | 2 | 7 | 4 | 5 | 8 |
| 1 | 4 | 8 | 9 | 3 | 5 | 7 | 6 | 2 |
| 7 | 2 | 5 | 4 | 6 | 8 | 9 | 1 | 3 |
| 2 | 7 | 6 | 5 | 1 | 3 | 8 | 9 | 4 |
| 4 | 9 | 1 | 7 | 8 | 6 | 2 | 3 | 5 |
| 8 | 5 | 3 | 2 | 4 | 9 | 1 | 7 | 6 |
| 3 | 6 | 7 | 8 | 9 | 2 | 5 | 4 | 1 |
| 5 | 1 | 2 | 3 | 7 | 4 | 6 | 8 | 9 |
| 9 | 8 | 4 | 6 | 5 | 1 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

திருக்குடும்பச் சகோதரிகள்
(யாழ். மாகாணம்)

# முப்பொன் விழா காணும் திருக்குடும்பச் சபையினர்

திருக்குடும்பச் சகோதரிகளின் சபையானது இலங்கையில் முதற்பெண்துறவிகள் சபையாக 1862ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2ஆம் நாளில் யாழ் மண்ணில் தடம்பதித்து 150 ஆண்டுகளை இவ்வருடம் நிறைவு செய்கின்றது.

இத்திருக்குடும்பச் சகோதரிகள் அறுவரின் வருகையானது நமது மண்ணுக்கும் மக்களுக்கும் உதயதாரகையாக ஒளிவீசியது. அந்த அணையாத ஒளியின் வழியில் பயணம் செய்தோர் இன்று இறைமக்கள் பேரவையாக சமுதாய சிற்பிகளாக ஆற்றல் மிகு அறிஞர்களாக பெருமை மிக்க பெண் இனமாக குடும்பங்களின் தீபங்களாக விளங்குகின்றனர்.

அக்காலத்தில் யாழ் அப்போஸ்தலிக்க விக்காராக விளங்கிய சமேரியா ஆண்டகை (அ.ம.தி) தனது ஆளுகையின் காலத்தில் இறைமக்கள் சிறப்பாக இளம்பெண் பிள்ளைகளின் நிலைப்பாட்டை உற்று நோக்கி மனம் வருந்தினார். கல்வியறிவு, மறையறிவு, விசுவாச வாழ்வு, ஒழுக்கசீலங்கள், மனித மேம்பாட்டு வளர்ச்சி, பண்பாட்டுக் கலாசார விழுமியங்கள் என்பன தொய்வு நிலையில் காணப்பட்டன. இந்தியாவைப்போல் ஒரு துறவற சபைச் சகோதரிகள் இங்கு வந்து இவர்களின் நிலையை மேம்படுத்துவதாக இருந்தால் எவ்வளவோ நன்மை பயக்கும் என்று உள்ளத்தில் ஆதங்கப்பட்டார். பல துறவற சபைகளை நாடி விண்ணப்பித்தும் ஒன்றும் கைகூடவில்லை. இறுதியாக இறைவன் விரும்பிய சபை திருக்குடும்ப சபையாகும்.

1858ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி அமலமரித் தியாகிகள் சபை நிறுவுநர் யூஜின் டி மசனட்டுக்கும் திருக்குடும்ப சபை நிறுவுநர் பீற்றர் பியன்வெனு நோஆய்க்கும் இடையில் ஓர் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. நம்பிக்கையும் பரஸ்பர உதவியும் வலியுறுத்தப்பட்டது. ஆயர் சமேரியாவின் வேண்டுகோளுக்கிணங்கி இரு சபை நிறுவுநர்களும் திருக்குடும்ப சகோதரிகளை இலங்கைக்கு அனுப்ப சம்மதம் அளித்தனர். இவர்களது வருகைக்கு முன் 1861ஆம் ஆண்டு இரு நிறுவுநர்களும் (பெப்ரவரி 8 மே 21) இவ்வுலகை நீத்து இறைபதம் அடைந்து விட்டனர். ஆயர் சமேரியா யூஜின் டி மசனட் ஆண்டகையின் பிரிவின் பின் நடைபெற்ற பொதுச்சங்கத்தில் பங்கு பெற்ற பிரான்ஸுக்குச் சென்றபோது அங்கு ஆயத்தமாக இருந்த ஆறு சகோதரிகளையும் தன்னுடன் கூட்டி வந்தார். அவர்கள் "மாறி சேவியர் மாசான், மாறிஸ்ரனிஸ்லாஸ் குயின், மாறி கெலன் வின்ரர், மாறி தெரேஸ் வான் மோஸ், மாறி யோசெல் மறோஆ, மாறி லிகோரி றோஜர்". இவர்களுடன் அருட்தந்தையர்கள் புவாசோ, பூற்றன், 3 அமலமரித்தியாகிகள் சகோதரர்களும் அடங்குவர்.

1862 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6ஆம் திகதி ருலோன் என்னும் இடத்திலிருந்து "கனடா" என்னும் கப்பல் புறப்பட்டு 14ஆம் திகதி அலக்சாந்திரியா துறைமுகத்தை வந்தடைந்தது. அங்கே "லாசறிஸ்ற" குருக்கள் அன்பு சகோதரிகளின் வரவேற்பும் ஆதரவும் இவர்கள் சில நாள்கள் தங்குவதற்கு வசதியாக அமைந்தது. அங்கிருந்து 16ஆம்



150 ஆண்டுகளாக இறைவன் ஆற்றிய வியத்தகு நிகழ்வுகளுக்காக பொழிந்து வரும் அருள் வரங்களுக்காக உளம் நிறைந்த நன்றிப் பெருக்குடனும் பொங்கும் மகிழ்வுடனும் விழாக்கொண்டாடப்படவுள்ளது.

திகதி கயிதோவுக்குச் சென்றனர். அங்கு தங்கியபோது திருக்குடும்பம் தங்கிய வீடு, அவர்கள் தரிசித்துச் சென்ற மடோனா மரம், தேவதாய் பாலனின் உடுப்புக்கழுவிய தொட்டி இவற்றையெல்லாம் தரிசித்து மகிழ்ச்சியடைந்தனர்.

அங்கிருந்து ஒக்ரோபர் முதலாம் திகதி எக்கோ எனும் கப்பலில் பயணத்தைத் தொடங்கி ஏடின் எனும் இடத்தை அடைந்து அங்கு இளைப்பாறி பயணத்தைத் தொடர்ந்து காலித் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

கடல்வெருக்கும், ஒவ்வாமை, தட்பவெப்ப சுவாத்திய நிலை இவற்[illegible] நாள்களின் பின் காலித் துறைமுகத்தில் கரை சேர்ந்தனர். அங்கு ஒரு கத்தோலிக்க குடும்பத்தினரால் வரவேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டனர். 22ஆம் திகதி மாலையில் காலியை விட்டுப் புறப்பட்டு மறுநாள் கொழும்பை வந்தடைந்தனர். 31ஆம் திகதி கொழும்பைவிட்டுப் புறப்பட்டு பேள் என்னும் கப்பலில் பயணத்தை மேற்கொண்டு 2 நாள்களின்பின் 1862ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினர். கப்பல் வந்து தரிப்பதைக்கண்ட எம் குருக்கள் மூக்கெல் ஆயரை ஆர அரவணைத்து முத்தமிட்டு வரவேற்றனர். ஆயர் இரவில் தரைக்குச் செல்ல விரும்பாததால் திருப்பலி முடிந்தபின் படகில் சென்றனர். அருட்தந்தையர்கள் பொஞ்சீன், மேலா, ஏனைய குருக்கள் பெருந்திரளான மக்கள், திருமதி மேரி ஆன் விளைகன், மகள், மாணவர்களுடன் வந்திருந்தனர்.

அவர்கள் இறங்கிய இடத்தில் மேடையமைத்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஆயர் தம் மந்தைகளின் பாராட்டுக்களைப் பெறவிரும்பியதால் ஒருவர் ஆங்கிலத்தில் வாழ்த்துப்பா வாசித்தார். அருட்தந்தை பொஞ்சீன் ஆயரின் பெயரால் சிற்றுரை வழங்கிய பின் ஆயரைப்பின்சென்று சகோதரிகள், குருக்கள், மக்கள் மரியாள் பேராலயத்தை நோக்கிப் புறப்பட்டனர். ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க நன்றி கீதம் பாடியபின் ஆயர் இல்லத்தில் விருந்து பரிமாறப்பட்டது. இவ்வாறாக திருக்குடும்பச் சகோதரிகளின் வருகையால் யாழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர், நன்மைகள் பெற்றனர்.

எனவே 150 ஆண்டுகளாக இறைவன் ஆற்றிய வியத்தகு நிகழ்வுகளுக்காக பொழிந்து வரும் அருள் வரங்களுக்காக உளம் நிறைந்த நன்றிப் பெருக்குடனும் பொங்கும் மகிழ்வுடனும் விழாக்கொண்டாடப் படவுள்ளது. இந்த விழாவுக்கு முன்னேற்பாடாகச் சில நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாகம் 1 கால்கோள் சுவடுகள் ஓகஸ்ட் 5 ஆம் திகதி ஞாயிறு மாலை 8.30மணிக்கும், பாகம் 2 வரலாற்றுச்சுவடுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி ஞாயிறு மாலை 8.30 மணிக்கும், பாகம் 3 அனுபவச் சுவடுகள் ஒக்ரோபர் 7 ஆம் திகதி ஞாயிறு மாலை 8.30 மணிக்கும்

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படவுள் ளன. அத்துடன் www.tcnincc.com என்ற இணையத்தளத்திலும் அதனைப் பார்வையிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி கிறேஸ் றுக்மணி அந்தோனிப்பிள்ளை

நேற்று (28.07.2012) சனிக்கிழமை உதயனின் பக்கம் 20 இல் வெளியான மரண அறிவித்தலில் ரஞ்சினி, ரஞ்சன், பத்மினி இவர்களின் உறவு முறை மாறி மாமியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ரஞ்சினி, ரஞ்சன், பத்மினி, றோகன் (லண்டன்) ஆகியோரின் தாயும், கிறிஸ்ரி (பத்மராசா), பிளசிடா, ராஜ்குமார், சசிகலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் என வாசிக்கவும்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (28.07.2012) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

(21071) (45.6.7) குடும்பத்தினர்.

## LEADS - JAFFNA

### பதவி நிலை வெற்றிடம் : மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்

*மாவட்டம் : யாழ்ப்பாணம் ( உடுவில் பிரதேச செயலகப்பிரிவு)*

சமூக அபிவிருத்தி மற்றும் சிறுவர் பாதுகாப்பு வேலைத் திட்டங்களை 28 வருடங்களுக்கு மேல் முன்னெடுத்து வரும் மேற்படி நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட பதவி நிலைக்கு பொருத்தமான, சமூக ஆர்வமுள்ள சேவைத் துடிப்பானவர்களிடம் இருந்து விண்ணப்பத்தை எதிர்பார்க்கின்றது.

* கல்வித்தகைமை : க.பொ.தர உயர்தர சித்திக்கு மேல் பொருத்தமான தராதரம் உளவியல் டிப்ளோமா / சிறுவர் உரிமைகள் சம்பந்தமான முன்னறிவு, அடிப்படைக் கணக்கியல் அறிவு என்பனவற்றைக் கொண்டிருத்தல் சாதமாகக் கொள்ளப்படும்
* அளிக்கை செய்யும் திறன் (Presentation Skills) சிறுவர்களுடன் தொடர்புடைய பணிகளில் வேலைகளில் ஈடுபட்ட அனுபவம்
* சிறந்த தொடர்பாடல் மற்றும் திறமையான மொழியாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கும் திறன் வேலைகளைச் சுயமாகத் திட்டமிட்டு முடிவெடுக்கும் திறன்
* பயிற்சி நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தல், பயிற்சி நெறிகளில் பயிற்சிகளை வழங்கும் திறன்
* வெளி மாவட்டங்களுக்கு அலுவலக பயிற்சிகள் கருத்தரங்களுக்குச் செல்ல இயலுமாயிருத்தல்
* அடிப்படைக் கணினி அறிவு, மின்னஞ்சல் பாவனை அறிவு
* சமூகப் பிரச்சினைகளை அடையாளங்கண்டு தீர்வு காண்பதற்கு முயற்சித்தல்
* திட்டங்களை உயர்ந்த பட்ச விரைவுடனும் தராதரத்துடனும், சுய முன்னெடுப்புடனும் கொண்டு செல்லும் திறன்

மேற் கூறிய திறன்களைக் கொண்டிருப்பின் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான வேலையில் ஆர்வமுள்ளவரெனின் 7 நாள்களுக்குள் விண்ணபிக்குக. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

* தெரிவு செய்யப்படுபவர் லீட்ஸ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்புக் கொள்கைளை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட வேண்டியதும் அவசியமாகும்.

மாவட்ட அதிகாரி LEADS
இல. 41, விதான்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்ப முடியும்: Jaffna@leads.lk
மேலதிக விவரங்களுக்கு : 021 222 3486

மாவட்ட அதிகாரி
லீட்ஸ் நிறுவனம், யாழ்ப்பாணம் (21044)(6-7-8)

# மனைப்பொருளியல் கண்காட்சி

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மனைப்பொருளியல் கண்காட்சி நாளை கொக்குவில் பிரதேச உப அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.சுஜீவா திறந்து வைப்பார். இந்த நிகழ்வில் உறுப்பினர் தா.தியாகமூர்த்தி, மனைப்பொருள் பயிற்சி நெறி ஆசிரியை திருமதி எஸ். தர்மினி, நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் அ.கமலேஸ்வரசர்மா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (3 -7)

## வீடு,காணி விற்பனைக்கு

தெல்லிப்பழையில் உள்ள வீமன்காமம் தெற்கில் கூரை அற்ற வீட்டுடன் கூடிய காணி 6½ பரப்பு விற்பனைக்கு உண்டு.
(சி/1827)(5-6-7) தொடர்பு: 077 910 3493

## காணி தேவை

யாழ்ப்பாணம் பிரதான பஸ் சாலையிலிருந்து 2 மைல் தூரத்தினுள் 'A'9 வீதியில் 10 பரப்பு காணி உடன் தேவை. தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: 0778698909
(21072) (6.7.10)

## விற்பனைக்கு

பின்வரும் இடங்களில் காணி விற்பனைக்கு உண்டு.
கொழும்பு-06: வெள்ளவத்தை-07 பேர்ஜ், 15 பேர்ஜ், 20 பேர்ஜ். தெஹிவளை: 17பேர்ஜ், 03 படுக்கை அறையுடன் வீடு, 08 பேர்ஜ் காணி. தொடர்புகளுக்கு:
0115674892/0777 446427/0773 378640.
(சி/1826) (6.7.10)

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் சைவபோசன குடும்பத்தில் வீட்டு வேலை, குழந்தை பராமரிக்க 30-40 வயதுக்கு உட்பட்ட பெண் தேவை
தொடர்புகளுக்கு: 077-1659845
(21069) (6.7.10)

## A/L - 2012

**விவசாய விஞ்ஞானம்**
முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும்
காலம்:- 01.08.2012 (புதன்)
பிற்பகல் 1.00
ஆசிரியர் வை.சசிகுமார்.
**DMI Jaffna.**
(இ/1776)(2-6-7)

## Leyland Lorry for Sale

47-6xxx, Leyland commet super, 95, full teak Lorry, Newly build jaffna body and face fully galvanized interior. Body can be seen at Nittambuwa.

**Call Asela 0773002156**

## கல்விக் காருண்யனின் அன்னைக்கு கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரியின் கல்வி, விளையாட்டுத் துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிவரும் கல்விக்காருண்யன், பொன் மனச் செல்வன் திரு.ஈ.எஸ்.பி.நாகரட்ணம் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் ஆறாத்துயரில் நாமும் பங்கெடுத்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் இறைஞ்சுகிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

– யாழ். இந்துக்கல்லூரிச் சமூகம் –

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு சபையின் அனைத்து பணிகளிலும் கடமையாற்றக் கூடிய சைவ சமயத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் தேவை. அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றி இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. தகுதிக் கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பத்தை சகல சுய விவரங்களுடனும் தலைவருக்கு அனுப்பி வைக்கவும்

சைவபரிபாலன சபை,
66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (சி/21065)(5-6-7)


## BARNABAS இன் மலிவு விற்பனை

LCD TVகள்




22"LCD TVகள் ~~22,X00/=~~ 14,990/= 26'LCD TVகள் ~~29,X00/=~~ 19,990/=

★நிலைத்து நின்று பாவிக்கக் கூடியவை.....
★உதிரிப்பாகங்கள் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியவை.
★32'LCD TV
★40'LCD TV
மிகக் குறைந்த விலையில்

SONY WEGA JAPAN TV கள்




★25' Sony wega Supper Sound
★29' Sony wega Boofer Sound
மிகக் குறைந்த விலையில்

~~18,X00/=~~ 9,990/= ~~21,X00/=~~ 12,990/= மின்னோட்டத்தின் ஏற்றத் தாழ்வுக்கேற்ப நிலைத்து நின்று பாவிக்க கூடியவை.



2.1 Subboofer Supper sound — USB, 5.Icrannel, 32 Digitai Game — Radio, Tape CD — ★ Hands free speaker phone ★ 2-Way page/Intercom Phone

~~42X0/=~~ 2990/= ~~57X0/=~~ 3750/= ~~42X0/=~~ 990/= ~~47X0/=~~ 990/=



Fullset 15000/= ரூபாவில் இருந்து

★ உறுதியான உத்தரவாதம்
★ விற்பனைக்குப் பிந்திய வேகமான சேவை
தொடர்புகளுக்கு:-
247, ஸ்ரான்லி வீதி ,
[சிறிதர் தியேட்டர் அருகில்],
யாழ்ப்பாணம்.
T.P. 0777448668, 0772403886
(C/1652)(2...)


# துயர் பகிர்கின்றோம்



பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

## திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன், எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஹொட்டல் லவ்சி,
584, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நியூராம் கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர்
263, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இ/17686) (6.7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு பெற்றோருக்கு சுயதொழில் கடனுதவிகள்

## தெரிவானோரின் பெயர் விவரம்

புனர்வாழ்வு அதிகார சபையால் நேர்முகத் தேர்வின் மூலம் சுயதொழில் கடனுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர், விவரங்கள் வெளியாகியுள்ளன. இவர்களுக்குக் காசோலை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான பயண ஒழுங்குகளை யாழ்.செயலகம் மேற்கொண்டுள்ளது. இன்று மாலை 5 மணிக்கு பயண ஒழுங்குடன் செயலகத்துக்கு வருகை தருமாறும் தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும் எனவும் யாழ்.மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். தெரிவானோரின் பெயர் விவரம் வருமாறு:-

**இலங்கை வங்கி - யாழ். மாவட்டம்**

| | |
|---|---|
| N.Vijayakath,Kaithady Nunavil | 880901281V |
| S.Thusyanthan, Mirusuvil | N 1472285 |
| R.Satkunarasha,Marawanpulo East | 731214239V |
| E. Sasiharan,Eluthumattuwal North | VA-006996 |
| S.Likneswaran,Nunavil Central | 791723329V |
| M.SuwarnaMattuvil North | 788204841V |
| S.Udayakumari, Chavakachchery | 858594885V |
| K.Vijayarasan,Chavakachchery | 760682306V |
| N.Vijayadeepan,Nunavil Central | 850324816V |
| J.Anusha,Kovilakkandy Central | 2100151 Reh.ID |
| K.Krishnadas,Meesalai North | 892711593V |
| Thurairasa VanithaSarasalai North | 857795245V |
| K.Presanthi,Chavakachchery | 856343243V |
| S. Maikal GovindanAllarai North | 692532473V |
| R.Suhandan,Kachchai North | 821422116V |
| K.Sarmilan,Meesalai North | 892871035V |
| T. NeshanMansuvil North | 710015805V |
| S,Subesan, Mansuvil West | 841412656V |
| K.Puwaneswary, Mansuvil West | 867965459V |
| N.Kamalarani, Kudamiyan | 845333084V |
| K.Premalatha,Mirusuvil North | 816814588V |
| S.Revathy,Ketpely Central | 887302383V |
| S.Jegadeesan, Karainagar | 892604754V |
| I.SurekanUrumbirai West | 871442800V |
| S.Chelvakumar, Sunnaham | 721835600V |
| K.Krishanth, Alwai North Central | 900452160V |
| M.Kajanithi, karudavil | 836100328V |
| S.Yoharani, Point Pedro | 737363600V |
| S.Selvakumar , Valivettithurai | VA 004314 |
| K.Sooriyakumar,Valvettithurai | 760194395V |
| V. Mohanasundaram, Point Pedro | 651401089V |
| P.Purusothaman, Velvettiturai | 822471110V |
| A.Ilakkiya,Point Pedro | 896003879V |
| P.Priya, Valvettithurai | 1-1267770645 |
| S.Mathiyalahan, Point Pedro | 870564449V |
| M.Rajees,Maanippai | 843233961V |
| S. Arulneshan ,Anankottai | 620830518V |
| P.PathmalingamNavagiri,Viththahapuram | 782565249V |
| A.Vinotharaja , Thellipalai | 852345349V |
| Mr.V.Vithulan , Tellipalai | 891981732V |
| M. Rajkumar, Elaalai | 722241959V |
| Nadarasha, Elaalai | 722273389V |
| S. Gunenthiran, Kuppilan | 732093974V |
| V.Satheeskumar Punkiduthivu. | 792205194V |
| L.Prasaanth, Kondaawil. | 872072780V |
| Y.Ratheesan,Konndavil.Kondavil, | 852621451V |

**மக்கள் வங்கி - யாழ். மாவட்டம்**

| | |
|---|---|
| R. Thavachelvi, Sulipuram | 806662429V |
| M.Nagarasa, Moolai | 813042061V |
| A.Annush, Vaddukoddai | 897394553V |
| S.Palachanthiran, Chulipuram | LC 796849 |
| S.Koneshwaran, Chlipuram | 791525250V |
| R.Pradeepan, Sithankerny | 690170523V |
| V.Pasharan, Vaddukoddai | 872474005V |
| P.Niranjan, Vaddukoddai | 841094506V |
| K. Sasiharan, Vaddukoddai | 772914601V |
| K. Thatheeswaran, Vaddukoddai | 843544398V |
| S.Pirabaharan, Vaddukoddai | 853304603V |
| K.Jud Amalathas, Kuru Nager | 771611524V |
| T.Mayooran, Columbuthurai | 872104542V |
| M. Bathiudeen Chithira, Gurunager | 876884372V |
| A. Cristy Jayananathan, Gurunager | 743504739V |
| S.Puloriment, Passaiyoor | 722914228V |
| S. Subasharan, Jaffna | 810655852V |
| A. A. Fernando , Columbuthura | 763004759V |
| S. Kuhadaasan,Karainagar | 732392530V |
| N. Vijeyakumar, Karainagar | 831837667V |
| P.Chandikumar,. Kaarainagar, | 772981244V |
| S.YogeswaranSalli, Atchuvely. | 800595860V |
| C.Piratheepan, Kopay | 803066779V |
| M. Vimalathaasan, Neervely | 772313993V |
| K. Mayurathan,Neerwely | 820962990V |
| S. Nawaneethan,. Neerwely | 860832275V |
| Y. Thavaseelan, Koppai | 880852590V |
| S. Ratheeskaran, Neerwely | 802763859V |
| Mr.R. Mathiyalakan Neervely | 722864786V |
| S. Vimalarasha,Neerwely | VA-005792 |
| B.Roashan, Kalviyankaadu | 872383107V |
| S.Raveendran, Achchuwely | 600224182V |
| T. Prasaath, Neervely | 853022543V |
| K. Sritharan, Achchuwely | 851582649V |
| K. Karunaaharan, Achchuwely | 690391031V |
| S. Sitsabesan,Kopai | 761323490V |
| M.Rooban, Chavakachcheri. | 813551500V |
| P.Baskaran, Chavakacheri | 743352726V |
| T.Shobanalyanar, Kodikamam | 847571932V |

| | |
|---|---|
| S.ThanushaShyamala , Meesalai | 856853241V |
| K.Jeyakanthan, Kaithady | 842742099V |
| K.Kajatheepan, Kaithady. | 871702918V |
| T.Karunairasan, Chavakacheri. | 693480590V |
| S.Thileepan, Mirusuvil | 871214883V |
| M.Mohanavathan, Chavakacheri | 836962923V |
| K.Suthakaran , Mirusuvil. | 902794182V |
| C.Uthayakumar Mirusuvil. | 782385925V |
| P.Jeyaruban ,Varani | 750764711V |
| I.Sathayaseelan ,Chavakahcheri.... | 770812623V |
| N.Kandeepan , Kodikamam | 841154100V |
| K.Karuneswary , Chavakacheri | 705094136V |
| N.Manoharan , Chavakacheri. | 793085320V |
| S.Vijeyaratnum , Mirusuvil | 680274584V |
| K.Kugathas , Mirusuvil | 842555035V |
| T.Ajanthan ,Kodikamam | 853322547V |
| S. Deleepan, Karaveddy | 863442001V |
| K. Prathapan, Karaveddy | 821224802V |
| P. Prabaharan, Karanawaai | 751671334V |
| K.Jeyakaran,Alwaai | 712530995V |
| C. V.Sutheskumar,Thaalaiyady | 870522061V |
| A.T.Pernadin,Jaffna | 856540910V |
| G.Nitharsan, Kondavil | 871472718V |
| S. Dinesh,ManiyamThottam | 851853138V |
| K. Athiharan, Ariyaalai | 690444275V |
| R. Navasothi,Konduvil | 690150174V |
| R.Santhakumar,Maniyanthottam | 852685360V |
| J. Paulraja,Kokkuvil East | 850734941V |
| B. Kathikamanagarjah, Kondavil | 641433233V |
| P.Mary Pushpaliny,Maanikkathottam | 846115102V |
| N. Ajithakaran,Ariyaalai | 803005770V |
| N. Kajenthiran, Ariyawalai | 891472048V |
| K.Kristriyan, Preriyavilaan | 893362592V |
| G. Ajith, Alwetty | 883224043V |
| U. Niranjan,Walwettithurai | 882551741V |
| V. Teebaraj,Velvettithurai | 872974849V |
| M. Ravisath,Alwaai. | 900171110V |
| S. Sujeenthan, Point Pedro | 870693885V |
| K. Bavany,Point Pedro | 887865116V |
| K. Gayathiri,Point Pedro | 818055862V |
| S.Jeseekaran,Veyaaparamoolai | 841243560V |
| A. Kajanthan,Velvettithurai | 851837434V |
| K. Ramkumar, Point Pedro | 831922818V |
| T. Selwakumaran,Thondamaanaru | 852853425V |
| S. Kavithaas, Point Pedro | 880125079V |
| S. Yogendran,Point Pedro | 802015070v |
| N. Kamalraj,Point Pedro, | 912204839V |
| M. A.Rahuvaran, Polikandy | 863200520V |
| N. Amirthalingam, Point Pedro | 772444419V |
| T. Sasiharan,Point pedro | 881422662V |
| A.Sivanosarasha, Point Pedro, | 712680989V |
| V.Kengathanran, Viyaapaara moolai, | 670952100V |
| G. Abimanyu,Valvettithurai | 760994499V |
| S. Nadarasha,Point Pedro | 690890836V |
| N.Ushayini, Manipay | 835425010V |
| S.Reman,Ilavalai | 803025606V |
| A.Vijinthan, Sandilippai | 831164786V |
| W.Rahuroopan,Sawatkattu | 840814688V |
| M.Kuganeswaran,Maanippai | 810115530V |
| P.Thanabaalan,Manippai | 761544292V |
| M. Janoosan,Manippai | 91052556V |
| S. K.Roshan,Pandathtarippu | 850362980V |
| S.Jeyasumithra,Maathakal | ND 493629 |
| R.T.Sahayapuram, Mathagal | 752144613V |
| D. Rathees,Sandilippai | 853555053V |
| K. Nahalingam,Alawetty | 642374176V |
| P. Komanthiny,Keerimalai | 786394902V |
| A.Uthayranjini,Alaveddy | 865823614V |
| S. Jeyanthimalar,Alawetti | 846614362V |
| N. Jeewaka,Alawetty | 888013881V |
| S. Meristhiskaa,Alawetty | 826262036V |
| T. Paramasothinaathan,Keerimalai, | 801484867V |
| S.Sutharson, Chunnakam | 882800946V |
| K.Kajintha, chunnakam | 895552970V |
| S.Sivajini, Chunnakam | 725525644V |
| A.Nilojan,Chunnakam | 832685291V |
| R.Rasan,Chunnakam | 801945910V |
| M.Ramesh,Kuppilaan | 803556199V |
| M.Kangatharan,Punnaalai Kattuwan | 781055310V |
| A.W.M.Thasleem,Kuppilaan | 842812585V |
| S. Sivaroopan, Koppilan | 880924958V |
| V. Vijeyatheepan,Punnalai Kattuwaan | 881190923V |
| S. Jeyasangar,Sunnaham | 892724695V |
| P. Ravichchndiran,Maanippai | 790596005V |
| Y. Arulmeera,Allaaraipitty | VA-005824 |
| R. Sriharan,Pungudutheewu, | 833144332V |
| P. Latshumanan,Welaanai | 782915932V |
| R. Sritharan,Welaanai | 660110704V |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பெருவிழா ஆலோசனைக் கூட்டம்

சர்வதேச இந்துமத குருபீடம் நடத்தும் யாழ்/ மாவட்ட ஆன்மீகப் பெருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (29ஞாயிறு) பி.ப. 1.00 மணி முதல் 2.30 மணிவரை சங்கானை **I.D.M** மண்டபத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஆன்மீக அருள் ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ் சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

*நித்ய-சுதானந்த சர்மா*
(Director I.D.M)
*நிர்வாகப் பணிப்பாளர்*
*சர்வதேச இந்துமத குருபீடம் யாழ்/மாவட்டம்.*

(21107) (3.6.7)

## காணி குத்தகைக்கு தேவை

நல்லூர், ஆனைப்பந்தி, கந்தர்மடம், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி போன்ற இடங்களில் அல்லது யாழ். மாநகரத்துக்கு 10 K.M. க்கு உட்பட்ட ஏதாவது ஒரு பகுதியில் 30 தொடக்கம் 40 பரப்பு வரையான நிலப்பரப்பு எமக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு வழங்க அல்லது விற்பனை செய்ய விரும்புபவர்கள் கீழ்க் காணும் முக வரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:

திரு. செ.பார்த்திபன்
75/1, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P: 0779127954.

திரு. ச. நரேந்திரன்
ஆஸ்திரேலியா
T.P: 61469386588

(இ/1778) (6,7,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலி. கிழக்கு பிரதேச சபையில் ஆயுள்வேத மருந்தாளராக கடமைபுரியும் திருமதி அம்பிகாதேவி பிறேம்குமரின் அன்புத் தாய்

### திருமதி காமாட்சி கனகசபை

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்
(21124)(8-14)
ஊழியர் நலன்புரிசங்கம்

## கண்ணீர் அஞ்சலி



இ.ச.பே.நாகரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவில் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்

(21117)(8-14)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் லயன்ஸ்கழக சிரேஸ்ட உறுப்பினரும் சர்வதேச லயன்ஸ் கழக 306 B-1 வலயத்தலைவருமாகிய லயன் நாகரட்ணம் PMJF அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம் E.S.P.

(வாரிவளவு காரைநகர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவின் துயரில்:
தலைவர் மற்றும் கழக அங்கத்தவர்கள்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(21114) (2.6.7)

## மரண அறிவித்தல்

### செல்வி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை

(மருத்துவமாது போதனா வைத்தியசாலை, திருகோணமலை)



காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும், மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (27.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சம்பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தவமணி மற்றும் இராஜேஸ்வரி, பரராசசிங்கம், சுசிலாதேவி, தனலட்சுமி, சரஸ்வதி (யாழ்ப்பாணம் அலங்கார் புடைவையகம்) மோகனா, கிரிசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவபாலன், இராசரத்தினம், உமாதேவி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் தேவதாசன், வாகீசன் ஆகியோ ரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு அவரின் மருதடி இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி, காரைநகர்.
(21108) (6,7,10)
தகவல்:
சம்பூரணம் (தாயார்)

## சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு பிரதி ஞாயிறுதோறும் விடுமுறை

வடமராட்சி, ஜூலை 29

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்கள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் மூடப்படும் என வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிகை ஒப்பனை நிலையங்கள் பிரதி புதன்கிழமைகளில் மூடப் பட்டும் அதற்குப் பதிலாக ஞாயிற்றுக் கிழமைகளில் திறக்கப்பட்டும் வந்தன. எனினும் புதிய தீர்மானத்துக்கு அமைய தற்போது புதன்கிழமைகளில் திறக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (16-8)

## கட்டாக்காலி கால்நடைகளால் விவசாயம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கட்டாக்காலி கால்நடைகளால் தமது விவசாய நிலங்கள் நாசம் செய்யப்படுவதாக அராலி தெற்கு, அராலி கிழக்கு பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்தப் பிரதேசங்களில் கட்டாக்காலி களாகத் திரியும் கால் நடைகள் தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 4 மணிவரை தமது விவசாய நிலங்களை நாசம் செய்கின் றன. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த 87க்கும் மேற்பட்ட விவசாயிகளின் சுமார் 160 ஏக்கர் சிறுபோக விவசாயம் பாதிக்கப்பட் டுள்ளது.

எனவே இது தொடர்பில் உரிய நடவடிக் கைகளை எடுக்குமாறும் தமக்கான நஷ்ட ஈட்டை வழங்குமாறும் வலிமேற்குப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (16-50)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட் டல் கருத்தரங்கு இன்று முற்பகல் 9 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

நல்லூர்ப் பிரதேச சபை உறுப்பினர் து.துரைமணி தலைமையில் நடைபெற வுள்ள இந்தக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தி னராக கல்வியங்காடு அ.த.க. பாடசாலை அதிபர் க. ரவிச்சந்திரன் கலந்துகொள்வார். எனவே இந்தக் கருத்தரங்கில் புலமைப்பரி சில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களையும் பங்குபற்றுமாறு நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர். (16)

## கடைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தைக்கும் சம்பத் வங்கிக்கும் இடையில் மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: 0770488550

## தேவை

பழுதூக்கலுக்கு உபயோகப்படுத்தும் Weights (10 Kg, 5Kg, 2.5Kg) bar & Dumbbells தேவை.

தொடர்புகளுக்கு :077 1674396 (2 மணிக்குப்பின்)

(21126)(8-14)

## விற்பனைக்கு

நல்ல இன டாஸ்- ஒண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
959.கே.கே.எஸ். றோட் தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 0759910060

(2112?)(3.14)

## விற்பனைக்கு

1வயதுநிரம்பிய ரொட்விலர் ஆண்நாயும், அல்சேசன் ஆண்,பெண் நாயும் பொமேரியன் ஆண்,பெண் நாயும்,வண்டம், சிலக்சி, முயல், லவ்வேட்ஸ், பொக்கட் பெனியர் ஆண்,பெண் குட்டியும் விற்பனைக்கு.

தொடர்பு- வி.மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக பூதராயர் கோவிலடி. [illegible]

(21128)(3.14)

## வீடு வாடகைக்கு

யாழ்.பருத்தித்துறை வீதியில் 3 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
[illegible] பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். 077 263 0431

(21042)(5-6-7)

## பணியாளர் தேவை

சுன்னாகத்தில் உள்ள கிளினிக்குக்கு பெண் உதவியாளர்கள் மற்றும் பார்மசி வேலை தெரிந்தவர் தேவை. முன்னனுபவம் உள்ளவர்களும், சுன்னாகத்துக்கு அண்மையில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - 0779604195
(4p.m - 8p.m)

(21078) (6,10)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
03★ 09★ 1936
இறப்பு:
19★ 07★ 2002

அமரர்
### நயினை இராமநாதன் கோபாலபிள்ளை

திதி : பூர்வபட்ச ஏகாதசி (29.07.2012)

மௌனங்கள் நிலையாகிப் போய்விட
சோகமே எம் வாழ்வில் ஆழ்ந்தது.
உண்மை அன்பின் உருவமொன்று
எம்மைவிட்டுச் சென்ற கணங்கள்
நிதம் நிதம் நெஞ்சை வாட்டுதே ஐயா

2/1, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(21113) (2-7-6)
குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



திருமதி
### பர்வதாம்பாள் கோவிந்தராஜா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தலைவர் மற்றும் கழக அங்கத்தவர்கள்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(21115) (2.6.7)

## கண்ணீர் அஞ்சலி



தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் அவர்களின் பாசமிகு அன்னை

### திருமதி E.S.P. மாணிக்கம்

அவர்களின் பிரிவின் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிதம்பர நடராசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

முகாமைக்குழு உறுப்பினர்களும், பணியாளர்களும்
காரை சக்தி [illegible]
காரைசக்தி - காரைநகர்.

(இ/1773) (6,7,10)

## மரண அறிவித்தல்

### *தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன்*

(கிராம சேவையாளர், J/127 கொக்குவில் மேற்கு)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன் கடந்த (26.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், செந்தீபன், கம்சாயினி, காலஞ்சென்ற கம்ஜீவன் மற்றும் கம்சவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலநாதன், கனகாம்பிகை, செல்வராணி, தவராசகுலசிங்கம் (கனடா), யோகராணி, விஜயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகநாதன், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(21121) (3.6.14)
தகவல்:
செந்தீபன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோலாகலக் கொண்டாட்டம்

லண்டனில் 30 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நேற்று அதிகாலை 1.30 (இலங்கை நேரப்படி) மணிக்கு வெகு கோலாகலமாகத் தொடங்கியது. அதிரடியான ஆரம்ப நிகழ்வோடு பிரித்தானியாவின் கடந்த கால வரலாற்றையும், கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் விதமாக அமைந்திருந்த ஆரம்ப நிகழ்வை 80,000 இற்கும் மேற்பட்டோர் நேரடியாகக் கண்டுகளித்திருந்தனர்.

64 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒலிம்பிக் போட்டிகள் இங்கிலாந்திற்குத் திரும்பியுள்ள நிலையில் ஆரம்ப நிகழ்வில் அரசி எலிசபெத் கலந்துகொண்டு உத்தியோக பூர்வமாக நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். மைதானம் முழுவதும் அதிர்ந்த வரவேற்பிற்கு மத்தியில் 30 ஆவது ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பித்து வைப்பதில் பெருமையடைவதாக அவர் தெரிவித்தார்.


10,000 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்ட ஆரம்ப நிகழ்வில் வாணவேடிக்கைகள் லண்டன் மாநகரையே அதிர வைத்திருந்தன.

அரசி எலிசபெத்தும், ஜேம்ஸ் பொன்ட் நாயகன் டானியல் கிறெய்க்கும் உலங்கு வானூர்தி மூலம் பலத்த கரகோஷங்களுக்கு நடுவில் ஒலிம்பிக் மைதானத்தை வந்தடைய, இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்காம் - வேகப் படகு மூலம் தேம்ஸ் நதியினூடாக ஒலிம்பிக் தீபத்தைக் கொண்டு வந்து கையளித்தார்.

கடந்த 70 நாள்களாக உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஒலிம்பிக் தீப ஓட்டம் லண்டனில் நிறைவு பெற்றது. பயணத்தின் இறுதியாக தொடக்க விழா நடைபெறும் மைதானத்திற்கு ஒலிம்பிக் தீபம் கொண்டு வரப்பட்டு அங்கு பிரம்மாண்டமான தீபம் ஏற்றப்பட்டது. இந்தப் பயணத்தின் போது 13 மில்லியன் மக்கள் சாலைகளின் இரு பக்கத்திலும் நின்று தங்களது ஆதரவை உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

பிரித்தானியாவில் ஆரம்பித்து உலகில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய கைத்தொழில் புரட்சி உட்பட அந்த நாட்டின் கலாசாரங்களையும், வழக்கங்களையும் பிரதிபலிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆரம்ப நிகழ்வை ஸ்லம்டோக் மில்லியனர் திரைப்படத்தின் இயக்குநர் டனி போய்ல் இயக்கியிருந்தார்.


இவ் ஆரம்ப நிகழ்வில் மிஸ்டர் பீன் கதாபாத்திரத்தில் நடித்து உலகப்புகழ் பெற்ற நகைச்சுவை நடிகரான ரோவன் அற்கின்சன் கலந்துகொண்டு ஆற்றுகைகளை நிகழ்த்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (5)



விமானங்களின் வர்ண சகாசம்



படகில் ஒலிம்பிக் தீபம் எடுத்துவரப்படுகிறது


ஒலிம்பிக் அரங்கு


நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சி


வாணவேடிக்கை


நாடுகளின் அறிமுகம்




இங்கிலாந்தின் பாரம்பரிய கிரிக்கெட்


தொழில்புரட்சியை நினைவுபடுத்தி






எலிசபெத் மகாராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிவிற்பனைக்கு

வட்டுப் புன்னாலைக் கட்டுவனில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்டு விவசாயம் செய்வதற்கு அல்லது தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கு ஏற்ற 34 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

உடன் தொடர்புகொள்ளவும் : 077 3979388

(20794) (45.6.7)


# யாழ். நுலகங்களுக்கான நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

பிரபல எழுத்தாளர் நிஹால் ஸ்ரீ அமரசேகரவின் நூல்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவனான கே.பிரபா சந்திரனால் இந்த நூல்கள் யாழ்ப்பாணத்தின் பிரதான நூலகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் ஆசியுரையினை சிலாபம் முன்னேஸ்வர ஆலய பிரதம குரு ஸ்ரீ எஸ்.பத்மநாபன் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

யாழ். பொது நூலகம், யாழ். பல்கலைக்கழக நூலகம் மற்றும் யாழ்ப்பாணம் சட்ட நூலகம் ஆகிய நூலகங்களுக்கான நூல்கள் இந்த நிகழ்வில் வைத்து அந்தந்த நூலக பிரதம நூலகர்களிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## ஆலோசனைக் கூட்டம்

சர்வதேச இந்து மத குருபீடம் நடத்தும் யாழ். மாவட்ட ஆன்மீக பெருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சங்கானையில் உள்ள ஐ.டி.எம். மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் சர்வதேச இந்துமாத குரு பீடாதிபதி ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்ப தாஸ சாம்பசிவ சிவாச்சாரியர் தலைமையில் நடைபெறவுள்ளது. (16)

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவக்கழகங்களுக்கிடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. முதலாவதாக இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்தறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்ழகம் மோதவுள்ளது இரண்டாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

## மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

கைதடி ஜூலை 29

தைடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆண்டுகள் நிறைவையும் புதிய அரங்கக்கட்டடத் திறப்பு விழாவையும் முன்னிட்டு கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்திய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் சாவகச்சேரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இதனை தொடர்ந்து வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்திய வளர்மதி பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது.

இதில் கைதடி நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (288)


THE HALO TRUST

Srilanka
Reg.No.FL49716

**Database Operator**

The HALO Trust is the world's Largest humanitarian demining organisation, with 8,000 staff working in 10 countries. HALO has been operating in Sri Lanka since 2002 and employs over 1000 people.

HALO is seeking an experienced Database operator to run the operational databases. The position will be based in Kilinochchi.

**Requirements:**

- At least two years' experience of administrating relational databases(particularly MS Access) in a GIS environment.
- Good knowledge of Excel.
- Excellent spoken and written English

Please send a one page CV to recruitment@halosrilanka.org. By the 10th August 2012. Only shortlisted candidates will be contacted.

(21068)(5-6-7)



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்களான
திரு.இ.விஜயஜெயராசா, திருமதி க.விஜயலட்சுமி ஆகியோரின்
அன்புத் தாயார்
அமரர் **இளையதம்பி முத்துப்பிள்ளை**

அவர்கள் 27.07.2012 அன்று காலமாகிய செய்தி அறிந்து துயரமடைவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தவர்கள், அங்கத்தவர்கள்
மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

(21074) (6,7,10)



## துயர் பகிர்கின்றோம்



எமது வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர்
தேவஸ்தான திருவிழா உபயகாரரும்
சிறந்த அபிமானியும் பற்றாளருமான
இ.ச.பே. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி **மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
அன்னசத்திர ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(21073) (6,7,10)



## துயர் பகிர்கின்றோம்



E.S.P. நாகரத்தினம் அவர்களின்
அன்புத் தாய்
திருமதி
**பேரம்பலம் மாணிக்கம்** (E.S.P.)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவன்னப் பிரார்த்திக்கின்றோம்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம்
யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம்.

(ஏ/1777) (6,7,10)



## வீனஸ் பார்க் கிறீம் ஹவுஸ்



சாவகச்சேரி நகரில்
அண்மையில் கோலாகல ஆரம்பம்
வீனஸ் பார்க் கிறீம் ஹவுஸ்



* சிறியோர் முதல் பெரியோர் வரை இனிமையை நுகரவும்
* இளசுகளின் மனதை இதமாக்கும் முற்றிலும் குளிரூட்டப்பட்டது

**வீனஸ் பார்க்**
திருமணம் மற்றும் ஏனைய வைபவங்களுக்கான குளிர்பானம், ஐஸ்கிறீம் ...
இன்றே நாடுங்கள் - வீனஸ் பார்க் கிறீம் ஹவுஸ்
இல. 10, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி (077 3636129)

(1813...-8)



EXPOAIR
your friend in the skies...

VACANCIES-வேலை வாய்ப்பு

- **Hotel Assistant Manager-** உதவி முகாமையாளர்
- **Hotel Stewards cum Room Boys-** விடுதி பராமரிப்பாளர்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

DIRECTOR
Sales & Marketing – Passenger
EXPO AVATION (PVT) LIMITED
NO.141 E, Palaly road, Thirunelvely, Jaffna



## சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சை
# இறுதிக் கருத்தரங்கு

ஓகஸ்ட் 4ம், 5ம், 6ம் திகதிகளில்
**வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில்**

**விரிவுரை : ஹபீப் றிபான்**

எதிர்பார்க்கை வினாக்கள், **out of syllabus,** பந்திக் கேள்விகளும் விசேடமாக கலந்துரையாடப்படும்.

**0773786376 - 0754000004**

கடந்த வருடம் இறுதிக கருத்தரங்கில் இருந்து
80% கேள்விகள் கடந்த வருடம் பரீட்சையில் இடம் பெற்றிருந்தன.

(ஐ/1817)(6) MHW



## பணிநிலை வெற்றிடம்

**1) கணக்குப் பதிவாளர்- பெண்கள்**
(கணினி அறிவு இருத்தல் வேண்டும், முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

**2) விற்பனையாளர் - ஆண்கள்**
(மின்சாரப் பொருள்கள் தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

30.07.2012 - 02.08.2012 வரை முற்பகல் 10.00 -12.00 மணிக்குள் நேரில் சமுகம் தரவும்.

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
இல.21, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
தொ.பே.இல: 0777642771

(21104) (6,7,10)



## கண்ணீர் அஞ்சலி



எமது மததாலயத் தலைவர்
திரு. E.S.P.
நாகரத்தினம் அவர்களின்
பாசமிகு அன்னை
திருமதி E.S.P. **மாணிக்கம்**

அவர்களின் பிரிவின் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துசிதம்பர நடராசப்பெருமானையும் மாணிக்கவாசக நாயனாரையும் பிரார்த்திக்கின்றோம்.

மாணிக்கவாசகர் மததாலய அன்னதானசபை
ஈழத்துச்சிதம்பரம் (சிவன்கோயில்) காரைநகர்.


(F/1773) (45.6.7)



## கண்ணீர் அஞ்சலி

தலைசிறந்த சமூக சேவையாளனும், காருண்ய கொடை வள்ளலுமான உயர்திரு. பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி **மாணிக்கம் பேரம்பலம்**



அவர்களின் பிரிவு குறித்து எமது நிறுவனம் தனது இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஜாவா சிவில் என்ஜினியறிங் கொன்ஸ்ரக்சன்
12, யமுனா வீதி, நல்லூர்.

(21111)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவர்களுக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் அண்மையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நிறுவன கல்வி அபிவிருத்திப் பிரிவு அலுவலர் எஸ்.அபிராமி மாணவிக்குச் சைக்கிள் வழங்குகிறார். அருகில் வித்தியாலய அதிபர் செ.ஜெரின்பநாதன் மற்றும் வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் நிற்கின்றனர். (ம-9)





கரவெட்டி குழந்தை இயேசு முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்படுகின்றனர். சிறுவர்களின் அணிவகுப்பும் இடம்பெறுகின்றது. (ம-14)




பருத்தித்துறை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட கலை மாலைப்பொழுது நிகழ்வில் 'துறை' எனும் சஞ்சிகை வெளியீடு செய்து வைக்கப்பட்டது. (ம-14)



யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்கள் பா.தனபாலன், ஞா.கணேசநாதன் ஆகியோர் எழுதிய "பாடசாலையில் ஆலோசனை வழங்கல்" நூல் அறிமுக விழாவில் கல்லூரி பீடாதிபதி எஸ்.யோகநாதன் நூலை வெளியிட யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி, திருமதி எஸ்.கலாமணி ஆகியோர் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கின்றனர். (ம-29)



சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டோர் அழைத்து வரப்படுகின்றனர். (ம-11)



தெல்லிப்பழை கலை இலக்கியக் கள வெள்ளிவிழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அரங்கில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சபையின் போஷகருமான என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெற்றன. (ம-86)





நவாலி கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் நவாலி முதியோர் சங்கத்தினரும் இணைந்து நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வில் முதியோர்களுக்கிடையே நடந்த பாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற ஒருவருக்கு சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவசுப்பிரமணியம் உமாபாலன் பரிசில் வழங்குகிறார். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகளை உடனடியாக திருப்பி அனுப்ப வேண்டும்

## இலங்கை கடற்படை அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 29

இலங்கையில் இருந்து படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வருபவர்களைத் திருப்பி அனுப்புமாறு இலங்கைக் கடற்படை அந்த நாட்டு அரசிடம் கேட்டுள்ளது.

மனிதக் கடத்தல்களைத் தடுப்பதற்கான சிறந்த வழி இதுவே என இலங்கை கடற்படையின் டிரக்டர் கொமடோர் என்.ஆட்டிக்கல மற்றும் அவரது அதிகாரியான கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நிசாந்த உலுகெத்தன ஆகியோர் ஆஸ்திரேலிய வாரப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தனர்.

''அவர்களை நீங்கள் திருப்பி அனுப்புவீர்களாக இருந்தால் இந்தப் பிரச்சினை எமக்கு இலகுவானதாக இருக்கும். கடந்த 6 மாதங்களில் 1500 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஆஸ்திரேலியாவில் கரை ஒதுங்கியுள்ளனர். அவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? ஒவ்வொருவராக புலன் விசாரணை செய்வீர்களா?'' என்று கொமடோர் நிசாந்த உலுகெத்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலியாவை வந்தடைந்துள்ள அகதிகளை மலேசியாவுக்கு திருப்பி அனுப்பும் திட்டத்தை ஆஸ்திரேலிய அரசு அறிவித்தது. ஆனால் எதிர்க்கட்சிகள் அதனைத் தடுத்து நிறுத்திவிட்டன.

படகுகளை ஆஸ்திரேலியக் கடற்பரப்புக்கு வெளியே தள்ளிவிடுவது பயன்தராது என்றும் அப்படி செய்தால் இனி வரும் காலத்தில் மனிதக் கடத்தல் காரர்கள் படகுகளை வேண்டும் என்றே விபத்துக்குள்ளாக்கி விட்டு ஆஸ்திரேலிய படையினரின் உதவியை வேண்டுவர் என்றும், எனவே இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அவர்களை திருப்பி அனுப்புவதே பொருத்தமானது எனவும் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியாவில் தற்போது 5 ஆயிரத்து 815 இலங்கையர்கள் தஞ்சக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

அகதிகளின் தஞ்சக்கோரிக்கைகளில் நியாயமான காரணங்கள் இல்லாவிடில் அவர்களை ஆஸ்திரேலிய அரசு தொடர்ச்சியாகத் திருப்பி அனுப்பி வருவதாக அந்த நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்தார். இவ்வாறு தஞ்சக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் தொடர்ந்தும் அவர்கள் நாடு கடத்தப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார். (உ-10)

# மூன்று தமிழர்களை சுவிஸ் நாடு கடத்தியது

யாழ்ப்பாணம், ஜூலை 29

சுவிற்ஸர்லாந்து நாட்டில் அகதித் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட மூன்று தமிழர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அகதித் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசின் முடிவுக்கு ஏற்பவே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் ஏன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸில் அகதி அந்தஸ்து கோரிய 2 ஆயிரம் இலங்கை தமிழர்கள், அகதி அந்தஸ்து கோரியமைக்கு சரியான காரணம் காட்டாமையால் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

இவ்வாறு அகதி தஞ்சம் நிராகரிக்கப்பட்ட 13 தமிழர்கள் கடந்த சில வாரங்களில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட மூன்று தமிழர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஏனைய தமிழர்களும் படிப்படியாக திருப்பி அனுப்பப்படுவர் என்று சுவிஸ் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை சுவிஸில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்து வழங்குபவர்கள் தொடர்பில் அந்த நாட்டு பொலிஸார் புலன் விசாரணைகளைத் தீவிரப் படுத்தி உள்ளனர். இதன் ஒரு பகுதியாக இலங்கை அரசின் தடுப்புக் காவலில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விசாரணை நடத்த சுவிஸ் அதிகாரிகள் விரைவில் கொழும்பு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ - 5)

# லண்டனில் தமிழர்கள் போராட்டம் ஒலிம்பிக் ரசிகர்களை இலக்கு வைத்து

ஒலிம்பிக் போட்டிகள் லண்டனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. நிகழ்வுகள் நடந்த விளையாட்டரங்குகளுக்கு வெளியே புலம்பெயர் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கிழக்கு லண்டன் பகுதியில் மூன்று இடங்களில் இத்தகைய கவனஈர்ப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. பெருமளவிலான தமிழ் மக்கள் இவற்றில் கலந்து கொண்டனர்.

ஒலிம்பிக் தொடக்க விழாவுக்காக லண்டன் வந்திருந்த நாடுகளின் தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் விளையாட்டரங்குக்குச் சென்ற வீதிகளில் அவர்கள் போராட்டங்களை நடத்தினர். 'அஸ்பென் வே' (அஸபுபென் வழி) என்ற பிரதான வீதியின் ஒருபுறத்தில் மாலை 5 மணியளவில் கூடத் தொடங்கிய மக்கள் பதாகைகளையும், புலிக் கொடிகளையும் தாங்கியவாறு கொட்டொலிகளை எழுப்பினர். இரவு 8.30 அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

மற்றும் ஒரு தொகுதியினர் ஆரம்ப நிகழ்வு நடைபெற்ற உள்ள அரங்குக்கு வெளியே கூடிப் போராட்டம் நடத்தினர். ''இனப்படுகொலை புரியும் இலங்கை நாட்டு வீரர்களை'' போட்டிகளில் கலந்து கொள்ள பிரிட்டன் அனுமதித்தமைக்கு அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த இடத்தில் கூடுவதற்கு குறைந்தளவு மக்களுக்கே லண்டன் பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர்.


மூன்றாவது போராட்டம் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி வரும் கோபி சிவந்தன் அமர்ந்துள்ள ரயில் நிலையத்துக்கு அருகாமையில் நடைபெற்றது. அங்கும் மக்கள் பதாகைகளை தாங்கியபடி, கொட்டொலிகளை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒலிம்பிக் போட்டிகளைக் காண வரும் பன்னாட்டவர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் தாம் இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்திருந்தனர் என்று போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டங்களில் பிரிட்டனில் உள்ள அனைத்துத் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

இதனிடையே சுவிற்சர்லாந்து லவுசான் நகரத்தில் அனைத்துலக ஒலிம்பிக் செயற்குழுவின் தலைமைச் செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. அங்குள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அதனை ஏற்பாடு செய்திருந்தது. (உ-01)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முதல் பதக்கத்தைச் சுவீகரித்தது சீனா

லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளின் முதல் தங்கப் பதக்கத்தை சீனா வென்றுள்ளது.

மகளிருக்கான 10 மீட்டர் 'ஏர் ரைபிள்' போட்டியில், 103.9 புள்ளிகள் எடுத்து யி ஸ்லிங் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுவார் என்று கருதப்பட்ட போலந்தின் சில்வியா பொகாச்கா 103.2 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். இதே போட்டியில் சீனாவின் யூ டான் வெண்கலப் பதக்கம் பெற்றார்.

போட்டியின் தகுதிச் சுற்றில் போலந்தின் வீராங்கனை 400 இற்கு 399 புள்ளிகள் எடுத்து முன்னிலையில் இருந்தார். எனினும் இறுதிப் போட்டியில் மொத்தமாக 502.9 புள்ளிகளை பெற்ற யி ஸ்லிங்குக்கு தங்கப் பதக்கமும், 502.2 புள்ளிகளை பெற்ற சில்வியாவுக்கு வெள்ளிப் பதக்கமும் கிடைத்தது.

நேற்று அதிகாலை ஐந்து மணிக்கு தான் எழுந்ததாகவும், கூடுதல் அழுத்தத்துடன் தான் இருந்ததாகவும் யி ஸ்லிங் போட்டிக்கு பிறகு தெரிவித்தார். சீனா மற்றும் தனது பெற்றோருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ள யி ஸ்லிங்.

பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் இதே 10 மீட்டர் 'ஏர் ரைபிள்' போட்டியில் தங்கம் வென்றிருந்த செக் குடியரசின் கேத்ரீனா எம்மன்ஸ் நான்காவது இடத்தையே பெற முடிந்தது. (5)

# ஒலிம்பிக் நடுவர் மர்மச் சாவு

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக சென்றுள்ள துருக்கி நாட்டு குத்துச் சண்டை நடுவர் மர்மமான முறையில் இறந்துள்ளார். 2012 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழா லண்டனில் நேற்று பிரம்மாண்டமான முறையில் நடந்தேறியது.

இந்த நிலையில் நேற்று ஒலிம்பிக் போட்டிக்காக லண்டன் வந்துள்ள துருக்கி நாட்டைச் சேர்ந்த குத்துச்சண்டைப் போட்டிக்கான நடுவர் பேராம் அல்துக், லண்டனில் அவர் தங்கியிருந்த 'ஹோட்டல்' அறையில் நேற்று மர்மமான முறையில் இறந்து கிடந்தது தெரிய வந்துள்ளது.

அவர் மாரடைப்பால் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இருப்பினும் விசாரணை நடைபெற்று வருகிறது. ஒலிம்பிக் போட்டிக்காக வந்துள்ள போட்டி நடுவர் இறந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (5)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

28.07.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இத்தாலி | 4 | 2 | 1 | 7 |
| சீனா | 3 | 0 | 1 | 4 |
| அமெரிக்கா | 1 | 3 | 1 | 5 |
| தென்கொரியா | 1 | 1 | 3 | 5 |
| பிரேசில | 1 | 1 | 1 | 3 |
| கஜகஸ்தான | 1 | 0 | 0 | 1 |
| ரஷ்யா | 1 | 0 | 0 | 1 |
| ஜப்பான் | 0 | 2 | 1 | 3 |
| பொலண்ட் | 0 | 1 | 0 | 1 |
| ருமேனியா | 0 | 1 | 0 | 1 |

# தென்கொரியா சாதனை

லண்டன் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியில் இரண்டு புதிய உலக சாதனைகள் படைக்கப்பட்டன. தனிநபர் பிரிவில் தென்கொரியாவைச் சேர்ந்த பார்வை குறைபாடுள்ள இம் டாங்-ஹியுன் புதிய உலக சாதனை படைத்தார். இதே போல அணிகள் பிரிவிலும் தென்கொரியா அணி புதிய வரலாறு படைத்தது.

லண்டனில் உள்ள லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் ஒலிம்பிக் வில்வித்தை போட்டிக்கான தரவரிசைச் சுற்று நேற்று முன்தினம் நடந்தது. இதில் ஆண்களுக்கான தனிநபர் போட்டியில் இந்தியாவின் தருண்தீப் ராய், ராகுல் பானர்ஜி, ஜெயந்தா தலுக்தார் உள்ளிட்ட 64 பேர் பங்கேற்றனர்.

ஒவ்வொரு வீரரும் தலா 72 முறை அம்புகளை பயன்படுத்த வேண்டும். பின்னர் மொத்த புள்ளிகள் அடிப்படையில் தரவரிசை வழங்கப்படும். இதில் அபாரமாக ஆடிய தென்கொரியாவின் இம் டாங்-ஹியுன், மொத்தம் 699 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தார். மற்ற தென்கொரிய வீரர்களான கிம் பப்மின் (698 புள்ளி), ஓஹ் ஜின் ஹியெக் (690) ஆகியோர் அடுத்த இரண்டு இடங்களை பிடித்தனர்.

**உலக சாதனை**

இதன் மூலம் தனது சொந்த சாதனையை முறியடித்த இம் டாங்-ஹியுன் புதிய உலக சாதனை படைத்தார். இவர், கடந்த மே மாதம் துருக்கியில் நடந்த போட்டியில் 72 அம்புகளை பயன்படுத்தி 696 புள்ளிகள் பெற்றார். ஏற்கனவே 2004 இல் ஏதென்ஸ் நகரில் நடந்த ஒலிம்பிக்கில் இவர், 687 புள்ளிகள் பெற்று புதிய உலக சாதனை படைத்தார். முன்னதாக 1995 இல் தென்கொரியாவின் ஷிம் யங்-சங் 685 புள்ளிகள் பெற்று உலக சாதனை படைத்திருந்தார். தவிர இவர், 2004 மற்றும் 2008 இல் நடந்த ஒலிம்பிக்கில் அணிகள் பிரிவில் தங்கம் வென்றார்.

**பார்வை இல்லை**

அடுத்தடுத்து உலக சாதனை படைத்துவரும் 26 வயதான இம் டாங்-ஹியுனுக்கு பார்வை இல்லை என்பது ஆச்சரியமான விடயம். இவரது இடது கண்ணில் 10 சதவீதமும், வலது கண்ணில் 20 சதவீதமும் மட்டுமே பார்வை உள்ளது. அதாவது மருத்துவ விதிப்படி பார்வை இழந்தவர் என்றுதான் அர்த்தம். போட்டியின் போது மூக்கு கண்ணாடி கூட அணியாத இவர், பளிச்சென்ற நிறங்களை இலக்காக வைத்து அம்புகளை குறிபார்த்து அடிக்கிறார்.

**மீண்டும் சாதனை**

மொத்தம் 2087 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்த தென்கொரிய அணி, புதிய உலக சாதனை படைத்தது. தென்கொரிய அணியில் இம் டாங்-ஹியுன் (699 புள்ளி), கிம் பப்மின் (698 புள்ளி), ஓஹ் ஜின் ஹயெக் (690 புள்ளி) ஆகியோர் உள்ளனர். முன்னதாக இவர்கள் 2069 புள்ளிகள் பெற்று சாதனை படைத்தனர். இதன் மூலம் தென் கொரியா (2087 புள்ளி), பிரான்ஸ் (2021), சீனா (2019) மற்றும் அமெரிக்கா (2019) அணிகள் காலிறுதிக்கு நேரடியாக தகுதி பெற்றன.

பெண்களுக்கான தனிநபர் தரவரிசைச் சுற்றில் இந்தியா சார்பில் பங்கேற்ற தீபிகா குமாரி 662 புள்ளிகள் பெற்று 8 ஆவது இடம் பிடித்தார். மற்ற இந்திய வீராங்கனைகளான பம்பயலா தேவி (651 புள்ளி) 22 ஆவது, சுவாரோ (625) 50 ஆவது இடம் பிடித்தனர். முதல் மூன்று இடங்களை தலா 671 புள்ளிகளுடன் தென்கொரியாவின் கி போ பாயி, லீ சங் ஜின் மற்றும் சீன தைபேயின் டான்யா-டிங் ஆகியோர் கைப்பற்றினர்.

அணிகளுக்கான தரவரிசையில், 1938 புள்ளிகள் பெற்ற இந்தியாவுக்கு 9 ஆவது இடம் கிடைத்துள்ளது. முதல் மூன்று இடங்களை தென் கொரியா (1993 புள்ளி), அமெரிக்கா (1979), சீன தைபே (1976) ஆகிய அணிகள் பிடித்தன. (5)

# இந்தியா வெற்றி

இலங்கையுடனான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை அணி சொதப்பலான களத்தடுப்பின் மூலம் வெற்றி வாய்ப்பை இந்தியாவிடம் பறிகொடுத்தது.

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் கொழும்பு ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சரியான ஆரம்பத்தை ஏற்படுத்தத் தவறிய இலங்கை அணி 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. அதன் பின்னர் சங்ககார, மஹேல இணைந்து 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர். மஹேல 65, சங்ககார 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 38 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணியை மத்தியூஸ், ஜீவன் மென்டிஸ் ஜோடி தமது அபார ஆட்டத்தின் மூலம் வலுவான நிலைக்கு அழைத்துச் சென்றது.

இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மத்தியூஸ் 57 பந்துகளில் 71 ஓட்டங்களையும், மென்டிஸ் 40 பந்துகளில் 45 ஓட்டங்களையும் பெற்றனர். சகீர்கான் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணியின் முதலாவது இலக்கு 8 ஓட்டங்களுக்குச் சரிக்கப்பட்ட போதும் கம்பீர், ஹோக்லி ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை ஸ்திரப்படுத்தியது.

ஹோக்லி 38 தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் டோனி 31 ஓட்டங்களையும் கம்பீர் 102 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இவர்களின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இலங்கையின் பக்கம் திரும்பிய வெற்றி வாய்ப்பை இலங்கை அணி வீரர்கள் பயன்படுத்தத் தவறினர்.

இறுதி வரையில் பரபரப்பாகச் சென்ற ஆட்டத்தில் இறுதியில் 49.4 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 288 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. ரெய்னா 45 பந்துகளில் 65 ஓட்டங்களையும், இப்ரான் பதான் 31 பந்துகளில் 34 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தனர். மலிங்க 2 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். ஆட்டநாயகனாக சுரேஷ் ரெய்னா தெரிவானார்.

இலங்கை அணி முதன் முதலாக ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் முதலில் துடுப்பெடுத்தாடி 250 ஓட்டங்களை தாண்டி தோல்வியடைந்த சந்தர்ப்பம் நேற்றாகும். (5)



வெற்றித் தருணத்தில்...





ஒலிம்பிக் போட்டிகளில் தகுதிச் சுற்றுஆட்டங்கள் சில நேற்று நடைபெற்றது. அதில் படகு ஓட்டப்போட்டி, கடற்கரை கரப்பந்து என்பன நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.



பெண்களுக்கான [illegible] போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற பிரேசிலின் சாரா.



பெண்களுக்கான 48 கிலோ கிராம் பளு தூக்கும் பிரிவில் தங்கம் வென்ற வாங்மிஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் தப்பினார் பிராவோ

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகல துறை ஆட்டக்காரரான டுவைன் பிராவோ நேற்று முன்தினம் கார் விபத்தில் சிக்கி உயிர் தப்பினார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரரான பிராவோ, சிறப்பான பந்துவீச்சு மற்றும் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் அந்த அணிக்கு பக்கபலமாக இருப்பவர். கடந்த ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார்.

இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகளில் உள்ள மத்திய டிரினிடட் நெடுஞ்சாலையில் தனது ஜாக்குவார் ஸ்போர்ட்ஸ் காரில் சென்றுள்ளார். அப்போது அந்த வழியாக வந்த சுசூகி எஸ்.யூ.வி. மற்றும் நிஸ்ஸான் அல்மிரா வாகனங்களின் மீது நிலை தடுமாறி மோதி நின்றது.

இதில் பிராவோவிற்கு இலேசான காயம் ஏற்பட்டது. மற்றவர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. கையில் இலேசான காயமடைந்த பிராவோ, அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

மேலும், இந்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கெட் வீரர் ரனகோ மார்டன் கார் விபத்தில் பலியானது குறிப்பிடத்தக்கது. (5)


**STUDY IN UK**

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

July/August Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk



**காணி விற்பனைக்கு**

K.K.S. வீதி, கொக்குவிலில் சேர்ச் லேனில் வளங்களுடன் கூடிய 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு- 0785675241
0787402547
(21056) (3.6.7)



**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**

அரைவாசி ஆலோசனைக் கட்டணத்துடன்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
37, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0212219016
(20765) (15-6)



**GERMAN LANGUAGE ACADEMY**

GLA NO:07,Palaly Road, Jaffna.

Audio Video

goethe institute

- Chandramohan -76
- Bavani -75
- Satchidanandan -83
- Nisanthini -60
- Kobitha -75

Contact: 0779707322.



**Personal class (கணினி)**

- கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- Ms office, DTP, Internet and E-mail, Web Design, Graphics Design, Computer Type Setting, சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
- சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
- TP: 0779672038
- ஆசிரியர்: KRC

(20975) (15-14) நல்லூர்.



**கால்களை பராமரியுங்கள்**
லாவா வைத்தியசாலை

Tel :021-2224333

கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!

கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.

Foot Care Centre
**Lava Hospitals**
LH Your Health, Our Priority.
No 75,temple road.Jaffna



**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)



**A/L வரலாறு 2012 மாபெரும் கருத்தரங்கு**

இடம்- **D.M.I** யாழ்ப்பாணம்
நேரம்- காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை
காலம்- 29.07.2012 (ஞாயிறு)
31.07.2012 (செவ்வாய்)
*வளவாளர்கள்*
M.பத்மன் B.A (Hons)
His.Spl.M.A(History)
S.சுஜீகரன் B.A(SL)
கட்டணம்- 350ரூபா
* இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக இம்முறை 500 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
(சி/1782) (3.6.14)



**CINDERELLA BEAUTY PALOUR**
155,Navallar Road, Jaffna. TP: 0750407564

FACIAL, THREADING.
WAXING.
HAIR OIL MASSEGE.
MEHANDI, NAIL ART,
PEDICURE, MANICURE
MODERN HAIR CUTS FOR KIDS AND LADIES.



**GIT for G.C.E A/L புதிய பிரிவுகள் ஆரம்பம்.**
CCNA ,CCNP ,MCTS & MCITP கற்க தொடர்புகொள்ளுங்கள்.
Real Lab, Experienced Lectures & Installment Payments.
**IP Tech Training & Consultancy**
255, K.K.S Road, Mathavadi, Chunnakam Web: www.iptech.lk
Email: info@iptech.lk T.P: 0217539925
(21001)



**CLTP Unitல் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- Web Designing
- ADBMS

கற்கைநெறி முடிவில் சுயமாக மென்பொருள் (Software) வடிவமைக்க உங்களால் முடியும்.
BIT, HND Project க்கான ஆலோசனைகள்
204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223



உயர் வகை பல்வைத்திய சேவைக்கு

**INTERNATIONAL DENTAL CARE**



Professional Dental Centre in Sri Lanka

★ எமது யாழ்., வவுனியா கிளையில் மூன்று நவீன தொழில்நுட்ப சிகிச்சை அறைகளுடன் முழுநேரமாக சேவை நடைபெறுகிறது

**Jaffna branch**
No:84, Stanly Road, Jaffna, Srilanka.
Tel: 0212220833
0214923353

**Vavuniya branch**
Raaj Medical Lab
NO:10,Bazaar street, Vavuniya, Srilanka.
Tel:-0242221577
0244925527

E-mail: Internationaldentalcare@gmail.com
Hot Line : 0114-422844
(20502) (15-14)

**Colombo Branches**

**wellawatta**
No:67,W.A.Silva mawatha Wellawatta, Colombo -06, Srilanka.
Tel: 0112507070
0114380803

**Dehiwala**
No: 02, Vandavat place, Dehiwala
Tel: 0115679031
0114374351



**பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!**
**ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்**

**யாழ்ப்பாணம்**

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**Tel : 075 675 2415**

**29.07.2012 முதல் 04.08.2012 வரை**



7 தினங்கள் மட்டுமே!

**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள் பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.
பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்
குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது. (21067) (15-14)
இந்த விளம்பரத்தை கொண்டு வந்து பட்டு புடவை கொடுத்தால்வெள்ளிக் கொலுசு (30Tch)ஒன்று இலவசம்
வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.







| கால எல்லை | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்ச்சியில் | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ |
| 1 | 15.75% | 16.94% | | | 15.75% | 16.94% |
| 3 | 15.85% | 17.05% | | | 16.00% | 16.99% |
| 6 | 16.00% | 17.23% | | | 16.25% | 16.91% |
| **12** | **16.25%** | **17.52%** | **16.50%** | **16.50%** | **16.50%** | **16.50%** |
| 24 | 16.50% | 17.81% | 16.75% | 16.75% | 17.00% | 15.76% |
| 36 | 16.75% | 18.10% | 17.00% | 17.00% | 17.25% | 14.91% |
| 48 | 17.00% | 18.39% | 17.25% | 17.25% | 17.35% | 14.08% |
| 60 | 17.25% | 18.68% | 17.35% | 17.35% | 17.50% | 13.40% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு (55 வயதிற்கு மேல்) 1% மேலதிக வட்டி

மேலதிக விபரங்களைப் பெற உங்களுக்கு சமீபமாகவுள்ள எமது காரியாலயத்திற்கு வாருங்கள்
அல்லது அழையுங்கள் - (011) 3 526526, (011) 4 526526, 0773-093093, 0777-558576

இல: 68, பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04. பெக்ஸ் (011) 4526517, வெப் : www.clc.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மூன்றாவது முத்தின் மூன்றாம் ஆண்டு நினைவுகள்..



### செல்வி. அமலின் குயிலினி மங்களதாஸ்

துளிராய் 1986.04.05
விதையாய் 2009.07.29

அன்புச் செல்வமே குயிலி
உன் அமைதிச்நாகப் பறந்து
சென்றாயோ அம்மா!
நாம் எல்லோரும்
உன் நினைவில்
எம் அமைதி இழந்து
நித்தம் கலங்குகின்றோம்!
நாம் ஆறுதல் பெற நீ தரிசனம்
தரமாட்டாயோ அம்மா..

அன்னாரின் ஆத்மா என்றும் இறைவனோடு மகிழ்ந்திருக்கவேண்டி 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு எமது இல்லத்தில் இறை வழிபாடு நடைபெறும்.

*இ.மங்களதாஸ்*
*இல.5, மருதடி வீதி, யாழ்ப்பாணம்*

*-குடும்பத்தினர்-*

(20818)(6-7)

உதயன் விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதி, உடையார் லேனில் (100m) தொலைவில் உள்ள காணி பரப்பு 5 விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு : 077 3161822, 077 0463841

(20571)(6-8-8)

## வியாபார நிறுவனங்கள் அமைப்பதற்கு பொருத்தமான காணி வாடகைக்கு / குத்தகைக்கு

சாவகச்சேரி மத்திய பகுதியில் A -9 பிரதான வீதி செலான் வங்கி, பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதான ஸ்தாபனங்கள் அடங்கிய எல்லைப் பகுதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி குத்தகைக்கு / வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 744 1863, 077 154 2137, 077 548 9773

(20955)(45.6.9)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19 ★ 11 ★ 1961



உதிர்வு
30 ★ 07 ★ 1997

செல்வி
### மைதிலி கந்தசாமி
(திதி : ஏகாதசி)

ஒரு கூட்டுப்பறவைகளாக ஒன்றாக் நாமிருந்தோம்
பாதி வழியில் எமை பரிதவிக்கவிட்டு பறந்து சென்றதேனோ
மீண்டும் நீ வாராயோ என நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்

ஞானபண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு.

உன் பிரிவினால் துயருறும்:
அம்மா, சகோதர, சகோதரிகள்

(20678)(6 7 8)




## UK Student/Family Visa

STUDENT VISA

இன்று வெளிநாடு செல்வதில்
பல தடைகள் இருந்தாலும்
எந்த வித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும்
உடனடியாக செய்து கொள்ளகூடிய
முறையில் அனைத்து வித செலவுகளையும்
VISA கிடைத்த பின்பு
செலுத்தகூடிய முறையில்
இயங்கும்
ஒரே ஒரு நிறுவனம்
எங்கள் நிறுவனம் ஆகும்.

மாணவ மாணவிகளே
வெளிநாடு சென்று கல்வி
கற்பதற்கு
தகுதி இருந்தும்
B1 B2 சான்றிதழ் இல்லையா ?
கவலையே வேண்டாம்
கீழே உள்ள
முகவரிக்கு தாய் அல்லது தகப்பனுடன்
நேரில் வாருங்கள்
முற் கொடுப்பனவோ
பகுதி கொடுப்பனவோ ஏதும் இல்லை
முற்றிலும் VISA கிடைத்த பின்பு

COLLEGE PAYMENTS,
EMBASSY FEE,
SPONSOR ARRANGEMENTS

லண்டனில் உள்ள
(கணவனுடனோ or மனைவியுடனோ)
ஒன்று சேர்வதற்கான VISA
வைப் பெற்றுக்கொள்வதற்கு
A1 சான்றிதழ் அவசியம் அது
உங்களிடம் இல்லையா?
கவலையே வேண்டாம் கீழே உள்ள
முகவரிக்கு நேரில் வாருங்கள்

மாணவ விசாவில் செல்பவர்களுக்கு
வாரத்திற்கு 10 மணித்தியால வேலை உத்தரவாதம்

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த
நிறுவனம் என்பதே மிகவும் பெருமையுடன் அறியத்தருவதுடன்

மேலதிக விபரங்களுக்கு

HOTLINE - 0214921831, 0214921832

அனி இன்டர்நேஷ்னல் எடியுகேஷன்
கன்சல்டன் சர்விஸ்
இல:-19, 3 ஆவது மாடி (மக்கள் வ[illegible])
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.



LG
Life's Good

புதிய LG ' ஒப்டிமஸ் L ' வரிசை
ஸ்மார்ட்போன்

ஸ்மார்ட்போனுக்கு இன்றே மாறுங்கள்

குறைந்த விலையில் உயர் தொழில்நுட்பத்துடனான ஸ்மார்ட்போன்


optimus L3

android

கொரியாவின் தொழில்நுட்பம்

ஈடிணையற்ற இதன் சிறப்பியல்புகள்

- 1500mAh நீடித்துழைக்கும் பற்றறி
- உயர் தொழில்நுட்பத்திலான அழகிய வடிவமைப்பு
- 800 MHz ப்ரொஸஸர்
- மைக்ரோ மெமரி காட் இன்றி களஞ்சியப்படுத்தும் வசதி (1GB வரையான உள்ளக மெமரி)
- 3MP கெமரா



ரூ. 24,990/-

abs gardner dixon hall

இலவசம் 8 அழகிய வர்ண கவர்கள்



*கையிருப்பு உள்ளவரை மாத்திரமே

*நிபந்தனைகளுக்குட்பட்டது

கிளிநொச்சி: 0212285411 • யாழ்ப்பாணம்: 0773279992
அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தர்கள் விபரங்களுக்கு: 0772654598

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா

## தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

**மாதாந்த சம்பளம் RM 850**
**இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 34,000**

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No.1785
**Rizviya Travels & Tours**
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011-3091521, Hotline : 077-3179592

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தில் 1974 ஆம் ஆண்டில் பிறந்த 8 இல் செவ்வாயும் அதன் கிரகபாவம் 63¼, ஆயிலிய நட்சத்திரமும் அமையப்பெற்ற, அரச சேவையில் பணிபுரியும் பட்டதாரி (BBA, MA) சகோதரிக்கு, சகோதரன் தகுந்த மணமகனை தேடுகின்றார்

தொடர்பு : 077 1744581, +41789171874

(20609)(6-7-8)

## சிறுநீரகம் தேவை



1995.07.09 நவாலி தாக்குதலில் தனது குடும்பத்தை இழந்த கோபாலகிருஸ்ணன் ராகுலன் வயது - 26 என்பவருக்கு இடுப்பிற்கு கீழ்ப்பகுதி செயலற்றுப் போய் விட்டது.

தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'B or O' இரத்தவகை சிறுநீரகம் தேவைப்படுவதால் அதைப் பெறுவதற்கு யாருடைய உதவியுமின்றி கைவிடப்பட்ட நிலையிலுள்ள இவருக்கு சிறுநீரகமோ அல்லது கருணை உள்ளம் கொண்டவரிடமிருந்து பண உதவியையோ எதிர் பார்க்கின்றார்.

தொடர்பு : 077 3835304
G.K. Rahulan
8221000711 (Commercial Bank)

(20827)(6-7-8)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

உயர் இன அல்ஷேஷன் (German Shaford) பிறந்து 6 கிழமையான பூச்சி அகற்றப்பட்ட நாய் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 7877241

(20953)(6-7-8)

## IELTS

A1 B1 B2
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education, No 75, Temple Road, Jaffna. www.kugroup.info

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் 10 அறைகளுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 021 221 9470, 077 7280149, 077 7199240

(20337)(8-6-7)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும் (20671)(6-7-8)

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்

## காணி வீடு விற்பனைக்கு

இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோயிலுக்கு அருகில் மூன்று பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. அத்துடன் பக்கத்தில் நான்கு பரப்பு வெறுங்காணி இருபக்கப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (M. Thavam) 077 4131740

(20882)(6-6-7)

## காணி விற்பனைக்குண்டு

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5227107

(20668)(6-7-45)

## உன்னத இந்தியத் தொழில்நுட்பத்தில் பஸ் மற்றும் லொறிகளுக்காக அறிமுகமாகும்

# MILE-XL

* நெடுங்காலம் நம்பிக்கையுடன் பாவிப்பதற்காக T - 20+ எனும் இந்திய தொழில்நுட்பத்திலமைந்த சிறந்த சேர்வையின் படைப்பு.
* PR 18 இனைக் கொண்ட இந்த டயர் அதிக தூரம் ஓடக்கூடிய வகையில் 18.6 மி.மீட்டர் ஆழமான பூக்களைக் கொண்டது.
* சிறந்த பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையில் சியெட் உத்தரவாதத்தினை கொண்டதுடன் குறைந்த செலவில் அதிக தூரம் ஓடக்கூடியது.




அதிக பாரத்தை சுமந்திடும்
அதிக தூரம் சென்றிடும்
பஸ் மற்றும் லொறிகளுக்கான
9.00-20 மற்றும் 10.00-20 டயர்கள்

CEAT

த.பெ. இல. 53, நுங்கமுகொட, களனி. தொ.பே. : 011-4822800

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு 03.03.1935 — உதிர்வு 30.07.2011

**அமரர். திருமதி. பூரணம் நாகராஜா**

நுணாவில் மத்தி - சாவகச்சேரி
(இளைப்பாறிய ஆசிரியை - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாசாலை)

என்றென்றும் எங்கள் மனதில்
உங்கள் இடம் நிரந்தரமே!
ஆண்டொன்று ஆனாலென்ன,
அது ஆயிரமாய் ஆனாலென்ன!!

குடும்பத்தினர்
இல - 1/1, அரசாங்க தொடர்மாடி, பம்பலப்பிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மலரும் மொட்டுக்களின் நாளைய எதிர்காலத்திற்காக

- அரும்பு குழந்தைகளுக்கான முதலீட்டுத் திட்டமாகும்.
- 1 நாள் குழந்தையிலிருந்து 12 வயதிற்குற்பட்ட பிள்ளைகளுக்கான திட்டமாகும்.
- 18 வயது பூர்த்தியாகும் போது கல்வி, திருமணம், வியாபாரம் போன்ற தேவைகளுக்கான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- வைப்பிலிடுபவருக்கு மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டாலும் கூட இதன் நலன் பெறுபவருக்கு உறுதியளிக்கப்பட்ட தொகை 18 வயது முதிர்வில் வழங்கப்படும்.
- மாதாந்த மற்றும் தவணை வைப்பு முறைகள்.
- குழந்தைக்கு 18 வயது நிறைவில் எதிர்பாக்கும் தொகையை முன் கூட்டியே திட்டமிட்டு சிறந்த சேமிப்புத் திட்டத்தை தெரிவு செய்ய முடியும்.
- ஆகக் குறைந்த மாதாந்த வைப்பீடு ருபா 100/-வும் ஆகக் கூடியது ருபா 5000/- ஆகும்.
- இந்த கணக்கை ஆரம்பிப்பதன் மூலம் அவர்களது எதிர்காலத்திற்கு இப்போதே உத்தரவாதம் வழங்க HDFC வங்கி தயாராகின்றது.

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**HDFC BANK**
The Housing Bank

த.பெ.எ. 2085, சேர் சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு – 02
உடனடி தொடர்புகளுக்கு – 011-5737373 பெக்ஸ் : 011-2423364

www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)



## வேலை வாய்ப்பு

சிரேஷ்ட முகாமையாளர்
குழு முகாமையாளர்
குழு தலைவர்
விற்பனை அலுவலர்

(பொது காப்புறுதி பிரிவு)

**யூனியன் அஷ்யூரன்ஸ்** என்பது இலங்கையின் மாபெரும் கூட்டு நிறுவனமாகிய ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் நிதி வலிமை, உறுதிப்பாடு என்பவற்றைப் பக்கபலமாகக் கொண்ட ஒரு முன்னணி நிறுவனமாகும். 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட எமது நிறுவனம் நாணயம், நிபுணத்துவம் என்பவற்றால் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் இதயங்களைக் கவர்ந்துள்ளது. நேர்மையும் வெளிப்படையுமான செயற்பாட்டிற்காக நாம் பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளோம். இன்று இலங்கையின் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் தனது நம்பிக்கை வாய்ந்த அலுவலர்கள் அணியில் இணைந்துகொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.


பொது காப்புறுதித்துறையில் பதவி வெற்றிடங்களை பெற்றுக் கொள்ள "யூனியன் அஷ்யூரன்ஸ்" நடாத்தும் மாபெரும் வேலைவாய்ப்பிற்கான நேர்முகத் தேர்விற்கு தங்களை வரவேற்கிறோம்.

**அடிப்படை தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திட சித்தம்

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு, அவர்களது செயற்பாட்டின் அடிப்படையில் கவர்ச்சியான வருமானப்பொதி வழங்கப்படும். திறமைக்கு முதலிடம், உழைப்பிற்கேற்ற ஊதியம், வளமான எதிர்காலம், வசதியான வாழ்க்கை, எரிப்பொருளுக்கான கொடுப்பனவுகள், மேலதிக கொடுப்பனவுகள், போக்குவரத்துப் படிகள், மருத்துவச் செலவு, வாகனக் கடன், கம்பனியின் செலவிலான கையடக்கத் தொலைபேசி, லப்டொப் கணனிக்கான கடன் என்பனவும் உள்ளடங்கும்.

உத்வேகமான தொழிற் சூழலில் வெற்றிகரமாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அர்ப்பணிப்பு, தன்முனைப்பு, செயலார்வம் என்பவற்றை நீங்கள் கொண்டிருந்தால், உங்கள் சுயவிபரக் கோவையை, இவ்விளம்பரம் பிரசுரமான 10 தினங்களுக்குள், கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.



முகாமையாளர் - மனிதவள சேவைகள்
யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி.
இல. 20, சென். மைக்கல் வீதி, கொழும்பு 3.
மின்னஞ்சல் – careers@ualink.lk
இணையத்தளம் – www.unionassurance.com

யூனியன் அஷ்யூரன்ஸ்

5th Elephant


## மணமக்கள் தேவை

யாழ். இந்து, 1974 கார்த்திகை, 8 இல் செவ்வாய் 80 பாவமுடைய மணமகனுக்கும் 1981 பூராடம் 32 பாவமுடைய மணமகளுக்கும் பெற்றோர் தகுந்த மணமக்களை தேடுகின்றனர்.

தொடர்பு : 077 0783832

(18700)(6-7-8)

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு புஸ்பவதி



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், பேக்கறி லேன், சீரணி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு புஸ்பவதி நேற்று (25.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு (ஆசிரியர்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தெய்வானை தம்பதியரின் மகளும், தங்கமலரின் அன்புச் சகோதரியும், சுரேஸ் (ஜேர்மனி), றமீனா, ராகேஸ் (ஜேர்மனி), றதிகா (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயும், அன்னராஜி (ஜேர்மனி), காலஞ்சென்ற சசிதரன் மற்றும் ரதனா (ஜேர்மனி), சண்முகநாதன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமியும், கதீஸ், செரீனா (ஜேர்மனி), பிரியாந்தி (சுவிஸ்), பிரதுஷ்சா (யாழ். பல்கலைக்கழகம்), சாஜ்பிரகாஸ் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் - கொழும்பு), றமீலா (ஜேர்மனி), சுயானா (சுவீடன்) ஆகியோரின் பேர்த்தியும், சுகித், பிறீத்தி (சுவிஸ்) யின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேக்கறி லேன்,
சீரணி, சண்டிலிப்பாய். (20829) 45.6

தகவல்:
பிள்ளைகள்

## காணி விற்பனைக்கு

ராஜ வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து 500 m தொலைவில் மூன்று பக்கமும் மதிலால் சூழப்பட்ட நிலப்பரப்பு 3, குளி 15½ விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 3164757, 077 0376369

(20957)(6-8-8)


JOIN OUR NORTH TEAM



Sales Rep
North /வடமாகாணம்
OPPORTUNITY TO EARN Rs.60,000/=+ PER MONTH
Company maintained Mo-Bike

APPLY TO
E-mail : careernorth@tradesmann.com
Fax: 011 5565610

SALES ADMIN OFFICER
Contact: 077 363 5690
THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com
Tradesmann is a diversified business model in the Manufacturing, Trading & Distribution sectors since 1956


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலில் விழுந்தவர்களுக்கு நினைவுத்திறன் அதிகரிக்கும்



காதலிப்பவர்களுக்கு கண் தெரியாது என்பது முட்டாள்களின் வாதம் என்று அதிரவைக்கின்றனர் ஆய்வாளர்கள். காதலில் விழுந்தவர்களுக்கு நினைவுத்திறன் அதிகரிக்குமாம் அதற்கான ஒமோன் சுரப்பு அதிகரிக்கும் என்று கூறி காதலர்களின் வாழ்வில் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றனர் ஆய்வாளர்கள்.

கண்ட உடனே காதலில் விழுபவர்கள் சிலர். பேசி பழகிய பின் காதலிப்பவர்கள் சிலர் காதலில் விழுந்துவிட்டால் அவர்களுக்குஇறக்கை முளைத்து விடும். கண்களைத் திறந்து கொண்டே காதலிக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்கின்றனர் நிபுணர்கள். காதலிக்க ஆரம்பித்த உடன் அவர்களின் உடலில் நிகழும் இரசாயன மாற்றம் என்னென்ன என்று நிபுணர்கள் பட்டியலிட்டுள்ளனர். நீங்களும் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்களேன்.

**பட்டாம்பூச்சி பறக்கும்**

உங்களுக்கான நபரை நீங்கள் கண்ட உடன் மூளை மணியடிக்க ஆரம்பித்து விடும். அப்போது மூளையில் டோபமைன் எனப்படும் இரசாயனம் சுரக்கும். அது உடலுக்கு சக்தியை தருவதோடு மூளையையும் சுறுசுறுப்பாக்குகிறது. அதனால் தான் காதலிப்பவர்களின் கனவுகளில் வானவில் வருகிறது. அவர்களுக்கு இறக்கை முளைக்கிறது. அவர்கள் செல்லும் இடமெங்கும் வண்ணத்துப் பூச்சி சிறகடிக்கிறது.

**உடல் மெருகேறும்**

காதலிப்பவர்கள் உடல் கட்டுப்பாட்டோடு அழகாக இருக்கும். அவர்களின் உடலில் இயல்பாக neurotransmitter அதிகரிக்கும். அப்ரினலின் உற்பத்தி சிறிதளவு குறையும். அதனால் அவர்களுக்குப் பசி உணர்வே ஏற்படுவதில்லை. ஜிம் போகாமலேயே உடலில், முகத்தில் ஒரு பளபளப்பு ஏறியிருக்கும்.

**புத்திசாலிப்பவர்கள்**

காதலிப்பவர்கள் முட்டாள்களா? யார் சொன்னது. அப்படி சொல்பவர்கள் தான் முட்டாள்கள், காதலின் அருமை தெரியாதவர்கள். காதல் உண்மையிலேயே முட்டாளாக இருப்பவர்களைக் கூட அறிவாளியாக்கும். காதல்வசப்பட்டவர்களுக்கு மூளை செல்களை புதிதாகவளரச் செய்யும் ஹார்மோன் சுரப்பு அதிகரிக்கிறது என்று இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**இளமை திரும்பும்**

காதலிப்பவர்களுக்கு முதுமை ஏற்படாது. அவர்கள் என்றைக்கும் இளமையாக இருப்பார்கள். அந்த அளவிற்கு அவர்களுக்கு இளமையை தக்கவைக்கும் ஆக்ஸிடோசின் என்னும் ஹார்மோன் சுரக்கும். காதலிப்பவர்கள் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பதால் அவர்களுக்கு கவலை என்பதே ஏற்படாது.

**நோய் தாக்காது**

காதலிப்பவர்களை விட ஜோடி கிடைக்காமல் தனியாக இருப்பவர்கள்தான் விரைவில் மரணத்தை தழுவுகின்றனர்.

காதலிப்பவர்களுக்கு மனஅழுத்தம் என்பதே ஏற்படாது. ரொமான்ஸ் மூடில் இருப்பவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோன் சுரப்பு குறைவாகத்தான் சுரக்குமாம்.

காதலிப்பவர்களுக்கு இதயநோய் என்பதே ஏற்படாது.


## பதவி உயர்வை நிச்சயிக்கும் கூட்டமைப்பில் இணையுங்கள்

LOLC

அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

இலங்கையில் பாரிய அமைப்புகளுள் ஒன்றானதும், உச்சக்கட்ட இலாபத்தை ஈட்டுவதுமான நிதி நிறுவனங்களுள் ஜப்பானின் ஓரிக்ஸ் கூட்டுத்தாபனத்தின் ஆதரவைக் கொண்ட LOLC யும் ஒன்றாகும்.

குழும நடவடிக்கைகளில் லீசிங், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள், செயற்படு மூலதனம், பெக்டரிங் சேவை, வாகனத் தொகுதி முகாமைத்துவம், விவசாய சிறுகடனுதவி, தங்கக் கடன், பங்குத்தரகு, இஸ்லாமிய நிதி, திட்ட அபிவிருத்தி, காப்புறுதி, தகவல் தொழில்நுட்பச் சேவைகள், ஓய்வு மற்றும் மீள் புதுப்பிக்கும் சக்திவளம் உட்பட பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தகத்துறைகள் அடங்கும்.

உலகம் முழுவதும் 27 நாடுகளில் ஒருங்கிணைந்த துணை நிறுவனங்கள் 811 மற்றும் 108 இணைப்பு கிளைகளைக் கொண்டு லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் நிறுவனம், சவால் மிகுந்த, பயன் நிறைந்த சூழலில், கீழ்க்காணும் கிளைகளில் கடமையாற்ற விரும்பும் சக்திவாய்ந்த பெறுபேற்றை இலக்காகக் கொண்டவர்களை தேடிவருகிறது.

LOLC
மைக்ரோ கிறெடிட்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

நுண்நிதி கடன்சேவை உடனடி வேலைவாய்ப்புகளுக்கான நேர்முகத் தேர்வுகள் (ஆண் / பெண்)

செட்டிகுளம், மட்டக்களப்பு, வாழைச்சேனை, கிளிநொச்சி

நீங்கள்

- 20 – 27 வயதுக்கிடைப்பட்டவராக இருத்தல்.
- க.பொ.த (சா/த) ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியுடன் க.பொ.த (உ/த) குறைந்தபட்சம் இரண்டு பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருத்தல்

மேல் குறிப்பிட்ட அனைத்தும் உங்களிடம் இருப்பின் நீங்களே தகுதியானவர்.

மேலதிக தகைமைகள்

- குறிப்பிட்ட பிரதேசத்தில் வசித்தல்.
- (சந்தைப்படுத்தல், நிதி, காப்புறுதி) ஆகிய துறைகளில் 1-2 வருட அனுபவம்.
- தாய்மொழியுடன் மேலதிகமாக (ஆங்கிலம், சிங்களம்) ஆகிய மொழிகள் தெரிந்திருத்தல்.

| திகதி | நேரம் | நேர்முகத் தேர்வுகள் நடைபெறும் இடங்கள் | தொடர்புடைய பிரதேசங்கள் |
|---|---|---|---|
| 2012.08.07 | 9.00 - 12.00 | LOLC மைக்ரோ கிறெடிட் கிளை<br>இல. 45ஏ, 2வது குறுக்கு தெரு, வவுனியா | செட்டிகுளம் |
| 2012.08.08 | 9.00 - 12.00 | LOLC மைக்ரோ கிறெடிட் கிளை<br>இல. 227, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு | மட்டக்களப்பு / வழைச்சேனை |
| 2012.08.08 | 9.00 - 12.00 | LOLC மைக்ரோ கிறெடிட் கிளை<br>கரடிபோக்கு, ஏ9, கண்டி வீதி, கிளிநொச்சி | கிளிநொச்சி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கொடியில் பூத்த இருமலர்களின் நினைவலைகள்

**13ஆம் ஆண்டு**

தோற்றம் 1995.03.14 மறைவு 1999.09.30

**தியாகேஷன் டிலானி**

மழலைகள் இருவரும் புன்னகை
தவழும் முகத்துடன்
தாய்மடி தவழ்ந்த வேளை- கனவுகள்
பல கண்டோம்........
பூவையர் இருவரும் கைகோர்த்து
வீட்டிற்கு விளக்கேற்றி
மகிழ்விப்பீர் என்றிருக்க......

**06ஆம் ஆண்டு**

தோற்றம் 1997.01.25 மறைவு 2006.07.29

**தியாகேஷன் டிலக்சனா**

எமையெல்லாம் தேம்பவிட்டு
எமலோகம் சென்றதேனம்மா......
தங்கையென அழைக்க -ஓர்
உறவின்றி கலங்கி நிற்கின்றோம்- உம்
அண்ணன்கள் மூவரும்
எத்தனை ஆண்டுகள் ஓடிமறைந்திடினும்
நாம் மறவோம் செல்வங்களே உம்மை.....

என்றும் உங்கள் நினைவுடன்
அப்பா,அம்மா,அண்ணன்மார்,பெரியம்மா

பண்டாரிக்குளம்,
வவுனியா.

[20988][5-6-7]



# கொமர்ஷல் வங்கியின் "அருணலு" இளம் சாதனையாளர்களுக்கு 24 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளது

எமது எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் சிறுவர்களே. அதனால்தான் சிறந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்காகவே வாழுகின்றனர். அவர்கள் பிள்ளைகளின் கனவுகளையும், அபிலாஷைகளையும் நிறைவேற்ற கடுமையாக உழைத்து சேமிக்கின்றனர்.

இந்தக் கனவுகளையும், அபிலாஷைகளையும் அடைந்து கொள்வதற்கான அடிப்படையே கல்வி. எனவே விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் என்பனவற்றின் மூலம் பிள்ளைகளை கல்வியை நோக்கி சாதகமான வழிகளில் தூண்டிவிட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இதுவும் சிறந்த பெற்றோர்களுக்கான ஒரு அடையாளச் சின்னமாகும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி என்ற வகையில் கொமர்ஷல் வங்கி அன்றாடம் இலட்சக்கானக்கான மக்கள் தமது வாழ்நாள் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள உதவி புரிகின்றது. இதன் மூலம் எத்தனையோ பெற்றோர் தமது பிள்ளைகளின் சாதனைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து வருவதையும் வங்கி நன்றாகப் புரிந்து வைத்துள்ளது.

இதுதான் 'அருணலு' என்ற உன்னதமான சிறுவர் சேமிப்புத் திட்டத்தை வங்கி தொடங்கவும் காரணமாகும். பிள்ளைகள் தமது முறைசார் கல்வித் திட்டத்தின் கீழ் எதிர் நோக்கும் முதலாவது தேசிய பொதுப் பரீட்சையான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஈட்டுகின்ற சாதனைகளுக்காக வெகுமதிகளை வழங்குவதே இத் திட்டமாகும்.

கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் வங்கி 2,000 த்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் சுமார் 24 மில்லியன் ரூபாவை பணப் பரிசாக வழங்கியுள்ளது.

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிலருக்காக வழங்கப்பட்ட பணப் பரிசல்ல. இவை அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் சிறுவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமைக்காகவே பணப்பரிசு வழங்கப்படுகின்றது.

பணப்பரிசில்கள் முறையே ரூபா.10,000 ரூபா.7,500 மற்றும் ரூபா.5,000 வெற்றியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதற்கு பரீட்சைத் தினத்தன்று அருணலு கணக்கில் ரூபா.5,000 மீதியைக் கொண்டிருக்க வேண்டும்.

இது தவிர இந்த கணக்கை வைத்திருப்பவர் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தில் சித்தியடைந்தால் கணக்கு மீதித் தொகையை இரட்டிப்பாக்குவதுடன், ஆகக்கூடியது ரூபா 50,000 வரை கொமர்ஷல் வங்கி இரட்டிப்பாக்கும்.

எவ்வாறாயினும் இந்த அருணலு கணக்கு என்பது வெகுமதிகளுக்கும் அப்பாற்பட்டது. இது சிறுவர்களுக்கு மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை தூண்டுவதையும் நோக்காகக் கொண்டது. இந்த வகையில் அருணலு கணக்குகளுக்கு வருடாந்தம் 9% வட்டி வழங்கப்படுகின்றது. இது நாட்டில் சிறுவர் கணக்குகளுக்கு வழங்கப்படும் ஆகக் கூடுதலான வட்டியில் ஒன்றாகும்.

"நாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்களுக்காக வழங்கப்படுகின்ற மிகப் பெரிய வெகுமதித் திட்டம் அருணலு திட்டமாகும். ஒரு வங்கியானது வாடிக்கையாளர்களின் அன்றாட வாழ்வோடு மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அருணலு திட்டத்தின் அங்கீகாரம் மூலம் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தமது வாழ்க்கையில் உற்சாகமும், ஊக்கமும் அடைவது எமக்கு மட்டில்லா மகிழ்ச்சி அளிக்கின்றது" என்று கூறினார் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க. "எமது சிறுவர் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் சொந்த கடின உழைப்புக்காக வெகுமதி வழங்கக் கிடைத்தமை உண்மையில் மகிழ்ச்சிக்குரியது. மேலும் அருணலு வெகுமதியாளர்கள் பலர் தொடர்ந்தும் பாடசாலையிலும், வெளிஇடங்களிலும் சாதனை படைத்து வருகின்றமை சிறந்ததோர் விடயமாகும். இவர்களின் வெற்றியைக் கொண்டாடுவதில் கொமர்ஷல் வங்கி பெருமை அடைகின்றது." என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை கொமர்ஷல் வங்கியின் எந்தவொரு சேவை நிலையங்களில் ஆரம்பிக்கலாம்.













ஓகஸ்ட் 26ம் திகதி நடைபெறவிருக்கும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவ மாணவிகளுக்கு கொமர்ஷல் வங்கியின் நல்வாழ்த்துக்கள்.


Arunalu
Minors' Savings Account

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காலத்தை இழுத்தடிக்கும் மற்றொரு கைங்கரியம் **27**




**05** சாவுச் சான்றிதழ்கள் தயாராகின்றன



தமிழர் பிரச்சினைக்கு மனங் கொள்வாரா பிரணாப் **09**



**17** திருவிழா திருட்டு ஆரம்பம்



**06** பட்டங்கள் பலவிதம் நாமும் ஒரு விதம்


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 29 ஜூலை 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


■ *ஓரண்யன்*

# உலை வைக்கப்படும் உயிர் நிலை



பாடசாலைத் தவணைப் பரீட்சைக்காக இரவிரவாக படித்து விட்டுக் கிரவல் வீதியை கடந்தபடி சென்றுகொண்டிருந்தனர் அந்த மாணவர்கள். பள்ளிக்கூட வாசலுக்கு முன்னால் பஸ் ஒன்று இவர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தது. மாணவர்களைக் கண்டவுடன் முகத்தில் ஒருவித செயற்கைப் புன்னகையோடு அதிபர் இப்படிக் கூறினார்.

''பிள்ளையள்! மில்ரிக் காரர் ஒரு ஸ்போட்ஸ்மீற் வைக்கினமாம். அதுக்கு உங்கள வரட்டாம்.'' என்று கூறினார்.

மாணவர்கள் முகத்தில் பெரியதொரு கேள்விக்குறி.

'அப்படியெண்டா எக்ஸாம்...?' என்பதே அவர்களின் முகங்களில் ஒளிந்திருந்த மிகப் பிரமாண்டமான கேள்வி. அந்தக் கேள்வி அதிபருக்கும் தெரிந்திருந்தது.

''எக்ஸாமை வாற சனிக்கிழமையும் திங்கட்கிழமையும் வைக்கிறதாகக் கோட்டத்தில இருந்து அறிவித்தல் வந்திருக்கு. அதால நீங்கள் போட்டுவரலாம்''. விருப்பம் இல்லாமலே விடை கொடுத்தார் அதிபர். படையினர் கொண்டு வந்த வாகனங்களில் மாணவர்கள் ஏற்றப்பட்டு துணுக்காயிலுள்ள ஒரு படைப்பிரிவின் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏனோதானோ என்று மாணவர்கள் கலந்து கொண்டு திரும்பியுள்ளனர்.

* * *

சிறுவயதில் எல்லோருக்கும் கதைகள் படிக்கும் ஆர்வம் அதிகம் இருக்கும். அவ்வாறு படிக்கும் கதைகளில் அதிகமான கவனயீர்ப்பை கோருவனவாக மாயாஜாலக் கதைகளே முன்னணியில் நிற்கின்றன. இந்தக் கதைகளில் வரும் மந்திரவாதிகளின் அல்லது எதிர் நாயகர்களின் உயிர்நிலை ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி எங்கோ ஓர் குகையில் மிகப் பாதுகாப்பாகப் பேணப்பட்டிருக்கும். ஒவ்வொரு மந்திரவாதியின் உயிர் நிலையும் அவரவர் கெட்டித்தனத்துக்கு ஏற்ப வெவ்வேறான அங்கங்களில் (மூளை, கண், இதயம் என்பன போன்றவற்றில் ) புகுத்தப்பட்டு, கண் காணாத இடத்தில் பாதுகாக்கப்படும். அதனைக் கண்டுபிடித்து அழித்தால் மட்டுமே மந்திரவாதியைக் கொல்லமுடியும். அனேகமான மாயக் கதைகளின் சூத்திரம் இதுதான்.

இந்த மாயக் கதைகளில் வரும் மந்திரவாதியின் உயிர் நிலைபோல் தமிழ்ச் சமூகத்தின் இருப்பு, கல்வி என்ற பொக்கிஷத்துக்குள்ளேயே பதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது.

ஆனால், இந்த உயிர் நிலை இரகசியம் எல்லோருக்குமே தெரிந்த ஒன்று. எனவே தான் இங்கு வரும் ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச் சமூகத்தின் இருப்பை ஒழிப்பதற்காக அதன் கல்வி என்ற மூலதனத்தில் கத்தி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். புத்திசாலித்தனமான எதிரிகள் எந்தக் கேடயம் தமிழ்ச் சமூகத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறதோ அதே கேடயத்தையே தானும் ஒரு வழியாகப் பாவித்து நமக்குத் தெரியாமலே ஊடுருவி மெல்லக் கொல்லும் பணியையும் செய்திருக்கிறார்கள். இலங்கையை ஆண்ட ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் என்போர் நேரடியாகவே கல்விச் சாலைகளையும், நூல்களையும் அழித்ததோடு வழிபாட்டுத் தலங்களையும் இடித்து நொருக்கி நேரடியான எதிரிகளாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் அப்படியல்ல. அவர்கள் மிகத் தந்திரமாக செயற்பாட்டார்கள். தமிழர்களின் உயிர் நிலையான கல்வியையே தம்முடைய ஆயுதமாக அவர்கள் உருமாற்றிக் கொண்டார்கள். இலவசமாக மிஷனரிகளில் ஆங்கிலக் கல்வியையும் அதனூடாக கிறிஸ்தவ மதத்தையும் புகுத்தினார்கள். ஆங்கிலத்தைக் கற்றவர்கள் மாத்திரமே அரச உத்தியோகம் பெறலாம் என்ற எழுதப்படாத சட்டத்தின் மூலம் ஆங்கிலத்தின் மீது எல்லோருக்கும் வலிந்த ஈர்ப்பை உருவாக்கினார்கள். அவர்களின் திட்டம் வெற்றியளித்தது. தமிழ்ச் சமூகத்தின் நிலமானிய அமைப்பு முறை தகர்ந்தது. குருகுலக் கல்விமுறை தொலைந்து போயிற்று. ஆங்கிலம் கற்ற, புதியதொரு கலாசாரத்தை உள்வாங்கிய மத்திய தர வர்க்கம் என்ற ஓர் அமைப்பு முறை ஏற்பட்டது. தொன்மையான பண்பாட்டின் வேர்களைத் தொலைத்துவிட்டு இன்றைக்கு நாகரீகத்தின் அழிவின் விளிம்பில் கைத் தொலைபேசி, தொலைக்காட்சித் தொடர், போதைப் பொருள் பாவனை, பாலியல் குற்றங்கள் என்று தமிழ்ச் சமூகம் தன்னுடைய தடத்தை விட்டு விலகிப் பயணிப்பதற்கு ஆங்கிலேயர்களின் கல்வியூடான ஊடுருவலே முதல் காரணி.

அது புற்றுநோய் போல மெல்ல மெல்ல தமிழ்ச் சமூக உயிரின் ஒவ்வொரு செல்களிலும் பரவி வியாபித்து இப்போது அந்த இனத்தின் உயிரைக் குடிப்பதற்குத் தயாராகிவிட்டது.

எஞ்சிக்கிடக்கும் தமிழ் இனத்தின் உயிரையும் உறிஞ்ச வேண்டும் என்பதே அதிகாரத்தின் கடைசி ஆசை. எனவே இன்னமும் கல்வியின் கழுத்தில் இருந்து அது கத்தியை எடுப்பதாக இல்லை. ஏதோவொரு சாட்டைச் சொல்

**"வடக்கில் இருந்து படைகளும் என் நெஞ்சத்தில் இருந்து நீயும் ஒரு போதும் வெளியேறப் போவதே இல்லை" - முகநூலின் சுவரோரத்தில் படித்தது.**


*(தொடர்ச்சி 'சூரியகாந்தி' 26ஆம் பக்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இருநாடுகள் ஆதரிக்கவுமில்லை இனிமே

செவ்வி கண்டவர்
பிறேம்

இலங்கையில் உள்ளூர் பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே நாம் விரும்பினோம். அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல் விடயங்கள் குறித்து இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்குப் பதிலாக மேற்சொன்ன பொறிமுறை ஊடாக எல்லா மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த தீர்வு ஒன்றை நோக்கி இலங்கை அரசை வழிப்படுத்துவதே எமது நோக்கமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் பலம் பெற்றிருந்தபோதும் சரி அவர்கள் அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு அறிவித்தபோதும் சரி வெளிநாடுளில் இருந்து இலங்கையில் இரண்டு நாடு தேவை எனப் போராடுபவர்களின் நிலைப்பாட்டிலும் சரி நாங்கள் தெளிவாக இருக்கிறோம். இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. அங்கு இரண்டு நாடுகள் இருக்க அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்காது என்கிறார் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பற்றீசிய புட்டினிஸ்.

இனி அவருடனான செவ்வி....

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா பு



**தமிழர்கள் மற்றும் இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வு ஆகிய விடயங்களில் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா நிர்வாகத்தின் கொள்கை மற்றும் தந்திரோபாயத்தைக் கொஞ்சம் தெளிவுபடுத்துவீர்களா?**

இந்த விடயத்தில் அமெரிக்க நிலைப்பாடு மிகத் தெளிவானது. தமிழர்கள் தமது வாழ்வு மீது குறிப்பிட்டதொரு கட்டுப்பாட்டை, அரசியல் கட்டுப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் தமது தாயக நிலப்பரப்பில், கலாசாரத்தில் தமது நடவடிக்கைகளைப் பயமோ தலையீடுகளோ இன்றி கொண்டு நடத்தக் கூடிய விதமாக இருக்கவேண்டும்.

அதை அடைவதற்கும் - பெறுவதற்கும் தமிழ்ச் சமூகம் தமது தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊடாக அரசுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும். இந்த இலக்குக்காக நாம் நீண்ட காலமாக ஆதரவு வழங்கி வருகிறோம். இரு தரப்பும் நடத்திய பேச்சுக்களில் இதுவரை எதனையும் அடையவில்லை. இரு தரப்புக்களிடமும் அது மனஉளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது என்று நினைக்கிறேன். இப்போது இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலமே தீர்க்கப்படவேண்டும் என்று அரசு நினைக்கிறது. இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பது உண்மையிலேயே இலங்கையர்களைப் பொறுத்தது. எந்தவொரு தீர்வையும் நாம் திணிக்க முடியாது. அதனாலேயே மிக நீண்டகாலமாக அரசியல் இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கும் அரசியல் தீர்வுப் பேச்சுக்களுக்கும் நாங்கள் ஆதரவளித்து வருகின்றோம். அந்த விவரங்களை வெளியிட முடியாது.இதுதான் ஒபமா நிர்வாகத்தின் நிலைப்பாடு.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுங்கள் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறீர்களா?**

ஆமாம்! அதைத்தான் நான் சொன்னேன். எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும், நான் இலங்கையின் மூத்த அதிகாரிகளைச் சந்திக்கும் போதெல்லாம் இந்த விடயம் அங்கு எடுக்கப்படும். பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போதும் அது தொடர்ந்து நடக்கும் போதும் அதில் சிரத்தையுடன் ஈடுபடுமாறு அரசிடம் நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். உண்மையான இணக்கப்பாட்டுக்கு வருவதாயின் சில விடயங்களை வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும், ஓர் இணக்க முயற்சியில் இரு தரப்புக்களும் பங்களிக்கவேண்டும், விட்டுக்கொடுப்புக்களுக்கு முன்வரவேண்டும்.

இரு துருவங்களாக நிற்கவேண்டாம் என்று இரு தரப்புக்களிடமும் நாம் கேட்கிறோம். யதார்த்தத்துக்கு மாறாக எவற்றையும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடாது என்றும் சொல்கிறோம். இவற்றை நாம் எல்லா நேரங்களிலும் தெரிவிக்கிறோம். நானாக இருக்கட்டும் துணைச் செயலர் பிளேக்காக இருக்கட்டும் செயலர் ஹிலாரி கிளின்டனாக இருக்கட்டும் எல்லோரும் இதனைத்தான் வலியுறுத்துவருகின்றோம். அமைச்சர் பீரிஸுடனான நாளாந்த உரையாடல்களில் இவற்றை வலியுறுத்துகின்றோம்.

**அதற்கு அரசு என்ன பதில் சொல்கிறது?**

பேச்சுக்களைத் தொடர்வதாக அவர்கள் சொல்கிறார்கள். நிறைய விடயங்களை அதன் மூலம் அடைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், எங்களுடைய பார்வையில், எதையாவது அடைவதற்கான அரசியல் வேணவாவை அரசு கொண்டிருக்கிறதா என்பது தெளிவில்லை. ஆனால் அரசின் தற்போதைய நிலைப்பாடு நாடாளுமன்றத் தெரிவுக் குழு. அதில் அரசு மிக உறுதியாக இருக்கிறது. நாங்கள் இது குறித்து தமிழ்க் தேசிய கூட்டமைப்புடனும் பேசி இருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் அவர்கள் அரசுடன் பேசியே ஆகவேண்டும். அவர்கள் தெரிவுக்குழுவில் இணையத் தயாராகவே இருக்கிறார்கள். அவர்களது நிபந்தனை சரியாக இருக்கவேண்டும். அரசிடம் இருந்து அவர்களுக்கு நம்பிக்கையான சலுகைகள், உறுதிமொழிகள் கிடைத்தால் அவர்கள் அதில் இணைந்து கொள்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட எதனையும் அவர்கள் இதுவரை கண்டு கொள்ளவில்லை.

**ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு காலத்தைக் கடத்தும் உத்தி என்று எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றனவே?**

இருக்கலாம்! இதுமாதிரியான மன உளைச்சல்கள் எல்லாத் தரப்பினரிடமும் உள்ளது. ஆனால் எங்களுக்கு முன்னால் இருக்கும் ஒரே தெரிவு முயற்சித்துக் கொண்டே இருப்பதுதான். இருப்பினும் எந்தவொரு தீர்விலும் அனைத்து அரசியல் கட்சிகளும் கருத்துத் தெரிவிக்கக்கூடியதாக -பங்களிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுதான் தனது நிலைப்பாடு என்று அரசு சொல்கிறது. இது, காலதாமதத்துக்கான உத்திதானா என்பது உறுதியானதல்ல. இருப்பினும் இந்தத் தந்திரோபாயம் நேரத்தை எடுக்கக்கூடியது என்றுதான் நினைக்கிறேன்.

**தீர்வு அல்லது நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்கா வெளிப்படுத்தும் கருத்துக்கள் அரசு மீது செல்வாக்கை, தாக்கத்தைச் செலுத்துகின்றனவா?**

எந்த ஓர் அரசும் வெளியாள்களின் அழுத்தத்தால் சில விடயங்களைச் செய்கிறோம் என்று காட்டுவதற்கு ஒருபோதும் விரும்பமாட்டா என்றே நான் நினைக்கிறேன். இலங்கை அரசும் அதுபோன்றது. அது மற்றைய அரசுகளில் இருந்து வேறுபட்டதல்ல. சர்வதேச அழுத்தம், அமெரிக்க அழுத்தம், இந்திய அழுத்தம் என்று வருகின்றபோது இலங்கை அரசு மிக பதற்றமடைகிறது. (சென் சிற்றிவ்)

நாங்கள் கேட்டதால்தான் செய்தார்கள் என்று நான் சொல்ல வரவில்லை, ஆனால், நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழு போன்ற சில விடயங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றங்கள் குறித்து சர்வதேச சமூகம் மகிழ்ச்சி அடைந்திருக்கிறது. இதுபோன்ற பொறிமுறைகள் இலங்கையில் முன்னரும் இருந்திருக்கின்றன. நாங்களும் மனித உரிமைகள் மறுதலிப்புக்கள் குறித்து உள்ளூர் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறே கேட்டிருந்தோம். அவர்கள் இதனைச் செய்ய விரும்பவில்லை என்று நாங்கள் நினைத்தோம் என்பதால்தான் அவர்கள் செய்தார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனாலும் அதன் செயற்பாடுகளை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

நான் இங்கு இருந்த கடந்த 3 வருடங்களைத் திரும்பிப் பார்க்கையில், நாங்கள் எந்த வகையில் உதவிகளைச் செய்யலாம் என்ற ரீதியிலான சில நகர்வுகளுக்கான உதாரணங்களை நான் அவதானித்துள்ளேன். அதனை ஏன் அவர்கள் செய்தார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும்.

**ஜெனிவா தீர்மானத்தை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். எனவே அந்தத் தீர்மானத்துக்குப் பின்னர் இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் அமெரிக்காவுக்குத் திருப்திகரமாக உள்ளனவா?**

நல்லிணக்கம் அல்லது அரசியல் தீர்வு மற்றும் வடக்கில் தேர்தலை நடத்துதல் தொடர்பில் கடந்த 3 வருடங்களில் குறிப்பிடத்தகுந்த வகையில் அரசு எதனையும் செய்ததற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை என்பதனாலேயே அந்தத் தீர்மானத்தை நாம் ஜெனிவாவில் கொண்டுவந்தோம்.

அதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வந்துள்ளது. தற்போது இது இலங்கையர்களின் யோசனைகள், இது இங்கிருந்துதான் வந்துள்ளது. இங்குள்ள மக்கள் வழங்கிய சாட்சியங்கள் மற்றும் விசாரணைகளின் பின்னர் வந்த யோசனைகள் இவை என்பதைத்தான் நான் மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருப்பினும் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கைத் திட்டத்தை இன்னும் காணமுடியவில்லை.

**நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. இலங்கை அரசின் நடவடிக்கையில் நீங்கள் திருப்தி கொள்கிறீர்களாஇல்லையா?**

கடந்த வாரத்தில் நான் அரச அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்புக்களில் எனக்குச் சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை பற்றி நான் கருத்துச் சொல்லக் கூடாது. ஆனால் இந்தப் பொறிமுறைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றே என்னால் சொல்ல முடியும்.

**அமைச்சர் பீரிஸ் கடைசியாக அமெரிக்கா சென்று வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரனைச் சந்தித்தபோது, தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உறுதிமொழிகள் எதையாவது வழங்கினாரா?**

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் புரிந்துணர்வின்மை இருப்பதாக நான் நினைக்கிறேன். அவர் எந்த ஒரு திட்டத்தையும் கையளிக்கவில்லை. அதற்கான திட்டத்தை அவர்கள் எப்படிப் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள், அதற்கான விசேட செயலணிக்கு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க எப்படித் தலைமை தாங்கப்போகிறார் என்பதைத்தான் அவர் சுருக்கமாக செயலருக்குத் தெரியப்படுத்தினார். அது


## செவ்வியின் உள்ளே...

- இரு துருவங்களாக நிற்கவேண்டாம் என்று இரு தரப்புக்களிடமும் நாம் கேட்கிறோம். யதார்த்தத்துக்கு மாறாக எவற்றையும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடாது என்றும் சொல்கிறோம்.
- சீனா – இலங்கை உறவில் அமெரிக்காவுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இதனால் அமெரிக்க – இலங்கை உறவுக்கு எந்தப் பாதிப்பும் நிகழப்போவதில்லை.
- சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப் பட வேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்களே கேட்டுவந்தன. நாம் விடுத்த பகிரங்க அறிக்கைகளில் உள்ளூர் பொறிமுறையே முன்னுரிமைக்குரியது என்று தெரிவித்திருந்தோம்.
- பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகவே நல்லிணக்கத்தை இலங்கை அரசு அணுகுகிறது என நான் நினைக்கிறேன்.
- இலங்கை வன்முறை கால கட்டங்களைக் கொண்ட வரலாற்றை வைத்துள்ளது.
- இலங்கையில் உள்ள எல்லாச் சமூகங்களுடனும் நான் பேசும் போது அவர்கள் எம்முடன் இணைந்திருக்கவே விரும்புகிறார்கள்.
- வெளிநாட்டில்உள்ள தமிழர்கள் இலங்கையில் தமக்குச் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமாயின் அவர்கள் இங்கே இருக்க வேண்டும்.
- இந்தியர்கள், அரசியல் தீர்வு விடயத்தில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எங்களுடைய கவனம் பெரும்பாலான சமயங்களில் மனித உரிமைகள் கோணத்திலும் பொறுப்புக் கூறுதல் விடயத்திலும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவாகுவதை அமெரிக்கா
# ம் ஆதரிக்கப்போவதுமில்லை

**ட்டினிஸ் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி**



நடந்து கொண்டிருக்கிறது என்று தான் நான் நினைக்கிறேன். இது தொடர்பில் அரசு அக்கறையுடன் இருப்பதாகவே நான் நினைக்கிறேன். அதனை நான் ஊக்கப்படுத்துகிறேன்.

**இறுதிப் போரின் போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா மிக உறுதியாக நின்றது. ஒரு வருடம் கடந்த நிலையில் அந்த நிலைப்பாட்டில் தற்போது தொய்வு நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜெனிவாத் தீர்மானத்துக்குப் பின்னர் அரசின் செயற்பாடுகளில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட திருப்தியால் இந்த நிலை வந்துள்ளதா?**

சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்களே கேட்டுள்ளன. நாம் விடுத்த பகிரங்க அறிக்கைகளில் உள்ளூர் பொறிமுறையே முன்னுரிமைக்குரியது என்று தெரிவித்திருந்தோம். நல்லிணக்க ஆணைக்குழு விடயத்திலும் எமது ஜெனிவா தீர்மானத்திலும் அதனையே தெரிவித்திருந்தோம். இந்த உள்ளூர் பொறிமுறை சரியான பெறுபேற்றைத் தரவில்லை என்றால் அதன் பின்னர் சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் தொடரும்.

இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் சர்வதேச விசாரணையில் இருக்கக் கூடிய முக்கிய பிரச்சினை. அப்படி இல்லாதபட்சத்தில் இரண்டாவது மூன்றாவது தகவல் மூலங்களின் அடிப்படையில்தான் செயற்பட முடியும். அதனால்தான் அரசே எதையாவது செய்ய வேண்டும் என்று நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கிறோம்.

**அதற்கான காலவரையறைகள் ஏதும் இருக்கின்றனவா?**

இந்தப் பிரச்சினை பல்பரிமாணத்தைக் கொண்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை டிசெம்பரில்தான் வந்தது. அதனை நடைமுறைப்படுத்த தங்களுக்குக் கால அவகாசம் தரவில்லை என்ற நிலைப்பாட்டைத்தான் அரசு தொடர்கிறது. அதற்கு,போர் முடிந்ததில் இருந்து காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே எனது பதில்.

நிறைய விடயங்களில் அவர்கள் செயலாற்ற வேண்டியே உள்ளது. ஆனால் இந்தப் பிரச்சினைகள் எவையும் புதியவையல்ல. சில பிரச்சினைகளில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்போது தயாரிக்கப்படும் நடவடிக்கைத் திட்டம் விரைவில் எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் என்று கருதுகின்றேன். அதற்கான கால வரையறைகள் தரப்படுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

**இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்க நடவடிக்கைகள் அமெரிக்காவுக்குத் திருப்தியளிக்கின்றனவா?**

பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகவே நல்லிணக்கத்தை அரசு அணுகுகிறது என நான் நினைக்கிறேன். அரசில் இருப்பவர்கள், வடக்குக்குத் தேவையானது வீதிகள், பாலங்கள், வீட்டுத்திட்டங்கள், மின்சாரம், கட்டுமானங்கள் என்று நினைக்கிறார்கள். அது விடயத்தில் அவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதனைவிட மற்றொரு பக்கமும் இருக்கிறது. நீங்கள் சொன்னதுபோல் உள, சமூகச் செயற்பாடுகள், ஆறுதல் தரும் விடயங்கள் (கவுன்ஸிலிங்), தமது சொந்தங்களைத் தொலைத்தவர்கள் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும், பயத்தினுள் வாழ அவர்கள் விரும்பவில்லை. தமது குழந்தைகள் பயப்படுவதையும் எதிர்பார்க்கவில்லை. தமிழ் பேசும் மக்கள் அரச அலுவலகங்களுக்குச் சென்றால் அங்கு அவர்களின் மொழிகளில் காரியமாற்றக்கூடியதாக இருக்கவேண்டும். இத்தகைய விடயங்களும் அபிவிருத்திக்குச் சரிசமமாக இருக்கவேண்டும் என்று அமெரிக்க அரசு கருதுகின்றது. இந்த விடயங்களில் இலங்கை அரசு அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம்.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள வேண்டும், இலங்கை வன்முறை கால கட்டங்களைக் கொண்ட வரலாற்றை வைத்துள்ளது.

வெளிக் கட்டுமானங்களைப் பொறுத்தவரையில் அரசு பல விடயங்களைச் செய்கிறது. ஆனால், உணர்வு ரீதியாக, சமூக உளவியல் ரீதியாக அது செய்யவேண்டியவை பல இருக்கின்றன.

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா இருந்தது. அப்போதும் எவரும் உங்களை அழைக்கவில்லை. ஆனால் நீங்களாகவே அந்தக் கடமையைச் செய்தீர்கள். அப்படி இருக்கையில் ஏன் நீங்கள் அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கு அடித்தளம் இடக்கூடாது?**

அந்தக் காலத்தில் நான் இங்கு இருக்கவில்லை. ஆனால் அந்தக் காலப்பகுதி மிக வித்தியாசமானது என்று நினைக்கிறேன். அரசு போரை முடிவுக்குக் கொண்டுவரச் சிக்கல்பட்டுக் கொண்டிருந்தது. புலிகள் பலம்மிக்கவர்களாக இருந்தார்கள். யாராவது வந்து எதையாவது சொன்னால் ஏற்றுக் கொள்வதற்கு அப்போது இரு தரப்பினரும் தயாராக இருந்தார்கள். அந்தச் சூழல் போய்விட்டது. இப்போது இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு. அது தொடர்பில் அவர்களுக்குப் பெருமை இருக்கிறது. தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ள முடியும் என்று இலங்கை அரசு நினைக்கிறது.

சில வழிகளில் நாங்கள் உதவ விரும்புகின்றோம். நாங்கள் அதைச் செய்கிறோம். நாங்கள் எல்லோரும் ஜனநாயக விழுமியங்களைக் கொண்டவர்கள். சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகள் விடயத்தில் நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். அவர்களின் விருப்பு வெறுப்புக்களில் அக்கறை செலுத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கின்றோம். ஆனால், எதையும் இலங்கை மீது திணிக்கும் நிலையில் நாம் இல்லை. இரு தரப்புக்களுக்கும் தேவைப்பட்டால் நாங்கள் சில கட்டங்கள் வரைக்கும் உதவலாம்.

இது உங்களுக்கு திருப்தியான பதிலாக இருக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால், இவற்றை இப்படித்தான் செய் என்று இலங்கை அரசுக்கு நாம் உத்தரவிட முடியாது.

**அண்மைக்காலமாக சீனாவுடனான உறவுகளை இலங்கை வளர்த்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இந்துமா சமுத்திரத்தைப் பொறுத்தவரையில், அமைதி, பாதுகாப்பு, பிராந்திய உறுதிப்பாடு ஆகியவற்றில்தான் நாம் புதிதாக அக்கறைப்படுகிறோம். அதன் அர்த்தம் இங்குள்ள வெவ்வேறு நாடுகளுடன் எமக்கு நல்லுறவு இருக்கிறது.

இலங்கையுடன் சீனா நல்லுறவு கொண்டிருப்பது எமக்கு அச்சுறுத்தலானது அல்ல. நான் நினைக்கிறேன், சீன - இலங்கை இருதரப்பு உறவுகள் சிறப்பாக இருக்கின்றன என்பதற்காக அமெரிக்க - இலங்கை உறவுகள் கெட்டுப்போய் விடும் என்று அர்த்தமல்ல. அல்லது இலங்கை மேற்குலகில் இருந்து ஒதுங்கிப் போய்விடும் என்றும் அர்த்தமல்ல. அப்படித்தான் சிலர் பேசிக்கொள்கிறார்கள். இப்போது சீனா இருப்பதால் மேற்குத் தேவையில்லை என்கிறார்கள். அது அப்படியல்ல. மேற்கு அவர்களுக்கு நிச்சயம் தேவை.

இலங்கையின் 20 வீதமான ஏற்றுமதியை அமெரிக்கா பெறுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் அதை விடக் கூடுதலானதைப் பெறுகிறது. வர்த்தகம், பணம் என்ற விடயங்களில் இலங்கைக்கு மேற்கு அவசியம். இலங்கையர்களில் பலர் இதனைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

உலகில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கும் அமெரிக்கா காரணமாக இருக்கிறது. அதனால் நாம் நிறைய விடயங்களை இலங்கைக்கு வழங்கிக் கொண்டேயிருக்கிறோம்.

இலங்கையில் உள்ள எல்லாச் சமூகங்களுடனும் நான் பேசும் போது அவர்கள் எம்முடன் இணைந்திருக்கவே விரும்புகிறார்கள். தாங்கள் மேற்கில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்று விரும்பவில்லை. ஆனால் அப்படிப்பட்ட நிலைமையை அடைய இலங்கை முயற்சிக்கிறது என்று சிலர் அஞ்சுகிறார்கள். ஆனால் நான் எனக்கு அத்தகைய உணர்வுகள் வந்ததில்லை. எங்களுக்குப் பிரச்சினையில்லை என்றே நினைக்கிறேன்.

**தீர்வு அல்லது நல்லிணக்கம் என்று வரும்போது இந்தியாவின் விருப்பங்களுக்கு ஏற்படவே அமெரிக்கா செயற்படும் என்ற நம்பிக்கை உண்டு. அது உண்மையா?**

பிராந்தியப் பிரச்சினைகள் பற்றியே நாம் இந்தியாவுடன் எப்போதும் பேசுகின்றோம். இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கும் அங்கிருந்து புதுடில்லிக்கும் இராஜதந்திரக் குழுக்கள் இலங்கை விடயங்கள் தொடர்பில் பயணிக்கின்றன. அவர்கள் பகிர்ந்து கொள்ளும் விடயங்கள் பற்றிப் பார்க்கின்ற போது, மற்றைய பிரச்சினைகளைப் பற்றியும் பேசுகிறார்கள் என்றாலும் இந்தியர்கள், அரசியல் தீர்வு விடயத்தில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எங்களுடைய கவனம் பெரும்பாலான சமயங்களில் மனித உரிமைகள் கோணத்திலும் பொறுப்புக்கூறுதல் விடயத்திலும் உள்ளது. ஆனாலும் எங்களுக்கிடையில் இந்த விடயங்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நாம் உருவாக்கி வைத்திருக்கிறோம்.

இந்தியர்கள் இலங்கையில் எவற்றை விரும்புகிறார்களோ அவற்றுக்குத்தான் நாமும் அனுசரணையாக இருப்போம் என்று என்னால் கருத முடியவில்லை. இருப்பினும் இலங்கை விடயத்தில் இரு நாடுகளுமே ஒரே மாதிரியான இலக்கையே கொண்டிருக்கின்றன. ஒன்று அமைதி மற்றையது நாட்டின் உறுதிப்பாடு, பொருளாதாரம், வர்த்தகம் போன்றன.

இந்தியாவுக்கு இங்கு ஒரு வரலாறு இருக்கிறது. ஆனால் எங்களுக்கு அது இல்லை. எனவே இந்த இரு நாடுகளுக்கும் இடையில் வெவ்வேறான பரிமாணங்களே தெரிகின்றன. ஆனால் அவற்றுக்கு இடையே எந்தச் சிக்கல்களும் கிடையா.

**நாடு கடந்த தமிழீழ அரசை அமெரிக்கா ஏற்றுக்கொள்கிறதா? ஏனென்றால் அதன் தலைவர் வி.உருத்திரகுமாரன் அமெரிக்காவில் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளாரே!**

இலங்கையில் மற்றொரு அரசை அல்லது நாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அதில் தெளிவாக இருக்கிறோம். இலங்கை ஒரே நாடு. அது தொடர்ந்தும் அப்படியே இருப்பதையே நாம் விரும்புகிறோம்.

அமெரிக்காவில் இருப்பவர்களின் நடவடிக்கை பற்றிப் பேசுகையில், அங்கு எமது மண்ணில் சட்டங்களுக்கு மாறாக நடக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அப்படி நடந்து கொண்டவர்கள் மீது பயங்கரவாதிகளுக்கு உதவினார்கள் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியில்லாத நிலையில் நாம் நடவடிக்கை எடுக்க முடியாது.

அரச தரப்பிடம் இருந்து இத்தகைய கேள்வி அடிக்கடி வருகிறது. அப்போதெல்லாம் நான் சொல்கிறேன் எங்கள் மண்ணில் எங்கள் சட்டங்களுக்கு எதிராக எவராவது நடந்து கொண்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று.

**இந்தத் தருணத்தில் இந்த கேள்வியைத் தவிர்க்க முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசு அறிவித்த பின்னரும் அதனைப் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டுத் தொடர்ந்தும் ஏன் அமெரிக்காவில் தடை செய்து வைத்திருக்கிறீர்கள்?**

தீவிரவாதிகள் பட்டியலில் பல அமைப்புக்கள் இருக்கின்றன. அதனை மீளாய்வு செய்வதற்கு குறிப்பிட்ட காலப்பகுதி இருக்கிறது. அது தவிர எடுத்த உடன் ஓர் அமைப்பை பட்டியலில் சேர்க்கவோ நீக்கவோ முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் புலிகளின் எச்ச சொச்சங்கள் வெளிநாடுகளில் இருக்கின்றன என்று அது குறைகூறுகிறது. இந்தியாவில் பயிற்சி முகாம்கள் இருக்கின்றன என்றும் கூட கூறியிருக்கிறது. நான் நினைக்கிறேன் புலம்பெயர் தமிழர்கள் அனைவரையும் புலிகளுடன் தொடர்புபடுத்தும் தவறையும் அரசு செய்கிறது. அப்படி இருக்கும்போது புலிகள் இயக்கம் இன்னும் எவ்வளவு காலம் பட்டியலில் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப் பட்டியல் நிச்சயம் குறிப்பிட்ட கால வரையறையில் மீளாய்வு செய்யப்படும்.

**புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

இது ஒரு சிக்கலான கேள்வி. அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களுடன் நாங்கள் பேசி வருகின்றோம். மற்றைய நாடுகளிலும் தமிழர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு எப்போதும் சொல்வது நீங்கள் வடக்கு - கிழக்குடன் அதிகமாகத் தொடர்புபட்டிருங்கள் என்பதைத்தான். எங்களுடன் ஓடி வந்து முறையிட்டுக் கொண்டிருப்பதில் பயன் இல்லை என்பதையும் சொல்கிறோம்.


அவர்கள் அமெரிக்காவில் போராட்டம் நடத்தினால் அவர்கள் சொல்வதை நாம் கேட்போம். ஏனென்றால் அவர்கள் எமது குடிமக்கள். அத்துடன் அமெரிக்கக் குடிமக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் அனைத்து உரிமைகளையும் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இலங்கையில் தமக்குச் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமாயின் அவர்கள் இங்கே இருக்க வேண்டும். அரசுடன் பேச வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு நிதி வழங்க வேண்டும். அதன் மூலம்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

**கடைசிக் கேள்வி, எதிர்காலத்தில் தமிழீழம் என்ற நாட்டை ஏற்படுத்தக்கூடிய சூழல் தமிழர்களுக்கு ஏற்பட்டால் அமெரிக்கா அதனை ஆதரிக்குமா?**

தனி நாட்டை நாம் எப்போதும் ஆதரிக்க மாட்டோம். திட்டவட்டமாக வெளிவருகிறது அவரது பதில்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் ஈழ 'கனவு'




# தமிழீழத்தைக் கைவிட்ட 'டெசோ'

■ தம்பி

**ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி சென்னையில் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு கருணாநிதி தலைமையில் மாநாடு ஒன்றை நடத்த இருக்கிறது. அதில் ஈழத் தமிழர் பாதுகாப்பு என்ற விடயம் முக்கிய கருப்பொருளாக இருக்கின்ற அதேவேளை தனித் தமிழீழக் கோரிக்கை நிறைவேற்றப்படாது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.**

இலங்கையில் தமிழீழம் என்ற சொல் மறதியின் அடுக்குகளுக்குள் விரைவாகப் போய்கொண்டு இருக்கின்றது. ஆனால் அவ்வப்போது புலம்பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் உச்சரிக்கப்படும் இந்தச் சொல் இலங்கை ஊடகங்களில் இடம் பிடித்தக்கொள்ளும் போதுதான் ஈழத் தமிழர் பலருக்கு அந்தச் சொல் நினைவுக்கு வருகின்றது. இலங்கையில் அதனை பொது வெளியில் வாசிப்பதற்கு அச்சப்படும் நிலை உருவாக்கப்பட்டு விட்டதால் கட்டாயமறதியை பலர் உருவாக்கிக்கொள்ளுகின்றனர்.

இந்த நிலையில், ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததில் இருந்து தமிழகம் தமிழீழத்தை நினைவுபடுத்திக்கொண்டே இருந்தது. அடிப்படையில் விடுதலைப்புலிகளை எதிர்க்கும் மனோநிலையை உடைய அ.தி.மு.கவும், தி.மு.கவும், புலிகளின் அசைக்க முடியாத கோரிக்கையான தமிழீழத்தை கையில் எடுத்தனர். தமிழகத்தின் 2009 இற்கு பின்னரான அரசியல் தலைவிதி தமிழீழத்தை கையில் எடுக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. அந்த சொல்லை உச்சரிக்க அருவருக்கும் அரசியல்வாதிகளையும் பொதுமேடையில் கோஷம் போட வைத்திருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையில், தான் அரசியல் செய்வதற்கு எதுவும் இன்றி புறமொதுக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி, 1992 ஆம் ஆண்டோடு கைவிட்ட தமிழீழக் கோஷத்தைத் தூசு தட்டினார். 1985 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கலைஞர் தலைமையில், வீரமணி, நெடுமாறன் போன்றவர்களினால் உருவாக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர் அமைப்பு-டெசோ (Tamil Ealam Supporters Organization) 2012 இல் தி.மு.கவின் அரசியல் இருப்புக்காக புதுப்பிக்கப்பட்டது.

எதிர்வரும் மாதம் 12 ஆம் திகதி சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ திடலில் கோலாகலமாக டெசோ மாநாடு கலைஞர் தலைமையில் ஆரம்பமாகின்றது. இதில் கலந்துகொள்வதற்காக பல உள்நாட்டு, வெளிநாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, சரத் பவார், பாருக் அப்துல்லா, சரத் யாதவ், ராம்விலாஸ் பஸ்வான், ராம்கோபால் யாதவ், நைஜீரியாவின் அதுல் ரசாக் மோமே, சுவிடனின் நஸீம் மாலிக், மொரோக்கோவின் டைடா முகமது, அபெக்கோ முபாறக், துருக்கியின் கெமால் இல்திரிம், ஈழத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சுமந்திரன், யோகேஸ்வரன் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான பொ.கஜேந்திரகுமார், செ.கஜேந்திரன், வி.மணிவண்ணன் மற்றும் விக்கிரமபாகு கருணாரத்தின ஆகியோர் அடங்குகின்றனர். இவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்களா? இல்லையா? என்பது மாநாட்டின் பின்னரே தெரியவரும் என உறுதியான தகவல்கள் தமிழகத்திலிருந்து கிடைக்கின்றன.

தமிழக அரசியல் ஓட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த மாநாடு குறித்த சந்தேகங்களும், விமர்சனங்களும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக தமிழீழத்தை முன்மொழிந்தே உருவாக்கப்பட்ட டெசோ கைவிட்டுவிட்டது என்ற தொனிப்புகள் இதனை அவதானித்து வருபவர்கள் மத்தியில் ஏற்பட்டு இருக்கின்றது. இந்த முறை நடத்தப்படுகின்ற டெசோ மாநாடு கடந்த சில ஆண்டுகளாக கலைஞர் கோரிவரும் தமிழீழ உருவாக்கத்தினை பிரகடனப்படுத்தும் அல்லது சர்வதேச அங்கீகாரத்தைக் கோரும் ஒரு அரசியல் திருப்பமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்புக்கு கலைஞர் பதவியில் இருந்து விலகிய பின்னர் தெரிவித்து வந்த ''தமிழீழத்தை உருவாக்கிய பின்னரே கண் மூடுவேன்'' என்ற சூளுரையும் ஒரு காரணமாக அமைந்தது. ஆனால் மாநாடு அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் வரையிலேயே அந்த எதிர்பார்ப்பு இருந்தது. நீண்ட காலம் தமிழகத்தோடு கோபித்துக்கொண்டிருந்த மத்திய உள்த்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் திடீர் வருகையோடு தமிழீழத்தை கைவிட்டது டெசோ மாநாடு. அதற்குப் பின்னர் கலைஞர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்தது என தமிழகத்திலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு என்பதையே முக்கிய கருப்பொருளாகக் கொண்டு மாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

அதில் உள்ளடக்கப்படும் பிற விடயங்களாக, தமிழர்பகுதியில் ஆக்கிரமித்திருக்கும் இலங்கை ராணுவ நிர்வாகத்தை அகற்றுவது,

ஆட்சி அதிகாரங்களைத் தமிழர் விருப்பத்துக்கு அமைவாக அவர்களின் அரசியல் தலைமைத் துவத்துக்கு வழங்குவது,

ஈழத் தமிழரின் பொருளாதார ஈட்டங்கள் மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்தல்,

ஈழத் தமிழர் தாயகப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டுவரும் சிங்கள மயமாக்கத்தைத் தடுப்பது, இலங்கை விடயத்தில் ஒத்த கருத்துள்ள நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை மீது அழுத்தங்களையும், பொருளாதாரத் தடைகளையும் ஏற்படுத்தி வழிக்குக் கொண்டுவரல்,

தமிழருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் எனக் கோருகின்ற நாடுகளை இந்தியா வழிநடத்த வேண்டும்.

உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஓரிடத்திலாவது டெசோ உருவாக்கப்பட்டதன் நோக்கத்தைப் பிரதிபலிக்கும் பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லை. இந்தியாவுக்கு தமிழீழம் ஆபத்தாக அமையும், இந்திய இறையாண்மைக்கு அது பாதகமானது என்ற பழைய புவிசார் அரசியல் சிந்தனைகளைக் கைக் கொண்டு டெசோ இந்த முடிவுக்கு வந்துள்ளது. அனைத்தும் இந்திய இறையாண்மைக்குட்பட்டுத்தான் செயற்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றே குறிப்பிட வேண்டும். அதனை ப. சிதம்பரம் தெளிவாகக் கலைஞருக்கு புகட்டிய பின்னரே அவரும் கைவிட்டிருப்பார். கலைஞருக்கு அரசியல் நடத்த விடயம் இல்லாமையினாலேயே தமிழீழத்தைக் கையிலெடுத்தார் என்ற விடயத்தை மறக்காமல் நோக்குபவர்களுக்கு இதனால் அவர் அடைந்த நட்டமும், ஜெயலலிதா அடைந்த இலாபமும் புரியும்.

சீமானை விட கலைஞர் எடுத்த அண்மைக்கால தமிழீழ ஆதரவு நிலை அதிகம் ஜெயலலிதாவைத் தான் கிலி கொள்ள வைத்தது. தனக்கு கிடைத்த ஆதரவைக் கலைஞர் தட்டிப் பறித்து விடுவாரோ எனப் பீதியடைந்தார். அடுத்து வரும் டெசோ மாநாட்டிலும் இலங்கையில் தனித் தமிழீழ பிரிப்புக்கான வாக்கெடுப்பை ஐ.நா. நடத்தவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினால் தனக்கு அது பெரும் தளம்பலை ஏற்படுத்தும் என எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை. இந்த முறை கலைஞர் கையிலெடுத்துள்ள தமிழீழம் அற்ற டெசோ காற்றுப் போன பலூன் என்பதை ஜெயலலிதா மட்டுமின்றிப் பலரும் உணர்ந்திருக்கின்றனர்.

ஆகவே கலைஞர் தன் மீள் பிரவேசத்துக்காக எடுத்த முயற்சி தமிழீழத்தைக் கைவிட எடுத்த தீர்மானத்தினால் பின்னகர்ந்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும். டெசோவின் அடையாளமான தனி ஈழ ஆதரவையே அவர் கைவிட்டுள்ளமை மாநாட்டின் மிகப் பெரும் ஓட்டையாகவே பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் ஈழத்தமிழருக்கு இதனூடாகத் தெளிவான செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. இலங்கையில் உச்சரிக்கப்படும் தமிழீழம் என்ற சொல் மட்டுமே செயலூக்கமும் , வினைத்திறனும் மிக்கது. அது மட்டுமே உண்மைத்தன்மையுடையது. தமிழகம் உட்பட ஏனைய அனைத்துத் அரசியல் கட்சிகளினாலும் உச்சரிக்கப்படும் தமிழீழம் தத்தம் அரசியல் தேவைக்கானது. அதில் கபடத்தனங்களைத் தவிர வேறொன்றும் இருப்பதில்லை என்பதே அந்தச் செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுச் சான்றிதழ்கள் தயாராகின்றன

ஜெரா

பிணங்களின் மேலெழுந்த அரசியல் காற்று அடங்கும் முன்பே, சாவுச் சான்றிதழ்களுக்கு அரசியல் வர்ணம் கிடைத்திருக்கின்றது.

எந்த ஜனநாயகத் தேசத்திலும் ஒருவர் இறந்த பின்பு அதனை உறுதிப்படுத்தி சாவுச்சான்றிதழ் வழங்கப்படுவது ஒரு நிர்வாக நடைமுறையே. அது குறித்த நாட்டில் ஆண்டொன்றில் ஏற்படும் இறப்பு வீதத்தை அறிகையிடவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. தேர்தல் காலங்களில் வாக்களிக்கத் தகுதியானோர் எண்ணிக்கையின் சராசரியைக் கணிப்பிடவும், அபிவிருத்தி சார் குறிகாட்டிகளில் இறப்பு வீதத்துக்கு அமைவாக திட்டங்களை வரைவுபடுத்தவுமே சாவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், மூன்றாம் உலக நாடுகள் அல்லது உள்நாட்டுப் போர்களினால் சர்வதேசக் கேள்விகளை எதிர்கொள்ளும் நாடுகள் இதனைப் பிறிதொரு தேவைக்காகவும் பயன்படுத்துகின்றன.

இந்த நாடுகளில் சாவுச்சான்றிதழ் ஓர் அரசியல் காகிதம். வெள்ளைத் தாளில் கையெழுத்துப் பெறுவதையொத்த அந்தக் காகிதம் பல அழுத்தக்கேள்விகளுக்குப் பதிலை ஆணித்தரமாக வழங்கிவிடுகின்றது. குறித்த நாடுகளில் கட்டவிழ்க்கப்படும் காணாமல் போதல், கைது செய்தல், போர்க் கைதிகளாகச் சரணடைந்தவர்களைக் காணாமல் போனவர்களாக்கல் போன்ற மனிதவுரிமைகள் சார்ந்த காட்டுமிராண்டித்தனங்கள், அந்த நாடு நோக்கிய சர்வதேச் கேள்விகளை அதிகப்படுத்துகின்றன. துரிதப்படுத்துகின்றன.

இந்த இடத்தில்தான் சாவுச் சான்றிதழ்களுக்கு அரசியல் வர்ணம் கிடைக்கின்றது. தமது நாட்டில் யாருமே காணாமல் போகவில்லை, போர்க்கைதிகள் யாரும் கைதாகிக் கொலைசெய்யப்படவில்லை, என்பதை நிரூபிக்க, விசாரிப்போர் மேசையில் அந்தச் சான்றிதழ்களை தூக்கிப் போட அவர்கள் இந்த யுக்தியைத் தெரிவு செய்கின்றனர்.

எந்த நாட்டிலும் சாவுச்சான்றிதழ்களை வழங்குவது சிவில் நிர்வாகத் துறையைச் சார்ந்த அதிகாரிகளே. ஆனால் இவ்வாறான பிரச்சினைக்குரிய சாவுக் காகிதங்களை பதிவுசெய்வதிலும், வழங்குவதிலும் குறித்த நாடுகளின் இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் முக்கிய பங்கிருக்கும்.

இரகசியமான முறையில் காணாமல்போனோரின் பெற்றோரை அணுகும் இராணுவத் தரப்பினர், அந்தக் குடும்பத்தினரிடமிருந்து ஒட்டுத்துணியளவு தகவல்களைக்கூட வறுகிவிடுகின்றனர். ஒரே தடவையில் இந்தப் பதிவுகள் நடைபெறுவதில்லை. பெரும்பாலும் கிழமைக்கு ஒரு தடவையாவது இந்தப் பதிவுகள் சுழற்சி முறையில் நடைபெறும். புதிது புதிதாக வரும் இராணுவ முகங்கள் தெளிவான தகவல்களைத் திரட்டிவிடுகின்றன. அதில் காணாமல் போனோர் மற்றும் போரில் ஈடுபட்டு மரணித்தோர் பற்றிய பதிவுகள் தனியாக வகைப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட தகவல் பட்டியல் காலத்துக்குக் காலம் மேலெழும் சர்வதேசக் குற்றச்சாட்டுக்களைச் சமாளிக்கப் போதுமானவையாக இருக்கின்றன. நமது நாட்டில் காணாமல்போனோர், போரில் இறந்தோர் பற்றிய தெளிவான பதிவுத் தேட்டமொன்றை எப்போதும் பேணுகின்றோம், அதற்கு விரைவில் தீர்வு காண்போம், என்ற பதில்களுக்கு ஆதாரமாக இந்தத் தகவல்கோப்புகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அடுத்த அழுத்தம் பிரயோகிக்கப்பட முன்னர் காணாமல் போனோராகப் பதிவுசெய்யப்பட்டவர்களை சாவுச்சான்றிதழ்களில் இடம்பிடிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றன.

இதற்கு இரண்டு நாடுகளில் வலுவான உதாரணங்கள் உண்டு. வட ஆபிரிக்காவில் இருக்கின்ற சூடானில் மனித குலத்தால் ஜீரணிக்க முடியாத வன்முறைகள் நடந்தன. 1989 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டுவரை 'டார்பூர்' பிராந்தியத்தில் அரசுக்கெதிரான பழங்குடியின மக்களைப் படுகொலைசெய்த மற்றும் காணாமல் போகச் செய்த ஓமர் அல் பசீர் சர்வதேசத்தினரின் அழுத்தங்களுக்குள்ளானார். அதனைச் சமாளிக்க அவர் கையிலெடுத்த ஆயுதம் சாவுச்சான்றிதழ்கள்தான். ஆனால் அதனையும் மீறி அவரைக் கண்காணித்த மனிதவுரிமையாளர்கள் அவரைப் போர்க்குற்றவாளியாக்கினர். அவர் இன்று சூடானின் ஜனாதிபதியாக இருக்கின்ற போதிலும் உலகின் எந்த நாட்டுக்கும் உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார். அவர் கைவசமிருக்கும் எண்ணெய் வளம் அவரைக் காப்பாற்றி வருகின்றது.

அதற்கு அடுத்ததான உதாரணம் இலங்கை. முல்லைத்தீவில் காணாமல் போனவர்களுக்கு சாவுச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற செய்தி கடந்த வாரத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது. முக்கிய அரசியல் கட்சிகளும், மனிதவுரிமை ஆர்வலர்களும் இதற்குக் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த 30 வரையிலான பெற்றோர் இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் வழமை போலவே அப்படியொன்றும் நடக்கவேயில்லை என அரசதரப்பிலிருந்து மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆண்டின் தொடக்கப் பகுதியில் ஜெனீவா கூட்டத் தொடர் முடிந்த கையோடு வன்னியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் இராணுவத்தினர் பதிவெடுத்தனர். அதில் போரில் இறந்தவர்கள், காணாமல்போனவர்கள் பற்றிய விவரங்கள் விரிவாகக் கோரப்பட்டிருந்தன.

இந்தப் பதிவின் நோக்கம் , போரில் இறந்தவர்கள் தொடர்பில் தெளிவான எண்ணிக்கையை ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்குவது எனப் பின்னர் கூறப்பட்டது. ஆனால் அந்த ஒரு நோக்கத்துக்காக மட்டும் இடம்பெற்றிருக்குமா? என்பது சந்தேகத்துக்குரியதே.

அந்தப் பதிவுகளின் இப்போது சாவுச்சான்றிதழ் வழங்கல் தொடர்பான செய்தி வந்திருப்பதானது, காணாமல்போன பிள்ளைகளின் பெற்றோர் தெரிவித்திருக்கும் திடுக்கிடும் தகவலை மெய்ப்பித்திருக்கின்றது என்றே கூறவேண்டும்.

இந்தப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பெற்றோர் முல்லைத்தீவில் பலர் இருப்பினும், குறித்த விடயம் வெளிச்சத்துக்கு வந்த பின்னர் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க அஞ்சுகின்றனர். அதற்கிடையில் ஏதோ வெருட்டல் சூட்சுமம் நடந்துவிட்டது என்பதையே இது உறுதிப்படுத்துகின்றது. அதுபற்றிய முணுமுணுப்புக்களை மட்டும் வழங்குகின்றனர். இப்போதைய வறுமையின் நிமித்தம் ஒரு சாவுச்சான்றிதழுக்கு அரசு வழங்கும் 50,000 ரூபாக்களுக்காக இரகசியமாக சான்றிதழ்பெற உடன்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இப்போதைக்கு இந்த விடயம் சிறு புகைத்தலோடு அடக்கப்பட்டாயிற்று. பற்றியெரியும் தகனிப்பை அது பெறவில்லை. ஆனால் இந்த விடயம் அரசுகளையே தகனிக்கச் செய்யக் கூடியது என்பது மட்டும் உண்மை. தமிழர் பாகத்தில் துப்பாக்கிகளின் நிர்வாகம் வலுவாக இருக்கும்வரை இது போன்று பல விடயங்கள் முணுமுணுப்புக்களோடு அடங்கிவிடும்.

இந்த நாடுகளில் சாவுச்சான்றிதழ் ஓர் அரசியல் காகிதம். வெள்ளைத் தாளில் கையெழுத்துப் பெறுவதையொத்த அந்தக் காகிதம் பல அழுத்தக் கேள்விகளுக்குப் பதிலை ஆணித்தரமாக வழங்கிவிடுகின்றது. குறித்த நாடுகளில் கட்டவிழ்க்கப்படும் காணாமல் போதல், கைது செய்தல், போர்க்கைதிகளாக சரணடைந்தவர்களைக் காணாமல்போனவர்களாக்கல் போன்ற மனிதவுரிமைகள் சார்ந்த காட்டுமிராண்டித்தனங்கள் அந்த நாடு நோக்கிய சர்வதேசக் கேள்விகளை அதிகப்படுத்துகின்றன.



✪

முன்னாள் போராளியாக இருந்த அவர் தனது மூன்று பிள்ளைகளோடு வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்தார். விடுதலைப் புலிகளின் முக்கிய ஊடகத்தில் பணியாற்றிய அவரின் மனைவியும் இலங்கை விமானப்படைகளின் தாக்குதலிலேயே கொல்லப்பட்டார். அவர் பிள்ளைகளோடு சரணடைந்ததைப் பலரும் நேரடியாகக் கண்டிருக்கின்றனர். ஆனால் அவரும் அவரின் மூன்று பிள்ளைகளும் பின்னர் காணாமல் போய்விட்டனர். இவர்கள் காணமால் போய்விட்டனரா? போரில் கொல்லப்பட்டுவிட்டனரா?

✪

இறுதி நேரத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர் எனக் கூறப்படுகின்றது. இன்னும் பலர் முக்கிய போராளிகள் 'சார்ஜ்' பண்ணி இறந்து விட்டனர் எனக் கூறுகின்றனர். ஆனால் பொதுமக்கள் சிலர் அவர்கள் சரணடைந்த பின்பு இராணுவத்தினர் தமது மண் அணைகளுக்கு அருகில் மேலாடைகளைக் களைந்து கைகளைப் பின்னால் கட்டி இருத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டிருக்கின்றனர். அவர்கள் காணாமல் போயினரா? போரில் கொல்லப்பட்டனரா?

✪

இவ்வாறு காணாமல்போனவர்களைத் தேடுவதில் எந்தக் களைப்பும், சலிப்பும் இல்லாது 24 மணிநேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் பெற்றோரின், உறவுகளின் அவலம் தனியாக வரலாற்றின் பல அத்தியாயங்களில் பதிவு செய்யப்பட வேண்டியது.

அவள் வீட்டில் ஒரே மகள். கிளிநொச்சி நிரந்தரம். 3 ஆண் சகோதரர்கள் வெளிநாட்டில் இருக்கின்றனர். அவள் காதலித்த போராளியையே குடும்பத்தினர் திருமணம் செய்து வைத்தனர். 2009 இல் தனது போராளிக் கணவனையும் சரணடையப் பணித்தாள் அவள். ஆனால் அதற்குப் பின்னர் கணவன் காணாமல் போய்விட்டான். எந்தப் புனர்வாழ்வு முகாமிலும் அவன் இல்லை. அவள் அவனைத் தேடியலையும் சந்தர்ப்பத்தில் யாரோ ஒருவர் கண்டுபிடிக்க உதவி செய்வதாகக் கூறியிருக்கின்றார். கணவனுடன் பேச வைக்க முடியும். அவரின் காணொலி காட்டமுடியும் என்றெல்லாம் பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டிருக்கின்றார். இதற்கு 18 லட்சம் காசும் கோரியிருக்கின்றார். தனது கணவனுக்காக சகோதர்களின் பணத்தை அந்த நபரிடம் வழங்கிய அவள் ஏமாற்றப்பட்டிருக்கின்றாள். இதனை வெளியில் சொல்லக் கூடாது. எல்லாம் இரகசியமானது என்று கூறியபடியே 18 லட்சத்தோடு மறைந்து போனான் அந்த "அவசர உதவியாளன்".

✪

அண்மையில் பாடசாலை ஒன்றுக்கு செல்ல நேர்ந்தது. எனக்குக் கற்பித்த ஆசிரியை ஒருவர் என்னை அடையாளம் கண்டுகொண்டார். இறுதி நேரத்தில் சரணடைந்து காணாமல் போன தனது மகளைப் பற்றி அதிகம் சொல்லி அழுதார். யாரோ தன் மகளை சிங்களக் குடும்பம் ஒன்றோடு வற்றாப்பளையில் கண்டதாகவும், அவள் அதில் ஒருவரைத் திருமணம் செய்துள்ளாள் எனவும் அவர் கூறியுள்ளார். சோதிடர்களும் அதனை உறுதிப்படுத்தியிருக்கின்றனர். உங்களின் மகள் உயிரோடு, நல்ல சுகமாக இருக்கின்றார். விரைவில் உங்களை சந்திப்பார். ஆலயப் பூசைகளை நேர்த்தியாக செய்யுங்கள் என அந்தச் சோதிடர் ஆலோசனை கூறியிருக்கின்றார். அந்தத் தாய்க்குப் பிள்ளை இன்னமும் உயிரோடிருக்கின்றாள் என்பதில் 100 வீத நம்பிக்கை இப்போது வந்திருக்கின்றது! என்னிடமும் அந்த ஆசிரியரின் பிள்ளைதேடும் படலத்துக்கு ஓர் உதவி கேட்டார். தனது பிள்ளையின் நிறம், உயரம், பெயர், அங்க அடையாளங்களை ஒரு காகிதத்தில் குறிப்பிட்டு, இந்தக் குறிப்புக்களோடு யாரை அடையாளம் கண்டால் தன் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளும்படி எழுதியிருந்தார். இதனைப் பத்திரிகையில், இணையதளங்களில் பிரசுரித்து உதவுமாறு வேண்டிக்கொண்டார். அவள் அப்பாக்குச் சரியான பயம். "சிங்களவரைக் கலியாணம் கட்டியிருந்தா இன்னும் பயப்படுவா. எங்களைக் காணவே பயப்படுவா. என்ர பிள்ளை எப்படி இருந்தாலும் நான் ஏற்பன." கண்ணீரோடு என்னையும் எதிர்பார்க்கத் தொடங்கினார் அந்த ஆசிரியர். கடந்த வாரம் எனது [illegible] கொண்டிருந்தேன். அதிலிருந்த பொக்கற் ஒன்றுக்குள் அந்தக் கடிதமும் இருந்தது. ஆனால் அதில் அவர் எழுதிய தன் மகளின் எந்தக் குறிப்புகளும் இருக்கவில்லை. பேனா மை காகிதத்தில் ஆழமாக ஊறியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ விகோம்

# பட்டங்கள் பலவிதம் நாமும் ஒருவிதம்

கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலையோடு பல ஏமாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே செல்கின்றன. ஆழம் தெரியாமல் காலை விட்டதைப் போல அரசும் எல்லா நிர்வாகச் செயற்பாடுகளிலும் 'கும்பலில் கோவிந்தா' என்ற கணக்காக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

ரூபாவின் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த, நாட்டின் பொருளாதாரத்தை தக்கவைக்க வேலையற்றோர் பிரச்சினையைத் தீர்க்க, அயல் உறவை வலுப்படுத்த, சர்வதேச நெருக்கடியிலிருந்து விடுபட என்ற அவர்களின் அயராத உழைப்புக்கள் அர்த்தம் அற்ற கண்ணோட்டமாகவே வெளிப்படுகின்றன.

அண்மையில் இலங்கை முழுவதும் வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது. இதில் நீண்ட நாள்களாக வேலையற்று இருந்த பலருக்கு வேலை கிடைத்தது.

6 மாதங்களுக்கு, மிகச் சொற்பமான கொடுப்பனவுகளுடன் இவர்களைப் பயன்படுத்தி அரசு நாட்டின் அனைத்துப் புள்ளி விவரங்களையும் சேகரிக்கவுள்ளது.

இதன் மூலம் அரசு நல்ல இலாபம் கிடைக்கும். இந்த வேலையை அரச உத்தியோகத்தில் இருப்பவர்களைப் பயன்படுத்திச் செய்பவர்களாயின் பல கோடி செலவாகும். அரசின் நுட்பமான அறிவு இதற்கான பணச் செலவைக் குறைத்திருக்கிறது என்று பலர் பேசிக்கொள்கிறார்கள்.

அரசின் சூழ்ச்சிமிக்க நிர்வாக மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் மறுபுறத்தில் ஒரு சாராருக்கு பெரும் பாதிப்பாக மாறியுள்ளன. இந்த நியமனத்தின் போது உயர் தேசிய விருது எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.எம். ஆகிய கற்கை நெறியைச் சேர்ந்தவர்கள் வடக்கில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் வழங்கப்பட்ட சில நாள்களில் இந்தக் கற்கைகள் இரண்டும் பட்டப் படிப்புக்குரிய தரம் அற்றவை என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் தெரிவிக்கப்பட்டு இவர்களுக்கான நியமன விலக்கல் தொடர்பில் விலக்களிக்கப்பட்டிருந்தது.

இந்த இரு கற்கைநெறியாளர்களும் தமது கற்கை முடிவில் தகுதி வாய்ந்த பட்டப்படிப்புக்கு சமனான பட்டத்தை உடையவர்கள் என்ற நிலைப்பட உயர் கல்வி அமைச்சாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவாலும் பிரேரிக்கப்பட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 இல் 46/90 பகுதி III இன்படி இந்தக் கற்கை நெறிக்குரியவர்கள் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்குத் தகுதியான பட்டத்தை உடையவர்கள் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தவிர வெளிநாடுகளில் இந்த இரு கற்கை நெறிகளும் இளமாணி பட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு முதுமாணி கற்கை நெறிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். உதாரணமாக லண்டனில் இந்தக் கற்கை நெறிகளை உடையவர்கள் மேற்படிப்பை தொடர அனுமதிக்கப்படுகின்றனர். அதாவது ஐக்கிய ராச்சியத்தில் அரச அதிகாரம் பெற்ற கற்கை நெறி சான்றிதழ் வழங்கக் கூடிய UK NARIC நிறுவனம் இலங்கையில் உயர் தேசிய கற்கைநெறியாளர்களது கற்கையை இளமாணி கற்கையாக ஏற்றுக்கொள்கிறது.

பொதுவாக உலகத் தரத்தில் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார், அறிவுசார் கற்கைநெறிகளை வழங்கக்கூடிய பல்கலைக்கழகங்களும் அதன் பகுதி நிறுவனங்களும் The Association of Commonwealth Universities என்ற அமைப்பின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

இவ்வாறு பதிவு செய்யப்படும் பல்கலைக்கழகங்களும் பகுதி நிறுவனங்களும் வழங்கும் பட்டம்/ சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றாகவே கருதப்படுகிறது.

இதன் அடிப்படையில் மேற்படி இரு கற்கைநெறியாளர்களதும் சான்றிதழ்கள் பட்டப் படிப்புக்குச் சமானானவை அல்ல என இலங்கை அரசே பரிந்துரை செய்கிறது?

அடுத்ததாகச் சில மாவட்டங்களில் இதே கற்கை நெறியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த மாவட்டங்களில் 2010, 2011 ஆம் ஆண்டுக்கான பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

வடக்கில் 2010, 2011 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கவே வேண்டும் என்பதில் அமைச்சர்கள் இருவர் நல்ல சேவை செய்தனர். இந்த சேவையின் விளைவோ என்னவோ அந்த இரு கற்கை நெறியாளர்களும் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

உயர் தேசிய கற்கையாளர்களுக்கு குறித்த நியனம் வழங்கப்படுவதாயின் 2010, 2011 பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனம் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என ஒருமைக் கருத்து இப்போது எழுந்துள்ளது.

நியமனம் வழங்கப்பட்ட பின் அதை இரத்துச் செய்வது என்பது சாத்தியமா என கேள்விகள் எழுப்பப்பட்டாலும் இலங்கை அரசைப் பொறுத்தவரை அது சாத்தியமான ஒன்றுதான்.

பட்டதாரிகள் பயிலுநர்களாகவே ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எந்த நிறுவனத்தின் கீழும் சம்பளம் எதையும் பெறவில்லை. இவர்களுக்கு ஒரு ஊக்குவிப்புத் தொகை மாத்திரமே வழங்கப்படுகிறது. இதனால் பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் இவர்களை நிறுத்திவிட அரசு முயற்சி எடுப்பதாகச் சிலர் பேசிக்கொள்கின்றனர்.

தமக்கு நியனம் வழங்கப்படவில்லை எனக் கூறி போராடி வரும் உயர் தேசிய கற்கையாளர்களுடன் மறுபுறத்தில் எங்களது நியனம் பறிக்கப்பட்டு விட்டது என இன்னுமொரு தொகையினர் போராட வாய்ப்பளிக்க விரும்பாது என்பது எவ்வளது தூரம் உண்மையானது என்பதும் கேள்விக்குரியது.

### தகைமை பெரிது

உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியாளர்களின் கல்வித் தகைமை, தொழில் தகைமை என்பன வேறு. உங்களுக்கு பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் தருவது பொருத்தமற்றது. உங்கள் துறைக்கேற்ற வேலையையே பெற்றுத்தர வேண் டும் என்று போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மத்தியில் இன் னொரு பேச்சும் உள்ளது.

பல்கலைக் கழகத்தில் இது போன்ற எல்லாத் துறைகளையும் சேர்ந்த மாணவர்களுக்கே பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறெனின் இவர்களின் கற்கை எந்தத் தராசில் நிறுக்கப்பட்டது என்ற சந்தேகம் பலருக்கு உள்ளது.

எப்படியானாலும் நாங்கள் பட்டதாரிகளே! எங்களுக்கு அரசாங்கம் நியமனம் வழங்க வேண்டும் என்பதில் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியாளர்கள் தம்மாளான எல்லா முயற்சிகளிலும் இறங்கியுள்ளனர். இங்கு யார் பக்கம் பிழை இருக்கிறது. எவர் முயற்சி வெற்றிபெறும் என்பது யாருக்கும் இதுவரை தெரிந்திருப்பதாக இல்லை.

இலங்கை அரசு முன்னர் குறிப்பிட்டதைப் போல் தம்மை வளர்த்துக்கொள்ள அரும்பாடுபட்டு வருகிறது. இருந்தாலும் அது அவர்களுக்கு பெரும்பாடாகவே உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனத்திலும் அவர்கள் மீதான அக்கறையிலும் அரச நிர்வாகம் அசமந்தப் போக்குடன் செயற்படுவது மட்டுமல்லாமல் முழு நாட்டுக்கும் பாதகமான பக்கங்களையே சிந்திக்கிறது.


அரசியல் தலையீடுகள் ஒரு புறம் நிர்வாகக் குழப்பங்கள் மறுபுறம் அரசுக்குள் பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. இவர்களின் நானா நீயா போட்டி அடிமட்ட மக்கள் மத்தியிலேயே பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில் நாள் ஒன்றுக்கு ஏதோ ஒரு பிரச்சினை கருதி இலங்கையில் போராட்டம் நடைபெறுகின்றது என்பது தெளிவாகிறது. குறிப்பாக அரசுக்கு எதிரான கோஷங்களே இப்போது வலுத்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. சரிபிழைக்களுக்கு அப்பால் மக்களின் எதிர்ப்பலைகள் அரசு மீது தொடர்ச்சியா எழுந்துள்ளமை அதன் எதிர்கால இருப்பை கேள்விக் குறியதாக்கும். தவிர உள்ளூர் மட்ட அரசியல் செல்வாக்குகள் அற்றுப்போகும். பொருளாதார அபிவிருத்திக்கு எதிராக அரசியல் மாற்றம் பெறுவதோடு அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழ வேண்டிய சூழலும் உருவாகலாம்.

வெள்ளம் வருமுன் அணை கட்டுவது போல அரசு செயற்பட வேண்டும். பட்டதாரிகளுக்கு நியமனம் கொடுப்பது போல எந்த அடிப்படைகளை கருவிகளாகப் பயன்படுத்துவது யார் யாரை உள்வாங்குவது என்ற ஏக முடிவுக்கு உட்பட்ட பின்னரே அவர்களை நியமித்திருக்க வேண்டும்.

மக்கள் போராட்டங்களும் மக்கள் புரட் சியும் அவர்களின் வாழ்வுரிமை சார்ந்ததே.


" பல்கலைக்கழகத்தில் இதுபோன்ற எல்லாத் துறைகளையும் சேர்ந்த மாணவர்களுக்கே பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறெனின் இவர்களின் கற்கை எந்தத் தராசில் நிறுக்கப்பட்டது என்ற சந்தேகம் பலருக்கு உள்ளது. எப்படியானாலும் நாங்கள் பட்டதாரிகளே! எங்களுக்கு அரசு நியமனம் வழங்க வேண்டும் என்பதில் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியாளர்கள் தம்மாலான எல்லா முயற்சிகளிலும் இறங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்



பா.உண்மை






10

நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் வாதாடுவதை நேரில் கேட்க வேண்டும் என்ற ஆசை ஆபிரஹாமுக்கு நீண்ட நாள்களாவே இருந்தது. பூன்வில்லி என்ற ஊரில்தான் நீதிமன்றம் இருந்தது. அங்கு ஒரு கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. அதில் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஒருவர் வாதாட வருவதாக இருந்தார். ஆபிரஹாம் இவற்றைக் கேள்விப்பட்டான். 16 மைல் தூரத்தில் இருந்த பூன்வில்லி நீதிமன்றத்துக்கு அவன் நடந்தே போனான்.

நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் வாதாடுவதை ஆச்சரியம் பொங்கப் பார்த்தான். அரசு தரப்பில் வாதாடியவர் மிகத் திறமையாக வாதாடினார். தன் வாதங்களை அழுத்தந்திருத்தமாக முன்வைத்தார்.

நீதிமன்றம் கலைந்ததும், ஆபிரஹாம் அந்த வழக்கறிஞர் இருந்த அறைக்குப் போனான். "இந்த மாதிரியான அற்புதமான பேச்சை நான் இதுவரைக்கும் கேட்டதில்லை. அருமையாகப் பேசினீர்கள்" என்றபடி கை குலுக்குவதற்காகத் தன் கையை நீட்டினான். அந்த வழக்கறிஞர் அவனை வெறித்துப் பார்த்தார்.

உயரமான, ஒல்லியான பையன். அழுக்கான 'ஜீன்ஸ் கோட்'டும் மான் தோலாலான 'டிரவுசரை'யும் அணிந்திருக்கிறான். சப்பாத்து அணியாத வெறுமையான கால்கள். அவனுடைய ஏழ்மையான தோற்றத்தைப் பார்த்து என்ன நினைத்தாரோ, பதில் எதுவும் சொல்லாமல், கை குலுக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

துடித்துப் போனான் ஆபிரஹாம். ஆனால், சோர்ந்து போகவில்லை. அந்த நீதிமன்றத்துக்குப் போய்விட்டு வந்ததிலிருந்து, தானும் ஒரு வழக்கறிஞனாக வேண்டும் என்ற எண்ணம் ஆபிரஹாமுக்கு எழுந்தது. எதிர்காலத்தில் ஒரு வழக்கறிஞனாக உருவாகி, நீதிமன்றத்தில் மிகச் சிறப்பாக வாதாட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். அதற்கான முயற்சிகளையும் தொடங்கினான்.

கிட்டத்தட்ட 12 மைல் தூரம் வெறும் காலோடு நடந்து போய், ஒரு வழக்கறிஞரிடம் சில சட்டப் புத்தகங்களை இரவல் வாங்கி வந்தான். அமெரிக்க அரசமைப்புச் சட்டங்கள், இண்டியானா மாகாணச் சட்டம் ஆகிய புத்தகங்களைக் கரைத்துக் குடித்தான். அவற்றை இரவு பகலாகப் படித்து மனதில் உருவேற்றிக் கொண்டான். அப்போதுதான் அவனுக்கு அமெரிக்க விடுதலைப் பிரகடனத்தைப் பற்றி படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

பூன்வில்லியில் பார்த்த வழக்கறிஞரை விட பெரிய வழக்கறிஞராகத்தான் ஆகவேண்டும் என்று விரும்பினான் ஆபிரஹாம். எப்போது பார்த்தாலும் அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பான். வீட்டுக்கு முன்னால் தன் சகோதர சகோதரிகளையும் நண்பர்களையும் கூட்டிவைத்துக் கொண்டு, நீதிமன்ற விளையாட்டு விளையாடுவான். அந்த விளையாட்டில் அவன்தான் நீதிபதி, அவன்தான் சட்டத்தரணி.

வாதாடும்போது, உணர்ச்சிகரமாகப் பேசுவான். இந்த விளையாட்டை குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் ரசிப்பார்கள். தோமஸ் மட்டும், ஆபிரஹாம் பேசத் தொடங்கியதும் கூட்டம் கூடி விடுவதைப் பொருமியபடி பார்த்துக் கொண்டிருப்பார்.

விளையாட்டு, பேச்சு, புத்தகம் படிப்பது என்று சுற்றிக் கொண்டிருந்தாலும் ஆபிரஹாம் உள்ளத்தில் ஒரு லட்சியம் இருந்தது.

ஒரு முறை தன் நண்பன் ஒருவனிடம் ஆபிரஹாம் சொன்னான், "நீ இருந்து பார்! ஒரு நாள் நான் இந்த அமெரிக்காவுக்கு ஜனாதிபதியாகப் போகிறேன்" என்று.

★

தோமஸ் லிங்கனின் நண்பர்களில் ஒருவர். சொந்தமாக ஒரு படகு வைத்திருந்தார். அது ஓஹியோ ஆற்றைக் கடக்கும் பயணிகளை இக்கரைக்கும் அக்கரைக்குமாக ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. மிகச் சிறிய படகு. மூன்று அல்லது நான்கு பேர் ஏறிச் செல்லமுடியும். படகு ஓட்டுவதற்கு தகுந்த ஆள் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தார் அந்த நண்பர்.

தோமஸ் லிங்கன், ஆபிரஹாமை தன் நண்பரிடம் வேலைக்குச் சேர்த்து விட்டார். வாரத்துக்கு இரண்டரை டொலர் கூலி. அந்தப் பணத்தை அப்படியே தோமஸிடம் கொடுத்து விடுவது என்று முடிவானது.

ஆபிரஹாமுக்கு அது புதிய அனுபவம். விதவிதமான மனிதர்களை அவன் சந்திக்க நேர்ந்தது. அந்த மனிதர்களும் புத்தகத்தைப் போலவே அவனுக்குப் புதிது புதிதாகப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.

ஒரு நாள் கரையில் நின்று கொண்டிருந்தான் ஆபிரஹாம். இரண்டு பேர் ஓடி வந்தார்கள். இருவர் கைகளிலும் பெட்டிகள் "தம்பி! எங்களை அந்த நீராவிப் படகில் கொண்டுபோய் விட முடியுமா? அவசரம்" என்றபடி ஒருவர் படகில் ஏறினார். இன்னொருவரும் படகில் ஏறிக் கொண்டார். ஆபிரஹாம் அப்போதுதான் கவனித்தான்.

ஆற்றுக்கு நடுவே ஒரு சிறிய நீராவிப் படகு புறப்படும் நிலையில் நின்று கொண்டிருந்தது. நீராவிப் படகைப் பிடிப்பதற்காகத்தான் இருவரும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது. உடனே படகைச் செலுத்தியபடி, குரல் எழுப்பி சைகையைக் காட்டினான். படகில் இருவர் வருவதை நீராவிப் படகைச் செலுத்துபவர்களுக்கு உணர்த்தினான். நீராவிப் படகும் சிறிது தாமதித்தது. வேகவேகமாகப் படகைச் செலுத்திக் கொண்டு போய் அதன் அருகே நிறுத்தினான். இருவரும் ஏறினார்கள்.

ஆபிரஹாம் தன் படகைத் திருப்பினான். நீராவிப் படகில் ஏறிய இருவரும் படகை நோக்கி ஆளுக்கு ஒரு வெள்ளி நாணயத்தை வீசி எறிந்தார்கள். அவற்றைக் குனிந்து எடுத்தார் ஆபிரஹாம். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. ஒவ்வொன்றும் அரை டொலர். ஒரே நேரத்தில் அவ்வளவு பணத்தை அவன் இதற்கு முன் எப்போதும் சம்பாதித்ததில்லை-அதுவும் சில நிமிடங்களில்.

குளிர் காலம் வந்ததும் படகில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்து போனது. ஆற்று நீர் பனிக்கட்டியாக உறையத் தொடங்கியதும் வீட்டுக்குத் திரும்பினான் ஆபிரஹாம்.

# 'கவரிங்' கனவுகள்

சா.ஜிந்துஜா
கோண்டாவில்



மீனா தன் கணவனிடம் நாளை மறுநாள் அக்காவின் மகள் குமாரியின் திருமணத்துக்குச் செல்வதற்கு தன்னிடம் ஒரு நகையும் இல்லை என்று அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். "வெறுங் கழுத்துடன் எப்பிடிப் போறது? எல்லா நகையும் அடைவு வைச்சாச்சு. தாலி கூட இல்லை. மிஞ்சிக் கிடந்த சங்கிலியையும் போனமாசம் அடைவு வைச்சிட்டீங்கள். இனி என்ன செய்யிறது. ஆரிட்ட போய் நகை இரவல் கேட்க முடியும்? என்னங்கோப்பா! நான் என்ர பாட்டில புலம்பிக் கொண்டிருக்கிறன். நீங்கள் ஒண்டும் சொல்லாமல் சிலை மாதிரி நிக்கிறீங்களே?" என்று தனது மனதில் இருந்தவற்றை ஆதங்கத்துடன் கணவனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சீலன் "நகை போடாமல் போனா என்ன? எங்களை எல்லாரும் வரவேண்டாம் எண்டு கலைச்சுப் போடுவினமோ? இல்லாட்டி நகையோட தான் போக வேணும் எண்டு ஏதாவது சட்டமோ?" என்று மனதுக்குள் நினைத்ததை மனைவியிடம் சொல்லமுடியாது வாய்க்குள்ளேயே விழுங்கினான்.

மீண்டும் சிறிது நேரத்தால் மீனா புலம்பத் தொடங்கினாள்.

"இஞ்சேருங்கோ நான் வேலை செய்யிற லட்சுமி அம்மாட்ட ஒரு சங்கிலி கேட்டுப் பாக்கவா?" என்று சீலனிடம் ஆலோசனை கேட்டாள். ஆனால் எடுத்த எடுப்பிலேயே சீலன் மறுத்தான்.

"இது எல்லாம் எங்களுக்குச் சரி வராது. அவங்கள் பெரிய பணக்காரர். எங்களை நம்பி காசோ, நகையோ தரமாட்டாங்கள். கேட்டு இல்லை எண்டு சொன்னால் மனக்கஷ்டம் தானே. அதைவிட கேக்காமல் இருக்கிறது மேல்." என்று கூறினான். மீனாவோ விடுவதாக இல்லை. "அந்த அம்மாவைப் பற்றி உங்களுக்கு ஒண்டும் தெரியாது. அவா இனி இல்லையெண்டளவுக்கு நல்லவா. நான் அங்க 6 வருசமா அவயின்ர வீட்டில வேலை செய்யிறன். என்னை நம்பி அவா என்னவும் தருவா." என்றாள்.

"சரி இனி உன்ர விருப்பம். நான் சொல்றதைச் சொல்லிட்டன். என்னெண்டாலும் செய்" என்று சீலன் கூலி வேலைக்குப் புறப்பட்டான். மீனாவும் வீட்டு வேலை செய்வதற்காக வழமை போல லட்சுமி அம்மா வீட்டுக்குச் சென்றாள். வீட்டுவேலை முடிந்தவுடன் லட்சுமி அம்மாவிடம் சென்று மெல்லிய குரலுடன் "அம்மா, அம்மா" என்று மெதுமெதுவாகக் காலைப் பிடித்து தடவிக் கொண்டு "நாளண்டைக்கு அவற்ர அக்காவின்ர மகளுக்குக் கலியாண வீடு. அண்டைக்கு லீவு வேணும் அம்மா. என்ர நகை எல்லாம் அடைவுல இருக்கு. வேற நகையுமில்லை. எனக்கு ஏதாவது ஒரு பவுண் சங்கிலி இரவலாத் தருவீங்களா? அடுத்த நாளே கொண்டந்து தந்திடுவன்" என்று கேட்டாள். அவளுக்கு மறுப்பு ஏதும் சொல்லாமல், உள்ளே சென்ற லட்சுமி அம்மா சிரித்த முகத்துடன் வெளியே வந்தார்.

" மீனா! சங்கிலி பத்திரம்" என்று கூறியபடி அவளிடம் சங்கிலி ஒன்றைக் கொடுத்தார். மிகவும் மகிழ்ச்சியுடன் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து பவுண் சங்கிலியை அணிந்து மகிழ்ந்தாள் மீனா.

அந்தச் சங்கிலியை அணிந்து கொண்டு மீனா திருமண வீட்டில் எடுப்பாக வலம் வந்தாள். திருமண வீட்டுக்கு சென்று, மீண்டும் வீடு வர இரவு 10 மணி ஆகிவிட்டது. அன்று முழுக்க ஆசை தீர அணிந்து அழகு பார்த்த அந்தத் பவுண் சங்கிலியை அடுத்த நாள் காலை எடுத்துக்கொண்டு லட்சுமி அம்மா வீட்டுக்கு ஓடினாள் மீனா. சங்கிலியைக் கொடுத்துவிட்டு "நன்றி அம்மா" என்று கூறி சமையலறைப்பக்கம் சென்றாள்.

லட்சுமியின் கணவன் இதைப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் 'இவளுக்கு ஏன் தங்கச் சங்கிலியைக் கொடுத்தனீ. அவள் எங்கயாவது துலைச்சிருந்தால் ஆர் வாங்கித் தாறது.இனிமேல் இதுகளுக்கு குடுக்காதை. " என்று கூறினார்.அதற்கு லட்சுமி "பேசாம இருங்கோ! உங்களுக்கு ஒண்டும் தெரியாது. இது பவுண் இல்லையப்பா. இந்தியாவில இருந்து மகள் அனுப்பின கவரிங் சங்கிலி தான். அதை பவுண் சங்கிலி எண்டு நம்பி அவளும் வாங்கிக் கொண்டு போட்டாள். மற்றபடி உதுகளுக்கு பவுண் சங்கிலியைக் குடுக்க எனக்கென்ன விசரோ?" என்று சொல்லி எழுந்து உள்ளே போனாள். இதையெல்லாம் சுவரோரமாக நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த மீனா கண்ணீர் சொரிய தனது வேலையைச் செய்யத் தொடங்கினாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க! 10

ராகவன் அல்பி




வெற்றி பெறுவதற்கு முன்னுரிமைகளை அமைத்துக் கொள்வதும் அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்வதும் முக்கியமானது என்று ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

போதுமான நேரம் என்பது எப்போதும் இருக்காது. உங்கள் வாழ்க்கையில் மாற்றம் செய்வதற்கான சரியான நேரம் வருமென்று காத்திருந்தால். நீங்கள் ஒருபோதும் மாற்றம் செய்யத் தொடங்க மாட்டீர்கள்.

வாழ்க்கை நம்மிடம் அதிகமாகக் கோருகிறது என்று நாம் நினைக்கிறோம், அதனால் மிக எளிதாக வேலைகளைத் தள்ளிப்போட்டு விடுகிறோம். மலையிலிருந்து ஒரு பாறையைக் கீழே தள்ளிவிட வேண்டுமானால் இதில் கஷ்டமான பகுதி என்பது பாறையைப் பிடித்துத் தள்ளுவதுதான் பாறை உருளத் தொடங்கிவிட்டால் வேலை முடிந்துவிடும். அது போன்று நீங்கள் வேலையைத் தொடங்கிவிட்டால் அது தானாகவே வளர்ச்சியடையும்.

நேரத்தைக் கண்டறிவதன் ரகசியம் என்பது பெரிய விஷயம் இல்லை. நீங்கள் ஒரு முழு நாளையும் ஒதுக்கி, விரிவான திட்டத்தை எழுத வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக என்னென்ன வேலை செய்ய வேண்டும் என்ற பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டால் போதும், அதைச் சில நிமிடங்கள் பார்த்தாலே போதும். இதற்குள் நீங்கள் அந்த வேலைகளை எவ்வாறு செய்வதென்பதைத் திட்டமிட்டு இருப்பீர்கள்.

உங்களுக்கு என்று பொருத்தமான இடத்தில் அமர்ந்து சிந்தித்தால் சிறப்பான யோசனைகள் கிடைக்கும். அப்படிப்பட்ட சில நல்ல இடங்கள்

**கடற்கரை:** காற்று வீசிக்கொண்டிருக்கும் ஆள் அரவமற்ற அந்த மதிய நேரத்தில் கடற்கரைக்குச் சென்று அமருங்கள். அலைகள் எழுப்பும் ஓசையும், உங்கள் மனம் எழுப்பும் சிந்தனை ஓசையும் நல்ல பொருத்தமாக இருக்கும்.

**ரயில்:** ரயிலில் போகும்போது படிப்பதற்குப் பத்திரிகை வாங்காமல் பேனாவையும், 'நோட்' புக்கையும் எடுத்துச் செல்லுங்கள். பயணத்தை உங்களின் முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்துங்கள்

**தோட்டம்:** உங்களுக்குத் தோட்டம் இருந்தால் அது சிந்திப்பதற்கான நல்ல இடம் என்பது உங்களுக்கே தெரிந்திருக்கும். உங்களுக்குத் தோட்டம் இல்லையென்றால் நீங்கள் பூங்காவில் போய் அமரலாம்.

**மாடி:** நல்ல உயரமான மாடியில் அமர்ந்து கொண்டு நீண்ட தூரத்தைப் பார்க்க முடியும். அங்கு அமர்ந்து சிந்திப்பது நல்லது.

**குளியல்:** தொந்தரவின்றி நீண்ட நேரம் தண்ணீரிலேயே கிடப்பது நம்மை மன அழுத்தமின்றி புத்துணர்வுடன் இருக்கச் செய்யும். அத்துடன் சிந்தனையும் தூண்டி விடும்.

**விமான நிலையம்:** விமானம் ஏறப்போகிறவர்கள், இறங்கி வருகிறவர்கள், இவர்களை நன்றாகப் பார்க்கும் வகையிலான ஒரு இடத்தில் அமர்ந்து கொள்ளவும். பரபரப்பாகப் போய் வந்து கொண்டிருப்பவர்களைப் பாருங்கள். இவர்கள் ஏன் பயணம் செய்கிறார்கள். எங்கே போகிறார்கள் என யூகித்துப் பாருங்கள். அவர்கள் போகும் இடங்களுக்கு நீங்கள் போக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென யோசியுங்கள். யோசனைகளும் திட்டங்களும் தோன்றத் தொடங்கும்.

**உல்லாசமான நடை:** பொதுமக்கள் சுற்றிப் பார்க்கும் வகையில் அமைந்திருக்கும் மிகப்பெரிய வீட்டைச் சுற்றி நடந்து போங்கள். மக்கள் தங்கள் வெற்றியை எவ்வாறு பறைசாற்றி இருக்கிறார்கள் என்று பாருங்கள்.

# எங்கே சென்று விட்டது?



''அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது'' எனும் ஔவையாரின் கூற்றுக்கு இணங்க பெறுதற்கரிய மானிடப் பிறவியை எடுத்து வைத்திருக்கின்ற நாம் அனைவருமே அன்பெனும் நீரை ஊற்றி இந்தச் சமூகம் எனும் சோலையை வளப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால், இந்த அன்பெனும் நீர் சமூகம் எனும் சோலைக்குக் கிடைக்கிறதா? என்பதுதான் பெருங் கேள்வியாக இருக்கின்றது. இன்று எல்லாமே ஒரு போலித்தனமாகி விட்டது. அகத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றும் வைத்துக் கொண்டு கூடயிருந்து குழி பறிக்கும் கூட்டமாய் உறவுகளே இருக்கும் போது, ஊரவர், நண்பர்கள், சமூகம் என்று மற்றவர்களை எந்த மட்டில் வைத்துப் பார்ப்பது. இன்று பாலைவனங்களாய் மாறியிருக்கும் எங்கள் வாழ்வியலுக்கு 'அன்பு' என்பது ஒவ்வொருவர் மனதிலும் இல்லாமல் போனது தான் முக்கிய காரணமாக இருக்கின்றது. அன்பு தான் கடவுள், அன்புதான் உலகம் என்றிருந்த காலம் மலையேறி விட்டது. இன்று மற்றவன் பொருளையும் பணத்தையும் கண்டு ஆசைப்படுவதும், பொறாமைப்படுவதுமே பிழைப்பாகி விட்டது.

உழைப்பு, முயற்சி எதுவுமே இல்லாமல் சோம்பிக் கிடப்பதும் இரக்கமே இல்லாமல் களவு, வழிப்பறி என தீய செயல்களில் ஈடுபடுவதும், எல்லாவற்றுக்கும் மேலாக பிஞ்சுகளின் மீது வன்மம் தீர்ப்பதும், ஒருவரை கொலை செய்தாவது தாம் தப்பிக்க வேண்டும் என மனிதத் தன்மையே இல்லாமல் மிருகத்தனமாக நடந்து கொள்வதுக்கும் காரணம் 'அன்பு' என்பது மனித மனங்களில் இல்லாமல் போனது தான்.

அன்பில்லாத ஒரு வாழ்க்கையையும், அன்பில்லாத ஒரு குடும்பத்தையும் எம்மால் நினைத்துப் பார்க்க முடியுமா? ''யாதும் ஊரே யாவரும் கேளீர், தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்பது சங்கத் தமிழ் தந்த புறநானூற்றின் பொன்வரிகள். எல்லாமே எங்களது ஊர், எல்லோருமே எங்களது உறவினர் என்று நினைத்தால் எங்களுக்குள் ஏன் நான் பெரிது [illegible]

மனதில் உண்மையான அன்பு இல்லாமல் நாம் செய்யும் எந்தக் காரியமும் நிறைவான பலனைத் தராது. அன்பு, இரக்கம், கருணை, விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை போன்ற உயரிய பண்புகளால்தான் இந்த உலகமே இயங்க வேண்டும். இன்று குடும்பம் சமூகம் போல் உலகிலும் வல்லரசு போட்டிகளும் பொருளாதாரப் போட்டிகளும் வல்லாதிக்க சிந்தனையுமாய் நாட்டுக்கு நாடு முரண்பாடுகளும், போர்களும், பனிப் போர்களுமாய் நடைபெறுவதற்கு காரணம் கூட இந்த அன்பு வற்றிப் போனதுதான்.

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு' என அன்றே அன்பின் மகிமையை அதனுடைய வலிமையை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் வள்ளுவர். மனதில் அன்பிலாதவர்கள் எல்லாவற்றையுமே தமக்குரியதாகவே கருதுவர். ஆனால் அன்புடைவர்களோ, தமது உடல், பொருள், ஆவி என அனைத்தையுமே மற்றவர்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்பதுடன் தாம் மடிந்த பின்பும் தமது எலும்புகளைக் கூட பிறர் பயன் பெறும்படியாக கொடுத்து விடுவார்கள்.

தமக்கென வாழா பிறர்க்குடியாளர்களிடம் அன்பு என்பது வற்றாத ஜீவநதியாய் ஊற்றெடுக்கும். மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக தம் இன்உயிர்களையே அர்ப்பணிக்கத் துணிபவர்களிடம் அன்பு ஊற்றெடுக்கும்.

சூரியன் இல்லாத உலகம் எப்படியிருக்குமோ அப்படித்தான் அன்பு இல்லாத உயிர் வாழ்க்கையும். இன்று எத்தனையோ மனிதர்கள் விலையுர்ந்த பட்டாடைகள் உடுத்திக் கொண்டும் உடல் முழுவதையும் நகைகளால் நிறைத்துக் கொண்டும் நாகரிக வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால் அவர்களிடம் மன நிம்மதி என்பது துளியும் இல்லாமல் அலைவதை நாம் காண்கின்றோம்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வாழும் வகை தெரியாமல் தத்தளிக்கும் மனிதர்களை இவர்கள் கண்டு கொள்வதில்லை; உதவி செய்ய வேண்டும் என்று எண்ணுவதில்லை. எல்லா மதங்களுமே இறைவனை அடைவதற்குரிய மார்க்கமாக அன்பு வழியையே போதிக்கின்றன.

''பசியோடு இருந்தேன். தாகமாய் இருந்தேன், ஆடையற்றிருந்தேன் நீங்கள் என்னைக் கண்டு கொள்ளவில்லை'' என யேசுநாதர் கூறுவதும் அன்பு நெறியையே வலியுறுத்தி நிற்கின்றது.

மின்னலையும், நீர்க்குமிழியையும் போல நிலையற்றதாகிய மனிதவுடலை எடுத்த நாம் கூற்றுவன் வந்து எம்மைக் கவர்ந்து செல்வதற்கு முன்னமே நல்லவற்றைச் செய்ய வேண்டும். தான் சார்ந்த மனிதர்களுக்கு ஒரு துன்பம் வந்தவிடத்து துவண்டு வருந்துவதே அன்பு உள்ளம்.

எனவே மானுடராகிய நாம் துன்புற்ற மனிதர்களின் துயர் துடைத்து, வருந்தி வந்தோரை ஆதரித்து அனைத்தும் மற்றவர்களின் மேம்பாட்டுக்காக உழைத்தும் உண்மை நேர்மை உயர்ந்த இலட்சியத்துடன் அன்பின் வழியில் செல்வோமாயின் சமூகம் எனும் சோலை வனமும் பூப்பூக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு பிரணாப் மனம் கொள்வாரா?

■ யமுனா

இந்திய அரசியலில் கடந்த வாரம்இடம் பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு புதிய ஜனாதிபதித் தேர்தல். அதாவது இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதித் தேர்தல் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வேட்பாளராக பிரணாப் முகர்ஜியும், அவரை எதிர்த்து எதிரணி சார்பில் மக்களவை முன்னாள் தலைவர் பி.ஏ.சங்மாவும் போட்டியிட்டனர்.

தேர்தல் எவ்வித குழப்பமும் இல்லாமல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டன. அதன்படி பிரணாப் 69 சதவீத வாக்குகளைப் பெற்று நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வானார். எதிரணி வேட்பாளர் சங்மாவுக்கு 31 சதவீத வாக்குகளே கிட்டின.

நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த இந்தத் தேர்தலில் மொத்தம் 4,659 வாக்குகள் பதிவாகின. அவற்றில் செல்லுபடியான 4,578 வாக்குகளின் எண்ணிக்கை மதிப்பு 10 லட்சத்து 29 ஆயிரத்து 750 எனக் கணக்கிடப்பட்டது. அதன்படி பிரணாப்புக்குக் கிடைத்த வாக்குகள் 7 லட்சத்து 13 ஆயிரம் எனக் கணிக்கப்பட்டது. சங்மாவுக்குக் கிடைத்த வாக்குகள் 3 லட்சத்து 15 ஆயிரம் எனக் கணிக்கப்பட்டது. செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை மதிப்பு 18 ஆயிரத்து 221 எனக் கணிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை மொத்தமுள்ள 748 வாக்குகளில் பிரணாப்புக்கு 527 வாக்குகள் கிடைத்தன. சங்மாவுக்கு 206 வாக்குகள் கிடைத்தன.

ஆளும் கூட்டணியில் உள்ளவர்கள் கூட தனக்கு வாக்களிக்க வாய்ப்பிருப்பதாக சாங்மா கூறிவந்த நிலையில், இந்தத் தேர்தல் முடிவு அவருக்கு எதிர்மாறாக அமைந்துள்ளது. அதேநேரம் கர்நாடகாவில் சாங்மாவுக்குக் கிடைக்க வேண்டிய பாரதிய ஜனதாக் கட்சியின் வாக்குகளில் சில பிரணாப்புக்குக் கிடைத்துள்ளன. இந்த விடயம் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



பிரணாப் வெற்றிபெற்றார் என்ற செய்தியை அறிந்த பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் பல்வேறு தலைவர்கள் பிரணாப்பின் வீட்டுக்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரணாப்புக்குக் கடந்த புதன்கிழமை பதவியேற்பு விழா இடம்பெற்றது. 40 வருடங்களுக்கும் அதிகமாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் தனது 76 ஆவது வயதில் ஜனாதிபதியாக முடிசூடினார். இதுவரை ஜனாதிபதியாக இருந்த பிரதீபா பாட்டீலின் பதவிக்காலம் கடந்த 24 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. மறுநாள் பிரணாப் பதவியேற்றார்.

நாடாளுமன்றத்தில் முற்பகல் 11.30 மணியளவில் பதவியேற்பு விழா ஆரம்பமாகியது. உச்சநீதிமன்ற நீதியரசர் கபாடியா, புதிய ஜனாதிபதி பிரணாப்புக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பிரணாப் பதவியேற்றதைத் தொடர்ந்து 21 குண்டுகள் முழங்க மரியாதை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பதவிக்கு வரும் ஜனாதிபதிகள் எல்லோரும் வழமையாக கூறும் விடயத்தைத் தான் பிரணாப்பும் தனது உரையில் முழக்கமிட்டார். அதன் பின்னர் சகல மரியாதைகளுடனும் ஜனாதிபதி மாளிகை ராஷ்டிரபதிபவனுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

**பிரணாப்பின் வரலாறு**

பிரணாப் 1935 ஆம் ஆண்டு டிசெம்பர் 11 ஆம் திகதி மேற்குவங்க மாநிலத்தில் பிறந்தார். அரசியல், வரலாறு, சட்டப்படிப்புக்கள் படித்தவர். ஆசிரியராக, பத்திரிகையாளராக, சட்டத்தரணியாக பல பதவிகள் வகித்தவர். 1957 ஆம் ஆண்டு இல்லறத்தில் நுழைந்தார். அவரது நாடாளுமன்ற வாழ்க்கை 1969 இல் ஆரம்பமாகியது. காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினராக முதலில் தெரிவானார். அதன் பின்னர் 1975,1981,1993, 1999 ஆகிய ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980 இல் மக்களவைத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்டார். ஆனால் அதில் தோல்வியடைந்தார். 24 ஆண்டுகளின் பின்னர் 2009 இல் மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டார். வெற்றிவாகையும் சூடினார்.

இந்தியாவின் இளம் நிதியமைச்சர் என்ற பெருமையை தமது 47 ஆவது வயதில் பெற்றார் பிரணாப். இந்திராகாந்தி அமைச்சரவையில் 1982 இல் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திராகாந்தி படுகொலைக்குப் பின்னர் தம்மை பிரதமராக்குமாறு பிரணாப் கேட்டுப் பார்த்தார். இதனால் ராஜீவ் காந்தி கோபமடைந்தார். அவரது அமைச்சரவையில் பிரணாப்புக்கு இடம் கொடுக்கவேயில்லை. இதனால் அதிருப்தியடைந்த அவர் காங்கிரஸை விட்டு வெளியேறி ராஷ்டிரிய சமாஜ்வாதி காங்கிரஸ் என்ற தனிக்கட்சியை ஆரம்பித்தார். அதில் 3 வருடம் கூட நிலைக்கவில்லை அவர். பி.வி.நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸில் மீண்டும் ஐக்கியமானார். அப்போது திட்டக்குழுத் துணைத் தலைவர் பொறுப்பு அவர் வசமானது. 1995 இல் வெளியுறவுத் துறை அமைச்சரானார்.

2004 ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதன்பின் வெளியுறவு அமைச்சரானார். 2009 ஆம் ஆண்டு நிதியமைச்சரானார். அதனையடுத்து தற்போது இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிரணாப் ஈழத்தமிழர் நலனில் கவனம் செலுத்துவாரா என்பதுதான் கேள்விக்குரிய விடயம். இந்தியாவைப் பொறுத்தவரையில் அயல் நாடான இலங்கை விடயத்தில் முக்கியம் செலுத்திச் செயற்பட வேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டு. பிரணாப்பைப் பொறுத்தவரை அவரது அரசியல் வரலாற்றில் ஈழத்தமிழர் விடயத்தில் கவனம் செலுத்தப் பல தடவைகள் சந்தர்ப்பங்களிலும் கிடைத்திருக்கிறது. எனினும் அத்தகைய சகல சந்தர்ப்பத்திலும் அவர் சுயநலவாதியாகச் செயற்பட்டார் என்றுதான் கூற வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் முக்கிய கட்டமான முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு முக்கிய சூத்திரதாரி பிரணாப் என்பதுதான் அனைவராலும் பேசப்படும் விடயம்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே 2009 இல் நடைபெற்ற இறுதிப்போரில் பாதுகாப்பு வலயத்துக்குள் தஞ்சம் அடைந்திருந்த மக்கள் மீது குண்டு வீசிப் படுகொலை செய்தது இலங்கை இராணுவம். அந்தவேளையில் போரை உடனடியாக நிறுத்துமாறு தமிழகம் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கான சிறப்புத் தூதராகப் பிரணாப் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அதன் பின்னர் இந்தியாவுக்குச் சென்று அது குறித்துப் பல அறிக்கைகள் விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கையில், இறுதிப் போரில் அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கும்படியும் இந்தப் போர் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழி வகுத்துள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் இருந்த மூன்றரை லட்சம் மக்கள் தொகையை வெறும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் என்று குறைவாகக் கணிப்பிட்டு அறிக்கை வெளியிட்டவர்தான் பிரணாப். எனவே ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல இந்தியத் தமிழர்கள் கூட பிரணாப்பை தமிழினத் துரோகி என்றுதான் விமர்சிக்கின்றனர். ஈழத்தமிழ் ஆதரவாளர்களான வைகோ, சீமான், பழ.நெடுமாறன், த.பாண்டியன் இன்னும் பல தமிழகத் தலைவர்கள் பிரணாப்பை தமிழினத் துரோகி என்றே வர்ணித்துள்ளனர்.

எனவே இவற்றைப் படிப்பினையாக மனதில் கொண்டு புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் பிரணாப், இனியாவது ஈழத் தமிழர் விவகாரத்தில் கவனம் செலுத்திச் செயற்படுவாரா என்பதே தமிழர்கள் அனைவரதும் இன்றைய எதிர்பார்ப்பு.

## பக்தி

பக்தி என்றால் நம்பிக்கை எனலாம். நம்பு என்பதன் பகுதியடியாகப் பிறந்த சொல் நம்பிக்கை நம்புதல் என்றால் விரும்புதல் என்று பொருள். எனவே, விரும்பி நாம் கொள்கின்ற ஒன்றுதான் நம்பிக்கை. விருப்பமுடன் எதை நாம் நம்முடையது என்று ஏற்றுக்கொள்கின்றோமோ அதற்குப் பெயர் நம்பிக்கை. நாம் எத்தனையோ பொருள்களில் நம்பிக்கை வைக்கின்றோம். சிறப்புக் கருதி கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கைதான் நம்பிக்கை என்றாகின்றது. நம்பன் என்பது கடவுளின் பெயர்களில் ஒன்று.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதால் நம்பிக்கை வைக்கத் தக்க உறுதிப் பொருள் கடவுள் எனலாம். எல்லாவற்றையும் கடந்து எல்லாவற்றிலும் கலந்தும் நிற்பவர் கடவுள் என்பதால் கடவுளின் மீது நம்பிக்கை கொள்வதால் நாம் ஈடேற்றம் அடையலாம். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாகவும் விளங்கும் பேரருட் சக்தியான இறைவனிடம் இறுக்கமான நம்பிக்கை கொள்வதனால் நாம் எல்லையில்லாப் பேரானந்தம் அடைகின்றோம்.

உலகில் எல்லாமே சரியாகத் தான் இருக்கின்றன என்கின்ற நம்பிக்கையும் படைப்பில் ஒழுங்கீனமோ, பாரபட்சமோ, பிசகோ இல்லை என்ற எண்ணமும் அதில் நாம் ஒரு பகுதி என்று தெரிந்து இந்த அமைப்பில் நமக்குரிய இடத்தில் பொருந்தி அமைந்து இருப்பது தான் பக்தியாகும்.

உண்மையில் இந்தப் பெரும்படை[illegible] வியப்பு மீதுர நாம் உணரும் ஒவ்வொரு[illegible] ஆதாரமாகும். இதுதான் பக்தி. இங்கே ஏதோ சரியில்லை போல சிற்சில சமயம் ஒரு மயக்கம் உண்டாகி அதைச் சரிப்பண்ண நாம் முற்படும் போது நம்மிடம் அவநம்பிக்கை வேர்கொள்ளத் தொடங்கிவிடும். அதாவது நம்மிடம் பக்தி குன்றிவிடுகின்றது.

சமூகச் சீர்திருத்தம் செய்யும் தலைவன் முதல் தன் பிள்ளையை திருத்த முயலும் தகப்பன் வரை எந்தத் தலைவனும் எந்தச் சமூகத்தினதும் கூன் நிமிர்த்தியதில்லை. இவர்களை பக்திக் குறைவுடையவர்கள் என்று கூறினால் தப்பில்லை. ஏனெனில், உண்மை என்னவோ அதுதான் எந்தச் சமூகத்தையும் ஒரு தலைவன் நிமிர்த்தியதில்லை. தன் பிள்ளையை எந்தத் தகப்பனும் திருத்தியதில்லை. தகப்பன் திருத்தினான் என்பது உபசார வழக்குத்தான். உலகில் வந்து பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தனக்குரிய வாழ்க்கையை தானே கண்டுபிடித்து விடுகின்றான். எந்தத் திருத்தத்தையும் சமூகம் ஏற்றுக்கொண்டு நிலைத்து விட்டிருந்தால் புதிய துயரங்களும் புதிய சீர் திருத்தங்களும் தோன்றியிருக்குமா? விடயம் என்னவென்றால் படைப்பின் பான்மையில் யாவும் ஒரு ஒழுங்கில் வளர்ந்து தாழ்ந்து மாறிப் புதுமை பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. உலகில் வாழும் மனிதனுடைய மனப்பாங்கில் தான் துயரங்களும் குறைகளும் காணப்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் போதுதான் அந்த உண்மை துயரத்தை வெல்கின்றது. துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும் எண்ணற்ற உயிர்களின் பால் இரங்குகின்றது. துயரங்களிலிருந்து விடுதலை ஒவ்வொரு உயிர்க்கும் அந்த உயிரிலேயே இருக்கின்ற ரகசியம் விளங்குகின்றது. அப்பொழுதே அழிவற்ற ஒளிமிக்க புன்னகை பிறக்கின்றது.

திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவரும் வாசுகியும்



அசை போட ஒரு விடயம் 38

■ ரம்யன்

வள்ளுவர் பெருமான் தன்னை "இழைநக்கி நூல் நெருடும் ஏழை" என்று அழைத்துக் கொண்டார். அதாவது நூலை உருட்டி நெசவு செய்யும் தொழிலை அவர் செய்தார். வாழ்வாதாரத்துக்காக, அதே வேளை சமுதாயப் பணியாகத் தம்மை நாடிவரும் சீடர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுத்தார். அத்துடன் சமுதாயத்துக்குத் தேவையான நூல்களை - அதாவது திருக்குறள் போன்ற நூல்களை ஆக்கி வழங்கினார்.

வள்ளுவருக்குப் பிள்ளைகள் இருந்ததாகத் தெரியவில்லை. அதனால் வாசுகி அம்மையாருக்கு வீட்டு வேலைகளும் கணவனுக்குத் தேவையான பணிவிடைகளும் செய்வதுவே கடமையாக இருந்துள்ளது.

இருந்தாலும் பெண்கள் விடயத்தில் வள்ளுவர் ஆண் ஆதிக்க வாதியாகத்தான் இருந்துள்ளார் போல் தெரிகிறது. அந்தக் காலத்துச் சம்பிரதாயம் அப்படி இருந்துள்ளது.

வள்ளுவர் தனது அன்றாடக் கடமைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வீட்டுக்கு வருவார். அம்மையார் அவருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் செய்து முடித்து அவர் படுத்து உறங்கும்வரை இருந்து தாமும் படுக்கப் போவார். காலையில் அவருக்கு முன்பாகவே எழுந்து விடுவார். அடுத்த நாளுக்கான பணிவிடைகளைச் செய்வதற்கு. "ஏன் பிள்ளை எனக்காகக் காத்திருக்கிறாய். நீ நேரத்துடன் சாப்பிட்டுவிட்டு உறங்கப்போகாதேயன்" என்று ஒரு நாளாவது வள்ளுவர் சொன்னதாகத் தெரியவில்லை. இதற்காக வாசுகியார் மறைந்த பின் அவர் கவலைப்பட்டிருப்பது தெரிகின்றது.

வாழ்க்கைபூராவும் கணவன் தூங்கிய பிறகே தாம் தூங்கிப் பழகியிருந்த அம்மையார், ஒரு விடயத்தில் முந்திக் கொண்டு விட்டார். அதுதான் அவரது இறப்பில். வள்ளுவர் மறையும் முன்பே வாசுகியாருக்கு மரணம் சம்பவித்தது. அப்பொழுது வாய்விட்டுக் கதறியிருக்கிறார் வள்ளுவர்.

"அடிசிற்கினியாளே....

அருமையான இனிய உணவுகளை ஆக்கித்தந்தவளே...அன்புடைய மாதே... (என்னிடம் அன்பு கொண்டிருந்த பெண்ணே...) படிசொற் தவறாத பாவாய். (சொல்வதைத் தவறாமல் செய்கின்ற பாவை போன்றவளே)

அடிவருடி பின் தூங்கி (நான் படுத்துறங்கிய பின் என் கால்களை வணங்கிவிட்டு உறங்கச் செல்பவளே), முன்னெழுந்த பேதையே, (எனக்குப் பின்னர் உறங்கச் சென்றாலும் எனக்கு முன்னமையே எழுந்துவிடுகின்ற பேதைப் பெண்ணே!)

முட்டாள் பெண்ணே என்கிறார்- அப்படி நீ செய்திருக்க வேண்டாம். எனக்கு முன்னமையே படுக்கப் போய் இருக்கலாம். அப்படிச் செய்யாமல் இருந்துவிட்டாயே முட்டாள்தனமாக.

பேதையே என்ற சொல் வள்ளுவர் வாசுகிக்காக வருந்தியிருக்கிறார் என்பதைக் காட்டுவதாக உள்ளது மட்டுமல்ல. உடல் நிலைகருதி தனக்கு முன்பாகவே அந்தக் காலத்து மரபையும் மீறி நடந்து கொண்டிருந்தாலும் பரவாய் இல்லை, கடிந்து கொண்டிருக்கமாட்டார் என்பதையும் இந்தச் சொல் காட்டுகிறதல்லவா?

**தியானத்தில் கண்ட காட்சி**

கைலாசத்தில் ஒரு கூத்து நடந்து கொண்டிருந்தது. சிவனும் பார்வதியும் ஒரு மாலைப்பொழுதில் உல்லாசமாக ஆடிக்கொண்டிருந்தார்கள். அந்த ஆட்டம் உலகம் முழுவதையும் மகிழ்ச்சியில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. தேவர்கள் பரவசமுற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்ன ஆச்சரியம் சிவன் திடுமெனக் கோபமுற்று தனது தாண்டவத்தை ஆரம்பித்துவிட்டார். உலகமே கிடுகிடுவென ஆடத் தொடங்கி விட்டது. கடல் கொந்தளித்தது. காற்று சூறாவளியாக மாறியது. மரங்கள் சாய்ந்தன. மலைகள் நகர்ந்தன. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. உலகம் அழிந்துவிடுமோ என்று தேவர்கள் கருதினார்கள். சிவனின் தாண்டவம் நிற்க வேண்டும். அதை நிறுத்துவதற்கு வழி என்ன? சிவனுக்கு சினம் ஏற்பட்டதற்கான காரணத்தை அறிய வேண்டாமா? அதை யார் அறிவார்கள்? கடைசியில் உலகமே இன்புற்றிருந்த வேளையில் உலக சேமத்துக்காக இறைவனையே நினைத்துத் தியானத்தில் எவராகிலும் இருந்திருப்பராகில் அவருக்கு இறைவனின் கோபத்துக்குக் காரணம் தெரிய வரும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படி அந்தவேளையில் தியானத்தில் இருந்த மகான் யாரென்று பார்த்ததில் வள்ளுவர்தான் தென்பட்டார்.

தேவர்களின் பிரதிநிதிகளாகச் சிலர் வள்ளுவர் வாழ்ந்த குடிலுக்கு வந்தார்கள். சிவபெருமானும் உமாதேவியாரும் நடனம் புரிந்து உலகமே குதூகலத்தில் ஆழ்ந்திருந்த வேளையில் நீங்கள் தியானத்தில் இருந்துள்ளீர்கள். அதனால் சிவபெருமான் கோபமுற்று தாண்டவத்தில் இறங்கியமைக்கான காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதை அறிந்தால்தான் அவரது கோபத்தை எம்மால் சமாளிக்க எதுவும் செய்ய முடியும் தயவுசெய்து சொல்லுங்கள் என்று கெஞ்சினார்கள். வள்ளுவர் சொன்னார்.

இழை நக்கி நூல் நெருடும்
ஏழை அறிவேனோ
குழை நக்கும் பிஞ்ஞகன்றன்
கூத்து!

என்று. சிவனும்பார்வதியும் நடனம் புரிந்து கொண்டிருந்தவேளையில் சிவனின் ஒரு காதில் இருந்த குழை (நகை) கழன்று விழுந்து விட்டது. உமாதேவியார் ஆட்டத்தை நிறுத்தாமல் தன் கால்விரல்களில் அந்த நகையை எடுத்து சிவனுக்கு நேராக நீட்ட ஆட்ட வேகத்தில் சிவனின் உதடுகள் குழையில் பட்டு விடுகின்றன. குழை கால் விரல்களால் தூக்கப்பட்டதால் உமையின் கால்விரல்களை சிவன் உதட்டால் தடவியதாக மருட்சி ஏற்பட்டு அவள் அப்படிச் செய்ததை சகிக்க முடியாமல் கோபம் கொண்டதாக ஐதீகம். உமாதேவியாரால் தம் காலின் விரல்களினால் தூக்கிக்கொடுக்கப்பட்ட ஆபரணத்தை சிவன் நக்கிவிட்டார். அந்தக் கூத்தை நான் எங்ஙனம் அறிவேன். என்றவாறு சிவன் கோபமுற்றதற்கான காரணத்தை சொல்லாமல் சொல்லிவிட்டார் வள்ளுவர்.

# கண்ணீர் வடிக்கும் வியாபாரம்



**எமது பிரதேச விவசாயிகள் வானம் பார்த்து விவசாயம் செய்பவர்கள். தமது சந்தை வாய்ப்பை இன்னொருவருக்கு விட்டுக்கொடுத்துவிட்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

■ சோபனா

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" எனும் பழமொழி வியாபாரிகளுக்கு மிகவும் ஏற்புடைய ஒன்றாகும். காலமும் சூழலும் மிகப் பிரதானமாக வியாபாரத்துக்கு கைகொடுக்கின்றன.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தக் காலமும் சூழலும் சாதகமாக அமைந்தால் மட்டுமே அவர்களுக்கு எண்ணிய இலாபம் ஓரளவேனும் கிடைக்கும்.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஆலயத் திருவிழாக்கள் பரவலாக நடைபெறுவதால் வியாபாரிகள் தமது உற்பத்திப் பொருள்களை எவ்வாறு சந்தைப்படுத்த முடியும் என்பதில் ஆர்வம்காட்டாமல் இல்லை.

முக்கியமாகச் சிறுபோகத்தில் மரக்கறிப் பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் தமக்கு விளை பொருள்களாகக் கிடைத்த மரக்கறிகளைச் சந்தைப்படுத்த முண்டியடிப்பது ஒன்றும் புதிது இல்லை.

இந்த வருடம் காலபோக நெற்செய்கையைக் கடந்து சிறுபோகத்தில் மரக்கறிப் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அதிகம். குடாநாட்டில் எந்தக் காலத்தில் எவற்றை விற்பனை செய்ய முடியும் என்பதை விவசாயிகள் நன்கு அறிந்துள்ளனர்.

விவசாயிகள் பக்கம் தற்போது காற்று வீச ஆரம்பித்துள்ளது. நுகர்வோர் எவற்றில் ஆர்வம் காட்டுகிறார்களோ அதனைப் பெற்றுக்கொடுத்தாலே சந்தை வாய்ப்பு தடையின்றிக் கிடைக்கும்.

ஆலயத் திருவிழாக்கள் என்றால் இந்து சமயம் சார்ந்தவர்கள் அசைவத்தைக் கொஞ்சம் தூரமாகத் தள்ளிப் போட்டு சைவ ஆசாரமுடையவர்களாக மாறி விடுவார்கள். ஒரு நேர உணவுடன் விரதம் இருப்பவர்களுக்கு மரக்கறி பிரதான உணவாக இருக்கும். நுகர்வோர் சந்தைகளில் அதிகம் விரும்பி வாங்குவது மரக்கறிதான். நுகர்வோரின் ஆர்வம், எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க சந்தைகளில் மரக்கறி விலையும் தானாக உயர்வடைகின்றது. மக்களின் ஏகபோகத் தெரிவு இது என்பதால் விவசாயிகள் கொஞ்சம் தனவான்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தனவான்கள் யார் என்பதுதான் அடுத்த எதிர்பார்ப்பு.

எமது பிரதேச விவசாயிகள் வானம் பார்த்து விவசாயம் செய்பவர்களாச்சே. தமது சந்தை வாய்ப்பை இன்னொருவருக்கு விட்டுக்கொடுத்துவிட்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்துக்கு நீர்வளம் பிரதானம் என்பதால் கடந்த மாதங்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வரட்சி விவசாயிகளை முடக்கிவிட்டது. நிலவளம் இருந்தும் பயிரிட முடியாமல் தற்போது கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுள்ளனர்.

அடிச்சது அதிர்ஷ்டம் தென்னிலங்கை விவசாயிகளுக்குத்தான். எமது பிரதேச உள்ளூர் தரகர்கள் தமது வருமானத்தை மட்டும் பார்ப்பவர்கள் என்பதால் உள்ளூர் விவசாயிகளிடம் அற்பசொற்ப உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்ய அவர்களுக்குக் கை கொஞ்சம் கடிக்கத்தான் செய்யும்.

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என வீணாகப் பொழுதை உள்ளூர் விவசாயிகள் சந்தி முடக்குகளிலும் வீட்டுத் திண்ணைகளிலும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத்துறையை மேம்படுத்தவே பெரியளவிலான கடன் திட்டங்களை குடாநாட்டு வங்கிகள் வழங்கி வருகின்றன. இந்த நிலையில் கிராமமட்ட விவசாயிகளுக்குச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றால்போல் ஊக்குவிப்புக் கொடுக்க ஏன் எந்தவித அமைப்புகளும் முன்வரவில்லை.

பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக உள்ளூர் விவசாயிகளின் சந்தை வாய்ப்பு தற்போது தென்னிலங்கை வியாபாரிகளுக்குத் தாராளமாகக் கிடைத்துள்ளது.


மரக்கறிகள் புதிய பொலிவுடன் நுகர்வோரின் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் நாளாந்தம் உள்ளூர் சந்தைகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வண்ணமே உள்ளது. ஆனால், எமது பிரதேசத்தில் இயற்கைப் பசளைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகள் சந்தைக்குள் நுழைய முடியாமல் கிராமச் சந்தைகளிலும் பெட்டிக் கடைகளிலும் நாள் கணக்காகத் தேக்கமடைந்து கண்ணீர் வடித்த வண்ணம் உள்ளன.

உள்ளூர் விவசாயிகளுக்குச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தருணத்தில் தொடர்புடைய அமைப்புகள் ஊக்குவிப்புக் கொடுத்திருந்தால் யாழ்ப்பாணத்து மரக்கறிகளும் உள்ளூரில் மட்டுமல்லாது வெளி மாவட்டங்களிலும் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கும்.

குடாநாட்டு மக்கள் தமது தேவைக்கு ஏற்றாற்போல் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்திருப்பார்கள். உள்ளூர் விவசாயிகள் தவறவிட்ட இந்த அரிய சந்தர்ப்பத்தால் செயற்கைப் பசளைகளால் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளை உட்கொண்டு மக்கள் நோயாளர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். எது எப்படியோ எமது பிரதேச உள்ளூர் வளங்கள் மண்ணாக்கப்படுவது மட்டுமல்லாது மனித வளங்களும் முடக்கப்படும் செயல்களே தொடர்கின்றன. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கண்ணீர்..




கந்தர்மடம்
தி.மயூரன்

சூரியன் சுள்ளென்று எரிக்கத்தொடங்கியிருக்க கடைத்தெரு ஆரவாரமற்றிருந்தது. கயல்விழி வழியும் கண்ணீரைத் துடைத்து மூக்கைச் சீறிக் கொண்டே கூடையை விரித்து ஒவ்வொரு காய்கறியாகப் பார்த்து எடுத்து போட்டுக் கொண்டாள். தலை கிறுகிறுத்துக் கொண்டிருந்தது. கடைக்காரன் கண்ணீரைத் துடைக்கும் கயல்விழியைப் பார்த்துவிட்டு மீண்டும் அருகிலிருந்த வரிடம் நிறுத்திய பேச்சைத் தொடர்ந்தான். பணத்தைக் கொடுத்து விட்டு கிறுகிறுக்கும் தலையைப் பிடித்துக் கொண்டு வீதியை அவசரமாகக் கடக்க சீறிக் கொண்டு வந்த வானில் மோதினாள். கூடை பறக்க தூக்கி வீசப்பட்டாள். கூடையிலிருந்த காய்கறிகள் சிதறி ஓடின. வான் கீறிச்சிட்டு நின்று விட்டு சீறிப் பாய்ந்து மறைந்தது.

கயல்விழி முனகிக் கொண்டே மல்லாக்கக் கிடந்தாள். வானம் முகில்களற்று வெறித்திருக்க காகங்கள் பறப்பது வழியும் குருதிக்குள்ளால் சலனமாகத் தெரிகிறது. "என்னை என்னத்துக்கு காப்பாற்றினனி..?" குரல் மட்டும் காதுக்குள்ளே இரைகிறது. குருதி குமிழியிட்டுப் பெருகி வீதியில் பரவிற்று. கயல்விழிக்கு கண்கள் இருளத் தொடங்கி.. உதறிக் கொண்டிருந்த கை, கால்களும் மெதுவாய் அடங்குகின்றன.

இரவு நீண்டு கொண்டிருந்தது. முடிவேயில்லாமல் இரவுப்பூச்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் ரீங்காரித்துக் கொண்டிருந்தன. அந்த ரீங்காரம் மட்டுமே இரவில் கயல்விழிக்கு துணையாக இருந்தது. தங்கையின் குழந்தைகள் அவளை அணைத்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தன. வெளியே சுருட்டு மணமும் நீங்கி அப்பாவும் உறங்கிவிட்டார்.

ஆனால் அவளுக்கு தூக்கம் மட்டும் வருவதில்லை. இன்று நேற்றில்லை பதினைந்து வருடங்களாய்... முன்பெல்லாம் படிக்கும் காலத்தில் அவளுக்கு புத்தகத்தை விரித்ததும் தூக்கம் பீறிட்டுக்கொண்டு வரும்.. அப்படியே புத்தகத்தில் மேலே சரிந்து தூங்கி விடுவாள். அம்மா தான் இரைவாள். வந்து குட்டுவாள் வலிக்காமல். ஆனால் அம்மா இறந்து போயும் அம்மாவையே எல்லோரும் திட்டுகிறார்கள். கயல்விழியை சரிவர வளர்க்கவில்லையென்று...

அம்மா வசதியான வீட்டுப்பெண். ஒரே பெண். அழகுப் பெண். இரண்டு ஆண் பிள்ளைகளுக்குப் பிறகு, நீண்ட வருடங்களுக்குப் பிறகு பிறந்தவள். அதிக அன்பில் திளைத்தவள். கோபமோ சுடுசொல்லோ அறியாதவள். எதையாவது விரும்பி அவள் கேட்டால் ஒன்றுக்கிரண்டாகக் கிடைத்தது. அம்மாவின் தந்தை புகழ் பெற்ற தமிழாசிரியர். அவர் கடுமையாக முயற்சித்தும் அம்மாவுக்குக் கல்வி புகட்ட முடியவில்லை. ஆனாலும் காதல் மட்டும் சீக்கிரமே அப்பாவுடன் வந்தது. அப்பா அன்று கட்டிளம் காளையாக இருந்தவர். கடற்றொழில் செய்ததால் இறுகிய கட்டுடம்பு. அதனால் தானோ என்னமோ அப்பாவில் மயங்கினார். அந்தக் காலத்தில் சாதிக்கட்டுப்பாடுகள் மிக இறுக்கமானவை. அதனால் தானோ என்னமோ முழுக்குடும்பமே காதலை ஏற்காமல் வெகுண்டு போனது. ஆனால் அம்மா, அப்பா தான் வேணுமென்று எல்லோரையும் உதறிவிட்டு வந்து விட்டாள். மூன்று பிள்ளைகளை அவசரமாய்ப் பெற்றும் விட்டாள்.

நாட்டு நிலைமைகள் மோசமடைய, கடலில் தொழில் செய்யுமளவு சுருங்க அப்பாவால் கடற்றொழில் செய்ய முடியாமல் போனது. இரவு கடலுக்குப் போய் அதிகாலை மீன் அள்ளி வந்த காலம் மாறி வருமானம் தடைப்பட அப்பாவால் வேறு தொழில் செய்ய முடியவில்லை. தெரியவுமில்லை. கடற்றொழிலில் பெற்ற அனுபவம் வேறு எந்தத் தொழிலுக்கும் கை கொடுக்கவில்லை... வீட்டில் வசதி குறையத் தொடங்க இனிதாய்ப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கை இடிக்க ஆரம்பித்தது.. அம்மாவாலும் அன்றாடங்காய்ச்சியாக இருக்க முடியவில்லை.. எல்லாவற்றிற்கும் முட்டுப்பட்ட வாழ்க்கை திகட்டத் தொடங்க நாளும் பொழுதும் சண்டையாயிற்று. அப்பா குடிக்கத் தொடங்கி குடித்து விட்டு அம்மாவை அடிப்பதும் அம்மா கத்துவதுமாய் இரவுகள் கழிந்தன. கயல்விழியே சிறியவர்களான குணாவிற்கும் காஞ்சனாவிற்கும் ஆறுதலாயிருந்தாள். அநேக இரவுகள் பசியிலும் பயத்திலுமே கழிந்தன.

"உன்னை நம்பி வந்து கடைசியில கண்டதென்ன..? அப்பா அண்ணமாருடன் என்ன இராசாத்தி மாதிரி இருந்தனான்! இப்ப பிச்சக்காரியாய் மாற்றி வைச்சிருக்கிறாய்...!" அப்பா தட்டுத்தடுமாறி வந்து படியிலமர அம்மா வழமையான பல்லவியைத் தொடங்கினாள்...

"உன்னை யாரடி என்னை நம்பிவரச் சொன்னது? அங்கேயே யாரையும் கொப்பனைப் போல சட்டம்பியைக் கட்டி குடும்பம் நடத்தியிருக்கலாம் தானே..? நான் தான் வேணுமென்று என்னோட என்னத்துக்கு வந்தனி...? நீ வந்த நேரம் தொழிலும் போய் இருக்க இடமும் இல்லாமல் போட்டுது." அப்பா பல்லை நெருமினார்.

அன்றும் இருவரதும் சண்டை பலமாகியது. அப்பா ஏறி மிதித்து தூக்கி அம்மாவை வெளியே எறிந்தார். அம்மா ஒரு நாளுமில்லாதவாறு அமைதியாய் எழுந்து பார்த்தாள்.. மௌனமாக வீட்டை விட்டு வெளியே நடந்தாள். மறு நாள் பின்புற மாமரத்தில் பிணமாய்த் தொங்கினாள். தேற்றுவார் இல்லாமல் அந்த நால்வரும் கலங்கினார்கள். அப்பா தூரத்தையே வெறித்துக் கொண்டு மௌனமாயிருந்தார். எந்த உறவுகளும் எப்போதும் போலவே அப்போதும் ஆதரவுக்கு வரவில்லை.

ஆனால் கயல்விழி அழவில்லை

அதன் பின் கயல்விழி பள்ளிப் படிப்பை நிறுத்தி தம்பிக்கும் தங்கைக்கும் இன்னொரு தாயானாள். அன்றிலிருந்து அவளுக்கு இரவில் தூக்கம் வருவதேயில்லை. எத்தனை கடுமையாக பகலில் அடித்துப் புரண்டு வேலை செய்தாலும் நள்ளிரவின் பின் விழித்திருப்பது வாடிக்கையாகிவிட்டது. அத்துடன் அவளும் பின் தூங்க விடவில்லை.

அயல்வீட்டிற்கு குடிவந்தவர்கள் இவர்களுடன் நட்பாயினர். அவன் முதலில் கதைப் புத்தகங்கள் கொடுத்துப் பழகி பின் காதலனானான். நள்ளிரவுகளிலும் பகலில் யாருமில்லாத நேரங்களிலும் ஓடோடி வருவான். எல்லாமே சுகமாயிருந்தது, அப்பா காணும் வரை... அவர்கள் பின் மாமரத் தடியில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டவர் அவனின் தலை முடியைப் பிடித்து உதைத்தார். அவன் ஓட ஓடத் துரத்தித் துரத்தியடித்தார். அவன் இரத்த மொழுக தன் வீட்டினுள் புக அப்பாவும் கத்தியுடன் பாய்ந்தார். அப்பாவை குழுமி சனங்கள் தடுத்தார்கள்.

"சரி சரி சண்டை சச்சரவை விட்டு விட்டு இனியென்ன பண்ணுறதென்று யோசியுங்கோ.. ஒருத்தரையொருத்தர் விரும்பினால் வீம்பு பிடிக்காம கட்டிவையுங்கோ..!" மெதுவாய் யாரோ சொல்ல...

"என்னண்ணை விளங்காம சொல்லுறியள்...? இப்பிடியொரு குடும்பத்தில யாருக்கு பொம்பிளையெடுக்க விருப்பம் வரும்..? கூறுகெட்ட குடும்பம்.. என்ர பெடியனுக்கு வயசு குறைவென்று தெரிஞ்சும் அவன் அப்பாவியென்றதும் மடக்கப் பார்க்கிறாங்கள்..!"

அப்பா தடுத்த சனங்களுக்கூடாக திமிறினார். "டேய் யாரடா உதவாத குடும்பம்? உன்ர குடும்பம் என்ன திறமோ..? இனி நீயே சம்மதிச்சாலும் உன்ர மோனைக் கட்டவிடமாட்டான்! என்ர பெட்டைக்கு இனிக் கலியாணமே தேவையில்லை..!" அப்பாவும் கத்தி விட்டு வந்துவிட்டார். அதன் பிறகு யார் சமாதானத்துக்கு வந்தாலும் கத்தித் துரத்தி விடுவார். அவனும் சில மாதங்களுக்குப் பின் எதோ வெளிநாடு போய்விட்டான்.

கயல்விழி அழவில்லை..

கயல்விழிக்கு வழமைபோல அன்றிரவும் அப்பா நன்றாக அடித்தார். தலை முதுகு பிருஸ்டமென்று காலாலும் கையாலும் அடித்தார். அவள் முகத்தைப் பொத்திக் கொண்டு [illegible] இருந்தாள். [illegible] குளிர்ந்தது. குணா தான் ஓடி வந்து அவளின் தலையை வருடினான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"ஏன் மாடு மாதிரி அடிவாங்கிறாய்? எதுக்குமொரு அளவு வேணும். எந்த நாளும் தண்ணியைப் போட்டுட்டு உன்னை மொத்து மொத்தென்று மொத்துறார்.. இனியும் என்னால பொறுக்கேலாது.. நாளைக்கு உன்னைத் தொட்டால் பிறகு பார் என்ன நடக்குதென்று..! அவன் தாடைகள் இறுகச் சொன்னான்.

"எல்லாம் மாறும். நீ கவலைப்படாதை குணா! மனுசன் பகலெல்லாம் முறிஞ்சு வேலை செய்திட்டு இரவில கவலையை மறக்க குடிச்சிட்டு வருது. என்னைப் பற்றிக் கவலைப்படாதை. உங்களுக்காக எந்த அடியையும் வாங்குவன்.. தாங்குவன்! நான் உயிர் வாழுறதே உங்களுக்காகத்தான்...!

"எனக்கு எல்லாமே வெறுத்துப் போச்சுது. உங்களையெல்லாம் விட்டு விட்டு எங்கையாவது நிம்மதியாய் போயிடலாம் போல இருக்கு! எல்லாருக்கும் வீட்டுக்கு வந்தா நிம்மதி. ஆனா இந்த வீட்டுல மட்டும் நிம்மதியை வெளியில தேடவேண்டியிருக்குது!" கண்ணீர் வழியச் சொன்னான். அவள் அவனை அணைத்துக் கொண்டாள். நன்றாக வளர்ந்து விட்டான். அவனுக்கும் நாடும் வீடும் புரியத் தொடங்கிவிட்டிருந்தது.

மறுநாளும் அப்பா தடுமாறி வந்தார். வாசற் கதவடியில் தடுமாறி விழுந்து கத்தினார்.

"எடியேய் கயல்விழி.. வாடி சண்டாளி.. என்ர மானத்தை கெடுத்தாயே வாடி.. வெளியே.. வாடி!" கயல்விழியைத் தேடினார். அவள் அடுக்களையில் பிட்டைக் கிளறிக் கொண்டிருந்தாள். எட்டித்தலை முடியைப் பிடித்து முதுகிலறைந்தார். காலால் உதைந்தார்.

"அப்பா அவளை விடு..! எடு கையை..! குணா அவரின் கையைப் பிடித்து உலுக்கி அவளை விடுவித்தான். "விடடா உன்ர அக்காவால நான் வெளியில தலை காட்டேலாமப் போயிட்டுது. என்ர மானம் மரியாதை எல்லாம் போயிட்டுது..!"

அப்பா வெகுண்டு அடிக்க, கையை வீச அவன் அவரின் கையை மடக்கி நிலத்தில் தள்ளினான். அப்படியே மல்லாந்து பாத்திரங்கள் தெறிக்க விழுந்து புரண்டார். "உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன். என்ர மோனென்றாலும் துலைக்காமல் விடமாட்டன்..!" பாத்திரங்களைத் தட்டிக் கொட்டிப் புரண்டு கொண்டே கத்தினார். குணா பாய்ந்து வெளியே சென்று வாளி நிறைய தண்ணீருடன் வந்து அப்படியே அவரைக் குளிப்பாட்டினான்.

"விடுடா.. விடுடா.! ஒழுங்கான மனிசி வாய்க்கேல்லை. ஒழுங்கான பிள்ளைகள் வாய்க்கேல்லை. தொழில் போனதோட என்ர வாழ்க்கையே போயிட்டுது எல்லாம் என்ர தலையெழுத்து..!" ஈரத்துடன் உருண்டு கொண்டே கதறினார்.

"அக்கா என்னை மன்னிச்சிடு.. என்னால் இங்க இனி இருக்க முடியாது. வேற வழி தெரியேல்லை. உன்னைக் கரையேற்றவும் முடியேல்ல. அப்பனைத் திருத்தவும் முடியேல்லை. நான் போன பிறகாவது அப்பன் திருந்துறானா பார்ப்பம். சரியான இடத்துக்குப் போறன். வீட்டைத்தான் திருத்த முடியேல்லை. நாட்டையாவது திருத்த [illegible]. என்னைத் தடுக்காதை..!"

வாசலில் விக்கித்து கயல்விழி நிற்க.. குணா அவளிடம் சொல்லி விட்டே போனான். அவள் இனி யாருக்காக வாழ்வதென்று இருந்தாளோ அவன் போராட்டத்தில் இணைந்து விட்டான்.

கயல்விழி அழவேயில்லை..

அப்பா கலங்கவோ திருந்தவோ இல்லை. கயல்விழி தங்கைக்கு ஆதாரமானாள். நன்கு படிக்க வைத்தாள். முழு அன்பையும் அவளில் சொரிந்தாள். பின் அப்பாவால் எந்த தொழிலுமே செய்ய முடியாமல் வீட்டிலேயே இருந்து இருமிக் கொண்டிருந்தார். வீட்டில் நிரந்தர வறுமையும் பசியும் சேர்ந்து கொண்டது. கயல்விழி சிறிதாகச் செய்த தையல் வேலையில் மும்முரமானாள். மாடாய் உழைத்தாள். ஓடாய்த் தேய்ந்தாள். தங்கையை ஆளாக்குவது மட்டுமே அவளின் நோக்கமாக, இலட்சியமாக இருந்தது.

போர் முடிந்து இறுதியில் மக்களோடு மக்களாய் அகதி முகாமிற்கு வந்தார்கள். அங்குதான் குணா கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டான்.

மதிய வெயில் எரிக்கத் தொடங்கியிருந்தது. கயல்விழி வேகமாய் தையல் இயந்திரத்தை மிதித்துக் கொண்டிருந்தாள். இன்று எப்படியாவது தைக்கும் சட்டையைக் கொடுத்தாக வேண்டும். தைக்கக் கொடுத்த சரோ அக்கா நேற்றே இரண்டு தடவை வந்து விட்டாள். இனியும் பிந்த முடியாது. வெளியே வாயிற்கதவு திறக்க சகுந்தலா மாமி சோர்ந்துபோய் வந்தார்.

"கயல்விழி கேட்கப் போனனியே..?" ஆர்வமாய்க் கேட்டார். கயல்விழி மிதிப்பதை நிறுத்திவிட்டு சகுந்தலா மாமியை நிமிர்ந்து பார்த்தாள். 'நான் போய்க் கதைச்சா எல்லாம் சரியோ? விடுவாங்களோ...?" கயல்விழி பெரிதாகச் சொல்லி விட்டு மிதிக்கத்தொடங்க..

"தெரியாமலே குணாவை வெளியில எடுத்தனி..? ஏதோ என்ர பிள்ளையின்ர கஷ்ட காலத்துக்கு பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள். ஆம்பிளைத் துணையில்லாத நான்...நொந்து போய்க் கேட்கிறன்...என்னோட வந்து கதைச்சு என்ர பிள்ளையை வெளியில எடுத்துவிடனம்மா...! உனக்குப் புண்ணியமாய்ப் போகும்...!" மாமி கோணல் பார்வையுடன் சொன்னாள்.

"குணாவைப் பிடிச்ச நேரம் நாங்களும் என்ன பாடுபட்டனாங்கள்...? ஆம்பிளைத் துணையில்லாமல் தானே எல்லாம் செய்தனாங்கள். எல்லாரும் மனிசர்தானே. நீங்கள் போய் கதைச்சா விடுவாங்கள். ஒன்றுக்கும் பயப்பிடத் தேவையில்லை...!" கயல்விழி வேகமாய் மிதித்துக்கொண்டே சொல்ல மாமி கோபத்துடன் எழுந்து கொண்டாள்.

"நான் கிழவி. நான் போனா பிடிக்குமே...?" மாமி இன்னும் நின்று கொண்டிருக்க சட்டை தைக்கக் கொடுத்த சரோ அக்கா சைக்கிளில் வந்தாள். "கயல்...! கள்ளுத் தவறணையில ஏதோ சண்டையாம். உன்னைப் பற்றி யாரோ எதோ சொல்ல குணா அவனை அடிச்சுப்போட்டானாம்...!" சைக்கிளை நிறுத்திக்கொண்டே சொன்னாள்.

"இதெல்லாம் நீயாத் தேடினது கயல். தம்பியை வெளியில எடுத்த பிறகாவது நீ உன்ர வாழ்க்கையைப் பற்றி யோசிச்சிருக்கலாம். வெளிநாட்டுக் கலியாணம் சரிவந்தபோதே செய்து போயிருக்கலாம். இந்தக் கேவலத்தில இருந்து தப்பியிருக்கலாம். உன்ர சகோதரங்களுக்காக இங்க இருந்து என்னத்தைக் கண்டது மிச்சம்...? நீயாகவே உன்ர வாழ்க்கையை அழிச்சிட்டாய்...!"

"என்ர வாழ்க்கை முடிஞ்சுபோன விசயம். எனக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் வலிகளும் என்னோட போகட்டும். தம்பியும் தங்கையும் வாழுற பிள்ளைகள். அதுகளுக்கு எந்தக் கஷ்டமும் வர நான் விடமாட்டன். அதுகளுக்காகத்தான் நான் உயிர் வாழுறன்...!" கயல்விழி சொல்லிக் கொண்டிருக்கும்போதே குணா தள்ளாடி சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தான். வாசற்படியில் நிலை தடுமாறி வீழ்ந்தான். காய்கறிக் கூடையோடு புறப்பட்ட காஞ்சனா அவனைப் பார்த்து முறைத்து விட்டு கூடையை எறிந்துவிட்டு உள்ளே போக கயல்விழிதான் பாய்ந்து அவனைத் தூக்கினாள்."குணா என்னடா இது..? நீயும் அப்பா மாதிரி தொடங்கீட்டியா...?" சொன்ன அவளை அவன் முறைத்தான்.

"எல்லாம் உன்னால தானடி...! என்னை என்னத்துக்கு காப்பாற்றினனி...? அப்படியே சாகவிட்டிருக்கலாம். ஊரெல்லாம் கேவலமாய்ப் பேசுறாங்கள். விடடி இனி என்னைத் தொடாதையடி...!" அவளின் பிடியை உதறி தள்ளாடிக் கொண்டே உள்ளே போனான்.

நீண்ட காலத்துக்குப் பின் கயல்விழியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகத்தொடங்க காய்கறிக்கூடையை எடுத்து வழிகிற கண்ணீரை துடைத்துக் கொண்டே புறப்பட்டாள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் காலத்து வாக்குவேட்டை





14

எஸ்.எம்.கோபாலரத்தினம்

மேடைகளில் டி.எஸ்.சேன நாயக்காவைக் கண்டித்து தலைவர் ஜீ.ஜீ. பேசிய போது டி.எஸ்.நேரில் வந்தால் கடித்துக் குதறித் துப்பி விடுவார் போலிருக்கும். கூட்டங்களில் ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட ஆங்கிலத்தில் சிறிது நேரம் பேசும்படி ஜீ.ஜீயைக் கேட்டதும் இந்தக் காலத்தில்தான். கல்விமான்கள் இந்தத் தேர்தலில் வெளிப்படையாக எவரையும் ஆதரித்துப் பிரசாரம் செய்யா விட்டாலும் தமிழ்க் காங்கிரஸுக்கோ, ஜீ.ஜீக்கோ பொதுவாக ஆதரவாக இருக்க வில்லை. வாலிபர் காங்கிரஸ்காரரும் அவர்களை ஆதரித்தவர்களும் ஜீ.ஜீ.யை ஆதரிக்கவில்லை. தமிழ்க் காங்கிரஸின் கொள்கை தமிழர்களுக்கு தூரநோக்கில் பாதிப்பையே ஏற்படுத்தும் என்பது அவர்கள் கருத்து. காங்கிரஸுக்கு யோகர் சுவாமிகளின் ஆசியும் கிடைக்கவில்லை.

தலைவர் ஜீ.ஜீயை எதிர்த்து யாழ்ப் பாணத் தொகுதியில் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக அரசசபைக் காலத்தில் பதவி வகித்த அருணாசலம் மகாதேவா ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டார். சீனி வாசகம் மாஸ்ரரை தேடி தேர்தல் காலத்தில் வீட்டுக்கு வருவார். இது மாஸ்ரரின் பாதுகாப் பில் நான் படித்துக் கொண்டிருந்த காலம்.

இந்தத் தேர்தல் காலத்தில் ஒருநாள் பெருமாள் கோயில் வெளி மண்டபத்தில் கோயில் ஆதீன மகாசபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இப்போது போல் மகா சபையில் இருபது இருபத்தைந்து பேர் அங் கம் வகிக்கவில்லை. மண்டபம் நிறைந்து வெளியிலும் உறுப்பினர்கள் நின்ற காலம். ஜீ.ஜீ. தனது ஆதரவாளர்கள் சிலருடன் வாக்கு வேட்டைக்குச் சென்று கொண்டி ருந்தார். அந்தச் சமயம் அவருடன் வந்த சிலர் கோயில் மண்டபத்தில் மாஸ்ரரும் இருக்கிறார், எங்கள் ஆதரவாளர்களும் இருக்கிறார்கள் ஒருக்கால் எட்டிப் பார்த் துப் போவோம்'' என்று சொல்ல ஜீ.ஜீயும் ஆதரவாளர் சொல்லைத் தட்ட முடியாமல் மண்டபம்வரை வந்தார். மகா சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களில் மகா சபையின் உபதலைவரோ செய லாளரோ சமூகத்தில் பெரும் மதிப்புக்குரிய வர்களில் ஒருவரான சி.பொ.செல்லையா (இவர் ஜீ.ஜீயின் பெரும் ஆதரவாளர்) உட்பட பெரும்பாலோர் எழுந்து மண்டபத் தின் வாசலுக்கு வந்து ஜீ.ஜீயை வரவேற்ற னர். மண்டபத்தில் சீனிவாசக மாஸ்ரரும் செயலாளரும் வெ.நா. செல்லையாவும் மட்டுமே இருந்த இடத்தில் அமர்ந்திருந்தனர்.

ஆதரவாளர்களைக் கண்ட ஆனந் தத்தில் "சீனிவாசக மாஸ்ரரை ஒருக்கால் சந்திக் கலாமோ?" என்றுஜீ.ஜீ. உரத்தகுரலில்கேட்டார்.

மண்டபத்திலிருந்து அதே உரத்த குரலில் ''வீட்டில் வந்து சந்திக்கலாம்'' என்று மாஸ்ரர் பதிலளித்தார்.

தலைவரைச் சூழ்ந்து வந்த ஆதர வாளர்களும் மண்டபத்திலிருந்து சூழ்ந்து கொண்ட ஆதரவாளர்களும் திகைத்து சில விநாடிகள் எதுவும் பேசாமல் நின்றுவிட் டனர். ''அது சரி, நாங்கள் போவோம்'' என்று ஜீ.ஜீ. திரும்பினார். ஆதவாளர் சிலர் ஏதோ முணுமுணுத்தபடி பின் தொடர்ந்த னர். இதில் யாழ்ப்பாண நகரில் பேரைக் கேட்டாலே பெண்கள் நடுங்கும் சண்டியன் அளுத்கடைச் சண்முகமும் ஒருவர்.

இதன்பின் மண்டபத்தில் கூட்டத்தில் வந்து




அமர்ந்தவர்களைப் பார்த்து கூட்டத்தில் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளைப் பற்றி எடுத்துக்காட்டிய மாஸ்ரர் "உங்களைப் பற்றி உங்கள் தலைவர் ஜீ.ஜீதான் என்ன நினைத்திருப்பார். கூட்டம் நடந்து கொண்டி ருக்கையில் தலைவரின் அனுமதி பெறாமல் அவரிடம் சொல்லாமல் நீங்கள் எழுந்து போனால் இந்தச் சபைக்கு என்ன மதிப்பு?'' என்று மாஸ்ரர் எல்லோருக்கும் உறைக்கக் கூடியதாக சில நிமிட நேரம் பேசினார். அனைவரும் பதில் பேசாமல் தலை குனிந்து கேட்டுக்கொண்டிருந்தனர். அவரிடம் நேர்மையும் தகுதியும் ஒழுக்கமும் இருந்தது. இதனால் அச்சம் இருக்கவில்லை.

ஜீ.ஜீ. பின்னர் சேனநாயக்காவின் அமைச்சரவையில் அமைச்சராகப் பதவியேற் றதைத் தொடர்ந்து சி.பொ.செல்லையா அவர்கள் முகாமையாளராக இருந்த பெருமாள் கோயிலடி நெசவாளர் ஐக்கிய சங்கத் தின் நெசவுசாலையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரு வர வேற்பளிக்கப்பட்டது. இந்தச் சங் கத்தின் செயலாளராக இருந்த சீனி வாசக மாஸ்ரர் இந்த நிகழ்ச்சிக்கு வரவில்லை. வரவேற்புக்குப் பதி லளித்து ஜீ.ஜீ.உரை நிகழ்த்துகை யில் ''சீனிவாசக மாஸ்ரரைப் பார்க்க விரும்பினேன். முடியாமலிருக்கி றது'' என்று கூறினார்.

சில மாதங்களின் பின் வேறு சிலரின் முயற்சியால் மாஸ்ரருக்கு ஜீ.ஜீ. மூலம் சமாதான நீதிவான் பட்டம் வழங் கப்பட்டது. அதன் பின்னரும் கூட மாஸ்ரர் ஜீ.ஜீயுடன் பெரிதான உறவு கொண்டாட வில்லை. தீண்டாமை ஒழிப்பு இயக் கத்திலும் சீனிவாசக மாஸ்ரர் எதிர்ப்புக்க ளுக்கு மத்தியிலும் பங்குபெற்றார். யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த தீண்டாமை ஒழிப்பு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றினார். இதே கூட்டத்தில் கலந்து உரையாற்றிய சூரசங்காரம் புறக்டர் மறுநாள் அவமானப்படுத்தப்பட்டதாகப் பேசப்பட்டது. மாஸ்ரர் வழமைபோல தனது சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தார். யாழ்நகரில் பெருமாள் கோயில் உட்பட ஐந்து கோயில்கள் சகலருக்கும் வழிபாட் டுக்குத் திறந்து விடப்பட்டது இதன் பின்னர்தான்.

(வளரும்)

---



# மழுங்கடிக்கப்படும் மாணிக்கங்கள்

சிவாஜினி

இன்றைய மாணவர்கள் தான் நாளைய நாட்டை ஆளப்போகும் மகா சக்திகள். மாணவர் சக் தியே மாபெரும் சக்தி. இவை யாவும் கதையளவிலா? அல்லது செயற்பாட்டிலா? என்பது தொடர் பாக நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் போது கிடைக்கும் விடை மிகவும் வேதனை தருவதாகவே இருக்கின்றது.

உண்மையில் மாணவப் பருவம் என்பது வாழ்க்கையில் யாராலும் மறக்க முடியாத அருமையான பருவம். இந்த அருமையான பருவம் பற்றிய நல்லெண்ணங்கள் எத்தனை மாணவர்கள் மனங்களில் உதித்துள் ளன என்று ஆராய்ந்து பார்த்தால் கிடைக்கின்ற விடை திருப்தியான தாக இல்லை.

இதற்குக் காரணம் யார்? மாண வனின் பெற்றோரா? அல்லது பாடசா லைச் சமூகமா? இது தொடர்பாக நாம் அனைவரும் விழிப்புணர்வு கொண்ட வர்களாக இருந்தால்தான் காரணங் களை விரைவாக அறியமுடியும்.

ஒரு பிள்ளை தனது தாயின் அரவணைப்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு, மாணவப் பருவத்தை அடைகின்றபோது, தான் பள்ளி சென்று கல்வி கற்றுக் கொள்ளும்போது, அங்கே தனக்கு பாடம் புகட்டும் ஆசிரியர் தனது தாயின் மனநிலையோடு இருக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றது.

தாயைப் பிரிந்த ஏக்கம், புதிய சூழல் அனைத்தும் அந்த மாணவப் பருவ பிஞ்சு உள்ளத்தைக் கசக்கிப் பிழி கின்றது. இந்த நிலையில் அந்தப் பிஞ்சு மனதுக்கு ஒத்தடமாய் இருக்க வேண்டியவர்கள் அதிபர், ஆசிரியர் களே. இதனை எந்த அதிபர், ஆசிரி யர்கள் புரிந்துகொள்கின்றனர். ஒரு சிலர் இதற்கு விதி விலக்காணவர்களாக வும் இருக்கத்தான் செய்கின்றனர்.

வெறுமனே பொறுப்பற்றதாகப் பாடசாலைச் சமூகம் இருந்தால் எமது மாணவச் செல்வங்களின் மனம் வெதும்பும் நிலை தொடரும்.

இன்று குறிப்பாக அனைத்து மாணவர்களும் கடுமையான குறும் புத்தனம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அதிலும் விடலைப் பருவத்து மாணவர்கள் யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள்.

ஏனெனில் அவர்களின் [illegible] இன்றைய சமூகக் கட்டமைப்பு, பிள்ளை வளரும் சூழல், குடும்பப் பின்னணி இவற்றை அடியொற்றி சில பிள்ளைகளின் இயல்பும் இருக்கும்.

பாடசாலைகளில் மாணவர்கள் தவறுகள் விடும்போது அது அதிபர் ஆசிரியர்களால் திருத்தப்படவேண் டும். அறிவுரை கூறப்பட்ட இவ்வா றான தவறுகள் இனிவரும் காலங் களில் இடம்பெறாது பார்த்துக் கொள்ள வேண்டும். இது பாடசாலைக் கற்றோர் மட்டத்தினரின் கடமை.

மாறாக அவர்களது மனம் பாதிக் கும் படியாக கிண்டலடிக்கும் அதி பர்களும் தண்டனை வழங்கும் ஆசிரியர்களும் இன்றும் இருக்கத் தான் செய்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் குறித்த பிள்ளை உளவியல் தாக்கங் களுக்கு ஆளாகின்றது. அது மட்டு மன்றி குறித்த பிள்ளை இன்னும் பிழை கள் விடத் தூண்டப்படுவதுடன் கல்வி என்றால் வெறுப்பு என்ற நிலைக்கும் தள்ளப்படுகிறது.

இந்த நிலையைக் கொண்டு வந்தது யார்? பாடசாலைச் சமூகமே. இது உண்மையில் தவிர்க்கப்பட வேண் டிய செயற்பாடு. ஆனால் இன்று எத்தனை பாடசாலைகள் மாணவர் களது பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்கு அறிவுரை கூறி வளர்த்து விடுகின்றனரா என்றால் விடை பூச்சியமாகவே இருக்கிறது.

வாழ்வில் பிழை விடாத பிள்ளை என்று எதுவும் இல்லை. முதலில் விடும் பிழை தெரியாது விடும் பிழையாக இருக்கும் நிலையில் அது சரியாக வழிப்படுத்தப்படாத நிலையில் மீண்டும் மீண்டும் பிழை தொடருமே தவிர குறைந்து போய் விட வாய்ப்புகள் இல்லை.

ஒரு பிள்ளை பிழை விடும்போது அதைப் பாடசாலைச் சமூகம் உரிய வகையில் இனம்கண்டு தீர்வு கண்டு வைக்குமாயின் வெற்றியின் பாதையில் அந்தப் பிள்ளை பயணிக் கும் என்பதற்கு இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடம்இல்லை.

உண்மையில் இன்று மிகவும் கொடுமையான சமூகச் சீர்கேடுகளுக் குள் நாம் அனைவரும் வாழ்ந்து வருகின்றோம். எமது மாணவப் பருவத்துப் பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்ற முறை கள் தெரிந்தும், எமது பிள்ளைகள் சமூகச் சூழலால் சீரழிந்து இருப் பதைக் கண்டு நெஞ்சு நொறுங்கித் துடித்துப் போய் இருக்கின்றோம்.

இந்தப் பரிதாப நிலைக்கு என்ன செய்யலாம், என்ன பரிகாரம் என்று அனைவரும் மண்டையைப் போட்டு உடைக்கின்றோம். ஆனால் சில பாடசாலைச் சமூகங்கள் இதனைத் தூண்டிவிடும் விதமாக சில செயற் பாடுகளை மேற்கொள்வது மிகக் கொடுமையானது.

இறைவன் படைப்பில் அனைத்து பிள்ளைகளும் சமமானவர்களே. அதுபோன்றே பாடசாலைச் சூழலி லும் அனைத்து மாணவர்களும் சமமாக நடத்தப்படவேண்டும். ஒவ் வொரு மாணவர்களையும் தனித்தனி யாக வித்தியாசம் காட்டி கற்பிக்கும் போது ஆசிரியர் சமூகத்தையே மாண வச் சமூகம் வெறுக்கும் நிலைவரும்.


இன்றைய சமுதாயச் சூழ்நிலை கள், இளம் பராயத்து மாணவர்கள் சீரழிவுகளுக்குட்பட்டு தெருவில் நின்று, தம் எதிர்காலத்தைப் பாழாக் கும் நிலையைக் கூடுதலாக உள் வாங்கி வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் கண்கூடாகக் காண்கின்றோம்.

இந்த நெருக்கடியான நிலைக்குள் எமது மாணவச் சமூகம் இருக்கின் றது. இந்த நிலையில் பாடசாலைச் சமூகம் மிகவும் பொறுப்போடு செயற் படவேண்டும். இல்லையேல் எமது மாணவச் செல்வங்களை யாராலும் காப்பாற்ற முடியாது போய்விடும்.

இதனை உரிய பாடசாலை அதி பர்கள், ஆசிரியர்கள் கவனத்தி லெடுத்தால் எமது மாணவச் செல்வங் களின் பெறுமதி விலைமதிக்க முடியாத பெரும் சொத்தாகிவிடும்.

இன்று சொத்துக்கள் என்று நினைக்கும் எமது மாணவச் செல்வங் களை செல்லாக் காசாக்க முனையும் ஒரு சில பாடசாலைச் சமூகங்களின் செயற்பாடுகளுக்கு இறைவனால் கூட மன்னிப்புக் கிடையாது. மனச்சாட்சிக்கு மாறாக மாணவர்களை நடத்துவதை விடுத்தால் எத்தனையோ மாணவ மணி கள் மாணிக்கமாக ஒளிர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



142 இலக்கியக் காட்சி

# குகனொடும் ஐவரானார் தசரதகுமாரர்

வனவாசத்தின் பொருட்டு அயோத்தியினின்றும் புறப்பட்ட இராம இலக்குமணரும் சீதையும் தம்மைத் தொடர்ந்து சென்ற மக்களையும் மந்திரியான சுமந்திரனையும் அயோத்திக்குத் திரும்புமாறு அனுப்பிவிட்டு அப்பால் நடந்து கங்கைக் கரையை அடைகின்றனர். அங்கு ஒரு முனிவரின் தவப்பள்ளியில் தங்கியிருக்கின்றனர்.

இவர்களுடைய வருகையை அறிந்த குகன் என்ற படகோட்டி அங்கே வருகிறான். அவன் சிருங்கிபேரம் என்னும் நகரில் கங்கை ஓரத்தில் இருப்பவன். கறுத்த உடல், கல்போன்ற புயங்கள், புலால் நாறும் முகமும் உடையவன். தேனும் மீனும் கொடுத்து யாவருடனும் தோழமை கொள்பவன். அந்த நோக்கோடு இராமனிடம் வரும் பொழுது, வழக்கமான அம்பும் வில்லும் அவன் கையில் இருக்கவில்லை. பதிலாக மீனும் தேனும் அவன் கையில் இருக்கின்றன.

வந்தவனை இலக்குமணன் 'நீ யார்' எனக் கேட்க, படகோட்டியான அந்தக் குகன்,

''...........

தேவா! நின் கழல் சேவிக்க வந்தனென்;

நாவாய் வேட்டுவன்; நாய் அடியேன்'' என்றான் எனக் கம்பர் நமக்கு அறிமுகஞ்செய்கின்றார்.

குகனை அந்தஇடத்தில் நிற்கச் செய்து, இராமனிடம் வந்த இலக்குவன், ''அவன் உள்ளம் தூயவன்; உங்களைக்காண வந்தவன். தாயினும் நல்லவன்; எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு உரியவன்; குகன் என்னும் நாமத்தான்'' என்கிறான்.

அண்ணலும் விரும்பி ''என்பால் அழைத்தி நீ அவன்'' என்ன,
பண்ணவன் 'வருக' என்ன, பரிவினன் விரைவில் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனி வளைத்து வாய் புதைத்து நின்றான்.
[பண்ணவன்–வலிமையுடைய இலக்குவன். கண்ணன்–இராமன்]

அன்பு கனிய 'இரு' என இராமன் சொல்லவும் அவன் இருக்கவில்லை. அளவு கடந்த அன்பினனாய்த் தான் கொணர்ந்த கையுறைப் பொருளான தேனையும் மீனையும் முன்வைத்து உங்கள் உள்ளம் எப்படி ? எனக் கேட்கிறான் குகன்.

முதிர்ச்சியும் பண்பும் கொண்ட அவ் வேடனைப் பார்த்து ''அவற்றை நாம் ஏற்று உண்போம்; நீவிர் சென்று சுற்றத்தாருடன் இருங்கள். நாம் இங்கிருந்து புறப்படும் போது நாவாயுடன் வந்து சேருக''. என்கிறான் இராமன். ஆனால் குகனோ, இவ்வாறான நிலையில் உங்களைக் கண்ட பின் யான் போக மனங் கொள்ளேன்; இங்கு அடிமையாய் இருப்பேன் என்கிறான்.

பகைவர் பக்கத்திலிருந்து ''அபயம்'' என்று வருபவனை அடைக்கலம் கொடுத்து வைத்திருக்கும் இராமன், பிரதி உபகாரம் வேண்டாது வரும் குகனைத் தள்ளி வைப்பானா?

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல் (குறள் 443) என்ற வள்ளுவன் வழியில் நின்று குகன், இராமனது நட்பை விரும்புகிறான்! இதனை மனங்கொண்ட இராமன், கோதை வில் குரிசில்! அன்னான் கூறிய கொள்கை கேட்டான் சீதையை நோக்கி, தம்பி திருமுகம் நோக்கித்தீராக் காதலன் ஆகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன் யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு எம்மோடு என்றான். இப்படி இராமன் சம்மதம் என்றதும் குகன் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறான். இலக்குமணன் அண்ணனையும் அண்ணியையும் காத்து இமைப்பிலனாய் விடியும் வரை நிற்கவும், குகன், தன் ஏவலாளருடன் வில்லும் அம்பும் தாங்கிச் சுற்றுச் சூழலைக் கவனித்துக் கொள்கிறான்.

குகனது அன்பைக் கண்டபின், இராமன் தானாக எதுவும் முடிவு எடுக்காது, சீதையினதும், இலக்குமணனதும் மனநிலையை அறிந்து கொள்வதற்காக, அவர்களது முகத்தை நோக்குவதாகக் கம்பர் கவி புனைந்திருப்பது கற்று இன்புறத்தக்கது!'

இராமன், வேறு சந்தர்ப்பங்களிலும், அங்கு உடன் நிற்போரது எண்ணத்தை அறிந்து கொள்வதில் தவறுவதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வோமாக.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்ற பெரியோர் சொல்லும்,

அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம் (குறள் 706) என்னும் வள்ளுவன் நீதியும் இருப்பதை உணர்ந்தே சீதை இலக்குமணன் இருவரையும் பேச வைக்காது முகம் நோக்கி அவர்கள் எண்ணத்தை அறிந்து கொள்கிறான்.

மேலும், குகன் முதன் முதல் இலக்குமணனுடன் உரையாடிய பொழுது, கங்கையைக் கடக்க வேண்டிய தேவையை அவன் அறிந்து கொண்டதனால், உபகாரம் செய்வதில் ஆர்வமுள்ளவன், அரச வம்சத்தவரான இவர்களுக்கு உதவி செய்வது பெரும் பேறாகும் என எண்ணியிருக்கிறான். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது போல, விட்டுப் பிரிய மனமின்றி அழுது கண்ணீர் சிந்தி அவர்களுக்கு அடிமைவேலைசெய்கிறான். பின்னர் உத்தேசித்த தினத்தில் நாவாயுடன் வந்திருக்கிறான் குகன் என்பதையும் நாம் காண்போமாக.

மூவரையும் அன்போடு படகில் அமரச் செய்து பக்குவமாக அக்கரை சேர்க்கிறான் குகன்.

நாவாயிலிருந்து பேசும் போது, எமது தீர்த்த யாத்திரையை முடித்து திரும்பும் போது மீண்டும் இங்கு வருவோம் எனக் கூறிய இராமன்,

''.....................

என் உயிர் அனையாய் நீ; இளவல்
உன் இளையான்; இந்த
நன்னுதல் அவள் நின்கேள்; நளிர்
கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது; நான் உன் தொழில்
உரிமையின் உள்ளேன்'' எனவும்,
'அன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது'
அது அன்றிப்
பின்பு உளது; 'இடை மன்னும் பிரிவு உளது'
என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்; முடிவு உளது
என உன்னா
அன்பு உள; இனிநாம் ஓர் ஐவர் உளர் ஆனோம்.'' எனவும் கூறியவன், படகிலிருந்து இறங்கித் தம்பி இலக்குமணனோடும் சீதையோடும் செல்ல, குகனும் அவர்களிடமிருந்து விடை பெற்றுத் திரும்புகிறான். இழிந்த குலவோன் என்றும் பாராது, தன்னிடம் பேரன்பு காட்டிய குகனைத் தன் உடன்பிறந்தாரில் ஒருவனாக ஏற்று உவக்கிறான் இராமன்.

இவ்வாறு, பிரதியுபகாரங் கருதாத குகனது அன்பின் செயற்பாடு இராமனது உள்ளத்தில் என்றும் இருந்தது என்பதனைப் பின்னர் விபீடணனைச் சேர்க்கும் பொழுதும் குகனை நினைவு கூர்ந்தான் இராமன் எனக் கம்பர் காவியம் புனைந்துள்ளமை இன்புறத்தக்கது.

ஆறாவதாக சுக்கிரீவன் அபயம் என்று அடைக்கலம் புகுந்தான். அடுத்து இலங்கையில் விபீடணன் இராமனிடம் சேர்ந்தான் விபீடணனுக்கு அபயம் அளிக்கும் போது இராமன்,

''குகனொடும் ஐவரானோம் முன்பு; பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம் உழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை''

எனக் கூற வைத்து, இராமனுக்கு கானக வாழ்க்கையைக் கொடுத்து தசரதன் 'புதல்வரால் பொலிந்தான்' எனக் கம்பர் காவியம் செய்த அழகையும் இங்கு நாம் காண்போமாக!



மட்டுவில் நா.நல்லதம்பி




''..யாரோ ஒருவன் சொன்னான் என்று சீதையை நடுக்காட்டில் விட்டு வரும்படி தன் தம்பியிடம் கூறி அனுப்பியபோது இராமனின் மென்போக்கு எங்கே போயிற்று?...''

-உரும்பிராய் ஞானாம்பிகை

## இராமன் மென்போக்கு உடையவன்

இராமனுக்கு இருந்தது மென்போக்குத்தான். ஞானாம்பிகை வன்போக்கு என்று கூறியுள்ளார். இது வருந்தத்தக்க விடயம்.

பொறுமையே வடிவான இராமன் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டியவன். இராவணனை போருக்கா சமாதானத்துக்கா வருவாய்? என அங்கதனைத் தூது அனுப்புவதும் தாய் சொல் கேட்டு கானகம் சென்றமையையும் குறிப்பிடலாம்.

இராமன் காட்டில் ஏற்படும் கஷ்டங்களை சீதைக்கு எடுத்துக் கூறியும் அவள் கேட்கவில்லை. கானகம் இராமனுடன் சென்று துன்பப்படுகிறாள். சீதையை துன்பப் படக்கூடாது என்றுதான் அவன் அவ்வாறு கூறினான்.

காட்டில் இராமனை சூர்ப்பனகை தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்த என் மீது நீ ஆசைப் படாதே. என் மனைவி என்னுடன் உள்ளாள். இரண்டாம் விவகாரம் தொந்தரவுக்கு இடமாகும் எனக் கூறுவதும் தன் மனைவி மீது கொண்ட காதலையே வெளிப்படுத்துகிறது. இந்தக் கால ஆண்கள் இராமனைப் போல் உள்ளனரா? விரல் விட்டு எண்ணவே முடியாது.

சுமித்திரா, மீசாலை.

## இராமனிடம் காணப்பட்டது வன்போக்கே

மிதிலையிலே முறிந்திருந்த சிவதனுசு என்ற வில்லைத்தான் இராமன் முறித்து சீதையை மனைவியாக்கினான். முறிந்த வில்லை முறிப்பது தான் இராமன் அறிந்த தர்மமா? சீதை எனும் பெண்மானுக்காக பொய்மானை பிடிக்கப்போய் தன்மானம் கெட்டுத்தவித்தான்.

இராமர் பாதம் பட்ட ஒரு கல் பெண்ணாக மாறியது என்றால் இராமனது கைபட்டு இருந்தால் சூர்ப்பனகையும் கற்பு நகையாகி இருப்பாள்தானே? அகலிகை உயர்குலத்து பெண் என்பதால் உதவி செய்த இராமன்.

அரக்ககுலத்தில் பிறந்ததனால்தானே தம்பி இலக்குமணன் சூர்ப்பனகையின் மூக்கையும் மார்பையும் அறுத்தபோது மௌனமாக நின்றான். இதுதான் இராமன் பெண்ணுக்குக் கொடுத்த மரியாதையா? இவ்வாறு தனது குணத்தை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளும் இராமன் மனைவியை மட்டும் நேர்மையாகவா நடத்தியிருப்பான்.

சீதையை காட்டுக்கு அனுப்பியது, தீக்குளிக்க வைத்தது எல்லாம் அவனது வன்போக்கைத்தான் உணர்த்துகின்றது.

வதனா, கரவெட்டி.

## வாசகர்களே!

உரும்பிராய் ஞானாம்பிகையின் கருத்தை ஒட்டியும், வெட்டியும், கீறியும், கிழித்தும், சேர்ந்தும், தோள் கொடுத்தும் உங்கள் கருத்து எதுவானாலும்

'சூரியகாந்தி' 361,
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு 100
சொற்களுக்குள் அனுப்பி
வையுங்கள்



தரமும் பண்பும் கண்டு பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தேடல்

பூங்காற்றாய்
என் வாழ்வில்
வீசிய உன் நினைவலைகள்
புயல் காற்றாய்
என் இதயத்தை
தாக்கினாலும்
இருட்டினிலே
நிலவொளியில் நீயிருக்கும்
இடத்தை
தேடுகிறேன்
எந்நாளும்
தேடித்திரிகின்ற
என் வாழ்நாளில்
தேடல்தான்
முடிந்துவிடுமா?
தொடர்ந்திடுமா?

சிந்து சிவதாஸ்,
சுதுமலை தெற்கு.



# அவர்களுக்காக!

இமயத்தையே தாங்கும்
வல்லமை கொண்டவர்கள்
தம்முடைய வாழ்வில் விடியல்
வராதா? என்றுதான்
காத்திருக்கிறார்கள்

எந்த தேவதையும் அவர்களை
ஆசிர்வதிக்கவில்லை - ஆனால்
எல்லா சாத்தான்களாலும்
சபிக்கப்பட்டிருக்கின்றனர்

வேதனை அவர்களுடைய
முகத்தில்தான் தனது
விலாசம் குறித்து வைக்கிறது
அந்தக் கண்ணீரின் கலாசாலைகள்

வானில் பறக்க சிறகு கேட்கவில்லை
சுதந்திரமாகப் பூமியில் நடமாட
விடுதலை கேட்கின்றனர்

பதவி என்கின்ற சிம்மாசனம்
கேட்கவில்லை
மறுவாழ்வு என்ற ஊன்றுகோல்
கேட்டுத்தான் ஓலமிடுகின்றனர்
சொந்தத் தாய், தந்தை கூட
அந்நியமாகிப் போனார்கள்
சுற்றத்தாரின் கண்களில்

எப்போதும் அவர்கள் குற்றப்
பத்திரிகைதான்
விடுதலை வேண்டி அனுப்பி
வைத்த கருணை மனுக்களை
அடுக்கி வைத்தால்
இன்னொரு இமயத்தையே
உருவாக்கிவிடலாம்

நம்பிக்கையிழந்த நடை
வெறிச்சோடிப் போன அந்த
விழிகள்....
வறட்சி மிதக்கும் முகம்
அவர்கள் காலமெல்லாம்
இருட்டறையில் இருக்கவேண்டிய
கழுவப்படாத புகைப்படச் சுருள்களா?

சிறை எனும் கம்பிகளுக்குப் பின்னால்
நான்கு சுவர்களுக்கிடையில்
புழுங்கித் தவித்துக் கொண்டிருக்கும்
அவர்களுக்காக நாம்
விசிறிகளாகவேனும் இருப்போமா?
விளக்கேற்றுவோமா?
வெளிச்சமே அறியாத அவர்கள்
விழிகளுக்கு!

வந்தனா,
கரவெட்டி.

# வாழ்ந்து விடுவோம்...

திண்மையாய்.....
திரட்சியாய்..... என்

இதயத்தின் கனம்
அதிகரித்துக்
கொண்டிருக்கிறது

சேதாரம் இன்றி செத்துக்
கொண்டிருக்கிறேனோ....!

நேற்றைய நாள்
இவ்வாறு இல்லையே

இன்று.....
புரிந்து கொண்டேன்!
புன்னகையால் வசீகரித்து
உன் மொத்த
உருவத்தையும்
புதைத்து விட்டாய்
என்னில்

இது சாவதற்கான
தருணமல்ல வா......
வாழ்ந்து விடுவோம்!

அ.சூரியன், ஊறணி.

# சதி

பொய்கள் ஆர்ப்பரித்து
நடமாடும் இந்தப் பூமியில்
உண்மையின் உறக்கத்தை
கலைக்க - எனது
பாதச் சுவடுகள் மிகுந்த
கவனத்துடன் ஆனாலும்
வீரமாய்ப் பயணிக்கின்றன
எங்கும் என் உயிருக்கும்
உத்தரவாதமோ
விதியோ
விதிப்படி இல்லை
சதிப்படி......

கு.சக்தீனா,
வேரவில்.



# எனது காதல்

எல்லோரையும் போல்
எனது காதலை
வார்த்தைகளால் வர்ணிக்கவோ
சொல்லாட்சியால்
வெளிப்படுத்தி
உண்மைக் காதல்
இதுதான் என்று
உலகறிய பழைய
பல்லவி பாடவோ
முன்வரவில்லை
இறுதியாய்ச் சொல்கிறேன்
புதுவிதமாய்ச் சொல்கிறேன்
பெண்ணே நீ காதலித்தது
உண்மை என்றால்
இறுதிவரை காத்திரு
நான் இறந்தாலும்
காத்திரு எனது
காதலுடன்.....



# அந்தநாள் ஞாபகம்

விண்ணதிரும் வெடிவெடிக்க
வியந்து நான் பதைபதைத்து
சண்முகனே சிவனே என
சரணடைந்தேன் மரத்தினோரம்....

என்னருகில் அந்த மரம்
எழில் வளமாய் இல்லையெனில்
இன்னிசைகள் பாடுவேனோ?- இன்று
இழந்திருப்பேனே என்னை...
கண்ணிமைத்த பொழுதிலெனைக்
கொல்ல வந்த 'ஷெல்' தாங்கி
வண்ணமுனைச் சிதைத்து - எனை
வாழ வைத்த பெருவளமே

என்ன சொல்ல என்னுள்ளே
ஏற்றவேளை உன்னுதவி
முன்னரேயே கிடைத்தமையால்
முதுகெலும்பு தவறியது
மண்வளமே மட்டுமல்ல
மனித உயிர்க் காப்பரணே
வண்ண இனிய பனையே - உனை
வாழும்வரை எழுதிடுவேன்

மாணியூர் ரட்ணேஸ்.

# காதல்

காதல்
கடவுளுக்கான தேடல்
கண்ணீரில் பயணம்
உணர்வுகளின்
உறைவிடம்
இது காமமற்ற அல்ல
களங்கமற்ற இரு
இதயங்களின் காவியம்
இரு உயிர்கள் ஒரு
இதயத்தில் வாழ்ந்திடும்
உன்னத உறவு
வார்த்தைகள் இல்லை
வர்ணிப்பதற்கு
வாழ்ந்தால் மட்டும்
புரிந்திடும் புனிதமான
உறவு



வி.மீரா
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணுக்குப் பெண்ணே.....

அருவி

பெண்கள் இன்று பலதுறைகளிலும் முன்னேறியிருக்கிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் அவர்கள் மனதளவில் முன்னேறியிருக்கிறார்களா? அல்லது மாறியிருக்கிறார்களா? என்றால் அங்கே 'இல்லை' என்ற பதில்தான் இருக்கின்றது.

இப்போது ஆட்சிபீடங்களிலும் சரி, உயர் பதவிகளிலும் சரி, இன்னும் பல்துறைகளிலும் சரி அரியாசனத்துக்கு சரியாசனமாய்ப் பெண்கள் அமர்ந்திருப்பதாக பெருமுழக்கமிடுவார்கள். ஆனால் அவர்களின் மனங்கள் மட்டும் போட்டி, பொறாமை, பேராசை, விட்டுக்கொடுப்பின்மை, புறங்கூறுதல், கடும் சொற்களைப் பயன்படுத்துதல் போன்ற பல குண இயல்புகளிலிருந்து இன்னும் விடுபட்டதாக இல்லை.

சமூகப் பணிகளிலும் சரி, அலுவலகங்களிலும் சரி, பொது இடங்களிலும் சரி கூடிக் கொள்ளும் பெண்கள் பலர் முகத்துக்கு நேரே தேனொழுகப் பேசுவார்கள். பின் குறித்த நபர் அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டால் அவர் பற்றி தரக்குறைவாகப் பேசுவதும், கூடியிருந்து இல்லாத ஒருவர் பற்றி அவரது நடை, உடை, பாவனை, நடத்தை பற்றி மணிக்கணக்காய் விமர்சிப்பதும், கடமையின் நிமிர்த்தம் காலநேரம் பார்க்காது உழைக்கும் பெண்களுக்கு கீழ்த்தரமான பட்டங்கள் சூட்டி மட்டம்தட்டிக் கொள்வதும் என அவதூறுகள் பேசும் பெண்களைத்தான் அதிகம் காண முடிகின்றது.

பெண்ணினத்தின் மீது விழுந்திருக்கும் இந்தச் சாபக்கேட்டிலிருந்து விடுபட்டு மாற்றம் ஒன்றை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெண்ணின் கையிலுமே இருக்கின்றது.

பெண்ணே...! சக பெண்ணைச் சோதரியாய் நினைக்கக் கற்றுக்கொள். தோழமையோடு அவளது கரத்தை இறுகப் பற்றிக்கொள். தாய்மைக்கே உரிய நேசிப்பை உன்னுள் வளர்த்துக்கொள். இப்போ உன் மாற்றத்தின் ஊடாக புதுயுகம் ஒன்றைப் படைக்கப் புறப்படு....!

அம்மா உங்கள் கருவறையில் பத்து
மாதம் கண்மூடிக் கிடந்தபோது
வெளிச்சத்தில் வாழ்ந்தேன்-இன்று
கருவறையை விட்டு வெளியே
கண்கள் திறந்த பின்னர் இருளில்
வாழ்கிறேன்-அம்மா
மீண்டும் வரவா உங்கள் கருவறைக்குள்



சுரேஷ் ஜனந்தினி

# கருவறை வாசம்

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
**"திலகம்",**
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

★ வேலைக்கு செல்லும் தம்பதிகள் வேலை விடயங்களை வீட்டில் விவாதிக்காதீர்கள்.

★ கணவன்–மனைவிக்குள் பிரச்சினை ஏற்படுவது சகஜம் அதனை பிள்ளைகள் எதிரில் வெளிக்காட்டாதீர்கள்.

★ உங்கள் துணையின் குறைநிறைகளை மற்றவர்களிடம் விமர்சனம் செய்யாதீர்கள்.

★ பிரச்சினைகள் ஏற்படும் போது அதனை உடனுக்குடன் தீர்த்திடுங்கள்.மாறாக இன்னொருவர் வந்து சமாதானம் செய்யும்படி நடந்து கொள்ளாதீர்கள்.

★ உங்கள் துணையின் கடந்த கால வாழ்வின் கசப்பான சம்பவங்களை அறிந்துகொண்டால் அதனை அப்படியே மறந்துவிடுங்கள்.

★ எவ்வளவு கோபம் இருந்தாலும் மனைவியை அடிக்காதீர்கள் பிரச்சினைகள் பெரிதாகின்றது என்றால் அவ்விடத்தை விட்டு நகர்ந்துவிடுங்கள்.

★ விழாக்கள், கொண்டாட்டங்களுக்கு செல்லும் போது தம்பதிகளாகவே சென்று உங்கள் வாழ்த்தைத் தெரிவியுங்கள்.

★ அன்றாடம் உங்கள் வாழ்வில் ஏற்படும் சம்பவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்.

★ கணவன் தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்த்துக்கொண்டிருக்கும் போது சீரியலுக்கு மாற்றும்படி கட்டாயப்படுத்தாதீர்கள்.

★ இன்பத்திலும் துன்பத்திலும் உன்கூடவே இருப்பேன் என்ற நம்பிக்கையை உங்களின் செயல்களினால் துணைக்கு புரியவையுங்கள்.

வந்தனா
கரவெட்டி



# இல்லறம் சிறக்க....



# நேரம் பொன்னானது

தீவகி



நேரம் பொன்னானது. பொன்னான இந்த நேரத்தை நாம் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள வேண்டும். இன்று வேலைக்குப் போகும் பெண்கள் ஏதோ பம்பரமாய் சுழன்று தங்கள் தங்கள் வேலைகளை முடித்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்து கணவனை வேலைக்கு அனுப்பிவைத்துவிட்டு அரக்கப் பரக்க தாமும் தயாராகி ஓடி விடுகிறார்கள். அவர்கள் பணி முடித்து வந்தாலும் திரும்பவும் வீட்டு வேலைகள் அது இது என்று நேரம் போவதே தெரியாமல் ஓடிக்கொண்டே இருப்பார்கள்.

ஆனால் வேலைக்கு செல்லாது வீட்டில் இருக்கும் பெண்களில் பலர் பொழுதை வெட்டியாக்குவதுதான் கவலைக்குரிய விடயம். இன்று அனேகமானவரிடம் தேவையிருக்கிறதோ இல்லையோ என்னபாடு பட்டாலும் மோட்டார் சைக்கிள் மட்டும் வாங்கிவிடுவார்கள். காலையில் பிள்ளைகளை பாடசாலைக்கு கூட்டிப் போனால் அதற்குப் பிறகு அவர்களைப் பிடிப்பதே கடினம். உறவுகள், நண்பர்கள், அறிந்தவர் என்று எல்லா வீடுகளுக்கும் போய் அரட்டை அடித்துவிட்டு திரும்பவும் பிள்ளைகளைப் பாடசாலையால் கொண்டுவந்து விட்டபின் ஓடியோடிச் சமைப்பார்கள். பின் திரும்ப பிள்ளைகளை ரியூசனுக்கு விட்டுவிட்டு எப்படியோ பொழுதைப் போக்கிவிட்டு பொழுது சாய்ந்த பின் வீடு திரும்புவார்கள். இவர்கள் வீட்டு வேலைகளையும் ஒழுங்காகச் செய்யாமல் சமூகத்திடமும் நல்ல பெயர் எடுக்காமல் இருப்பதுதான் மிச்சம்.

இவர்களது வீட்டுக்குப் போனால் சமையல் கூடம் தாறுமாறாய் கிடக்கும், உடுப்புக்கள் அங்கும் இங்குமாய் கிடக்கும் எதிலும் ஒரு ஒழுங்கும் இருக்காது- ஒழுங்குபடுத்த நேரமும் இருக்காது.

இது ஒரு சாரார், இன்னொரு சாரார் ரீ.வி தொடர்களுக்குள் மூழ்கிப் போவதும் ரெலிபோன், அயல்வீட்டு அரட்டை என தம் காலத்தை ஓட்டுகிறார்கள்.

இப்படியே பொழுதை வீணடிப்பது சரிதானா? முதலில் எம்மையும் எமது சூழலையும் சுத்தமாக சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும் அதற்காக நேரத்தைச் செலவு செய்யலாம்.

வீட்டை வீட்டுச் சுற்றுப்புறத்தை அழகுபடுத்துவது என்பது ஒரு கலை அதற்காக நேரத்தை ஒதுக்கலாம்.

வீட்டில் இருந்து கொண்டே பொருள் ஈட்டக்கூடிய தையல், கைப்பணிப் பொருள்கள் செய்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், போன்ற பயனுள்ள பணிகளைச் செய்து நேரத்தைக் கழிக்கலாம்.

நேரம் பொன்னானது என்பதை உணர்ந்து செயற்பட்டால் வீட்டிலும் அமைதி நிலவுவதோடு சமூகத்திலும் நல்ல பெயர் வாங்கலாம் பெண்ணுகளே.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோத உயிரினங்கள்


நீர்யானை

சத்தமிடாத விலங்கு - ஒட்டகச் சிவிங்கி
ஞாபகசக்தி கூடிய விலங்கு - யானை
நீலநிற இரத்தத்தை உடைய கடல் உயிரினங்கள் - நண்டு, இறால்
பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை - பென்குயின்



மிகப் பெரிய வாயுள்ள விலங்கு - நீர்யானை
பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
கண்கள் மூலம் வியர்வை வெளியேற்றும் உயிரினம் - முதலை
நாக்கின் மூலம் வியர்வை வெளியேற்றும் உயிரினம் - நாய்
பூவின் மூலம் சுவாசிக்கும் உயிரினம் - மீன்

## உயிரிகள் வாழ உதவும் நீரைக்காப்போம்



உலக உயிர்கள் எல்லாம் வாழ உதவும் நீரே உன் இயல்புகளையும் எமக்கு உதவும் தன்மையையும் நாம் மறப்போமா? அருமைத் தண்ணீரே நன்னீராய் நீ எமது தாகம் தீர்த்திடுவாய்? நீ இலவசமாக இயற்கை அன்னை தந்த வளம். ஆனாலும், நாம் உன்னைப் பாடாய்ப்படுத்துகிறோம். உன்மீது குப்பைகளையும், நஞ்சுகளையும் கொட்டி உன் தரத்தைக்கெடுக்கின்றோம். அதனால்தான் நீ அசுத்தமான கோபத்தோடு எம்மை அழிக்கத் துணிந்தாயா!

தொற்றுநோய் பரப்பும் ஈ நுளம்புகளை ஏராளமாக தோற்றுவிக்கின்றாயே! மன்னித்திடு - உன்னை அசுத்தம் செய்யாது காத்திடுவோம். கடல், குளத்து, கிணற்று நீரே உன்னைக் கண் போலக் காத்திடுவோம்.

சா. பபிதா
கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

சிவராமன் மகா சோம்பேறி, படிப்பறிவில்லாதவன். முன்னேற வேண்டும் என்ற ஆர்வமிருந்தாலும், சோம்பேறித்தனத்தால் எதையும் செய்யாமல் காலம் கழித்தான். கிராமத்தார் அனைவரும் தன்னை ஏளனமாகப் பேசுவதால், ஒரு நாள் வெறுத்துப் போய் அக்கிராமத்தை விட்டே வெளியேறினான். நமக்கு யாருமே உதவி செய்ய மறுக்கிறார்களே..எப்படியாவது பெரும் பணக்காரனாகி அவர்கள் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என எண்ணிக் கொண்டு பயணித்தான்.

வெகுதூரம் பயணித்த சிவராமன், காட்டு வழியே செல்கையில் ஒரு முரடன் பெரிய மூடை மற்றும் வாளுடன் தூங்குவதைக் கண்டான். மெதுவாக அவனருகில் சென்று மூடையைப் பிரித்துப் பார்த்து, அதில் தங்க நாணயங்கள் இருப்பதைப் பார்த்து அசந்து போனான். படிப்பறிவில்லாததால் தன்னால் அதிகம் சம்பாதிக்க முடியாது என்பதால், அந்த நகைகளை எடுத்துச் சென்று வியாபாரம்செய்யலாமா எனயோசித்தான். தனது எண்ணத்தை உறுதிசெய்துகொண்டு மூடையை இழுத்தான். அப்போது திடீரென கண்விழித்துக் கொண்ட அந்த முரடன், சிவராமனை நோக்கி பாய்ந்தான். பயம் காரணமாக கீழே கிடந்த வாளைச் சிவராமன் சுழற்ற, அது அந்த முரடனின் கழுத்தில் பாய்ந்து அவன் இறந்தான்.

உடனே மூடையை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த கிராமத்துக்குச் சென்றான் சிவராமன். அவனது சட்டையில் இரத்தக்கறை படிந்திருப்பதை ஊர் பெரியவர்கள் கண்டு சந்தேகித்தனர். இதைப் பார்த்து சுதாரித்துக் கொண்ட சிவராமன், "நான் ஒரு வியாபாரி. என் கையிலிருக்கும் நாணயங்களை ஒருவன் கொள்ளையடிக்க முயன்றான். அவனை நான் கொன்றுவிட்டேன். அவனிடமிருந்து இந்தப் பையை எடுத்து, காவல் நிலையத்தில் ஒப்படைத்து விடலாம் என புறப்பட்டேன்" என ஒருவாறாக சமாளித்தான். உடனே அந்த முரடனின் உடலைச் சென்று பார்த்த மக்கள், அவன் வெகு நாள்களாக ஊர் மக்களை மிரட்டி கொள்ளையடித்து வந்த திருடன் என்றும், நேற்றிரவு சில வீடுகளில் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறினர். நகைகளைப் பறிகொடுத்த சிலர் மட்டும் சிவராமன் கையிலிருந்த மூடையிலிருந்து, தங்கள் நகைகளை மட்டும் தேடி எடுத்துக் கொண்டனர். உடனே அந்த ஊர் மக்களின் கதாநாயகனாக உயர்ந்தான் சிவராமன். "நீங்கள் பெரிய சேவை செய்துள்ளீர்கள். நீங்கள்தான் இனி எங்கள் காவல் தெய்வம்" எனப்புகழ்ந்த ஊர் மக்கள், பையில் மீதமிருந்த அடையாளம் தெரியாத நகைகளை அவனிடமே திருப்பிக் கொடுத்தனர். இனி வேறு எங்கும் செல்லக்கூடாது என்றும்


அன்புக்கட்டளையிட்டனர். அன்று முதல் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அறுசுவை உணவு சிவராமனுக்கு அளிக்கப்பட்டது. ஊர் மக்களின் அன்பைப் பார்த்து கண்கலங்கிய சிவராமன், யாருக்கும் பயனின்றி சோம்பேறியாக இருப்பதால் இகழப்படுவதையும், மற்றவர்களுக்கு பயன்படும் செயல்களைச் செய்தால் மதிப்பளிக்கப்படுவதையும் உணர்ந்தான்.


தன்னிடம் இருந்த நகைகளை வைத்து கறவை மாடுகளை வாங்கிய சிவராமன், அன்றுமுதல் சோம்பேறித்தனத்தை கைவிட்டு தினமும் பால் கறந்து குறைந்த விலைக்கு கிராமத்தினருக்கு விற்று நல்ல நிலையை அடைந்தான். இதனால் அவன் மதிப்பு மேலும் கூடியது.

## சோம்பேறிக்கு எங்கும் மதிப்பில்லை!








மூ.டிலக்சன், தரம்- 3
யா/ சன்மார்க்க ம.வி.


பா.சாரங்கன்,
யா/மத்திய கல்லூரி.


எஸ்.அனிருத்தன், தரம்- 1, ஆரம்பப்பிரிவு,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.


செ.ஜோதிகா, தரம்-7,
யா/ சன்மார்க்க ம.வி.



உ.மாதேவி பாலராசா,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## விடை தெரியுமா? 170

### உங்களுக்கும் பரிசில்கள்

1.தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது?
2. சீனாவின் தலைநகரம் எது?
3.பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ எது?
4. தொற்றுநோயைக் குறிக்கும் நிறம் எது?
5.இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?



### விடைகள் 168

1.வௌவால்
2.உதடு
3.கிறின்லாந்து
4.மாக்மில்லன்
5. 1985

### வெற்றி பெற்றோர் விவரம் (169)

* சே.அனுசன், தரம்- 5, கோண்டாவில் சரவணபவானந்த வித்தி.
* உ.கௌதமி, தரம்- 8, சிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* ஞா.றகிதா, தரம்- 9, மிருசுவில் திருக்குடும்ப கன்னியர்மடம்
* சே.விஜித்தா, தரம்- தரம்8, கிராஞ்சி அ.த.க.பாடசாலை
* த.டிலக்ஸ்சனா, தரம்- 8, மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை
* கு.தேனுகா, தரம்-8, மிருசுவில் றோ.க.த.பாடசாலை.


### விடை தெரியுமா?

தெரிந்தால் 05.08.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவிழா திருட்டு ஆரம்பம்



நல்லூர் திருவிழா ஆரம்ப நாளே திருட்டுக் கைவரிசை அரங்கேறிவிட்டது என்றால் பாருங்களேன். பொலிஸாரின் கண்காணிப்புக்குள்ளும் இந்தத் திருட்டுகள் நெருக்கடியைப் பயன்படுத்தி அரங்கேறியுள்ளன என்றால் இந்த விடயத்தில் நாம் மிகவும் அக்கறையுடன்தான் இருக்கவேண்டும்.

■ சுவாதி

யாழ் குடாநாட்டு மக்களை மட்டுமல்ல புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ள மக்களையும் குதூகலிக்க வைத்துள்ளது நல்லூர் கந்த சுவாமி ஆலயப் பெருந்திருவிழா.

பக்திக்கு மதிப்பளித்து மிகவும் பக்திபூர்வமாகக் கடந்த திங்கட்கிழமை பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொள்ளும் இந்த ஆலயத் திருவிழவுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது யாழ். மாநகர சபை. இந்த நிலையில் உடனடித் தேவைகளைத்தக்க தருணத்தில் செய்து கொடுக்கப்பட வேண்டிய கடமையும் மாநகர சபையின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை மறுக்க முடியாத ஒன்று.

ஆலயச் சூழலில் தொண்டர் படையினர் பொலிஸார் என்று பெரும் எண்ணிக்கையானோர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் நிலையில் நடப்பவை எல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

நடப்பவை என்று கூறும்போது நீங்கள் என்ன என்று ஒருதரம் வாயில் கைவைத்துவிடக் கூடும். நடப்பவை என்று இங்கு நான் கூறுவது திருட்டுகளைத்தான்.

ஆரம்ப நாளே திருட்டுக் கைவரிசை அரங்கேறிவிட்டது என்றால் பாருங்களேன். பொலிஸாரின் கண்காணிப்புக்குள்ளும் இந்தத் திருட்டுகள் நெருக்கடியைப் பயன்படுத்தி அரங்கேறியுள்ளன என்றால் இந்த விடயத்தில் நாம் மிகவும் அக்கறையுடன்தான் இருக்கவேண்டும்.

நல்லூர் கொடியேற்ற திருவிழாவில் கலந்துகொண்ட அடியவர்களிடம் இருந்து சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்பது அவர்களின் நிலையில் இருந்து பார்க்கும் போது வேதனை தரும் ஒரு விடயம்தான்.

கொடியேறும் நேரம் ஏற்பட்ட சன நெரிசலை சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் மிகவும் நுட்பமாக தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கொடியேற்றம் முடிந்து வெளியே வந்த பின்னரே தமது தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதை உரியவர்கள் தெரிந்துகொண்டுள்ளனர். இந்த அளவுக்கு ஆலயத்துக்குள் நெரிசல் என்றால் இதனைக் கண்காணிக்க எந்தப் பொலிஸாரால் முடியும்.

ஏழு பவுண் நிறையுடைய தாலிக்கொடி ஒன்று மற்றும் ஒன்றரைப் பவுண், இரண்டு பவுண் நிறையுடைய தங்கச்சங்கிலிகள் இரண்டு திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரிடம் பறிகொடுத்தவர்கள் முறையிட்டுள்ளனர். பாவம் நிர்வாகத்தினர் என்ன செய்யமுடியும். பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்தானே. அவர்கள் திருடர்களைக் கண்காணித்துக் கொள்வார்கள்தானே என்ற நோக்குடன் இருக்கும் நகைகளை அடுக்கிக் கொண்டுபோய் இரண்டும் கெட்டான் நிலையில்தான் வீடு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஒரு கணம் எவராவது சிந்தித்துப் பார்த்தது உண்டா. கோயிலுக்கு நாம் எதற்குச் செல்கிறோம். இது எல்லாம் எமக்கும் தேவையா என்று எண்ணிப் பார்த்தால் பாதிப் பிரச்சினைக்குத்தீர்வு கிட்டிவிடும்.

அதுமட்டுமன்றி நகைகளை அணிந்து கொண்டு செல்லும்போது நிம்மதியாகக் கடவுளைக் கும்பிடமுடியுமா? என்பதையும் எண்ணிப்பார்க்கத் தவறிவிடுகின்றோம்.

கழுத்தைப் பார்ப்பதா கடவுளைப் பார்ப்பதா என்ற நிலைமைதான் அதிகம் காணப்படும். கழுத்து நிறையப் போட்டுக் கொண்டு கழுத்தைப் பார்ப்பதா கடவுளைப் பார்ப்பதா என்ற நிலைமையில் இருப்பதை விட நிம்மதியாகக் கடவுளை வணங்க வழி ஏற்படுத்துங்கள். நல்லூர் திருவிழாவைப் பொறுத்த வரையில் இன்று பெரும்பாலானோரின் ஆடம்பரத் திருவிழாவாகவும் பொழுது போக்குத் திருவிழாவாகவும் இது மாறி விட்டது.

நல்லூர் திருவிழாக் காலங்களில் வீண் பொழுது போக்குவதற்கு என்று ஒரு கோஷ்டி வெளிக்கிட்டுவிடும். இவர்களிடம் இப்படி வாருங்கள் அப்படி வாருங்கள் என்று எல்லாம் சொல்லிவிட முடியாது. அவர்கள் தாம் நினைத்தமாதிரித்தான் செல்வார்கள். இதனால் இவர்களால் இழக்கப்படுவதற்கு எவரும் பொறுப்புக் கூறிவிட முடியாது.

அடுத்தது திருவிழாக் காலங்களில் திருட என்றே ஒரு கோஷ்டி கிளம்பிவிடும். அது கால நேரம் பார்க்காது. எங்கு சன நெரிசல் ஏற்படுகிறதோ அங்கு மேலும் நெரிசலை உண்டுபண்ணித் தமது கைங்கரியத்தை அரங்கேற்றிவிடும்.

இதற்கு எல்லாம் அடிஎடுத்துக் கொடுப்பது நாம்தான். நாம் ஆடம்பரமின்றிப் பக்தியுடன் செல்ல முனைவோமானால் நெரிசலும் இருக்காது நெருக்கடியும் ஏற்படாது. நிம்மதியான தரிசனமும் கிடைக்கும்.

திருட்டுகள் பலவிதங்களில் இடம்பெறுகின்றன. இதில் ஒரு விதம் "சுடிதார் திருட்டு". அது என்ன சுடிதார் திருட்டு என்று நிறையச் சிந்திக்காதீர்கள். இது சுடிதாரைத் திருடிச் செல்வது என்றும் எண்ணிவிடாதீர்கள். சுடிதார் போட்டவர்களால் நடத்தப்படும் திருட்டுத் தான் சுடிதார் திருட்டு என்று நாசூக்காகச் செல்லப்படுகிறது.

சுடிதார் போட்டு வருபவர்கள் எல்லாம் இப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணிவிடவேண்டாம். இப்படியும் நடக்கிறது என்பதைத் தான் உங்களுக்குச் சொல்கிறேன்.

சுடிதார் தாவணியை மேலே எடுத்துப் போடுவதுபோல் பக்கத்தில் உள்ளோர் மீது படும்படி போடுவார்களாம். இது பக்கத்தில் உள்ளவர்களது கழுத்தில் சரியாகப் போய் விழும். இதற்குப் பின்னர் என்ன நடக்கும். அவர்கள் மீது தாவணி தவறி விழுந்து விட்டது என்பது போல் எடுக்க முனைவார்கள். அப்போது தாவணியை மட்டுமா எடுப்பார்கள். கழுத்தில் உள்ளதையும் சேர்த்து எடுத்துவிடுவார்கள். என்ன எப்படி இருக்கிறது இந்தச் சுடிதார் திருட்டு.

இப்படித் திருட்டுக் கொடுத்தவர்கள், எப்படித் திருட்டு நடந்தது என்று தமது செயற்பாடுகளை இரைமீட்கும்போது கூறியதுதான் இது. இந்தச் சுடிதார் திருட்டைப் படித்த திருடிகள் இனி சாறித் திருட்டுக்கு மாறினாலும் மாறிவிடுவார்கள்.

இதற்கு முன்னர் நீங்கள் மாறிவிடுங்கள்.

# உயர்வான பண்புகளே எமக்கான பட்டங்கள்

■ எஸ். வாஜினி

இன்றைய நவநாகரிக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உயர் படிப்புக்கள் மூலமாக பல பட்டங்களைப் பெறுகின்றோம். அந்தப் பட்டங்கள் எமக்கு நிலையான பெறுமதியைத் தருகின்றனவா? அல்லது அதனால் எமது சமூகத்துக்கு கிடைக்கின்ற நன்மைகள் தான் என்ன? என்பது பற்றி பட்டங்களைப் பெற்ற நாம் சிந்திக்கின்றோமா? இல்லை.

ஏன் நாம் சிந்திக்க மறுக்கின்றோம்? எம்மை மட்டுமே நினைக்கின்றோம். சுயநலமாக எமக்காக மட்டும் வாழ்கின்றோம். இந்தக் காரணங்கள் எம்மைச் சிந்திக்க விடுவதில்லை. மாறாக தலைக் கனம் கொண்டவர்களாகவே வாழ்ந்து மடிகின்றோம்.



எந்த மனிதர்களின் மனங்களிலாவது இடம்பிடிக்கின்றோமா? எமக்கான பட்டங்கள் என்ற வட்டத்துக்குள் மட்டுமே நின்று, வெறும் பட்டதாரிகளாகவே வாழ்கின்றோம். இங்கே பட்டதாரிகள் என்பது வெறும் பட்ட நிலையாகவே காணப்படுகின்றது. ஆனால், இதனை விளங்கிக் கொண்டு எத்தனை பட்டதாரிகள் செயற்படுகின்றனர் என்பது கேள்விக்குரியதே.

உண்மையில் எந்த ஒரு மனிதன், தான் வாழும் சமூகத்துக்காகவும், தன் இனத்துக்காகவும் தன் நலமின்றி பொது நலத்தோடு வாழ்கின்றானோ அவனே உயர்வான அழியாத பட்டங்களைப் பெறுகின்றான். அவன் வாழும்போது பெறுமதி மிக்கவனாகவும் இறந்த பின்பு வரலாறாகவும் இருக்கிறான். இதனைப் புரிந்து கொண்டவன் அனைத்தையும் வெல்கிறான்.

நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் எம்மை நல்வழிப்படுத்திச் சமூகத்தையும் மேம்படுத்தவே. அடுத்தவரை மட்டம் தட்டி அவரைத் தலை குனிய வைத்து நாம் மனம் குளிர்வதற்கானது அல்ல.

நாகரிகம் என்பது உடையில் மட்டுமல்ல, நாம் கதைக்கும் மொழியில் அதுவும் எமது தாய் மொழியில் உள்ளது. ஆங்கில மொழி அறிவில்லாத ஒரு மனிதருடன் பேசும்போது தனது பட்டத்தின் நாகரிகமாக ஆங்கிலம் கலந்து பேசுவது என்னவோ அவர்களுக்கு நாகரிகமாக இருக்கலாம். இதைப் பார்ப்போருக்கு வெறும் அருவருப்பை மட்டுமே தோற்றுவிப்பதாக இருக்கும்.

ஆங்கிலம் கற்பது பிழை என்று சொல்லவரவில்லை. அதனைத் தெரியாதவர்களோடு கதைத்து அவர்களை ஏமாளிகளாக மாற்றுவது தான் தவறு. எது எவ்வாறு இருப்பினும், ஒரு மனிதன் அவனுடைய உயர்வான குணங்களால்தான் அழிவில்லாத பட்டத்தைப் பெற முடியும். ஒரு வசதி படைத்த மருத்துவர் இறந்தாலோ அல்லது பொறியியலாளர் இறந்தாலோ சமூகம் எண்ணிப்பார்க்காது. இந்த நிலையில் படிப்பறிவு இல்லாத நிலையிலும் மக்களுக்காக சேவையாற்றிய மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவர் இறந்தால் அந்தச் சமூகத்தின் நன்றி ஆராதனை எப்படி இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 225

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | | | |
| | ■ | 12 | 13 | | ■ | | ■ |
| ■ | 14 | | | ■ | 15 | | 16 |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. அளவுக்கு அதிகம்
6. மண்ணுக்கு முன் தோன்றியது
7. காய்களின் கூட்டம்
8. வானம்
9. பலம்
11. நரித்தந்திரம்
12. அடிமை
14. பாரம்
15. தடி
17. ஆயுதங்களை தீட்டுவது இதனால்
18. சேர்
19. வலிமை
20. தடை
22. மடல்
23. சிறு புள்

### மேலிருந்து கீழ்

1. ஒரு பாடல் வகை
2. ஊர்வன வகை
3. கூடு(தல்)
4. தலைமை வகிப்பவன்
5. தாய்
8. வசனம்
10. விளையாடும் இடம்
13. மறைவில் தீட்டுவது
14. அகப்பை ரகம்
15. கலக்கமடை
16. மகள்
17. கூடுதலாக
18. தாண்டு
20. தங்களது
21. உயிர்ப்பின் ஆரம்பம்

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 223 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பரிதாபம் (4) அவி (6) சரி (7) குரல் (8) கவர்ச்சி (11) புவி (12) திரு (13) சனம் (14) மதியம் (16) உதை (17) உதிரம் (18) தரு (19) படுக்கை (21) விரும்பல் (22) குதி

**மேலிருந்து கீழ்**

(1) பரகதி (2) தாசர் (3) பரிச்சயம் (4) அரபு (5) வில்வித்தை (9) வருமதி (10) சினம் (15) திரவம் (16) உருக்கு (17) உதவி (18) தடு (19) பல் (20) கைதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 225**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 08.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.225இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 12.08.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 223 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**குணராசா விஜிதரன்,**
6 ஆம் வட்டாரம், குமுளமுனை, முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு**
**வ.மனோஜா,**
தரம்- 12, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

**3 ஆம் பரிசு**
**மே.மதுரன்,**
**மே/பா ஐ.மகேந்திரராசா,**
இல. 17, பழைய வீதி, கோப்பாய் தெற்கு,கோப்பாய்.

**4 ஆம் பரிசு**
**ஜே.கொலஸ்ரீன்,**
**மே/பா ஐ.முருகையா,**
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
**செ.நாகமுத்து,**
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

**ஏ.தேவகுமார்,**
இல.180/1, முரசுமோட்டை, பரந்தன்.

**உ.சுபோதரன்,**
தரம்- 10, யா/கொழும்புத்துறை, இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை.

**நேச. வித்தியாசாகர்,**
கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# நீங்கள் செலவாளியா?




பண விடயத்தில் நீங்கள் எப்படி? உங்களிடம் இருக்கும் பணத்தைத் தாராளமாகச் செலவு செய்பவரா அல்லது யோசித்துச் செலவு செய்பவரா?

நிதி நிர்வாகத்தில் நீங்கள் எப்படி என்று உங்களை நீங்களே அறியலாம்.

மாதக் கடைசியில், ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்காக நீங்கள் ஒரு புதிய ஆடை வாங்க வேண்டும். அப்போது,

அ. எனது வங்கிக் கணக்கு பலவீனமாக இருக்கிறது. எப்படி அவ்வளவு பணமும் செலவானது என்று எனக்கே தெரியவில்லை.

ஆ. விலை உயர்ந்த ஆடை வாங்குவதற்குத் தேவையான தொகை எனது வங்கிக் கணக்கில் உள்ளது. ஆடை மட்டுமல்ல, அழகான ஒரு ஜோடி ஷூக்களும் நான் வாங்கிக் கொள்ளலாம்.

மிக அருமையானதாகத் தோன்றும் ஒரு புதிய முதலீட்டுத் திட்டம் பற்றி நீங்கள் அறிகிறீர்கள். அந்த வேளையில்,

அ. நானே முடிவெடுப்பதற்குப் பதிலாக, என் அப்பா சொல்வதைக் கேட்பேன். முதலீட்டுத் திட்டங்கள் எல்லாம் வீண், வங்கியில் பணத்தைப் போட்டு வைத்திருப்பதே சிறந்தது என்ற எண்ணம் கொண்டவர் எனது அப்பா.

ஆ. குறிப்பிட்ட முதலீட்டுத் திட்டம் பற்றித் தகுதி வாய்ந்த நிதி ஆலோசகர்களிடம் மேலும் கேட்டறிந்த பிறகு அதில் பணம் போடுவேன்.

உங்கள் கிரெடிற் காட் ஸ்டேட்மென்ட் வந்திருக்கிறது, பயமுறுத்துகிறது. ஆனால், இன்னொரு நாள் காலணி ஷோரூமில் பார்த்த ஒரு புதிய வகையான காலணி உங்கள் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது.

அ. ஒரே ஒரு கூடுதல் செலவால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அடுத்த மாதத்தில் கொஞ்சம் இறுக்கிப் பிடித்துக்கொள்ளலாம் என்று நினைப்பேன்.

ஆ. அடுத்த மாதம்வரை ஆசையைத் தள்ளிப் போடலாம் அல்லது கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு யோசிக்கலாம் என்று எண்ணுவேன்.

நீங்கள் வேலை பார்ப்பது ஒரு தனியார் நிறுவனத்தில். எனவே உங்களின் ஓய்வுக் காலத்தில் பென்ஷன் எதுவும் கிடைக்காது. இந்த நிலையில்,

அ. பணம் நிறைய வரும்போது சேமித்துக்கொள்ளலாம். இது இஷ்டம் போல் செலவழிக்கும் நேரம் என்று தாராளமாய் இருப்பேன்.

ஆ. ஓய்வுக் காலம் பற்றி ஏற்கனவே சிந்தித்திருக்கிறேன். புத்திசாலித்தனமாக இப்போதே பல்வேறு முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்திருக்கிறேன்.

உங்களிடம் இருந்து பல நண்பர்கள் நிறையக் கடன் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அது பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. காரணம்?

அ. அவர்கள் எல்லாம் என் உயிர்த் தோழர்கள். எனவே பணத்தைத் திருப்பித் தராவிட்டாலும் பரவாயில்லை.

ஆ. இது முற்றிலுமாகத் தவிர்க்க முடியாத விஷயம். ஆனால் யார் எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள், எப்போது திருப்பித் தருவார்கள் என்று எனக்குத் தெரியும். பெரும்பாலும், நட்புக்குள் பணம் குறுக்கிடுவதைத் தவிர்ப்பேன்.

அதிகமாக 'அ' என்ற பதிலே உங்களுக்குக் கிடைக்குமானால் பண விடயத்தில் உங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது. நீங்கள் சேமிப்பிலும், சரியான முதலீடுகளிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசர அவசியம். அப்போதுதான் உங்களுக்குப் பணம் தேவைப்படும்போது தடுமாறாமல் இருப்பீர்கள்.

அதிகமாக 'ஆ' என்ற பதில் உங்களுக்குக் கிடைக்குமானால் பணம் உங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. உங்களின் புத்திசாலித்தனமான செலவு முறையாலும், சேமிப்பு, முதலீடுகளாலும், கடினமான நேரங்களில் நீங்கள் யாரிடமும் கையேந்த வேண்டியிராது. நீங்கள் எந்த நிலையில் உள்ளீர்கள் என்பது இப்போது உங்களுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்றால் முடியும்

■ தானா



தமிழ் மக்களது பண்டைக்கால வரலாற்றுத் தகவல்களின் படி, அவர்களது சமூகம்சார் கலாசார பண்பாட்டு நடைமுறைகள் தனித்துவம் மிக்கதொன்றாக விளங்கியதாக அறிய முடிகிறது. குறிப்பாக இந்து மதத்தவர் மத்தியில் கடைக்கொள்ளப்பட்டு வந்த அவர் தம் சமயம் சார் நடைமுறைகள், இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானத் துறைகள் வலியுறுத்தும் மனித சுகநலத்துக்கான பழக்க வழக்கங்களை உள்ளடக்கிய தொன்றாக இருந்து வந்தமையையும் இன்று தெளிவாக உணர முடிகிறது.

பண்டைய மனிதகுல வரலாற்றில் மனிதனை குற்றம் இழைக்கும் மனப்போக்கிலிருந்து தவிர்க்க வைக்க அவனை ஏதோ ஒரு விதத்தில் அஞ்சவைக்கும் அணுகு முறை கைக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இந்து மதத்தவர் மத்தியில் சில தெய்வங்களை கொடூர இயல்பு கொண்டவையாக, கடும் போக்குடையனவாக உருவகப்படுத்தி, அதனைச் சமூகத்தின் மத்தியில் நிலைநிறுத்தி நம்பவைத்து, அதன் மூலம் குற்றமிழைத்தால் தெய்வம் தண்டிக்கும் என்றதொரு கொள்கை நிலைப்பாட்டை உருவாக்கி அதனூடாக மனிதர்கள் குற்றம் இழைக்காது தவிர்க்க வைக்கும் நிலைப்பாட்டைச் சமூகம் நடைமுறைப்படுத்தியது. சுருங்கச் சொல்வதானால், மனிதனை உளரீதியாக அஞ்ச வைத்து நெறிமுறைப்படுத்தும் அத்தகைய இலக்கு சமூகத்தில் குற்றங்களைக் கட்டுப்படுத்த வழி கோலியது.

காலப்போக்கில் ஆண்டவன் உலகத்து உயிர்களிடத்து கருணையும் காருண்யமும் காட்டுபவன் என்ற நம்பிக்கை சமூகத்தின் மத்தியில் விரவித் தலையெடுத்தது. 'அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்' என்ற முதுமொழி காலப்போக்கில் கருணை மிக்க தெய்வம் ஒரு போதும் மனிதனைத் தண்டிக்காது. அவனை நல்வழிப்படுத்தும், அவனது சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்தியே தெய்வம் என்ற கோட்பாடு, சிந்தனைத் தெளிவு சமூகத்தின் மத்தியில் உருவாகியது.

அந்த வகையில், இறைவழிபாடு, மனித மனத்துக்கு அமைதியையும், திருப்தியையும் தரவல்லது என்ற கோட்பாட்டில் தனக்கு மேலானதொரு சக்தி தன்னை வழிப்படுத்துகிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலுமே மனிதன் தான் நம்பும் அந்தச் சக்தியாம் ஆண்டவனுக்கு கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக சமூகத்தில் படிப்படியாக உருவாகிய வாழ்வோடிணைந்த சமூகம் சார் கலாசார நடைமுறைகள், மொழி சார் விருத்திக்கும், மதம் சார்ந்த நம்பிக்கைக்கும் வலுவூட்டும் விதத்தில் ஏற்றம் கண்டன. அதன் பெறுபேறாக தமிழர் சமுதாயத்தில் கலை கலாசார அபிவிருத்தி முயற்சிகள் யாவும், ஆலயங்களை நடுநிலைப்படுத்தியே முன்னெடுக்கப் படுபவையாக வளர்ச்சி கண்டன. அதே வேளை தமிழ் மக்கள் குறிப்பாக இந்து மதத்தவர் தமது வாழ்வோடிணைந்த சமூகம் சார், சமயம் சார் முயற்சிகளில் ஆர்வமும் ஊக்கமும் செலுத்தி, மதிப்பும் மரியாதையும் வழங்கி வாழும் நடைமுறை உருவாகியது.

ஆனால் இன்று எமது தமிழர் சமூகம் இத்தகைய தனது பாரம்பரிய வாழ்வியல் நடவடிக்கைகளுக்கு மதிப்பளிக்காது தான்தோன்றித்தனமான விதத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளமை மனதுக்கு வருத்தமளிக்குமொன்று. இதனை இன்று எமது சமூகத்தின் மத்தியில் நிலவும் முற்றிலும் வேறுபாடான கலை கலாசார படிமங்கள் மூலம் தெளிவாக உணர முடிகின்றது.

நாட்டின் தமிழர் பகுதிகளில், குறிப்பாக யாழ்.குடாநாட்டில் ஆலயங்களில் வருடாந்தப் பெருவிழாக்கள் பரவலாக இடம்பெறும் காலகட்டம் இது. வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலின் இந்த ஆண்டுக்கான மகோற்சவங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. யாழ்.குடாநாட்டின் ஏனைய ஆலயங்களை விட நல்லூர் கந்தசுவாமி ஆலய நிர்வாக நடைமுறைகள் பல சிறப்பு அம்சங்கள் கொண்டவை. ஆலயத் திருவிழா நிகழ்வுகளில் நேரந்தவறாமை (குறித்த நேரத்தில் குறித்த நிகழ்வை நடத்துதல்), வசதி படைத்தோர் வசதி வாய்ப்பற்றோர் என்ற பாகுபாடின்றி ஆண்டவனுக்கான அர்ச்சனைக் கட்டணத்தை ஒரே ஒரு ரூபாவாக மட்டுப்படுத்தி வைத்துள்ளமை, எந்தவொரு பிரபலஸ்தருக்கும் முன்னுரிமை வழங்காத சம சந்தர்ப்ப வாய்ப்பு, போன்றவை நல்லூர் கந்தனின் புகழுக்குப் பெருமை சேர்ப்பவை.

அத்தகைய பண்பாட்டு விழுமியங்கள் அப்பழுக்கின்றி ஆலய நிர்வாகத்தரப்பால் கட்டிப் பாதுகாக்கப்பட்டு வரும் நிலையில், எம்மவர்கள் பலர் தமிழ் இனத்துக்கும் சைவ மதத்துக்குமான பண்பாட்டு நடைமுறைகளைப் புறம்தள்ளி கோயில் புனிதமான இடம் என்பதை மனதிருத்தாது திருவிழாக்காலங்களில் பண்பாடற்ற வகையில், அநாகரிகமான விதத்தில் நடந்து கொள்வது மனதுக்கு கவலை தருமொன்று. ஏதோ காணிவல், கண்காட்சிகளுக்குச் செல்வது போல் நவீன ஆடை அலங்காரங்களுடன் கூடிப் பொழுது போக்குவதைக் காண மனது சங்கடப்படுகிறது.

நமது பெற்றோர், மூதாதையினர் கட்டிக்காத்துப் பேணிய கலாசார நடைமுறைகளுக்கமைய ஆலயத் திருவிழாக்களைப் பக்தி[illegible] அனுபவித்து ஆண்டவன் அருளைப் பெற எமது இன்றைய இளம் தலைமுறையினர் மனங்கொள்ளக் கூடாதா?

உத்தியோகம் காரணமாகவும், தொழில் நிமித்தமும் குடாநாட்டுக்கு வெளியில் தொடர்ச்சியாக வாழநேர்ந்த எம்மவர்களில் பலர் அன்று நல்லூர் முருகன் கொடியேற்றம், தேர், தீர்த்தம் காண அந்தந்த வேளைகளில் பல சிரமங்கள் மத்தியிலும் யாழ்ப்பாணம் வந்து முருகனைத் தரிசித்தமை வரலாற்றுப் பதிவுகள். 'மணியோடர் கலாசாரம்' என ஒரு தடவை முன்னாள் நிதி அமைச்சர் காலஞ்சென்ற என்.எம்.பெரேராவினால் எள்ளி நகையாடப்பட்ட குடாநாட்டுக்கு வெளியே தொழில் புரிந்த நம்மவர்கள், அன்றைய காலகட்டத்தில் சிரமங்களைப் பொருட்படுத்தாது நல்லூர் முருகனைத் தரிசிக்கத் தவறாது வந்து சென்றமை எம்மவரின் மதம் தழுவிய நம்பிக்கையின் உச்சவெளிப்பாடு.

அண்மைய சில ஆண்டுகளாக நல்லூர் முருகன் தேரேறும் காட்சி காண, அவனருள் வேண்டித்துதிக்க புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழும் நம்மவர்கள் பலர், பல்வித சிரமங்கள் மத்தியில் நல்லூர் முருகன் திருவிழாக் காண வந்து செல்கிறார்களென்றால், வெறும் வேடிக்கை பார்க்கவும், பொழுதுபோக்கவும் தான் அவர்கள் வருகை அமைவதாகக் கருதலாமா? அவர்கள் மனங்களில், அவர்களது வாழ்க்கையில் நிலவும் குறைகளை ஆண்டவன் முன்னிலையில் கூறி அனுக்கிரகம் வேண்டுவதே அவர்களது நோக்கம் என நாம் கொண்டாலென்ன?

நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்றொரு முதுமொழியுண்டு. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு வகையான மனக்குறை இருப்பது இயற்கையே. அந்த வகையில் எங்கிருந்தோவெல்லாம் ஆண்டவனின் நிழல்தேடி, அமைதிவேண்டி, அனுக்கிரகம் கோரி எம்மவர்கள் நல்லூரான் திருவடி தேடி வந்து பணியும் அதேவேளை நம் இளம் சமூகத்தினர் நல்லூர் முருகன் விழாக்களை கேளிக்கை நிகழ்வுகளாகக் கருதி மனம் போனபடி, நடந்து கொள்வதன் மூலம் தம்மைத் தாமே சிறுமைப்படுத்திக் கொள்வதாகக் கூறுவதை விட வேறு எப்[illegible]

# நாய் வாலை யார் நிமிர்த்துவது?

■ கறுப்பி

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா ஆரம்பமாகிவிட்டது. நல்லூர் முருகனின் அலங்காரத்தை காண்பதற்காகவே ஆயிரக் கணக்கானவர்கள் ஆலயத்துக்கு வருகை தருவார்கள். இதற்குள் தமது ஆடம்பரத்தைக் காண்பிக்க வருவோரும் அதிகம்தான் என்பது மறுப்பதற்கு இல்லை.

பெரும்பாலும் வெளிநாட்டவர்களுக்கு இந்த மாதம் விடுமுறை காலம் என்பதாலோ பிறநாட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இங்கு இருக்கிறது. எமது கலாசாரம் பண்பாடு என்பதை மறந்து ஏதோ தமது பிறப்பு பூர்வீகம் வெளிநாடுதான் என்ற நோக்குடன் இங்கு வந்து சிலர் (அனேகமானோர் நல்ல விதமாகவே நடந்து கொள்கிறார்கள்) காட்டும் அட்டகாசம் தாங்க முடியாதது ஆகிவிட்டது.

ஆலயச் சூழலில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக செயற்படுபவர்களில் இவர்களும் உள்ளடக்கப்படுகின்றனர் என்ற கருத்தும் இல்லாமல் இல்லை.

பெரும்பான்மையான சைவ மக்கள் 25 நாள்களும் விரதம் அனுஷ்டித்துத் தினமும் கோயிலுக்கு சென்று வழிபடத் தவறமாட்டார்கள். அங்கு தினமும் நூற்றுக் கணக்கான ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்வதும் பெண்கள் அடியழித்து வருவதும் வழக்கம். அதற்காக ஆலயச் சூழலை பாதுகாப்பதற்கு என்று யாழ்.மாநகர சபையாலும், ஆலய நிர்வாகத்தாலும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. ஆலயச் சூழலின் வெளிப்புறத்துக்கு அப்பாலே வாகனங்கள் உட்செல்ல தடை, பாதணிகளுடன் உட்செல்லத் தடை, பொலித்தீன் பாவனைக்கு தடை போன்ற விளம்பரங்களை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றை பின்பற்றுகின்றனர் சிலர். சுட்டெரிக்கும் வெயிலில் தார் றோட்டிலும், மணலிலும் நடந்து சென்றாலே கால்பாதங்கள் காய்த்துவிடும். ஆனாலும் முருகபக்தர்கள் அவற்றைக் கருத்தில் கொள்ளாது ஓட்டமும் நடையுமாக ஆலயத்தை அடைந்து விடுவார்கள். ஆனால் இவற்றையும் மீறி நடப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். பெரும்பாலும் மாலைவேளைகளில் ஆலயத்தில் கூடுபவர்கள் அதிகம் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்ற கருத்தும் இல்லாமல் இல்லை. வழிபாட்டுக்காக இங்கு வராது வெறும் பொழுது போக்குக்காக வருபவர்கள்தான் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்ற கருத்தும் இல்லாமல் இல்லை.

ஆலயச்சூழலில் ஆங்காங்கே 'இதற்குள் துப்பவும்', 'கடதாசிகளை இதற்குள் போடவும்', என்று அதற்குரிய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள போதும் எத்தனைபேர் இந்தச் செயற்பாடுகளுக்கு ஒத்துப் போகின்றனர் என்று சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

இருந்த போதும் மாநகரசபையால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும், ஆலய நிர்வாகிகளால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும் யாரால் பின்பற்றப்படுகின்றன. யாருக்காக விதிக்கப்பட்டுள்ளன என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்துள்ளது.

ஆலயத் திருவிழா ஆரம்பத்திலேயே சிலர் தடைகளை மீறி ஒழுக்கங்களை சீர்குலைத்துள்ளனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளமையும் அனைவரும் தெரிந்ததே. ஆலயத்தின் நான்கு புறங்களிலும் வாகனம் உட்செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் ஒருவர் ஆலயத் தெற்கு வாசல் வரையில் தனது சொந்த வாகனத்தில் சென்றுள்ளார் என்றால் பாருங்களேன்.

இந்த நிலையில் எதற்காக இந்தக் கட்டுப்பாடுகள் என்று பக்தர்கள் கேட்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த நிலையில் அவர்களே தடையும் போட்டு அவர்களே அதனை மீறியும் செல்கின்றனர் என்று நேரில் கண்ட பொதுமக்கள் கூறியிருந்ததும் இங்கு அவதானத்தில் எடுக்கப்படவேண்டிய ஒருவிடயம். ஆலயத்துக்கு வருபவர்களில் பக்தி நோக்குடன் ஒரு கூட்டமும், வேடிக்கை பார்க்கவென ஒரு கூட்டமும், இளசுகள் கூட்டங்களும், திருட்டுக்கென ஒரு கும்பலும் என பலர் இருக்கின்றனர்.

ஆரம்பநாள் அன்றே பல லட்சம் பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்று தப்பிக்க முயன்ற 4 பெண்கள், 3 ஆண்கள் கொண்ட குழு ஒன்று ஏ- 9 பாதை வழியாக ஹயஸ் வானில் தப்பிச் சென்று கொண்டிருக்கிறது என்ற தகவல் தெரிந்த பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர். இவர்களிடமிருந்த 14 பவுண் பெறுமதியுடைய 4 தங்கச் சங்கிலிகளும் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பிரிவால் ஆலயச் சூழலில் 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் திருட்டுகள் இடம்பெறுவது குறித்து கேள்வி எழுப்பவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்படுகிறதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

இந்த நிலையில் ஆலயத்துக்கு வரும் மக்களும் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் தமது உடைமைகளில் கருத்தாகவும் இருக்க வேண்டும். அத்துடன் ஆலயத்தின் கட்டுப்பாடுகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும்.

''ஒரு நாய் குரைத்தால் ஒன்பது நாயும் குரைக்கும்'' என்பது பழமொழி. அவ்வாறு இல்லாது ஒருவர் ஒன்று செய்தால் அதை பின்பற்றாது நமது போக்கில் நாம் செல்ல வேண்டும்.

ஆலயச் சூழலில் பல்வேறுபட்ட மதத்தவரும், மொழிசார்ந்தவர்களும் வருவது வழமை. யாழ். மண்ணுக்கு என்று ஒரு தனி பெருமை, வரலாறு தமிழ் மக்களுக்கென ஒருசில தடயங்கள் உண்டு.

அவற்றில் நல்லூர் முருகன் கோயிலும் உள்ளடங்குகிறது. அதனாலேயே பெரும் எண்ணிக்கையானோர் இந்த ஆலயத்துக்கு வருகை தருகின்றனர். எமது சொத்துக்களையும் எமக்காக விதிக்கப்பட்ட விதிகளையும், தமிழர்களின் தனித் தன்மைகளையும் பின்பற்றினால் எமது பண்பாடு கலாசாரம் எவராலும் மறுக்கப்படாது காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்புக் கலையில் இலக்கணம் வகுத்தவர் அரங்கியல் ஞானி அ.பிரான்சிஸ் ஜெனம்

**வயாவிளான் தவமைந்தன்**


ஈழத்தின் நாடக அரங்க வரலாற்றில் உன்னதமானதொரு நடிகராகவும் எல்லா விதமான நாடகங்களிலும் தன்னை இணைத்துக் கொண்ட பன்முகத் திறன் கொண்ட நடிப்புக் களஞ்சியமாகவும் நாடகத்துறையில் ஒப்பற்ற நெறியாளராகவும் நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்க மூலவர்களுள் ஒருவராகவும் கடந்த அறுபது ஆண்டுகளிற்கும் மேலாக கலைத்துறையில் ஈடுபட்டுப் பணியாற்றி வருபவர் நாடக மேதை அ.பிரான்சிஸ் ஜெனம்.

மறைந்த அல்பிரட் - மரியம்மா தம்பதியரின் மகனாக 09.03.1941இல் சில்லாலையில் இவர் பிறந்தார். ஆரம்பத்தில் சில்லாலை புனித. மரியன்னை, மாதகல் புனித.யோசப் பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்பிலிருந்து யாழ்ப்பாணம் புனித. பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி கற்றார். ஐந்தாம் வகுப்பு மாணவனாக இருந்தபோது சில்லாலையில் நடைபெற்ற பாடசாலை விழாவில் யூடிற் என்னும் நாடகத்தில் பெண் வேடம் தாங்கி நடித்து முதன் முறையாக நாடகத்துறையில் காலடி எடுத்து வைத்தார்.

அந்தக் காலத்தில் பெண் வேடமேற்று நடிப்போர் குறைவாக இருந்தமையால் மிகச் சிறப்புடன் பெண்ணாக நடித்த இவரிற்கு ஊரிலும் வெளியிடங்களிலும் பெரும் மரியாதையும் புகழும் பதினோராவது வயதிலேயே ஏற்பட்டது. இதனால் சில்லாலையில் நடைபெற்று வந்த அனைத்து நாடகங்களிலும் நட்சத்திர நடிகராக இவர் அந்தக் காலத்தில் விளங்கி வந்தார்.

1954ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தில் வசித்து வந்த இவர் பி.எஸ்.கலாமன்றத்தின் தயாரிப்பில் மேடையேற்றப்பட்ட ஏராளமான நாடகங்களில் கதாநாயகியாக நடித்துப் பாராட்டும் புகழும் பெற்றார். இக்காலத்தில் எல்லா விதமான நாடகங்களிலும் தன்னை ஈடுபடுத்தி வேறுபாடுகள் கொண்ட நாடக அளிக்கைகளின் நுட்பங்களை ஆழமாக உணர்ந்து நடிக்கும் ஆற்றல் கொண்ட நடிகராகத் தன்னை வளப்படுத்தி வளர்த்துக் கொண்டார்.

1965இல் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரால் நெறிப்படுத்தப்பட்ட திருப்பாடுகளின் காட்சி என்னும் பிரமாண்டமான நாடகப் படைப்பில் பல பாத்திரங்கள் ஏற்று நடித்ததுடன் திருமறைக் கலாமன்றம் தோற்றம் பெற்றபோது அதன் நிர்வாக சபை உறுப்பினராகவும் பொருளாளராகவும் பணியாற்றியதுடன் இம் மன்றத்தின் புலம் பெயர் நாடுகளுக்கான கலைப் பயணங்களிலும் பங்கு கொண்டவர்.



**சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 54**

மானிப்பாயில் இயங்கி வந்த மறுமலர்ச்சி மன்றத்தால் தயாரிக்கப்பட்ட வழி தெரிந்தது, இன்ப நாள், தேரோட்டி மகன், நல்லதும் கெட்டதும் போன்ற நாடகங்களிலும் இவர் நடித்தவர். இந்த நாடகங்கள் அனைத்தும் கலையரசு சொர்ணலிங்கத்தால் நெறியாள்கை செய்யப்பட்டவை ஆகும். அத்துடன் வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தால் மேடையேற்றப்பட்ட வெற்றிப் படைப்புக்களிலும் இவரது பங்களிப்பு முதன்மையான ஒன்றாகவே இருந்து வந்தது.

நாட்டுக் கூத்துக் கலாநிதி பூந்தான்யோசேப் புடன் இணைந்து தென்மோடிக் கூத்துக்களிலும் ஈடுபட்டு யுவானியார், எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை, கருங்குயில் குன்றத்துக் கொலை, சங்கிலியன் போன்ற கூத்துக்களில் ஆடியும் பாடியும் நடித்துக் கூத்துக் கலையின் நுட்பங்களையும் அறிந்த ஒருவராக நாடகத் துறையில் பிரகாசித்து வந்தார்.

1978இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்குநர்களில் ஒருவரான இவர் அந்தக் கல்லூரியால் அளிக்கை செய்யப்பட்ட அனைத்து நாடகங்களிலும் முக்கிய பாத்திரமேற்று நடித்தவர். சங்காரம், பொறுத்தது போதும், கந்தன் கருணை போன்ற நாடகங்களில் சொந்தக் குரலில் பாடி, நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை மாணவர்களிற்குரிய எண்ணற்ற சிறுவர் நாடகங்களைப் நெறிப்படுத்தி மேடையேற்றிய இக்கலைஞர் கொழும்பில் செயற்பட்டு வந்த நிழல் நாடக மன்றத்தின் ஆற்றுகைகளிலும் பங்கு கொண்டவர். அ.தாசீசியசின் ஏற்பாட்டில் 1996இல் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேடையேற்றப்பட்ட எந்தையும் தாயும் என்னும் நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்து தென்னிந்தியக் கலைத்துறையினரின் நிறைவான பாராட்டையும் இவர் பெற்றுக் கொண்டவர்.

வழங்கப்படும் பாத்திரத்தை மிக நுட்பமாக மனதுள் உள்வாங்கி பாத்திரத்துக்கு ஏற்ற அனைத்து விதமான பண்புகளையும் தன்னுள் ஏற்படுத்திப் பல நூற்றுக் கணக்கான நாடகங்களில் நடித்து ஈழத்து நாடக வரலாற்றில் அழியாப் புகழ்பெற்று நடிப்பின் இலக்கணமாகத் திகழும் இவரை எமது நாட்டில், நடிப்புத் துறையின் உச்சத்தைத் தொட்ட மிகச் சிறந்ததோர் நடிகர் என்கிறார் நாடகப் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கம்.

அழகிய எடுப்பான தோற்றமும் வசனங்களைத் தெளிவுடன் பேசப் பொருத்தமான இனிய குரல் வளமும் லயம் பிசகாமல் தாளக் கட்டுடன் கம்பீரம் குன்றாமல் ஆடும் திறனும் சுருதி தவறாமல் பாடும் இயல்பும் கொண்டமைந்த ஒப்பற்ற நடிகராகச் சரித்திரம் படைத்த இவர் ஈழத்து நாடகத்துறையினரால் ஆவணப்படுத்தப்பட வேண்டிய கிடைத்தற்கரிய பொக்கிசமாக விளங்குகிறார் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

நாடகம் என்பது காத்திரமானதோர் ஊடகமாகும். நாம் சொல்ல நினைக்கின்ற செய்தியைச் சிதைவில்லாமல் மக்களிடம் எடுத்துச்செல்ல நாடகம் நன்றாக உதவுகின்றது. முற்காலத்தில் போன்றல்லாமல் தற்காலத்தில் நாடகங்களைப் பலரும் பொறுப்புடன் அரங்க நுட்பங்களை அனுசரித்து நெறியாள்கை செய்து மேடையேற்றி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதே.

எனினும் நவீன நாடகங்கள் பொது மக்களிடம் இன்னமும் சரியான முறையில் கொண்டு செல்லப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். இசைநாடகம், கூத்து என்பனவற்றிற்குப் பொது மக்களிடையே இருக்கும் ஈடுபாடும் மதிப்பும் நவீன அரங்கிற்கு இன்னமும் கிடைக்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

நவீன நாடகங்கள் குறிப்பிட்ட சில அரங்குகளில் மட்டும் மேடையேற்றப்படுவதும் இந்தத் துறை சார்ந்தோர் மட்டும் பார்வையாளர்களாக இருப்பதுமே இக்கலையானது அதிக அளவில் பரவலாக்கப்படாமல் போனமைக்கான காரணங்களாகும். கிராமங்கள் தோறும் வாழுகின்ற பொதுமக்களிடம் நவீன நாடகங்களை எடுத்துச் செல்ல எதிர்காலத்தில் இந்தத் துறை சார்ந்தோர் முயற்சிக்க வேண்டும் எனத் தனது கருத்துக்களை இவர் உறுதியுடன் கூறுகின்றார்.


# இருமல் தணிக்கும் நறுவிலிப் பழம்

**நலம் தரும் தெய்வீக மூலிகைகள்**

**நறுவிலி மரம்**

**வேறுபெயர்:-** நறுவலி, நறுவுளி, நறுவிளி, மூக்குச்சளிப்பழம், ஒதுக்கிலை
**தாவரவியற்பெயர்-**Cordia domestica (கோர்டியா டோமெஸ்ரிக்கா)
**குடும்பம்-** Boraginaceae (போரஜினேசியே)
**சிங்களப் பெயர்:-** லோலு
**சமஸ்கிருதப் பெயர்-** சிலேஸ்மாதக
**ஆங்கிலப்பெயர்-** Large Sebestens

நறுவிலியில் சிறு நறுவிலி, பெருநறுவிலி, நாய்நறுவிலி, பொன்னறுவிலி என்ற பேதங்களுண்டு. உதயன் பத்திரிகை வளவில் பெருநறுவிலி மரம் நன்கு கிளைத்துக் காணப்படுகிறது. நறுவிலி உலர் வலயத்துக்குரிய மரமாகும். கிளைகள் பரந்து நிழலைக் கொடுக்கக் கூடியது. இலைகள் சொர சொரப்பானவை. தனி இலைகள் நீள்வட்டம் அல்லது முட்டை வடிவானது. கீழ்ப்பக்கம் சற்று நரை நிறம், இலைக்காம்பு சற்று நீண்டது. இளங்கிளைகள் கொடிபோல் தொங்கி அலைந்த வண்ணமிருக்கும். மரப்பட்டை சாம்பல் நிறமாயும் வெடிப்புக்கள்/ பொருக்குகள் உள்ளதாயும் காணப்படும். சிறிய பூக்கள். வெள்ளை நிறம். ஆனி, ஆடி மாதங்களில் பூத்துக் காய்க்கும். கனிகள் கொத்தாக உருவாகும். இளஞ்சிவப்பு அல்லது கருநிறம். உண்ணத்தக்கவை. பழச்சதை பிசின் போன்று அல்லது சீதம் போன்று பாணித் தன்மையாக இருப்பதால் சிலர் இதனை மூக்குச் சளிப்பழம் என்பர்.



சிறுவர்கள் இதன் பழத்தை விரும்பியுண்பர். பழச் சதையில் 4.7வீதம் புரதமும், 9.3 வீதம் மாப்பொருளும் உண்டு.

**இருமலுக்கு**

இதன் பழத்தை [illegible] லாம். [illegible] வெளியாகும். வெள்ளை சாய்தல், குருதியழல் என்பனவும் தணியும்.

**ஈளை, முட்டுத் தொய்வுக்கு**

இலையை உலர்த்திப் பொடி செய்து ½– 1 தே.கரண்டி அளவில் தேன் சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர முட்டுத்தொய்வு, ஈளை, இரைப்பிருமல், நாள்பட்ட இருமல் என்பன தணிவடையும். இலையைக் குடிநீர் செய்தும் பருகிவர இவை தீரும்.

**முகப்பருவுக்கு**

நறுவிலி இலைச்சாற்றை தடவி வர மாறும்.

**பல்வலிக்கு**

உலர்ந்த நறுவிலிப்பழத்தைக் கொட்டையுடன் எடுத்து குடிநீர் செய்து வாய் கொப்புளித்துவர பல்வலி, பல்லரணை, பல்லீறுகளயல் இரத்தம் வடிதல், வாய்ப்புண் என்பன மாறும்.

**வயிற்றுப் பொருமலுக்கு**

பட்டையைக் குடிநீரிட்டுப் பருகிவர வயிற்றுப் பொருமல் தணியும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

29.07.2012 முதல் 04.08.2012 வரை

தருபவர் - வித்தியா



**மேடம்**- உங்களை அலைகழித்தபோதும் தளராத முயற்சி, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். தாமதப்பட்ட பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத உதவி, புதிய அறிமுகங்களால் உற்சாகம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. நிதி நிலையில் வரவுகள் திருப்தி தரும். செலவுகளுக்கு முன்பே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். குடும்பத்தில் உங்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுங்கள். உடன்பிறப்புக்கள், உறவுகளோடு சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தொழில் வகையில் நிர்வாக விவகாரங்களில் நேரடியான தலையீடுகள் இருக்கட்டும்.



**இடபம்**- மனதில் சிந்தனைகளும், திட்டங்களும் அதிவேகமாக இருந்த போதும், செயற்பாடுகள் தாமதமாக இருக்கும். சொத்து மற்றும் தொழில் வகையிலான முதலீடுகள் மேற்கொள்ளும் போதும் யோசித்துச் செயற்படுங்கள். மரியாதை நிமித்தமாக சிலரின் சந்திப்புகள் நிகழும். நிதி நிலையில் வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். சேமிப்பைப் பற்றிய சிந்தனை தீவிரமாகும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் செயற்பாடு யோசிக்க வைக்கும். உத்தியோகத்தர்களுக்கு, பிறரின் மனநிலையையும் கருத்தில் கொண்டு செயற்படுதல் நற்பெயரைத் தக்க வைத்துக்கொள்ள உதவும்.



**மிதுனம்**- தாமதப்பட்ட பணிகளை உங்களின் வியூகங்களால் எளிதாக முடிப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும். மனக்குறை கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். வீட்டிலும், வெளியிடங்களிலும் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செயற்படுதல் வீண் சச்சரவுகளைத் தவிர்க்க உதவும். சில காரணங்களுக்காக, மேற்கொள்ளும் பயணம் வெற்றிகரமானதாக அமையும். புதிய முயற்சிகள், தொழில் முதலீடுகள் போன்றவற்றில் யோசனைகளும், ஆலோசனைகளும் தேவை. எதிர்பார்த்த வரவுகள் இருக்கும். செய்தொழிலில் சிறப்புகள் ஏற்படும். புதிய வேலைகளுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.



**கடகம்**- உங்களின் யுக்திகளாலும், வியூகங்களாலும் வெற்றிகள் பல கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். உள்ளம் உவந்து உதவிகள் செய்வீர்கள். எடுத்த பணிகளை முடித்து விட்டுத்தான் ஏனைய பணிகளைக் கவனிப்பீர்கள். புதிய முயற்சி, பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் என இருக்கும். ஆரோக்கியத்தில் குறைவிருக்காது. நிதி நிலையில் பற்றாக்குறை அற்ற நிலை நிலவும். சுபகாரியங்களை முன்னிட்டு அலைச்சல் அதிகம் இருக்கும். உறவுகளின் வருகை பெருமை தரும். பெற்றோர்களின் உடல்நிலையில் கவனம் தேவைப்படும். வியாபாரிகள் பொருள்களின் தரத்தில் மிகக் கவனம் தேவை.



**சிங்கம்** -உங்களின் விரைவான செயற்பாடுகள் ஒவ்வொரு காரியத்தையும் எளிதாகவும், வெற்றிகரமாகவும் செய்து முடிக்க ஏதுவானதாக இருக்கும். பிறருக்கு உதவி செய்யும் போதும், பிறரிடமிருந்து நீங்கள் உதவிகள் பெறும்போதும், சற்று கவனம் தேவை. உடல்நிலையில் எதிர்பாராத தொந்தரவுகள் ஏற்பட்டு விலகும். நிதிநிலையில் எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். உங்களின் அவசரத் தேவைகளுக்கு நெருங்கிய நண்பர்களின் உதவிகள் மிகுந்த பயனுள்ளதாக அமையும். குடும்பத்தில் காரணமற்ற அமைதி மற்றும் கோபத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



**கன்னி**-நகைச்சுவையான வார்த்தைகளாலும், சூழ் நிலைகளுக்கு தகுந்த செயற்பாடு களாலும் இந்த வார பணிகளை எளிதாக்கிக் கொள்வீர்கள். புதிய தொழில் மற்றும் வேலைக்கான முயற்சிகள் சாதகமாகும். சிலரின் சந்திப்புகளை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். ஆரோக்கியத்திற்காக சிறு செலவுகள் இருக்கும். நிதி நிலையில் நிர்ணயிக்கப்பட்ட வரவுகள் வரும். திட்டமிட்ட செலவுகளை மட்டும் மேற்கொள்ளுதல் பற்றாக்குறை நிலையைத் தவிர்க்கும். கடன் தொந்தரவுகள் குறையும். குடும்பத்தில் சிறு சிறு குறைகள் இருக்கத்தான் செய்யும். பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். நட்பு ரீதியான செயற்பாடுகளில் எச்சரிக்கை தேவை.



**துலாம்**-ஒவ்வொரு செயற்பாடுகளும் யோசித்துச் செய்ய வேண்டியதாக இருக்கும். காரணம், ஒருபக்க மனநிலையையும், மறுபக்கம் பண நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கும். வருமானங்களை அதிகப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் அமையும். உடன் பிறப்புக்களோடு அனுசரணையான போக்கு நல்லது. செய்தொழிலில் சில சீர்திருத்தங்களை மேற்கொள் வதன் மூலம் லாபங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணியின் பளு கூடிய போதும் மன நிறைவு கொள்ளக்கூடிய சூழ்நிலைகளே. பெரிய மனிதர்களது தொடர்பு உற்சாகத்தை தரும். பெண்களுக்கு பதற்றம் வரும் போகும்.



**விருச்சிகம்**-எதிர்நோக்கி இருக்கும் விவகாரங்கள், செய்து முடிக்க வேண்டிய பணிகள் என்று பலவற்றையும் மனதில் போட்டு குழப்பிக் கொண்டிருக்கும் உங்களுக்கு, இந்த வாரம் நீங்களே எதிர்பார்க்காத வகையில் நல்லதொரு தீர்வு ஏற்படும். இலக்குகள் நிர்ணயித்துச் செயற்படுவீர்கள். வெற்றியும் அடைவீர்கள். சந்திக்கும் நபர்களிடம் உங்கள் மனநிலையை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுவதை கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள். நிதி நிலையில் நிர்ணயிக்கப்பட்ட வரவுகள் தான் என்ற போதும், ஏதேனும் ஒரு வகையில் அவசியமற்ற செலவுகள் ஏற்படும். முக்கியஸ்தர்களிடம் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இடையிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்ட போதும், முடிவு சுமுகமானதாக இருக்கும்.



**தனுசு** - காரணமற்ற தயக்கம், சோர்வுகள் என உங்களின் செயற்பாடுகளில் குறுக்கிட்ட போதும் அதையும் மீறி பெரும்பாலான விடயங்கள் உங்களுக்குச் சாதகமாக முடியும். உதவிகள் செய்வதில் தவறல்ல. அதே நேரத்தில் யாருக்கு, எந்த சூழ்நிலையில் உதவி என்பதனை யோசித்துச் செய்யுங்கள். நிதி நிலையில் வரவுகள் திருப்தி தரும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் ஓரளவுக்கு பயன் ஏற்படும். பெற்றோரின் செயற்பாடுகள் திருப்தி தரும். உறவுகளின் விவகாரங்களில் சற்று எச்சரிக்கையோடு செயற்படுங்கள். வியாபாரிகளுக்கு, விற்பனை கூடும். உத்தியோகத்தர்களுக்கு, காரணமற்ற சோர்வுகள் ஏற்படும், கவனம்.



**மகரம்**-மாற்றங்களை எதிர்நோக்கி உங்களின் செயற்பாடுகள் இருந்த போதும், சற்று தாமதத்துக்கு பின் மாற்றம் ஏற்படும். முக்கியஸ்தர்களின் சந்திப்பின் போது உங்களின் நோக்கம், வார்த்தைகள் மிகத் தெளிவானதாக இருக்க வேண்டும். நிதி நிலையில் எதிர்பார்த்த வரவுகள் வரும். எதிர்பாராத செலவுகள் இருக்கும்.பெற்றோரின் ஆதரவும், அனுசரணையும் நிம்மதி தரும். தொழிலில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, புரிந்து செயற்பட முயற்சியுங்கள். மாற்றங்களுக்கு அவசரம் வேண்டாம்.



**கும்பம்** - காரணமற்ற பதற்றம் குழப்பம் என்பன ஏற்படும். உங்களின் நிதானமும், பெருந்தன் மையான போக்கும் பல விவகாரங்களுக்கு தீர்வாக அமையும். எல்லா நேரங்களிலும் தன்னுடைய வியூகம் வெற்றி பெறும் என்ற எண்ணத்தை சிறிதளவு குறைத்துக் கொள்ளுங்கள். செலவுகள் குறைந்த போதும் கடன் கவலைகள் இருக்கும். உறவினர்களோடு இணைந்தோ, உறவினர் களுக்காகவோ பணிகள் மேற்கொள்ளும்போது கவனத்துடன் செயற்படுங்கள். செய்தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்புடனும், பொறுமையுடனும் செயற்படுங்கள். சிலருக்கு புதிய பணி நிமித்தமாக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.



**மீனம்**-மன நிறைவுகள், ஆதாயங்கள் என நிரம்பி இருக்கும். பழக்கப்பட்டவர்களால் பயன் அதிகமாகும். உறவுகள் சந்திப்பு, நண்பர்களுடன் கலந்துரையாடல் இருக்கும். சில விவகாரங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கும் சூழ்நிலை ஏற்படும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் வரும். குடும்பத்தில் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன் பிறப்புக்களால் உதவிகள் கிடைக்கும். தொழில் வகையில் வளர்ச்சி [illegible] தேவைப்படும். உத்தியோகத்தர்கள் விரும்பிய மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும். பெண்களுக்கு, செல்வாக்கு கூடும்.

# ஆடம்பரம் எங்கே போய் முடியும்?

■ பன்னீர்ச்செல்வம்

மனிதனாய் பிறந்த எல்லோருமே மகிழ்ச்சியாகச் சொகுசாக வாழவே விரும்புகிறோம். சொகுசு என்றால் ஆடம்பரம் என்று பொருள். டாம்பீகம், தேவைக்கும் அதிகம் என்று அகராதியில் உள்ளது.

அரசு கூட சொகுசு வரியை வசூல் செய்கிறது: யாரிடம் வரி அறவிடப்படுகிறது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பொருள்களுக் கும் எம்மை அறியாமல் வரி அறவிடப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

பொருள்களில் விலை உயர்ந்தவற்றை சாதாரண மக்களால் வாங்க முடியாத அளவுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. வரிக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்விக்குப் பதில்தான் எத்தனை எத்தனை.

### பொறாமை

அத்தியாவசியத் தேவைகள் அனைவருக்கும் பொதுவானவை. இதில் பொறாமைப்பட ஏதுமில்லை. ஆனால் அளவுக்கு மீறும்போது (இந்த அளவு என்பது ஒவ்வொருவருக்கும் மாறுபடும்) மற்றவர்கள் மனதில் பொறுக்க முடியாத எண்ணம் உருவானால், அது பொறாமை ஆகும். அதற்கு உதவும் பல காரணங்களுள் ஆடம்பரமும் ஒன்று.

### அத்தியாவசியம்

காலால் நடந்தால் கால் தூரம் போகலாம்; கையால் நடந்தால்? என்ற பழமொழி நமக்கு உணர்த்துவது, அதிக ஆட்டம் போடாமல் இயல்பாக இருங்கள் என்பது தான்.

*பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து [குறள் 978]*

என்ற குறள் மூலம் பணிவே எக்காலத்திலும் பெருமை சேர்க்கும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற மந்திரச் சொற்களைத் தவறாக எடுத்துக் கொண்டு, சொகுசாக வாழ்ந்து, இயற்கைச் சட்டத்தாலும், நடைமுறையிலுள்ள பல சட்டங்களாலும் தண்டிக்கப்பட்டுள்ள பலரை நாம் அறிவோம். இதுதான் ஆடம்பரம் வழங்கிய அழிவாகும்.

மனிதன் என்றாலே ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கூறுவதும் சரிதான். அந்த முன்னேற்றம் சக மனிதர்களுக்குத் துன்பம் தருமானால், அது தவிர்க்கப்பட வேண்டும். நன்றாகப் பொருள் ஈட்டி வாழும் வாழ்க்கையிலும் தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது ஆடம்பரத்துக்குத் துணை போகாத செயலாகும்.

### அன்றும் இன்றும்

மனிதனுக்குத் துன்பம் வருவது இருவழிகளில். ஒன்று தானாக வருவது. அவ்வகையான துன்பங்கள் சரியான தீர்வு களுடனேயே வரும். இது சரித்திரம். மற்றது நாமாக உருவாக்கிக் கொள்வது.

முன்னைய காலத்தில் அதிக அளவு வீட்டு உபயோகப் பொருள்கள் கண்டுபிடிக்கப்படவில்லை; இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ்ந்தனர்; போட்டி, பொறாமை கிடையாது; உதவியும் வழிகாட்டுதலுமே இருந்தன. மொத்தத்தில் மனிதநேயம் ஓங்கியிருந்தது. இது அன்றைய நிலை.

இன்றோ மக்கள்தொகை அதிகம். ஏராளமான, வகைவகையான வீட்டு உபயோகப் பொருள்கள்; இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்று இருப்பதையும் அனுபவிக்காத மனநிலை; பக்கத்து வீட்டாருடன், உடன் பணிபுரிவோருடன் ஒப்பிட்டு, கடன் பெற்றாவது, தவணை முறையிலாவது பொருள்களை வாங்கும் ஆசை, மனிதநேயத்தைச் சிறிது சிறிதாக மறந்து சுயநலத்துடன் வாழும் மக்கள் கூட்டம். இது இன்றைய நிலை.

### இலவசங்கள்

எரியும் நெருப்பில் எண்ணெய்விட்டது போல், இலவசங்கள் என்ற மாயையில் பெரும்பாலான மக்கள் சிக்கிக்கொண்டு வெளியில் வர மனமில்லாமல் வாழ்கின்றனர். இலவச அரிசி, உண்மையிலேயே இயலாதவர்களுக்கு, காமதேனுதான். ஆனால், பாதிக்கு மேற்பட்டவர்கள் வாங்குவதில்லை; வாங்கி விற்றுவிடுகின்றனர்.

### வேலை

வாழ்வதற்குப் பொருள் தேவை. அதைப்பெற ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும். இதைச் செய்வதில் தான் எத்தனை விதம். பாரம்பரியமாக உடல் உழைப்பின் மூலம் பொருள் ஈட்டி வாழும் எளிமையானவர்கள்; ஓரளவு படித்து, வேலையில் சேர்ந்து மாதச் சம்பளம் பெற்று வாழும் வகையினர்; நன்கு படித்து, அதிகச் சம்பளம் பெறும் வேலை பார்த்து, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டோர்; அரசியலை ஒரு தொழிலாகவே செய்து அபரிமிதமான பொருள் ஈட்டுவோர்; என்னதான் சம்பளம் வாங்கினாலும், ஊழல் லஞ்சத்தில் ஊறித் திளைக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள்; சொந்தமாகத் தொழில் நடத்தும் சிறிய, பெரிய தொழில் அதிபர்கள் எனப் பல நிலையிலும் இன்று நம் நாட்டில் மக்கள் வலம் வந்து கொண்டுள்ளனர்.

வேலைக்கு ஆள்கள் தேவை என்ற நிலை ஒருபுறம்; வேலை கிடைக்கவில்லையே என்று புலம்பும் படித்த குழுவினர் ஒருபுறம்; வேலைக்குச் செல்ல மனமின்றி சோம்பித்திரியும் கூட்டம் ஒருபுறம் என இன்று எல்லாம் கலந்த சூழல் நிலவுகிறது.

### தேவைக்கும் மேலே

தேவை என்பதும், மனிதனுக்கு மனிதன் மாறுபடும் என்பது மாற்றமுடியாத உண்மை. உங்கள் தேவைகளை, நீங்கள் ஈட்டும் வருமானத்துக்குள் வைத்துக்கொண்டு சேமிப்பதற்கும், சிறுபகுதியை ஒதுக்குவது தான் அடிப்படைத் தேவையாகும். இந்தத் தேவை அளவுக்கு மீறும்போது என்னவாகும் என்று பொறுத்திருந்து பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ எஸ். அபிமன்யு

# யாரைக் குற்றம் சொல்ல?



**காதல் என்ற போர்வையில் விரிக்கப்படும் வலையில் காதல் என்ற தூண்டிலில் மாட்டி கர்ப்பம் என்ற பரிசைப் பெறும் பெண்கள் எதற்காக குழந்தைகளை எறிகின்றனர். திருமணமான பெண் பெற்றால்தான் தாயா? அல்லது திருமணமான பெண்ணுக்குப் பிறந்தால்தான் பிள்ளையா? காதல் என்ற போர்வை விலகும் போது இமைகள் திறந்து விடியல் தெரியும்.**

காலமாற்றமும் விரைவான அபிவிருத்தியும் மனித வாழ்கையில் மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்துகின்றன. மூடநம்பிக்கை என்ற கட்டுக்களை உடைத்தெறிந்து விஞ்ஞானத்தின் பாதையில் நடைபோட ஆரம்பித்துள்ளனர்.

ஆயினும் கலை கலாசாரம் என்ற போர்வைக்குள் இருந்து விரைவாக விடுபட முடியாமல் மன அழுத்தங்களுக்கும் விரக்திக்கும் தவறான வழிநடத்தல்களுக்கும் தள்ளப்படுகின்றனர். பாரம்பரியமாகப் பின்பற்றப் பட்டுவரும் பழக்க வழங்கள் பண்பாடுகள் இன்றைய தலைமுறையின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக அமைந்து விடுகின்றது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் விரைவான அபிவிருத்தியும் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. திடீர் என்று ஏற்பட்ட விரைவான அபிவிருத்தியும் தளர்ந்துள்ள கட்டுப்பாட்டுகளும் சமுதாயத்தில் பிரச்சினைகளையும் மோதல்களையும் தோற்றுவித்துள்ளன.

அதிகரிக்கும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கலாசார மாற்றங்கள் அமைதியற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளன. சமுதாயத்தால் ஒதுக்கப்படும் பெண்களும், பெண்களை பெற்றதற்காக தண்டனையை அனுபவிக்கும் குடும்பங்களும், பெற்ற தாய் யாரென்று தெரியாமல் பற்றைகளுக்குள் தவழும் யாதும் அறியாத குழந்தைகள் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் பிரதிபலிப்புக்களே.

கலாசாரம் மனித வாழ்க்கையோடு ஒன்றிணைந்த விடயமாகும். நாகரிகம் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. மாற்றங்கள் மனித வாழ்க்கையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

அண்மைக் காலமாக பற்றைக்குள் வீசப்படும் குழந்தைகள், வைத்தியசாலைகளில் விட்டு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முன்பு நடக்காத கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாக பெண்கள் மீது சுமத்தப்படும் குற்றம், சுதந்திரப் பெண்களுக்கு விடுக்கப் பட்டுள்ள பூட்டா? அல்லது பாரம்பரியத்துக்கும் கலாச்சாரத்துக்கும் வந்த களங்கமா?

பெண்மைக்கும், தாய்மைக்கும், ஈடு இணையில்லாத உலகத்தில் இரக்கமற்றுப் பற்றைக்குள் குழந்தையை எறிந்து செல்வதற்கான காரணம் என்ன? தாய்மையும் அன்பும் இல்லாமல் போய்விட்டதா? துக்கத்தின் நினைவுகள் பாசத்தையும் தாய்மையும் மறைத்துவிட்டதா?

பெண்களுக்கு விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து வெளியேறிய பெண்கள் சமுதாயத்தவரால் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

காதல் என்ற போர்வையில் விரிக்கப்படும் வலையில் காதல் என்ற தூண்டிலில் மாட்டி கர்ப்பம் என்ற பரிசைப் பெறும் பெண்கள் எதற்காக குழந்தைகளை எறிகின்றனர். திருமணமான பெண் பெற்றால்தான் தாயா? அல்லது திருமணமான பெண்ணுக்குப் பிறந்தால்தான் பிள்ளையா? காதல் என்ற போர்வை விலகும் போது இமைகள் திறந்து விடியல் தெரியும். அப்போது தனைப் பெற்ற தாய், வளர்த்த தந்தை, எதிர்காலக் கனவுகள் சுமக்கும் சகோதர உறவுகள், தோள் நின்ற சமுதாயம் கண்களுக்கு தெரியும்.

காதலனால் வழங்கப்பட்ட கர்ப்பம் என்ற பரிசை எப்படித் தெரியப்படுத்துவது. தெரிந்தால் சமுதாயத்தின் முன் தலை குனியும் பெற்றோர், சிதைந்து போன கனவுடன் தெரியும் சகோதர உறவுகள், போகவிட்டு புறம் சொல்லும் கொடுமைகளை நினைத்து மறைக்கப்படுகின்றன உண்மைகள்.

கலாசாரம், பாரம்பரியம், சமுதாயம், மனித சிந்தனைகளைக் கட்டுப்படுத்தி தனக்கென ஒரு வட்டத்தை உருவாக்கியுள்ளது. எம் நெகிழ்வுப் போக்கற்ற சமுதாயம் கட்டுப்பாடுகள் மனித சிந்தனைகளைக் கட்டுப்படுத்தியுள்ளது. நெகிழ்வுப் போக்கற்ற சமுதாயம் மோதல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகின்றன.


கலாசாரம், பண்பாடு என்ற கட்டுப்பாடுகள் பெண்மையையும் தாய்மையையும் களங்கப்படுத்தி விட்டனவா? அல்லது கலாசாரத்துக்கும் பண்பாட்டுக்கும் களங்கம் ஏற்பட்டு விட்டதா?

மனித உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியவை. காதல் என்ற போர்வைக்குள் ஒரு சில நிமிட உணர்வுகளால் அரங்கேறும் நாடகம் வாழ்நாளின் மாற்ற முடியாத வடுக்களை ஏற்படுத்துகின்றன. காலம் மாறும் போது மாற்றங்களும் ஏற்படும். மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. வீட்டிலிருந்த பெண்கள் படிப்படியாக ஆண்களுக்கு நிகராக வளர்ச்சி அடைந்தமை கால மாற்றமா? காலத்தின் கட்டாயமா?

பிறந்து சில மணிநேரமேயான குழந்தையை அநாதையாய் விட்டுச் சென்றது தாயின் குற்றமா? அல்லது திருமணமாகாத பெண்ணுக்குப் பிறந்தது குழந்தையின் குற்றமா? அல்லது இவர்களை ஏற்காத சமுதாயத்தின் குற்றமா?.

# புத்துயிர் பெற்றுவரும் நெசவு

■ சி. சுகன்யா



ஆடைகள் உடுபுடைவைகள் போன்றவற்றுக்கு இந்தியாவை நம்பிக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறை மக்கள் முப்பது வருடங்களுக்கு முன்னர் தாமே தமது ஆடைகளை நெய்து உடுத்த வரலாறுகள் உண்டு.

அன்றைய காலத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் இந்த நெசவுக் கைத்தொழில் இருந்துள்ளன.

1970 களில் நெசவுக் கைத்தொழிலானது மிகவும் வலுப்பெற்று இருந்தது. இந்தக் காலகட்டத்தில் அதிகமான நெசவுத் தொழிலாளர்களும் நெசவு நிறுவனங்களும் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தறியாவது இருக்கும்.

ஆனால் இவை எல்லாம் அந்தக் காலம் என்று சொல்லும் அளவுக்கு இந்த நெசவுக் கைத்தொழில் வீழ்ச்சி கண்டிருந்தது. மீண்டும் இந்த நெசவுக் கைத்தொழிலை துளிர்க்க விட்டிருந்தது அரசு.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நெசவு நிறுவனங்களை நிறுவி பல தொழிலாளர்களுக்கு பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

இன்று யாழ்ப்பாணத்தில் மட்டும் 31 நெசவு நிறுவனங்கள் இருக்கின்றன. அதில் 29 நெசவு நிறுவனங்கள் மட்டுமே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சராசரியாக 10பேர் இத்தொழிலை பயின்று வருகின்றனர். மொத்தமாக 290பேர் பயில்கின்றனர். இவர்களுக்கு ஒவ்வொரு நாளும் 200 ரூபா ஊக்குவிப்பாக வழங்கப்படுகிறது.

அரசு நெசவுக் கைத்தொழிலை வளர்ப்பதற்கு ஊக்குவிக்கின்றது. நூலுக்கான வரிப்பணத்தை 100 ரூபாவாக குறைத்தும் இருக்கின்றது. ஆனாலும் நூல் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இதனால் நெசவுக் கைத்தொழில் வளர்ச்சி நிலை கேள்விக் குறியான ஒன்றாகவே உள்ளது.

ஆரம்ப காலங்களில் மட்டக்களப்பில் இருந்தே நூலுக்கு சாயம் இட்டு எல்லா நெசவு நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் வடமாகாணம் [illegible] பிரித்ததில் இருந்து நூலுக்கு சாயம் இடுவதற்கு ஆள்கள் இல்லாமல் போய்விட்டனர். தற்போது வவுனியாவில் உள்ள ஒரு இடத்தில் இருந்தே சாயம் இட்டு அனுப்பப்படுவதால் போதியளவில் நூலைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. இந்த நூலையே எல்லா இடங்களுக்கும் பிரித்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நெசவுத் தொழிலை வளர்ப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டாலும் அதற்கான நூல் பற்றாக்குறை நிவர்த்திக்கப்படாமையால் இத்தொழில் குறைவாகவே நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் கால நிலைக்கு பருத்தித் துணியையே உடுத்திக் கொள்ள மக்களும் விரும்புவார்கள். அதற்கான சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு.

நெசவுத் தொழிலாளர்கள் மக்களின் தேவைகளை அறிந்து அதற்கு ஏற்றால் போல் ஆடைகளைத் தயாரித்து சந்தைப்படுத்தும் போது நெசவுத் தொழில் மேலும் வளர்ச்சி அடைய ஆரம்பிக்கும் என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடம் இல்லை.

29 நிறுவனங்களில் 290 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகள் நடைபெற்றாலும் 25 பயிற்றுனர்களே இருக்கின்றார்கள். இத்தொழிலை மேற்பார்வை செய்வதற்கு இதுவரை நிரந்தர கண்காணிப்பாளர்கள் எவரும் இல்லை. மூன்று தற்காலிகமான மேற்பார்வையாளர்களே இருக்கின்றனர் என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகிறது.

1970, 80 காலப் பகுதியில் நெசவுக் கைத்தொழில் செய்த கரவெட்டியை சேர்ந்த பாலசிங்கம் கூறுகையில் "அப்பொழுது இதுதானே தொழிலாக இருந்தது. எல்லோரும் சேர்ந்து ஒன்றாக தொழிலுக்கு செல்வோம். அதன் பிறகு தொழிலும் முடங்கிவிட்டது. இப்போது இந்தத் தொழிலைத் செய்பவர்கள் குறைந்துவிட்டார்கள்" என்று வேதனை ததும்பக் கூறுகிறார்.

தொழில் நிமித்தம் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கைத்தொழில் கல்வி நெறியாக வளர்ச்சி அடைந்தமை இதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

தொழில் வாய்ப்பு இல்லை என்று கூறிக்கொண்டு இருப்பவர்களும் உள்ளூர் தொழிலாளர்களும் சிறிதளவு பணத்தை முதலீடு செய்து நெசவுத் தொழிலில் நவீனத்துவத்தைப் புகுத்தும் போது இத் தொழிலின் உயர்வு மேலும் விருத்தியாகும்.

இதனை வருமானம் ஈட்டும் தொழிலாக எல்லோரும் பார்க்கும் போது தனியார் நிறுவனங்களும் நெசவுக் கைத்தொழிலில் கால் பதிக்கும் என்பது திண்ணம்.

எது எவ்வாறு இருப்பினும் நெசவுக் கைத்தொழில் யாழ்ப்பாணத்தில் மீள் எழுச்சி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றமை மகிழ்ச்சிதரும்விடயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது ரிஷாத் பதியுதீன் போன்றவர்கள் வாய் திறப்பதில்லை. அவற்றுக்கு எதிராக எந்தவொரு மாற்று நடவடிக்கையும் எடுப்பதுமில்லை. எந்த ஓர் ஆர்ப்பாட்டமோ போராட்டமோ நடத்துவதில்லை.

# பிள்ளையார் பிடிக்க குரங்கு வந்த கதை



■ சந்திரசேகர ஆஷாத்

பிள்ளையார் பிடிக்கப் போகக் குரங்கு வந்ததாம். இப்படி ஒரு பழமொழி வழக்கில் உண்டு. அதாவது ஒருவர் தனக்குச் சாதகமான ஒரு விடயத்தைச் செய்ய முயலும்போது அது எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும்போது இந்தப் பழமொழி கூறப்படுவதுண்டு. இப்போது இந்தப் பழமொழி அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி சிங்கள இனவாத அரசியலின் பின்னால் முஸ்லிம் மக்களை இழுத்துவிட அவர் எடுத்த ஒரு நயவஞ்சக முயற்சியின் விளைவு இன்று அவருக்கு எதிராக இலங்கையின் முழு நீதித்துறையையும் கொதித்து எழ வைத்துவிட்டது.

அவரின் அமைச்சரவைச் சகபாடியான நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாகக் கண்டனம் செய்யுமளவுக்கு நிலைமை உருவாகிவிட்டது. கோந்தைப்பிட்டி உப்புக்குளம் மீன்பிடித்துறையில், கடந்த 10 வருடங்களின் முன்பு போர் காரணமாக இடம்பெயர்ந்து யோசப்வாஸ் கிராமத்தில் வசித்து வந்த தமிழ் மக்களும் உப்புக்குளம் முஸ்லிம் மக்களும் மீன்பிடித் தொழில் செய்து வந்தனர்.

இந்த நிலையில் சில அரசியல் வாதிகளின் தூண்டுதலின் பேரில் உப்புக்குளம் பள்ளிவாசலும் உப்புக்குளம் மீனவர் சங்கமும் கோந்தைப்பிட்டி இறங்குதுறையை யோசப்வாஸ் கிராம மக்கள் பயன்படுத்தக் கூடாது எனத் தீர்மானம் எடுத்தனர். அப்படியிருந்தபோதிலும் மன்னார் ஆயர், முஸ்லிம் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எனப் பல தரப்பினரும் மேற்கொண்ட சமரச முயற்சிகள் காரணமாக யோசப்வாஸ் கிராம மக்களுக்கு இன்னொரு பொருத்தமான இறங்குதுறை ஏற்பாடு செய்யப்படும் வரை அவர்கள் உப்புக்குளம் துறையை தற்காலிகமாகப் பயன்படுத்துவது என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மன்னாரில் ஒரு சமரசமான நிலை ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் தான் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மன்னார் ஆயர், முஸ்லிம் மக்களின் விரோதி என்ற கருத்துப்பட நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

இந்த உரையைக் கண்டித்து மன்னாரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகைக்குத் தமது ஆதரவையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர். அதில் கலந்துகொண்டு உரையாற்றிய முஸ்லிம் பிரமுகர் ஒருவருக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் உதவியாளர் தொலைபேசியூடாக மிரட்டல் விடுத்ததும் பின்பு அவர் மன்னிப்புக் கேட்டதும் கூட முக்கிய செய்திகள்.

அப்படியிருந்த போதிலும் மன்னார் ஆயரை இலக்கு வைத்துத் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முயற்சி அப்போது தோல்வியில் முடிந்தது. ஆனால் அதன் அடுத்த கட்டமாக கோந்தைப்பிட்டியில் அமைந்துள்ள தமிழ் மீனவர்களின் வாடிகள் சில தாக்கியழிக்கப்பட்டன. இது சம்பந்தமாகச் சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதுடன் யோசப்வாஸ் கிராம மீனவர்கள் அங்கு தற்காலிகமாக மீன்பிடிக்கவும் நீதிமன்றம் அனுமதித்தது.

## ஞாயிறு காரம்

இந்த நிலையில்தான் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நீதிபதியை உடனடியாக உத்தரவை மாற்றும்படியும் இல்லையேல் மன்னார் பற்றியெரியும் எனவும் மிரட்டியதாகக் கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி அடுத்தநாள் உப்புக்குளம் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது நீதிமன்றமும் தாக்குதலுக்கு உள்ளானது.

ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் சட்டத்தைத் தங்கள் கையில் எடுக்கும் விமல் வீரவன்ஷ, மேர்வின் டி சில்வா, சம்பிக்க ரணவக்க போன்ற சில அமைச்சர்கள் உள்ளனர். அதே வழியில் ரிஷாத் பதியுதீனும் இறங்கிவிட்டார் என்ற விடயத்தையே மேற்படி செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் நாடுபூராவும் சட்டத்தரணிகள் உட்பட நீதித்துறை நடத்தும் போராட்டங்களும் சில சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராகச் சமர்ப்பித்த மனுவும் சூழ்நிலை சாதாரணமாக இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஒரு நீதிபதியைத் தீர்ப்பை மாற்றும்படி மிரட்டுவது நீதிமன்றத்தை சேதப்படுத்துவது போன்ற சம்பவங்கள் நாட்டில் நீதியின் ஆட்சியை அழித்து சண்டித்தனத்தைக் கோலோச்ச வைக்கும் ஒரு ஜனநாயக விரோத முயற்சியாகும். அப்படியான சம்பவங்களை அமைச்சர் ஒருவர் மேற்கொண்டால் அல்லது அவற்றுக்கு தங்களாலான உதவிகளைக் கொடுத்தால் நிச்சயமாக அது காடைத்தனமின்றி வேறு எதுவும் இல்லை என்பதில் சந்தேகமில்லை.

இப்படியான சில சம்பவங்கள் இடம்பெறும்போது இவர்கள், வடக்கிலிருந்து புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது போன்று மீண்டும் முஸ்லிம்களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறி தமிழ் முஸ்லிம் விரோத உணர்வுகளை மூட்ட முயல்கின்றனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். பலர் தளபதிகளாகவும் பிரதேச மாவட்டப் பொறுப்பாளர்களாகவும் பங்கு கொண்டனர். தமிழ் முஸ்லிம் ஒற்றுமையைக் கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் திட்டமிட்ட வகையில் முஸ்லிம் ஊர்காவற்படையை உருவாக்கினர். முஸ்லிம்களின் பரமவிரோதியான இஸ்ரேலிய எமாசாட் அமைப்பே ஊர்காவல் படைக்குப் பயிற்சிகளை வழங்கியது. வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, வீரமுனை, உடும்பன்குளம், கொக்கட்டிச்சோலை எனக் கிழக்கின் பல பகுதிகளில் மக்கள் சுற்றி வளைப்புக்கள் மூலம் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டு ஒவ்வொரு இடங்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினருடன் முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து செயற்பட்டனர். இதன் காரணமாக தமிழ், முஸ்லிம் உறவுகளில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதில் அன்றைய ஆட்சியாளர்கள் வெற்றி கண்டனர்.

இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள், முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றினர். அரசின் ஒரு கவசமான முஸ்லிம் ஊர்காவற்படை செய்த குற்றங்களுக்காக முஸ்லிம் மக்களை வடக்கைவிட்டு வெளியேற்றியது மன்னிக்க முடியாத தவறுதான். ஏனெனில் முஸ்லிம் மக்களுக்கும் இப்படுகொலைகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. ஆனால் சில அரச சார்பு முஸ்லிம் தலைவர்களும் சில முஸ்லிம் அடிப்படைவாத பள்ளிவாசல் நிர்வாகிகளும் ஊர்காவல் படை அமைக்கப்படவும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளில் அரச படைகளுடன் இணைந்து முஸ்லிம்படை செயற்படவும் தூண்டியமையை மறுக்க முடியாது.

எவ்வாறு முஸ்லிம் ஊர்காவற்படையினர் மேற்கொண்ட படுகொலைகளுக்காக விடுதலைப் புலிகள் வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியது அப்பட்டமான தவறோ அவ்வாறே விடுதலைப் புலிகள் செய்த தவறைத் திரும்பத் திரும்பச் சொல்லி சீர்பட்டுவந்து விட்ட தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க முயல்வதும் கேடுகெட்ட நயவஞ்சகமாகும்.

கிழக்கில் தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதும் முஸ்லிம் மக்கள் வடக்கை விட்டு வெளியேற்றப்பட்டதும் மறக்க முடியாத கசப்பான அனுபவங்கள் என்பது உண்மைதான். ஆனால் அப்படியான ஒரு நிலைமையைத் திட்டமிட்டு உருவாக்கச் சிங்கள பேரினவாத சக்திகளின் ஏவலர்களாக இன்னும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட்டுத் தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது.

ரிஷாத் பதியுதீன் போன்ற வேறு சில முஸ்லிம் தலைவர்களும் சிங்கள இன ஒடுக்குமுறையாளர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் முகமாகத் தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க இன்றும் முயன்று வருகின்றனர் என்பது வேதனைக்குரியது.

அநுராதபுரத்தில் 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒரு முஸ்லிம் தர்க்கா புத்தபிக்குகள் தலைமையிலான குழுவால் இடித்து நொருக்கப்பட்டது. இன்றுவரை அது மீளக்கட்டி அமைக்கப்படவில்லை. அதுபோன்று தம்புள்ள புத்த பிக்குகளால் 20 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பள்ளிவாசல் இடிக்கப்பட்டது. அந்த இடம் பௌத்த புனித பிரதேசம் எனக் கூறப்பட்டு அந்தப் பள்ளியை நிரந்தரமாக வேறு இடத்துக்கு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெஹிவளையில் உள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டது மட்டுமன்றி அங்குள்ள மாநகர சபை அந்தப் பள்ளிவாசலில் மத்தசாவில் கல்வி கற்பவர்களைவிட வேறு எவரும் தொழுகை செய்ய முடியாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக ரம்ழான் ஆம்பநாளில் குருநாகலில் தொழுகைக்குச் சென்ற முஸ்லிம்கள் புத்த பிக்குகளாலும் அவர்களுடன் வந்த காடையர்களாலும் தடுக்கப்பட்டனர். அதுமட்டுமன்றிப் பிக்குகள் பள்ளிவாசலுக்குள் புகுந்து அங்கு பிரித் ஓதினார்.

இவ்வாறு முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது ரிஷாத் பதியுதீன் போன்றவர்கள் வாய் திறப்பதில்லை. அவற்றுக்கு எதிராக எந்தவொரு மாற்று நடவடிக்கையும் எடுப்பதுமில்லை. எந்த ஓர் ஆர்ப்பாட்டமோ போராட்டமோ நடத்துவதில்லை.

இவர்கள் சிங்கள இனவாத ஒடுக்குமுறைகளைத் தலைகுனிந்து ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் சகோதர இனமான தமிழர்களுக்கு எதிராகச் சகல வழிகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று கிழக்கில் இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்புகளுக்குமிடையே நிலவும் புரிந்துணர்வு நல்ல ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது. நிச்சயமாக இந்த வாய்ப்பு கிழக்கில் அரசின் அதிகாரத்தை உருவாக்கும் இவர்களின் கனவை முறியடிக்கும். எனவே தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி கிழக்கில் தமிழ் முஸ்லிம் பலத்தை பலவீனப்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

முஸ்லிம்களின் நலன்களை நேசிப்பவர்கள் போர் நடந்த தமிழ், முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைத்து இரு இனங்களையும் சிங்கள இனவாத சக்திகளுக்கு அடிமைப்படுத்த முயலும் அவர்களின் சதி நோக்கங்கள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் ஓர் ஆசை

ஒலிம்பிக் போட்டியைக் காண உலகெங்கும் உள்ள மக்கள் விமானம், கப்பல் என்று பல வழிகளிலும் சுலபமாக லண்டன் வந்து சேர்ந்துள்ளனர். ஆனால், சீன விவசாயி செங் குவாங்மிங், 2 ஆண்டுகால ரிக்ஷா பயணத்தின் மூலம், லண்டனை வந்தடைந்துள்ளார்.

2010 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த பயணம், 16 நாடுகளை கடந்து 2 ஆண்டுகள் கடந்து தற்போது லண்டனை அடைந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 57 வயதான நான், இதுவரைக்கும் சீனாவைத் தவிர வேறுஎங்கும் சென்றதில்லை. தடகளப் போட்டிகளின் பெரும் ஆதரவாளரான நான், ஒலிம்பிக் போட்டியின் பெருமையை உலகெங்கும் பரப்பும் விதமாக இந்தப் பயணத்தை மேற்கொண்டேன் - என்றார். (5)

# தேசப்பற்றுக்கு அளவேயில்லை



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் பல வீரர்கள், வீராங்கனைகள் தங்களது தேசப்பற்றை விரல் நகங்களில் வெளிப்படுத்தி கலக்கிக் கொண்டிருக்கின்றனர். லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உலகம் முழுவதிலிருந்து நூற்றுக் கணக்கான வீரர், வீராங்கனைகள் லண்டனில் வந்து குவிந்துள்ளனர்.

ஒவ்வொரு வீரர்களும், வீராங்கனைகளும் தங்களது தேசப்பற்றை பறை சாற்றும் வகையில், விதம் விதமான முறையில் கலக்கி வருகின்றனர். அதில் ஒன்றாக, விரல் நகங்களில் தங்களது நாட்டின் தேசியக் கொடியை 'நெயில் பொலிஷ்' மூலம் வரைந்து அசத்திக் கொண்டிருக்கின்றனர். பிரபல அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ், தனது விரல் நகங்களில் அமெரிக்க தேசியக் கொடியின் நிறத்தை இடம் பெற வைத்துள்ளார். இதேபோல ஹங்கி நீச்சல் வீராங்கனை சுஸானா ஜேக்கபஸ் தனது நாட்டு தேசியக் கொடியை விரல் நகங்களில் விளையாட வைத்துள்ளார். இங்கிலாந்து வீரர் ஒலிசன் வில்லியம்சன் தனது விரல் நகங்களில் தேசியக் கொடியான யூனியன் ஜாக்கை வரைந்துள்ளார். இப்படிப் பலரும் விதம் விதமான முறையில் தங்களது நகங்கள் மூலம், உடைகள் மூலம், முடியலங்காரம் மூலமும் தேசப் பற்றை வெளிப்படுத்தி வருகின்றனர். [5]

# தரமான அணியாக விளையாடவில்லை




தென்னாபிரிக்காவிற்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் உலகின் முதற்தர அணி போன்று இங்கிலாந்து அணி விளையாடியிருக்கவில்லை என்று அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். அத்தோடு முதற்தர அணியாக இருப்பதன் அழுத்தத்தை உணர்வதாகவும் அவர்

உலகின் முதற்தர அணியாக வர அணிகளை எதிர்த்து விளையாடும் எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், தர அணியாகக் காணப்படும் போது களைத் துரத்தும் நிலை காணப் குறித்த சூழ்நிலைக்குத் தாங்கள் சில மும் பழக்கப்படாமலிருக்கலாம்

தெரிவித்துள்ளார்.

விரும்பும்போது ஏனைய மனநிலை காணப்படும் தற்போது தாங்கள் முதற் ஏனைய அணிகள் தங் படுவதாகத் தெரிவித்தார். வேளைகளில் இன்ன என்று அவர் தெரிவித்தார்.

இது வித்தியாசமான ஓர் அழுத்தம் எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், அனைவரும் தங்களை ஒவ்வொரு தடவையும் வெல்ல வேண்டுமெனவும், சிறப்பாக விளையாட வேண்டும் எனவும் எதிர்பார்ப்பதாகவும், எனினும் நடைமுறையில் அது நடக்க முடியாத ஒன்று எனவும் தெரிவித்தார். நாங்கள் சிறப்பாக விளையாடி சில வாரங்கள் ஏற்படப் போகிறது எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், கடந்த வாரம் அவ்வாறானதொன்று எனவும் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக உலகின் முதற்தர அணியாக வர வேண்டுமென்ற எண்ணம் காணப்பட்டதாகத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், அந்த இடத்தைப் பிடித்துள்ள நிலையில் அங்கு தொடர்ச்சியாகக் காணப்பட விரும்புவதாகத் தெரிவித்தார். உலகின் முதற்தர அணியாகக் காணப்படும் போது அனைவரும் தங்களை முதற்தர அணி போல் விளையாட வேண்டுமென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அன்டர்சன், கடந்த வாரத்தில் தாங்கள் அதைச் செய்து காட்டியிருக்கவில்லை எனத் தெரிவித்தார். (5)

# எதையும் பிளான் பண்ணி பண்ணணும்

இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆரம்பிக்கவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரில் இலங்கை அணியைப் பொறுத்தவரை தயார்படுத்தல்களும், திட்டமிடல்களும் முக்கியமானவை என்று இலங்கை அணியின் இலக்குக் காப்பாளரும், சிரேஷ்ட வீரருமான குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

தயார்படுத்தல்கள் மிக முக்கியமானவையாக மாறவுள்ளன எனத் தெரிவித்த குமார் சங்ககார, தயார்படுத்தல்கள் சிறப்பாக அமைந்தால் அதிர்ஷ்டத்தை நம்பியிருக்காமல் தொடர்ச்சியாகத் திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலம் இந்தத் தொடரைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். 'ரி-20' போட்டி ஒன்றிரண்டு பந்துகளிலோ அல்லது ஓர் பந்துப் பரிமாற்றத்தில் மாற்றப்படக் கூடியது என்ற போதிலும், முழுமையான தயார்படுத்தல்கள் அணிக்கு உதவியாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை அணி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறப்பாகச் செயற்படும் ஒரு காலகட்டத்தில் விளையாடுவது குறித்து அதிர்ஷ்டகரமாக உணர்வதாகத் தெரிவித்த குமார் சங்ககார, இரண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டங்களிலும், ஓர் உலக 'ரி-20' தொடரின் இறுதிப் போட்டியிலும் பங்குபற்றியமை அற்புதமானது எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' போட்டி இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில் அது இலங்கைக்கு சார்பானதாக அமையும் எனத் தெரிவித்த குமார் சங்ககார, பழக்கமான ஆடுகளங்களில், பழக்கமான சூழலில் ஆடுவது இலங்கை அணிக்கு அதிக புத்துணர்ச்சியைக் கொடுக்கும் எனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# கொடி மாறியது

## பிரச்சினை கிளம்பியது




ஒலிம்பிக் விளையாட்டின் ஒருங்கிணைப்பாளரான LOCOG ஹேம்ப்டன்பார்க்கில் வடகொரியா உதைபந்தாட்டக் குழுவினரின் முகங்களைப் பெரிய திரையில் காட்டி அவர்களை அறிமுகப்படுத்தும் போது, வடகொரியா கொடிக்குப் பதிலாக தென்கொரியா கொடியை தவறுதலாகக் காண்பித்தனர்.

இதனால் கொதிப்படைந்த வீராங்கனைகளும், மற்ற வடகொரியா வீரர்களும் மிகவும் கோபமடைந்தனர். அத்துடன் இதனை சற்றும் எதிர்ப்பார்க்காத வட கொரிய அணி மைதானத்தில் களம் இறங்க மறுத்தது. இதனால் போட்டிகிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தாமதமானது. அதன் பின்னர் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நிலைமையை விளக்கி வட கொரிய அணியிடம் மன்னிப்பு கோரிய பிறகு போட்டி ஆரம்பமானது.

வடகொரியா கொடியோடு உதைபந்தாட்ட வீராங்கனைகளின் முகங்கள் உடனடியாக திரையில் காட்டப்பட்டது. வடகொரியாவும், தென்கொரியாவும் அருகருகே இருந்தாலும் இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு காணப்படவில்லை. கடந்த 1948 ஆம் ஆண்டு முதல் தனித்தனியாக இருந்துவருகின்றன.

இரண்டாண்டுகளுக்கு முன்பு வடகொரியா, தன் பீரங்கியை தென்கொரியாவின் பியோன்பியோங் தீவுக்கு அனுப்பி பொதுமக்கள் இருவரையும் இராணுவத்தினர் இருவரையும் கொன்றது. உதைபந்தாட்டம் தொடங்கியதும் வடகொரியா வீராங்கனைகள் வேகத்துடன் விளையாடி தம்முடன் மோதிய தென் அமெரிக்க அணியை 2-0 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தது. இன்று சனிக்கிழமை பிரான்ஸ் அணியை வென்றுவிட்டால்கால் இறுதிப் போட்டிக்கு வடகொரியா தகுதி பெற்றுவிடும்.

இந்த வடகொரியா அணியின் பயிற்சியாளரான குன் சின் உயி கொடியை மாற்றியதற்கு தனது கோபத்தை வெளிப்படுத்தினார். தங்கள் அணியினரை திசைதிருப்பவே திட்டமிட்டு கொடியை மாற்றியதாக குற்றம் சாட்டினார். இந்தப் பிரச்னை தீராமல் தொடர்ந்து விளையாட இயலாது என்று கோபத்துடன் தெரிவித்தார். இது குறித்து ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு குழு அதிகாரி கூறுகையில், இது தவறுதலாக நடந்ததே தவிர மனப்பூர்வமாக செய்தது இல்லை. இதற்காக வட கொரியா அணியிடம் மன்னிப்பு கோரினோம். இதற்காக எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதனை சந்திக்க தயாராக உள்ளோம். இது போன்ற தவறுகள் இனி நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று கூறியுள்ளார். [5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஔவ்யன்



# "கிரிக்கெட் எங்களுக்கும் சொந்தம்"



"மாற்றம் ஒன்றுதான் மாற்றமுறாதது" உலக இயங்கியலை இந்த ஒற்றை வார்த்தைக்குள் அடக்கிவிட முடியும். எவையெல்லாம் முடியாத செயல்கள் என்று கருதப்பட்டனவோ அவையெல்லாம் இன்றைக்கு சாத்தியப்படக்கூடிய நிலை உண்டாகியிருக்கிறது.

தமிழ்ச் சமூகத்தில் இறுக்கமான தளைக்குள் பிணைக்கப்பட்டிருந்த பெண்கள் மெல்ல மெல்ல ஆண்களுக்கு நிகராக, சில சமயங்களில் அவர்களையும் விஞ்சியவர்களாக எழத்தொடங்கியிருக்கிறார்கள். சமூகத்தின் கேலிப்பார்வைகளை கால்களின் கீழே மிதித்துக்கொண்டு புதுமைப்பெண்களாகப் புறப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகம் சில விதிகளை தனக்கென உருவாக்கி அதனை இன்னமும் இறுக்கமாகப் பற்றிப்பிடித்திருக்கிறது. சமயம், கல்வி, நடை, உடை என்பவற்றில் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் பிரித்து பெரிய கோடொன்றை அது வரைந்திருக்கிறது. இந்தப் பிரிப்புக்கோடு விளையாட்டுத் துறையிலும் இன்னும் அழுத்தமாக அழிக்கமுடியாதபடி கீறப்பட்டுள்ளது.

பெண்கள் இன்னென்ன விளையாட்டுகளில் மட்டுமே ஈடுபடமுடியும் என்ற வரையறை நீண்டகாலமாக எழுதப்படாத விதியாக கைக்கொள்ளப்பட்டே வருகிறது. அந்த விதியை மாற்றி புதுவிதி செய்யப் புறப்பட்டவர்களில் விக்ரோறியாக் கல்லூரியின் கிரிக்கெட் வீராங்கனைகளும் அடக்கம்.



இலங்கையில் மகளிருக்கான கிரிக்கெட் பாடசாலைகளில் மூன்று வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அதே சமயத்தில், யாழ்ப்பாணத்திலுள்ள விக்ரோறியாக் கல்லூரி மாணவிகளும் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்தார்கள். அப்போது குறித்த கல்லூரியின் அதிபராக இருந்த திருமதி அ.வேலுப்பிள்ளையும், அதற்குப் பின் அதிபர் பதவிக்கு வந்த வ.ஸ்ரீகாந்தனும் மகளிர் கிரிக்கெட் அணியை வளர்த்தெடுப்பதில் அக்கறை காட்டினார்கள். அவர்களின் அக்கறைக்கு உறுதுணையாக ஆசிரியரான எஸ்.சிவபாலசுந்தரும், பழைய மாணவனும் பயிற்சியாளருமான சிவரூபனும் இருந்தார்கள். இதனால் மகளிர் கிரிக்கெட்டில் தவழ்ந்து, மெல்ல தன் பிஞ்சுக் கால்களை அந்த அணி எடுத்து வைக்கத் தொடங்கியது.

அந்தக் காலடி மிகப்பலமானதாக இருந்ததென்பதை அவர்கள் கலந்து கொண்ட போட்டிகள் எடுத்தியம்பின. யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி வடமாகாணத்தில் எந்தவொரு அணியாலும் வீழ்த்தப்பட முடியாதவர்கள் என்ற மகுடத்தோடு விக்ரோறியாவின் மகளிர் கிரிக்கெட் அணி கடந்த மூன்று வருடங்களாக கோலோச்சி வருகிறது. மாகாணத்தில் வாகை சூடிய இந்த வீராங்கனைகள் கடந்த இரண்டு வருடங்களாக தேசிய ரீதியிலான போட்டியில் முதற்சுற்றில் ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்து, அடுத்த சுற்றுக்கு நுழையும் வாய்ப்பை இழந்திருந்தார்கள். இவர்களை ஒரு ஓட்டத்தால் வீழ்த்திய அணிகள்தான் குறித்த இரு வருடங்களும் தேசிய ரீதியில் சம்பியனாகின. எனவே, இந்த முறை கடந்தகாலத் தவறுகளிலிருந்து பாடம் படித்துக்கொண்ட விக்ரோறியா வீராங்கனைகள் தேசிய வெற்றிக்கிண்ணத்தை அடைந்தே தீருவதென்ற வெறியோடு மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய ரீதியிலான போட்டியில் விளையாட காத்திருக்கிறார்கள்.

மா.கோபிகாவின் தலைமையில் களம் இறங்கும் பா.பிரணவி,பா.றஜிதா, செ.நிர்மலா, செ.சுகன்ஜா, சு.பிரியங்கா, எஸ்.கோபிகை, ப.பானுப்பிரியா, சி.நிஷாந்தினி, ச.கர்ஜனா, க.அனியா, சி.டிலானி, மோ.கலிஸ்ரா, வ.தேனுஜா, எஸ்.நல்விழி என்று விக்ரோறியாக் கிரிக்கெட் வீராங்கனைகளின் பெயரைக் கேட்டாலே ஏனைய அணிகளுக்கு உதறல் எடுக்கிறது.

இந்த வீராங்கனைகளுக்கு இத்தகைய ஆற்றல் எங்கிருந்து வந்தது? எத்தகைய வழிமுறைகளில் அவர்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்? ஆட்டத்தில் கைக்கொள்ளும் நுணுக்கங்கள் என்னென்ன? என்ற கேள்விகளுக்கெல்லாம் அவர்கள் கூட்டாக அளித்த பதில்கள் உங்களுக்காக:

"வழமையா எங்களுக்கு ரீவியில கிரிக்கெட் மச் பாக்கிறது விருப்பம். அப்பிடிப் பாத்துப்பாத்து, கிரிக்கெட்டில தனிவிருப்பம் வந்தது. ஆனாலும் விளையாட வாய்ப்பு வரேல்ல. அப்பதான் கிரிக்கெட் ரீமுக்கு வர விரும்புற 'கேர்ள்ஸ்' பேர் குடுக்கலாம் எண்டு ஸ்கூல்ல அறிவிச்சினம். உடனேயே நாங்கள் 'பிரக்டிசுக்கு' வந்திட்டம். வீட்டிலயும் எங்களுக்கு எல்லாரும் 'சப்போட்' தான். முதல்ல இது பெடியளின்ர விளையாட்டு எண்டு ஒருசிலர் நினைச்சினம். அதால நாங்கள் ஒண்டும் சாதிக்கமாட்டம் எண்டு அவையின்ர எண்ணம். ஆனா மனசில ஓர்மத்தோட பயிற்சி செய்து, மூண்டு வருசமா மாகாணத்தில சம்பியனா நாங்கள் தான் இருக்கிறம்."

என்று தங்கள் 'கொலர்களை' உயர்த்திக் கொள்கிறார்கள் இவர்கள்.

"யாழ்ப்பாணத்தில கிரிக்கெட் விளையாடுற 'கேர்ள்ஸ்' ரீம் குறைவு. அதால நாங்கள் நிறையப் பயிற்சி ஆட்டங்களில விளையாடுற 'சான்ஸ்' இல்ல. எண்டாலும் எங்கட 'ஸ்கூல்ல' உள்ள ஆண்கள் அணியுடன் பயிற்சிப் போட்டிகளில மோதுவம். அவைக்கு சமமா நாங்களும் விளையாடுவம். ஒருக்காலும் விட்டுக்குடுக்கமாட்டம். இன்னும் நிறைய 'ஸ்கூல்ல' இப்பிடி மகளிர் கிரிக்கெட் அணிகள் யாழ்ப்பாணத்தில உருவானால் நிறையப் பயிற்சி ஆட்டங்களில பங்கெடுத்து எங்கட திறமைய இன்னும் வளக்கலாம். பயிற்சிதான் நிறைய அனுபவத்தைத் தருகுது. அந்த அனுபவம் தான் ஒவ்வொரு போட்டியையும் எப்பிடி வெல்லலாம் எண்டதை எங்களுக்குச் சொல்லித்தருகுது." என்று கண்களில் மின்னும்

(21 ஆம் பக்கம் பார்க்க)

அலாப்பி

# ஒலிம்பிக்கும் தமிழும்

இன்னும் ஒரு மாதத்துக்கு உலகின் எல்லாக் கண்களும் லண்டனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றன. உலக விளையாட்டுகளுக்கு மகுடமாக அமையும் ஒலிம்பிக் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி விட்டது. நான்கு வருடங்களாக இந்தப் போட்டியில் களம் இறங்க வேண்டும் என்று கனவுடன் இருந்த வீரர்கள் மோதுவதற்கு தயாராகி விட்டார்கள்.

தனியே தடகளப் போட்டிகள் மட்டுமல்லாது பெரு விளையாட்டுகளும் (கிரிக்கெட் தவிர்ந்த) நடைபெறுவதால் சகல வகையான விளையாட்டு ரசிகர்களுக்கும் அவரவர் விருப்பத்துக்கேற்ற விருந்தினை ஒலிம்பிக் படைக்க உள்ளது.

இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு லண்டன் நகருக்கு கிட்டி உள்ளது. இதனால் முன்னரைக் காட்டிலும் லண்டனின் எழில் அதிகரித்து விட்டது. பழைய கட்டடங்கள் சீர்செய்யப்பட்டு, பார்போர் வியக்கும் அளவுக்கு படுசுத்தமானவையாகவும், புதியனபோன்றும் மீளுருவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

லண்டனில் ஒலிம்பிக் திருவிழாவுக்காக வந்து குவிந்துள்ள சர்வதேச பார்வையாளர்களுக்காக தனித்துவமான கடைகள் முளைத்துள்ளன. அத்துடன் வழமையை விடவும் வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

ஏறக்குறைய "சின்ன யாழ்ப்பாணம்" என்று சொல்லுமளவுக்கு லண்டனில் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஏற்கனவே போருக்குப் பயந்து புலம்பெயர்ந்த மக்களுடன் அண்மைக்காலமாக மாணவர் விசாவில் சென்றோரும் சேர்ந்துகொள்ள, லண்டனில் எல்லாத் தெருக்களிலும் யாழ்ப்பாணத் தமிழையும் கேட்க முடிகிறது. எனினும் ஏனைய சில நாடுகளைப் போல [illegible] லாமல் பிரிட்டனின் [illegible] கவும் அவர்களில் பலர் உயர்ந்திருக்கிறார்கள். இதனை ஒலிம்பிக் திருவிழாவிலும் காணமுடிந்தது.

கௌசிகா சுரேஸ் என்ற பாடசாலை மாணவியும், ஸ்ரீகாந்தா துரைராசா எனும் நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும் லண்டன் நகர் சார்பாக ஒலிம்பிக் தீபம் ஏந்துவதற்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் கௌசிகா விளையாட்டுத் துறையில் சிறப்பான அடைவை வெளிக்காட்டியமைக்காகவும், ஸ்ரீகாந்தா துரைராசா தான் பணியாற்றும் நிறுவனத்தின் நீண்டகாலம் அர்ப்பணிப்போடு செயல்புரிந்தமைக்காகவும் இந்த வாய்ப்பினை பிரிட்டன் அரசு வழங்கி கௌரவப் படுத்தி உள்ளது.


இதனைவிட லண்டன் ஒலிம்பிக் திருவிழாவின் ஒரு அங்கமாக ஒரு நிமிடம் மற்றும் 16 செக்கன் கொண்ட ஒரு விளம்பரக் காணொலி ஏற்பாட்டுக்குழுவால் தயாரிக்கப்பட்டு சர்வ[illegible]சிகளிலும் இணையங்களி[illegible] ஒலிம்பிக்கின் உத்தியோகபூர்வ விளம்பரம் வெளியிடப்பட்டது. இந்த விளம்பரம் "வணக்கம்" என்ற தமிழ் வரவேற்புடன் ஆரம்பமாகி உலகத் தமிழர்கள் அனைவரினதும் தலைகளை ஒரு கணம் நிமரச் செய்கிறது. அத்துடன் குறித்த விளம்பரத்தில் " லண்டன் மாநகரம் உங்களை வரவேற்கிறது" என்று தமிழில் லண்டன் வாழ் ஈழத் தமிழர் ஒருவர் வரவேற்கும் காட்சியும் இந்த விளம்பரத்தில் இடம்பெற்று, சர்வதேச ரீதியில் தமிழுக்கு சிறப்புச் செய்துள்ளது.

இவ்வாறு உலகப் பொதுமையான விளையாட்டு நிகழ்வில் கூட தமிழ் மொழியின் முக்கியத்துவம் உணரப்பட்டு இதற்குரிய இடம் வழங்கப்பட்டு போற்றப்படுகையில், இங்கு உள்ளூரில் நடைபெறும் சில நிகழ்வுகளில் தமிழ் மொழியை விடவும், சிங்கள மொழிக்கும், ஆங்கில மொழிக்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று ஒரு சாரார் விசனப்படவே செய்கின்றனர். அவ்வாறு தம் தாயக நிகழ்வுகளில் தமிழ் மொழியை மறந்தவர்களை லண்டன் ஒலிம்பிக் ஒரு கணம் வெட்கப்பட வைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தன்

# விடாது துரத்தும் "இசற்"



பழைய "இசற்" புள்ளிகளை வைத்து யாழ்.மாவட்டத்திலிருந்து 57 பேர் மருத்துவத் துறைக்கும், 55 பேர் பொறியியல் துறைக்கும் தெரிவுசெய்யப் படுவர்கள் என்று கணிக்கப்பட்டு அதற்கேற்ப மாணவர்கள் தமது மேற்படிப்பை நோக்கிய சிந்தனையில் மீள் பரீட்சையின் அவசியம் அற்று வெட்டுப்புள்ளியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக பெரும் சர்ச்சையில் சிக்கித் தவிக்கும் விடயமாக மாறியுள்ளது யாதெனில் உயர்தரப் பரீட்சை மூலம் மாணவர்களைப் பட்டப்படிப்புகளுக்கு தெரிவு செய்வதற்கான தரவ்ரிசையைத் தீர்மானிக்கும் "இசற்" புள்ளியாகும்.

இலங்கை அரசினால் எமது நாட்டில் இலவசக் கல்வியைப் பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற முக்கிய பரீட்சைகளாக விளங்குவன தரம் 5 புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரம் ஆகிய மூன்றும் ஆகும்.

இப்பரீட்சைகளுக்கும் மாணவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாதெனில் இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமே மாணவர்களுக்கு அறிவிக்கப்படும். மாறாக திருத்தப்பட்டு புள்ளிகள் போடப்பட்ட விடைப் பத்திரங்கள் மாணவர்கள் கைகளுக்குக் கிடைப்பதில்லை.

மிஞ்சிமிஞ்சிப் போனால் மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்க முடியும் அதிலும் போடப்பட்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை மாத்திரமே மீள்பார்வை செய்யப்படும் என்பது வேறு கதை.

எனவே இவ்வாறு இருப்பினும் அரசு மற்றும் அதன் கல்விக் கொள்கை மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையாலும் ஒவ்வொரு மாணவர்களும் தமது வினாத்தாள்கள் 100 வீதம் சரியாகவே திருத்தப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையோடு இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இது இவ்வாறு இருக்க கடந்த வருடம் டிசெம்பரில் வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சையில் தரவரிசையைக் கணிப்பதில் இயந்திரங்கள் குளறுபடி செய்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டன. இதனால் பெறப்பட்ட "இசற்" புள்ளி அதிகமாக இருந்த மாணவனை விட "இசற்" புள்ளி குறைவாக இருக்கும் மாணவன் தர நிலையில் முன்னாலே காணப்பட்டான்.

இதன் மூலம் மீத்திறன் குறைந்த கல்வியில் அக்கறை இன்றித் திரிந்த ஒரு சில மாணவர்களுக்கு கூட சில கணங்கள் தாமும் பொறியியலாளர் ஆகிவிட்டோமே என்ற இமாலைய மகிழ்ச்சி கணங்களை தொட்டுப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்து, மறுகணமே அது புஸ்வானமாகிப்போனது.

எனினும் அந்தப் புள்ளிகள் மூலமான தரவரிசைப்பட்டியல் தவறு என அறிந்த பரீட்சைத் திணைக்களம் முதலில் வெளியிட்ட தரவரிசைப்பட்டியலை ரத்துச் செய்து மீளவும் திருத்தி அமைக்கப்பட்ட தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது.

ஆனால் கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவாக முதன் முறை தோற்றும் பரீட்சார்த்திகளும் பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக இரண்டாம் மற்றும் ஏனைய முறைகளில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் பரீட்சை எழுதியதால் இரு வகையினரினது மொத்தப் புள்ளிகளை கணித்து அதன் மூலம் பெறப்பட்ட சராசரிப்புள்ளியை வைத்து "இசற்" புள்ளியைக் கணிப்பது சரியா? தவறா? என்ற வாதங்கள் எழுந்தன.

இந்தச் சிக்கல் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் அவர்களுடன் இணைந்து 16 மாணவர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த மன்று இரு வகை பரீட்சார்த்திகளது பரீட்சை வினாத்தாளின் கனம் வித்தியாசப்படுவதால் இரு சாராருக்கும் தனித்தனி நியம விலகல்($\sigma$) மற்றும் சராசரி($\mu$) என்பவற்றை கணித்து புதிய "இசற்" புள்ளியை வெளியிடுமாறு பணித்தது.

விஞ்ஞானப் பிரிவை எடுத்து நோக்கின் பகுதி 1 வினாக்கள் புதிய பாடத்திட்டத்தில் இருமணி நேரத்தில் 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். பழைய பாடத்திட்டத்தில் அதே நேரத்தில் 60 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியிருக்கிறது.

எனவே நீதிமன்ற தீர்ப்பு பலராலும் வரவேற்கப்பட்டு புதிய "இசற்" புள்ளியை மாணவர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய புள்ளியும் வெளியிடப்பட்டது. இந்தப் புள்ளிகள் புதிய மாணவர்களுக்கு அதிர்ஷ்டத்தையும் மகிழ்ச்சியையும் அள்ளி வழங்கியதோடு நின்றுவிடாமல் பின்தங்கிய மாவட்டங்களில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய பழைய பாடத்திட்ட மாணவர்கள் தலையில் பேரிடியைக் கொடுத்தது. பழைய பாடத்திட்டத்தில் தோற்றிய மாணவர்களின் தொகை குறைவாகினும் அந்த மாணவர்கள் அனைவரும் முதல் ஒரு தடவை பரீட்சைக்கு தோற்றிய அனுபவசாலிகள் என்பதால் சராசரியாக எல்லா மாணவர்களும் திறமையாக பரீட்சையை எதிர்கொள்ள முடியும். இதனால் சராசரிப்புள்ளி அதிகரித்துவிட்டது. எனவே $z = \frac{x-\mu}{\sigma}$ என்ற "இசற்" புள்ளி இவர்களுக்கு முதற் காணப்பட்டதை விட குறைந்துவிட்டது.

ஆனால் புதிய மாணவர்களுக்கு எண்ணிக்கையும் அதிகம் அதே நேரம் எல்லோரும் முதன் முறையாக பரீட்சையை எதிர்கொள்வதால் கணிசமான மாணவர்கள் குறைந்த புள்ளியையே பெறவாய்ப்புள்ளது. இது புதிய மாணவர்களில் சற்றுத் திறமையான மீத்திறன் கொண்ட மாணவர்களது "இசற்" புள்ளி அதிகரிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது.

வழமையாக எமது மாணவர்களது "இசற்" புள்ளிகள் கிடைத்தவுடன் மாணவர்கள் அவர்களது புள்ளிகளைப் பட்டியலிட்டு மாவட்ட ஒதுகீடான 'கோட்டா' மற்றும் 'மெரிற்' எனப்படும் மீத்திறன் எல்லைக்குள் வரும் மாணவர்களது எண்ணிக்கையை கணக்கிட்டு வெட்டுப்புள்ளிகள் வரும் முன்பே தாம் பல்கலைக்கழகம் புக முடியுமா ? இல்லையா? எனப் பல மாணவர்கள் கணித்து விடுவர்.

இவ்வாறு பழைய "இசற்" புள்ளிகளை வைத்து உதாரணத்துக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 57 பேர் மருத்துவத்துறைக்கும் 55பேர் பொறியியல் துறைக்கும் தெரிவாவர் என்று அண்ணளவாக கணிக்கப்பட்டு அந்த மாணவர்களும் தமது மேற்படிப்பு நோக்கிய சிந்தனையில் மீள்பரீட்சை என்ற அவசியம் அற்று வெட்டுப்புள்ளியை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால் தற்போது இந்த எண்ணிக்கைகளுக்குள் இருந்த பல பழைய மாணவர்கள் வெளியேற்றப்பட்டு பல புதிய மாணவர்களை உள்ளீர்த்துள்ளது. புதிய "இசற்" புள்ளி.

மாவட்ட ரீதியாக தெரிவு செய்யும் தொகையில் பாதிப்புகள் இல்லாவிட்டாலும் பல பழைய பாடத்திட்ட மாணவர்கள் தனிப்பட்ட ரீதியாக பாதிக்கப்பட்டும் அடுத்த பரீட்சைக்கு இன்னும் இரு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில் எவ்வாறு அதற்குத் தோற்றுவது என்ற தர்மசங்கடத்துக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்த முறை போன்று கடந்த 2005 ஆம் ஆண்டிலும் இதே பிரச்சினை பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கு ஏற்பட்டது. எனினும் அப்போது ஒரு சில மாணவர்களே நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டதால் அரசு அவர்களையும் பல்கலைக்கு இணைத்துக் கொண்டது.

ஆனால் இந்த முறை பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் அனைவரையும் இணைத்துக்கொள்வது சாத்தியமா என்ற கேள்விகளே எழுகிறது.

எந்த வித முன் ஆயத்தங்களும் இன்றி வெட்டுப்புள்ளி கிடைத்தவுடன் பட்டப்படிப்பைத் தொடர முடியும் என்ற கனவுடன், இதுவரை தாம் பட்ட கஷ்டத்துக்கும் கடின உழைப்புக்கும் பயன் கிடைத்து விட்டது என்ற நிம்மதியிலிருந்த பழைய பாடத்திட்டத்தில் தோற்றி தெரிவுப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்.

எது எவ்வாறாயினும் மாணவர்கள் பாதிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம் எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய ஒவ்வொரு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களது விவரங்களை உயர்கல்வி அமைச்சு திரட்டி வருகிறது. இதனடிப்படையில் அரசு வழங்கும் தீர்வைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேவேளை இந்த முறை அதாவது அடுத்த மாதம் நடைபெறவுள்ள பரீட்சையிலும் இரு பாடத்திட்ட மாணவர்களின் சிக்கல் இருப்பதால் இந்தப் பிரச்சினையை ஆளமாக ஆராய்ந்து தீர்வு காணவேண்டிய கடப்பாடு உரியதரப்புக்கு உள்ளது.

# உலை வைக்கப்படும் உயிர் நிலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறது.

இதனால் தான் சமூகத்துடன் படையினரை நெருக்கமாக்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு கல்விச் செயற்பாடுகளை சீர்குலைக்கும் முயற்சியில் அது இறங்குகிறது. தேர்தலில் ஆசிரியர்களின் வாக்கு தனக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக, கல்வித் திணைக்கள உயரதிகாரிகளையே வேண்டா விருந்தாளிகள் போல நடத்திய அரசு மாணவர்களைச் சும்மா விட்டு விடுமா?

கல்வியிலும் அரசியலைப் புகுத்தி வேம்படியில் விளையாடும் அதிபர் பதவிக்கான சதுரங்க ஆட்டம் கூட அரசின் கல்விக்கு வேட்டுவைக்கும் திட்டத்தின் ஒரு பகுதிதான். இல்லாவிட்டால் சர்வ வல்லமை பொருந்திய மஹிந்த அரசால் இந்தச் சின்னப் பிரச்சினையை தீர்க்க முடியாதா என்ன? இதைவிட ஆநகரிக் கோட்டத்தில் தவணைப் பரீட்சையைக் கூட இடைநிறுத்திவிட்டு படையினரின் விளையாட்டு நிகழ்வுக்காக மாணவர்கள் கொண்டு செல்லப்பட்ட சம்பவமும், கல்வியில் படைத்தரப்பின் அடாவடி எவ்வாளவு தூரம் இருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தான்.


வடக்கில் சிவில் நிர்வாகம் ஏற்பட்டு விட்டதாகக் கூறும் அரசு துப்பாக்கிமுனையில் நிறுத்திவிட்டு, சிரிக்காவிட்டால் சுட்டுவிடுவோம் என்று மிரட்டி அந்தச் சிரிப்பையே தமிழ் மக்களின் உண்மையான ஆனந்தமாக புகைப்படம் எடுத்து உலகுக்கு விற்று தன்வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கிறது. சுற்றிவர ஆயுதங்களால் சூழப்பட்ட ஒரு சிறைக்குள்ளேயே நாங்கள் புன்னகைப்பது போல நடித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்த நடிப்பையும் நீடிக்கவிடாமல் நம் உயிர் நிலையான கல்வியை கூறுபோட தொடர்ந்தும் கத்தியை ஓங்கிக் கொண்டே இருக்கிறது அதிகாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்

# காலத்தை இழுத்தடிக்கும் மற்றொரு கைங்கரியம்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாக அரசு இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்தது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. முன்னறிவிப்புக்கள் எதுவுமின்றி அரசு திடீரென இந்த செயற்றிட்டம் குறித்து அறிவித்தமை பலருக்கும் வியப்பையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மைதான்.



ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியினால் இந்தச் செயற்றிட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தச் செயற்றிட்டம் எப்படியானது என்பது குறித்த முழுமையான விவரங்களையோ தகவல்களையோ அரசு தெரிவிக்கவில்லை. செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளது அரசு. அத்துடன் பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு சுமார் மூன்றரை வருடங்கள் தேவை எனவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாக அறிவித்தார். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 285 பரிந்துரைகளும் மூன்றரை வருட காலத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இந்தப் பரிந்துரைகள் 235 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலர் மேலும் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் முன்மொழிவுக்கு அமைய ஜனாதிபதி விசேட செயலணி ஒன்று கடந்த மே மாத நடுப்பகுதியில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர்கள் செயலகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த மணிகேவ, நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் தாரா டி. சில்வா ஆகியோருடன் ஜனாதிபதி செயலகத்தின் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த ஜனாதிபதி விசேட செயலணியில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தச் செயலணியே பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த ஆண்டு நவம்பரில் வெளியிடப்பட்ட பின்னர் டிசெம்பரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது நடந்து கிட்டத்தட்ட 9 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த 9 மாதங்களுக்குள்ளும் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவே இல்லை. ஆணைக்குழுவின் அறிக்கையில் பல நல்ல பரிந்துரைகள் உள்ளன என்றும் அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் சர்வதேச சமூகம் இலங்கைக்கு பல தடவைகள் அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் கொடுத்து வருகின்றது. இதுதவிர ஐ.நா. அமைப்புக்களும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும் என அடிக்கடி கூறி வருகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசு துரிதம் காட்ட வேண்டும் எனவும் அதன் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை - புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்தி பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குமாறும் அடிக்கடி கூறிவருகிறார்.

இவ்வாறு அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டபோதும் இந்த விடயத்தில் இலங்கை அரசு தொடர்ந்தும் மெத்தனப்போக்கையே கடைப்பிடித்து வந்தது. பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட ஆக்கபூர்வ நடவடிக்கைகளைக் கூட அரசு எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு பலராலும் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அரசு, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது எனவும் நாட்டுக்குச் சாதகமானவற்றை மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் எனவும் அறிவித்திருந்தது. இதனால் இந்த விடயத்தில் அரசின் மீது பல்வேறு விமர்சனங்களும் கண்டனங்களும் அள்ளிவீசப்பட்டன.

அறிக்கை தயாரிக்கப்பட்டு 9 மாதங்கள் வரை அதுபற்றி சிந்திக்காமலே இருந்த அரசு இப்போது திடீரென விழுந்தடித்துக் கொண்டு அதில் அக்கறை காட்டுவதற்கு காரணந்தான் என்ன? என்ற கேள்வி எழுந்திருக்கிறது. அதற்குக் காரணம் உண்டு.

9 மாதங்களாக ஒன்றும் செய்யாமலிருந்த அரசு இப்போது மட்டும் செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாக அறிவித்துள்ளதன் பின்னணியில் சில காரணங்கள் தென்படுகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் நவம்பர் மாதம் பூகோள கால மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்துக்கு இலங்கையிடம் இருந்து ஐ.நா. அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தது. அந்த அறிக்கை கடந்த 24 ஆம் திகதி இலங்கையினால் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை ஜனாதிபதியின் அனுமதியுடன் அறிக்கையை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடுவின் இறுதி நாளான கடந்த 23 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதில் கடைசிவரை இழுபறி நிலை காணப்பட்டது.

நவம்பரில் நடைபெறும் ஐ.நாவின் கூட்டத்தில் இலங்கைக்கு ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் அரசுக்கு இப்போது தொற்றிக் கொண்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வருவதற்கு முன்னர் ஐ.நாவின் விசேட குழுவொன்றை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கைக்கு இலங்கை பணியாவிட்டால் அடுத்த ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுமீது மேலும் தீர்மானங்கள் பாயும் என ஆணையாளர் நவநீதம்பிள்ளை பகிரங்கமாகவே எச்சரித்திருந்தார். இந்த எச்சரிக்கையை அடுத்து ஐ.நா.விசேட குழு இலங்கை வருவதற்கு அனுமதி அளிக்கப்படும் என அரசு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் இப்போது இலங்கையின் அறிக்கை ஐ.நாவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்றிட்டமும் இடம்பெற்றுள்ளதாக அரச தரப்புத் தகவல்களிலிருந்து தெரிய வந்திருக்கிறது. அறிக்கையில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுவிட்டதால் அதனை இங்கேயும் பகிரங்கப்படுத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. இதனால்தான் அரசு முந்தி விழுந்து கொண்டு ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஒரு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. ஆயினும், அந்தச் செயற்றிட்டத்தின் முழுமையான விவரம் என்ன என்பதை அரசு வெளியிடவில்லை. அத்துடன் பரிந்துரைகள் அனைத்தையும் செயற்படுத்த மூன்றரை ஆண்டுகள் தேவை எனவும் அரசு குறிப்பிட்டிருக்கிறது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது அடுத்த ஜெனிவா கூட்டத்துக்கு முன் ஐ.நா. வட்டாரங்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே இத்தனை விடயங்களும் நிகழ்ந்துள்ளன என்பது தெட்டத் தெளிவாகிறது.

ஏற்கனவே 9 மாதங்களை இழுத்தடித்துவிட்ட அரசு இனி மூன்றரை வருடங்களை இழுத்தடிப்பதற்கான ஓர் ஆயுதம்தான் இந்தச் செயற்றிட்டம். பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து காலத்தைக் கடத்தி நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றை பின் தள்ளிப் போகச் செய்யும் ஒரு திட்டத்தையே அரசு தீட்டியிருக்கிறது என்ற சந்தேகம் இப்போது எழுகிறது.

பரிந்துரைகள் அனைத்தும் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்பிக்கை வைக்க முடியாத நிலையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. அதற்கு ஏற்றாற்போலவே இந்த செயற்றிட்டமும் அரசினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அரசு காட்டிவரும் மெத்தனப்போக்கு - காலதாமதம் அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை என்றே சிந்திக்கத் தோன்றுகிறது. இதனை அரசு விளங்கிக் கொள்ளாமல் தொடர்ந்தும் இவ்வாறு நடந்து கொள்ளுமேயானால் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் மேலும் வலுப்பெறுமே தவிர சமாதானமும் நல்லிணக்கமும் ஒருபோதும் உருவெடுக்கப் போவதில்லை. ✸

9 மாதங்களாக ஒன்றும் செய்யாமலிருந்த அரசு இப்போது மட்டும் செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாக அறிவித்துள்ளதன் பின்னணியில் சில காரணங்கள் தென்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ விஷ்ணு

# முன்னேற்ற முன்வருமா அரசு

இலங்கையில் 1939 ஆம் ஆண்டு சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவால் கொண்டு வரப்பட்ட இலவசக் கல்வி முறைமை தற்போது இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்டு ஊசலாடிக்கொண்டு இருக்கிறது.

வாழ்க்கை முறை மாற்றத்துக்கு ஏற்ப பாடத்திட்டமும் மாறிக்கொண்டிருக்கிறது. கல்விக்கான நிதி ஒதுக்கீடும் முன்னரைவிட அதிகரித்துவருகிறது. ஆனால் சரியான முறையில் நிதி பகிரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஆசிரியர்களால் சுமத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

தற்போது இசுறு, ஆயிரம் பாடசாலைகள் திட்டங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நிதி வழங்கப்பட்டு அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறது. மூன்று வருடங்களில் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அதிகாரிகளால் கூறப்படுகிறது.

வடமாகாணத்தில் உள்ள ஆயிரத்து 44 பாடசாலைகளில் தற்போது 945 பாடசாலைகள் இயங்குகின்றன. 99 பாடசாலைகள் மீள இயங்கவில்லை என்றவாறான தரவுகளும் வெளியாகியுள்ளன.

போர்க் காலத்தில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அநேகமானவை ஓரளவு இயங்கினாலும் வன்னி மாவட்ட பாடசாலைகள் முற்றாக முடங்கின. மோசமாகப் பாதிக்கப்பட்டன. அபிவிருத்தி செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தெரிவு மிக முக்கியமானது. அது அனைத்து பாதிப்புக்களையும் உள்ளடக்கியதான தெரிவாக இருக்க வேண்டும்.

அனைத்துப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதாக இருப்பினும் முதலில் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் ஏராளம் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் கவனம் செலுத்தப்பட்டு மாணவர்களது கல்வி விடயத்தில் அக்கறை காட்டப்பட வேண்டியது காலத்தின் தேவை.

ஆரம்பப் பிரிவு வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரையான வகுப்பு வரையுள்ள பாடசாலைகள், ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் தனியாகவும் அதற்கு மேல் உயர்தரம் வரையான வகுப்புக்களைக் கொண்டதாகவும் பிரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகிறது.

ஆனால் இந்த முறைமை சில இடங்களில் அமுல்படுத்தப்பட்டு பின்னர் முன்னைய நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமையும் மறுப்பதற்கு இல்லை.

பிரிக்கப்பட்ட பின்னர் சில இடங்களில் ஆரம்பப் பிரிவு வைத்தியசாலைகள் புதிதாக முளைக்கத் தொடங்கியுள்ளன. கல்வி நடவடிக்கைக்கு இது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும் அது தொடர்ந்து இயக்கம் பெறுவதற்குரிய ஆளணி, பொருளாதார வளங்கள் எனப் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடிய நிலை எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முதலில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளில் பெரும்பாலானவை, ஏனைய சிறந்த வகைப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது ஓரளவு வசதி வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகளாக உள்ளதைக் காணமுடிகிறது.

கிராமப் புறங்களிலிருந்து நகர்ப் புறப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வதைக் குறைத்து அவர்களை அந்தப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான வசதிகளைச் செய்வதே நோக்கமென கல்வி அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் தான். இத்தகைய பாடசாலைகளில் புதிய பல ஆய்வு கூடங்கள், வசதி வாய்ப்புக்களுடனான கட்டடத் தொகுதிகள் நிர்மாணிக்க அதே பாடசாலைகளுக்கு நிதி வழங்க உறுதி அளிக்கப்படுகிறது. இது வரவேற்கத் தக்கதே.

ஆனால் இந்த வசதிகள் எதுவுமே அற்ற நிலையில் பல பாடசாலைகள் வன்னியில் உள்ளன. அநேகமாக அனைத்துப் பாடசாலைகளுமே மாணவர்களது தேவையை பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு இக்கட்டான நிலையில் இங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய பாடசாலைகளுக்கு அதிகாரிகள் முன்னுரிமை கொடுத்து அபிவிருத்திக்குத் தெரிவு செய்ய வேண்டும்.

ஓரளவு வசதி வாய்ப்புக்களுடன் இயங்கும் பாடசாலைகளை இன்னும் மேல் நிலைக்கக் கொண்டு வரவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கொள்ளாது அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

வளம் குறைந்த நிலையில் இயங்கும் பாடசாலைகளை மேலும் இக்கட்டான நிலைக்குக் கொண்டு சென்று அங்கு கற்கும் மாணவர்கள் கல்வியில் பின்னடைவைத் தொடர அனுமதிக்க முடியாது. 'தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமம் ' என்பது போல் முக்கியமாக வன்னிப் பாடசாலைகளது மாணவர்களது நிலைமை பரிதாபத்துக்குரிய நிலைமையை அடைந்துள்ளது. இந்த நிலைமை முற்றாக மாற்றம் செய்யப்படவேண்டும்.

அநேகமான பாடசாலைகளது பழைய மாணவர் சங்கம் சிறப்பான நிலையில் இயங்கி பாடசாலைக்குத் தேவையானளவு நிதி வசதிகளை வழங்குகின்றன. அத்தகைய பாடசாலைகள் கூட முதல்தெரிவில் அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வசதிகள் எதுவுமே இல்லாத பாடசாலைகள் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாகவே உணரப்படுகிறது.

வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகள் போன்று போதிய வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு முன்னேற்றம் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையில் அத்தகைய பிரதேசப் பாடசாலைகளுக்குச் சென்று கற்பிக்க ஆசிரியர்களும் பின்நிற்கிறார்கள். அதனால் மாணவர்களும் கல்வி கற்பதில் சிரமத்தை உணருகின்றனர்.

இன்று இலவசக் கல்வி என்பது 50 வீதம் மாற்றமடைந்து விட்டது என்றே கூறலாம். வெளியீட்டுத் திணைக்களம் பாடப் புத்தகங்களை வெயிடுகின்றபோதும் அதனைத் தவிர்ந்த சில பாடப் புத்தகங்கள் இலவசமாகக் கிடைப்பதில்லை. தனியாரது பதிப்புக்களை வாங்கியே கல்வி கற்கும் நிலை காணப்படுகிறது. பாடசாலைக் கல்வியில் திருப்தியின்மையாலும் தனியார் கல்விக்குச் செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், ஆலோசனை வழங்கும் தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன ஒன்று சேர்ந்து இயங்கும் நிலையில் திருப்தி இன்மையே இந்த நிலைக்குக் காரணம் என்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கல்வியில் இந்த நிலை இருக்கும் போது இலங்கையை ஆசியாவின் அதிசயம் எப்படி மாற்ற முடியும்? ஆசியாவிலுள்ள ஏனைய நாடுகளில் கல்வி முன்னேற்றத்தைப் பார்த்தாவது அதனை இங்கு அமுல் படுத்தியாவது மாணவர் கல்வியை வளர்த்தெடுங்கள்.

கல்வியில் இடைநிலைத் தராதரத்துடன் இருப்பவர்களை விட கல்வியில் பின் தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளது மாணவர்களது வளர்ச்சியே முதலில் அவசியமாக வலியுறுத்தப்படுகிறது

# எதற்காக எம்மை கைது செய்தீர்கள்?

■ தில்லாலங்கடி

## குமுறும் நெஞ்சங்கள்

"என்ர பிள்ளை செய்த குற்றமென்ன?, நீ அடிபட்டு செத்ததைப் போல நானும் அடிபட்டுத்தான் சாவன், என்ர பிள்ளை என்ன பிழை செய்தவன் ? அவனை ஏன் கொண்டீங்கள் ? அவனுக்கு கலியாணம் செய்ய நினைக்க இப்படி செத்த வீடு செய்ய வைச்சிட்டாங்களே ?"

சிறைச்சாலையில் மௌனமாக்கப்பட்ட ஓர் உயிரின் உறவு உதிர்ந்த வார்த்தைகள் இவை. அந்த உறவு, மௌனமாக்கப்பட்ட உயிரினை பத்து மாதங்கள் கருவில் பத்திரமாக சுமந்து இந்த உலகுக்கு அறிமுகப்படுத்திய தாய்தான். கருவில் பத்திரப்படுத்திய அந்தத் தாயால் இந்த உலகில் பிறந்த பின்னர் தன் குழந்தையை பத்திரப்படுத்த முடியவில்லை. அந்தத் தாய் கேட்கும், தனது "மகன் செய்த குற்றம் என்ன?" என்பதற்கு யார் பதிலளிக்கப் போகின்றார்கள்.

நிமலரூபன் என்ற அந்த உயிருக்காக வெறும் வார்த்தைகளில் சில தினங்கள், மிஞ்சிப் போனால் ஒரு சில வாரங்கள் மட்டுமே கண்டனங்கள் தொடங்கி ஆர்ப்பாட்டங்கள் வரைக்கும் நடத்தப்படும். அதன் பின்னர் அடுத்த கட்ட பிரச்சினைக்குரிய நிகழ்ச்சி நிரலுக்குச் சென்று விடுவார்கள். நீதியே நீதிக்காக போராடுகின்ற நிலையில், இந்த அப்பாவிகளுக்கு எப்போது நீதி கிடைக்கும்?

வவுனியாச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகளில் 3 பேரை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியதைத் தொடர்ந்து அவர்களை தமக்கு காண்பிக்குமாறு கோரி வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை தடுக்க சிறைக்காவலர்கள் முயன்றதைத் தொடர்ந்து சிறைக்காவலர்களுக்கும், உண்ணாவிரதக் கைதிகளுக்கு மிடையே மோதல் ஏற்பட்டது.

இதன்போது சிறைக்காவலர்கள் மூவர் சிறைக்கைதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர். அப்போது நிலைமை உச்சக்கட்டத்துக்குச் சென்றது. சிறைச்சாலைக்கு வெளியே அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இறுதியாக சிறைக்கைதிகளுடன் சென்று ஒருவர் பேச்சு நடத்தினார். அப்போது, "சிறைக்காவலரை விடுவியுங்கள். வெளியில் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். உள்ளே வந்தால் அவர்கள் உங்களை அடித்தே கொன்று விடுவார்கள். எனவே சிறைக்காவலரை விடுவித்து விட்டு பேசிப் பார்ப்போம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த அரசியல் கைதிகள், "பேசிப் பார்த்து விட்டோம் சேர். நாங்கள் அமைதியாகத்தான் சாப்பிடாமல் இருந்தோம். ஆனால் இவர்கள் அடிதடியில் இறங்கிய பின்னர்தான் நாங்கள் சிறைக் காவலர்களை மடக்கிப் பிடித்தோம். எங்களது கண்ணில் இங்கிருந்து கொண்டு சென்றவர்களை காட்டுங்கள். நாங்கள் விடுவிக்கின்றோம். அவர்கள் உள்ளே புகுந்து எங்களை அடித்துக் கொன்றாலும் பரவாயில்லை. எங்கள் கண்ணில் அவர்களைக் காட்டினால் தான் விடுவிப்போம்" என்று உறுதியாக தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னரே அதிரடிப் படையினர் உள்ளே புகுந்து தமது வீரதீர சாகாசங்களைக் காட்டினர். [illegible] அடி வாங்கிக் [illegible] தும் கட்டாமல் இழுத்தடித்து அவர்களைக் கொலை செய்து விட்டனர்.

இறந்த பின்னரும் அவர்கள் விடுவதாக இல்லை. மஹர நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய மஹர எல்லைப் பிரதேசத்திலேயே நிமலரூபனின் சடலத்தை அடக்கம் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நிமலரூபனின் சொந்த ஊரான வவுனியா நெளுக்குளத்துக்குச் கொண்டு சென்றால் அங்கு ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டு தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கப்படும் என்று கருதியே மஹர நீதிமன்றம் அந்த உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

சிங்களவர்கள் தமது சிறுபிள்ளைத்தனமான இனவாதப் புத்தியோடு தமிழர்களை நோக்குவதற்கு இதனை விட வேறு சான்றில்லை. தாங்கள் எப்போதும் இனவாதிகள் தான் என்பதை சிங்களவர்கள் அடிக்கடி அடித்து முறித்து நிரூபித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

1983 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களது சடலங்கள் சொந்த ஊரான தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் அங்கே இனவாதத் தீயை சிங்கள இனம் மூட்டி 1983 ஜூலை கலவரத்தையே தோற்றுவித்தது. அன்றைய ஆட்சியாளர்களின் அனுசரணையில் அரங்கேறிய நாடகம்.

இதேபோன்று சடலத்தை வைத்து தமிழர்களும் போராடுவார்கள். அது பாதுகாப்புக் குந்தகம் விளைவிக்கும் என்று சிங்க[illegible] நிமலரூபனின் உடலை வவு[illegible] அனுப்ப மறுத்திருந்தது. தங்களினத்தைப் போன்று சடலத்தை வைத்து அரசியல் - இனவாதம் - செய்கின்ற கீழ்தரமான புத்தி தமிழனுக்கு இல்லை என்பதை சிங்களம் புரிந்து கொள்ள மறுப்பதே இனப்பிரச்சினை இற்றை வரையில் தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணம்.

இறுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஊடாகக் கிடைத்த தீர்ப்பின் மூலம் நிமலரூபனின் சொந்த ஊரில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கும் எத்துணை தடைகள்.

வடக்கில் சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவதில்லை என்று சொல்லும் பெரியவர்களே! நிமலரூபனின் வீட்டில் அளவுக்கு அதிகமாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீட்டை துப்பரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டது ஏன் என்று சொல்லுங்கள். என்னுமில்லாத அக்கறை இப்போது மட்டும் எவ்வாறு வந்தது. உங்களின் வீட்டுத் துப்பரவு செய்யும் பணியில் மறைந்திருக்கும் மர்மம் ஒன்றும் சிதம்பர ரகசியமன்று. அஞ்சலி செய்வதற்கு அருகில் இருப்பவனும் வரக் கூடாது என்பதை சொல்லாமல் செயலில் காட்டினீர்கள்.

இத்துணையும் தாண்டி அயலிருந்து வந்து அஞ்சலி செலுத்திய உத்தமர்கள் பலர். அத்துடன் தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகளும் வந்து அஞ்சலி செலுத்தினர். ஆனாலும் இணக்க அரசியல் நடத்துபவர்கள் ஒப்புக்குத்தானும் அஞ்சலி செலுத்தவில்லை.

இறுதியில் நிமலரூபன் உடல் மண்ணுடன் மண்ணாகி விட்டது. இறந்த உடல் மண்ணுடன் கலந்து விட்டபோதும் இப்போதும் வந்து கேட்கும், என்ன குற்றத்துக்காக என்னை கைது செய்து சிறை வைத்தீர்கள் என்று. இந்தக் குரல் அவனது குரல் மட்டுமல்ல இன்னும் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ள ஏராளமாக தமிழ் அரசியல் கைதிகளின் குரலாகவே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org